இருபது ஆண்டுகால ஏமாற்று வேலை

இலங்கையின் விசாரணை ஆணையங்கள்

AMNESTY
INTERNATIONAL

சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஓர் உலகளாவிய இயக்கம். 150க்கும் மேற்பட்ட நாடுகளில் இவ்வியக்கம் பரவியுள்ளது. 22 லட்சம் பேர் இதில் உறுப்பினர்களாய் உள்ளனர். மோசமான மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் பிரச்சாரப் பணியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். மனித உரிமைகள் உலகப் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் சர்வதேச தர அளவுகோள்களின் அடிப்படையிலான பிற உரிமைகளையும் உலக மக்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்க இடம் ஏற்படுத்த வேண்டும் என்பது எங்கள் இலட்சியம்.
எந்த ஒரு அரசாங்கமோ, அரசியல் சித்தாந்தமோ, பொருளாதார நலனோ, மதமோ சாராத சுயாதீனமான அமைப்பு இது. இது பெருமளவில் உறுப்புரிமைக் கட்டணம் மற்றும் பிறர் வழங்கும் நன்கொடைகளைக் கொண்டே செயல்படுகிறது.

AMNESTY INTERNATIONAL

சர்வதேச பொது மன்னிப்பு சபை பிரசுரங்கள்

2009ல் முதல் பிரசுரம் செய்தவர்கள்
Amnesty International Publications
International Secretariat
Peter Benenson House
1 Easton Street
London WC1X 0DW
United Kingdom
www.amnesty.org

© சர்வதேச பொது மன்னிப்பு சபை பிரசுரங்கள் 2009

சர்வதேச பொது மன்னிப்பு சபை ஆவண வரிசை எண்:
ASA 37/005/2009
அறிக்கையின் மூல மொழி: ஆங்கிலம்
அச்சிட்டோர்: சர்வதேச பொது மன்னிப்பு சபை,
சர்வதேச செயலகம், ஐக்கிய இராஜ்ஜியம்

இப்பிரசுரத்திற்கான அனைத்து உரிமைகளும் தக்கவைத்துக்கொள்ளப்படுகிறது. பிரசுர உரிமைக் காப்பீட்டுச் சட்டத்தால் இப்பிரசுரம் பாதுகாக்கப்படுகிறது. ஆனால் கட்டணம் வசூலிக்காமல் ஆலோசனை வழங்கும் நோக்கிலோ, பிரச்சார நோக்கிலோ அல்லது கல்வி நோக்கிலோ இதனை மறு பிரசுரம் செய்யலாம். இருந்தபோதும் இதனை மீண்டும் விலைக்கு விற்க முடியாது. இந்த பிரசுரத்தை அனுமதிக்கப்பட்ட வழியில் பயன்படுத்துவோர் பிரசுரத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதை முன்னிட்டு தம்மிடம் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று பிரசுர உரிமை உடையவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். மற்ற சூழல்களில் இந்த பிரசுரத்தின் நகலைப் பயன்படுத்தவோ, மற்ற பிரசுரங்களில் பயன்படுத்தவோ அல்லது மொழி மாற்றி, வாசகங்களை மாற்றி பயன்படுத்தவோ விரும்புவோர் பிரசுரதாரர்களிடம் இருந்து எழுத்து மூல முன்-அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். இதற்கு ஒரு கட்டணம் செலுத்த வேண்டி வரலாம்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஆவணத்தின் வரைவு வடிவம்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு
இலங்கையின் விசாரணை ஆணையங்கள்

உள்ளடக்கம்

அறிமுகம்

1. விசாரணை ஆணையங்களும் குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படாது போதலும்
சட்டரீதியான விளக்கமும் சரித்திரமும்
மீண்டும் ஒருமுறை காலம் கடத்துவது - இலங்கையின் விசாரணை ஆணையங்கள்
விசாரணை ஆணையங்களின் பணி குறித்த ஆய்வு
மந்தகதியிலான செயல்முறை மற்றும் வழக்குகளிடையே பாரபட்சம் காட்டுதல்
வழக்கு விபரங்கள்
பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான பாதுகாப்பு
வீடியோ இணைப்பு கலந்துரையாடல் என்ற விவகாரம்
ஆணையர்கள் மீதான அழுத்தம்
அரசு அமைப்புகளிடம் இருந்து ஒத்துழைப்பு கிடைக்காத சூழல்
சட்ட மா அதிபர்
விசாரணை ஆணையங்களுடைய நடவடிக்கைகளில் சட்ட மா அதிபர் ஆற்றும் பங்கு
சிவில் சமூகத்தின்

2. □□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□ □□□□ - வெற்றி பெற வாய்ப்பே இல்லை

3. நிறைவு□□ மற்றும் பரிந்துரைகள்
நிறைவு
பரிந்துரைகள்

இணைப்பு

வரைபடம்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ACF	Action Contre la Faim / □□□ □□□□□□□ □□□□□□□□□ □□□□□□□
CHA	Consortium of Humanitarian Agencies / □□□□□□□□□□ □□□□ □□□□□□□□□□□□□ □□□□□□□□□□□
CID	Criminal Investigation Department / □□□□□□□ □□□□□□□□□□□ □□□□
CoI	Presidential Commission of Inquiry / □□□□□□□□□□□□ □□□□□□□□□□□□ □□□□□□□ □□□□□□
CPA	Centre for Policy Alternatives / □□□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□
DIG	Deputy Inspector General/ □□□□ □□□□□□ □□ □□□□□□
HRC	Sri Lanka Human Rights Commission / □□□□□□ □□□□□ □□□□ □□□□□□□□ □□□□□□
ICCPR	International Covenant on Civil and Political Rights / □□□□□□ □□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□
ICRC	International Committee of the Red Cross / □□□□□□□ □□□□□□□□□□□□ □□□□□□
IDP	Internally Displaced People / □□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□ □□□□□□
IIGEP	International Independent Group of Eminent Persons / □□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□
ITN	Independent Television Network / □□□□□□□ □□□□□□□□□□□□
JMO	Judicial Medical Officer / □□□□□□□□ □□□□□□□□ □□□□□□□
JVP	Janatha Vimukthi Peramuna / □□□□□□ □□□□□□□ □□□□□□□
Karuna Faction	Breakaway group from the mainstream LTTE / □□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□□□ □□□□□ □□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□
LST	Law & Society Trust / □□□□□□ □□□□□□□ □□□□□□ □□□□□□□□□□
LTTE	Liberation Tigers of Tamil Eelam / □□□□□□ □□□□□□□□□ □□□□□□□
NESOHR	North East Secretariat on Human Rights / □□□□ □□□□□□□□□□□□□ □□□□□□ □□□□□□□ □□□□□□□
NGO	Non-Governmental Organization / □□□□ □□□□ □□□□□□□□
NPC	National Police Commission / □□□□□ □□□□□□ □□□□□□
OHCHR	Office of the UN High Commissioner for Human Rights / □□□□ □□□□□□□□□□□□□னஜ.□□. □□□□ □□□□□□□□□□□ □□□□□□□□
OIC	Officer in Charge / □□□□□□□□ □□□□□□□
SCOPP	Government's Secretariat for Coordinating the Peace Process / □□□□□□ □□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□ □□□□ □□□□□□□
SIU	Special Investigations Unit / □□□□□ □□□□□□□□□□□ □□□□□□
SLA	Sri Lankan Army / □□□□□□ □□□□□□□□
SLFP	Sri Lanka Freedom Party / □□□□□□□□□ □□□□□□□□□ □□□□□
SLIDA	Sri Lankan Institute of Development Administration / □□□□□□ □□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□ □□□□□□□
SLMM	Sri Lankan Monitoring Mission / □□□□□□ □□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□ □□□□
SOCO	Scene of Crime Officer / □□□□□ □□□□□□ □□□□□□□ □□□□□□□□□ □□□□□□
STF	Special Task Force / □□□□□ □□□□□□□□ □□□ (□□□□□□□

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

□□□□□□ □□□□□□)

The CAT Act	Convention Against Torture and other Inhuman and Degrading Punishment Act No 22 of 1994 / □□□□□□□□ □□□□□□□ □□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□ □□□□□□, 1994 □□□□ □□□ 22
TRO	Tamil Rehabilitation Organization / □□□□□□ □□□□□□□□□□□□□ □□□□□
UNHCR	UN High Commissioner for Refugees / □□□□□□□ □□□□□□□□□ ஐ.□□.□□□□ □□□□□□
UTHR(J)	University Teachers for Human Rights, Jaffna / □□□□ □□□□□□□□□□□□□ □□□□□□□□□□□ □□□□□□□□□□□ □□□□□□□, □□□□□□□□□□□
VWAP	Victim and Witness Assistance and Protection Unit / □□□□□□□□□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□ □□□□□□□ □□□□□□□□□□ □□□□□□

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

அறிமுகம்

பொன்னுதுரை யோகராஜா தனது இரண்டு மகன்களையும் 2006ஆம் ஆண்டில் இழந்திருந்தார். 2006ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் தேதியன்று திருகோணமலை கடற்கரையில் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களில் அவரது இளைய மகனான ஹேமச்சந்திரனும் ஒருவர். அவருடைய மூத்த மகனான கோடீஸ்வரனும் அதே வருடம் ஆகஸ்ட் மாதம் கொல்லப்பட்டார். மூதூர் நகரில் கொல்லப்பட்ட தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேரில் கோடீஸ்வரனும் ஒருவர். இந்த சம்பவங்கள் மற்றும் பிற மோசமான மனித உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்காக ஜனாதிபதியால் ஏற்படுத்தப்பட்டிருந்த விசாரணை ஆணையத்தின் முன்பு மார்ச் 2008ல் □□□□□□□□□□ யோகராஜா வாக்குமூலம் வழங்கியிருந்தார். வீடியோ தொடர்பாடல் மூலமாக, இலங்கைக்கு வெளியில் ரகசியமாக வைக்கப்பட்ட ஒரு இடத்திலிருந்து அவர் தனது வாக்குமூலத்தை வழங்கினார்[1]. தனது மகன் கொல்லப்பட்ட தினத்தன்று தான் அவனை இரவில் பயந்து பயந்து தேடியதையும் சில மணி நேரங்கள் கழித்து தன் மகனைக் சடலமாகக் கண்டெடுத்த விபரங்களையும் பொன்னுதுரை யோகராஜா விளக்கினார். அதிகாரிகள் முறைகேடாக நடந்துகொண்டது, பொலிஸார் தன்னை மிரட்டியது, தனது மகனை பறிகொடுத்த வேதனை போன்றவை குறித்து அவர் விபரித்திருந்தார். குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் பிறருடைய குடும்பத்தினர் கூறுவதைப் போலவே யோகராஜாவின் வாக்குமூலத்திலும் இலங்கையில் நீதி கிடைப்பதன் சாத்தியம் மிகவும் குறைவு என்ற சந்தேகம் எழுப்பப்பட்டிருந்தது.

தம்பியின் மரணத்தை அடுத்து பொன்னுதுரை யோகராஜாவின் மூத்த மகனான கோடீஸ்வரனுக்கும் மிரட்டல் விடுத்து வேலையிடத்துக்கு தொலைபேசி அழைப்புகள் வந்திருந்தன. "ஏ.சி.எ.ப். எனப்படும் பசி ஒழிப்பு நடவடிக்கை என்ற தொண்டு நிறுவனத்தில் எனது மகன் வேலை பார்த்து வந்தான். எஸ்.டி.எ.ப். எனப்படுகிற விசேட அதிரடிப் படையினர் அவனிடம் பல முறை தொலைபேசியில் பேசி மிரட்டியிருந்தனர். அவன் தனது உயிருக்கு ஆபத்து என்று மிகவும் அஞ்சினான். நீதிமன்றத்தில் நான் எதுவும் சொல்லக்கூடாது, சொன்னால் தங்களைச் சுட்டுவிடுவார்கள் என்றும் சொன்னான்." ஆறு மாதங்களின் பின்னர்,

[1] இலங்கையின் சரித்திரத்திலேயே மனித உரிமை மீறல் விசாரணையில் இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது இதுவே முதல் முறை. வீடியோ தொடர்பாடல் மூலம் வாக்குமூலம் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தது சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவினர் (IIGEP) ஆவர். விசாரணை ஆணையத்தின் பணியைக் கண்காணிப்பதற்காக ஜனாதிபதி அவர்களால் அழைத்துவரப்பட்ட சர்வதேச குழு இது.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

கோடீஸ்வரன் கொல்லப்பட்டுவிட்டார்.

தனது □□□□□□□□□□□□ □□□□□□□ கொல்லப்பட்ட பின்னர் பொன்னுதுரை யோகராஜா நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது.

> *என்னோட தாய்நாட்டிலே என்னால் சுயாதீனமாக ஒரு வாக்குமூலம் கொடுக்க முடியவில்லை. என்னை மிரட்டுகிறார்கள். என்னைக் கொன்றுவிடுவார்களோ என்று என் பிள்ளைகள் பயப்படுகிறார்கள். அதனால், என்னால் பயமின்றி வாக்குமூலம் வழங்கமுடியவில்லை. இங்கே வந்தபிறகு நான் வழங்கிய வாக்குமூலத்தைதான் இலங்கையிலிருந்து நான் கொடுக்க விரும்பினேன். ஆனால் என் பிள்ளைகள் என்னைத் தடுத்துவிட்டார்கள். என்னுடைய உயிருக்கு அவர்கள் பயந்தார்கள்.*
>
> **பொன்னுதுரை யோகராஜா, மார்ச் 2008**

இரண்டு மாதங்களின் பின்னர், மே 2008ல், வீடியோ தொடர்பாடல் மூலமாக விசாரணைக் ஆணையங்களில் வாக்குமூலம் வழங்கும் நடைமுறையை முடிவுக்கு கொண்டுவரச் சொல்லி இலங்கை அரசாங்கம் உத்தரவிட்டுவிட்டது.[2]

[2] வீடியோ தொடர்பாடல் வாக்குமூலங்களை அனுமதிப்பதில் அரசாங்கத்திடம் ஒரு புதிய ஆர்வம் காணப்படுவதாக நவம்பர் மையப் பகுதியில் வெளியான ஊடகச் செய்திகள் சுட்டிக்காட்டியிருந்தன ."Video conferencing facility allowed for CoI・, Daily Mirror, 11 நவம்பர் 2008.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

குற்றவாளிகள் சட்டத்துக்கு உட்படாத நிலை

மனித உரிமை மீறல்களைச் செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்த தவறுகிற சூழல் நிலவினால் அதனை ஆங்கிலத்தில் இம்ப்யூனிடி என்று சொல்வார்கள். இந்த நிலைமை ஏற்பட்டால் குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது என்பதும் நிவாரணம் பெறுவது என்பதும் மறுக்கப்படும். மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களை அவர்களது காரியங்களுக்கு பொறுப்பேற்க வைப்பது என்பதற்கு, கிரிமினல், சிவில், நிர்வாக அல்லது ஒழுங்கு நடவடிக்கை ஒன்றுக்கு அவர்கள் பதில் சொல்லவைப்பது என்பதற்கும் வாய்ப்பில்லாமல் போகும் என்பது இதன் பொருள். குற்றம்செய்தவர்கள் மீது முறைப்படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதற்கோ, கைதுசெய்யப்படுவதற்கோ, அவர்களுக்கு எதிராக வழக்கு நடப்பதற்கோ, வழக்கில் குற்றவாளியாக இனம்காணப்பட்டு முறையான தண்டனைகளை அவர் பெறுவது என்பதற்கோ வழிசெய்யக்கூடிய ஒரு விசாரணைக்கு அவர்கள் உட்படுத்தப்படுவதில்லை. குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்கள் ஏதாவது வகையில் நிவாரணம் பெறுவது என்பதையும் உறுதிசெய்வது சாத்தியமில்லாது போகும்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உரிய விசாரணைகளைச் செய்து குற்றச்சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்து, அவர்களுக்கு எதிராக வழக்கு நடத்தி, உரிய தண்டனைகளை வழங்க வேண்டிய தமது கடமையிலிருந்து அரசாங்கங்கள் தவறும்போது இந்த நிலை ஏற்படுகிறது. மேலும் குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தைத் துடைப்பதுபோன்ற பலன் தரக்கூடிய நிவாரண நடவடிக்கைகளை எடுத்தல், அத்துமீறல் பற்றிய உண்மையை அறிய அவர்களுக்கு உரிமை இருப்பதை உறுதிசெய்தல், அப்படியான மனித உரிமை மீறல்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய கடமைகளில் இருந்து அரசாங்கம் தவறும்போது இந்த நிலைமை உருவாகிறது. "மனித உரிமை மீறல்கள் அதிலும் குறிப்பாக சித்ரவதைகள் தொடர்ந்து நடக்கவும் அப்படியான காரியங்களில் ஈடுபடுவோருக்கு ஊக்கம் கிடைக்கவும் தொடர்ந்து முதன்மைக் காரணமாக இருப்பது குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத இம்ப்யூனிட்டி நிலையே" என்று சித்ரவதை தொடர்பான ஐநாவின் விசேட அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (UN Doc A/54/426, 1 ஒக்டோபர் 1999, பத்தி 48)

(Updated Set of principles for the protection and promotion of human rights through action to combat impunity, UN Doc E/CN.4/2005/102/Add1, 8 பிப்ரவரி 2005 என்ற ஆவணத்தையும் காண்க.)

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

மார்ச் 2008ல் பொன்னுதுரை யோகராஜா சாட்சியம் வழங்கிய அந்த விசாரணை ஆணையம், இலங்கையில் நடந்த மிக மோசமான சில மனித உரிமை துஷ்பிரயோகங்களை விசாரிப்பதற்காக விசேடமாக அமைக்கப்பட்டிருந்த ஆணையம் ஆகும். குறிப்பிட்ட இந்த மனித உரிமை மீறல்களை பொலிசார் முறையாக விசாரிக்கவில்லை என்றும் சட்ட மா அதிபரின் அலுவலகம் இவை தொடர்பில் முறையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை இப்படியான தவறுகள் அரிதான விஷயம் என்றோ, தவறி நடந்த விஷயம் என்றோ கிடையாது. குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத இம்ப்யூனிட்டி நிலைதான் இலங்கையில் நெடுங்காலமாகவே இருந்துவருகிறது. சர்வதேச மனித உரிமை சட்டங்களையும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களையும் பொறுத்தவரை இந்த நிலைதான் ஏனென்றால் அடுத்தடுத்து ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் இப்படியான நிலை இருப்பதையே விரும்புகின்றன. சில வழக்குகளில் அரசு அதிகாரிகள் நேரடியாகவே தலையிட்டு சாட்சிகளுக்கு லஞ்சம் கொடுத்தும், அவர்களை மிரட்டியும், துன்புறுத்தியும், அச்சுறுத்தியும் கொலைகள் உள்ளிட்ட வன்முறைகளைச் செய்தும் அவர்களை சாட்சி சொல்ல விடாமல் செய்துள்ளனர். பொலிசார் விசாரணையைக் கைவிடச் செய்யவும், பொதுமக்களிடையே தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் அவர்கள் இப்படியான காரியங்களில்

கமாண்ட் ரெஸ்பான்ஸிபிலிடி

உயர் அதிகாரிகளுக்கு, தங்களது கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுவோரால் போர்க்குற்றங்கள், மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அல்லது சர்வதேச சட்ட மீறல்கள் செய்யப்படுகின்றன என்பது தெரிந்திருந்தால், அல்லது அவர்கள் அது பற்றி தெரிந்திருக்க வேண்டும் என்ற நிலை இருந்தால், அக்குற்றங்களைத் தடுக்கவும், முறையாக விசாரணை செய்யவும் குற்றவாளிகளை தண்டிக்கவும் தவறிய காரணத்துக்காக அந்த உயர் அதிகாரி மீதும் கிரிமினல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட வேண்டும் என்ற சர்வதேச சட்ட கொள்கையை ஆங்கிலத்தில் கமாண்ட் ரெஸ்பான்ஸிபிலிடி அதாவது கட்டுப்பாட்டின் கீழ் நடக்கும் குற்றச்செயல்களுக்கு அதிகாரி பொறுப்பேற்றல் என்று சொல்வார்கள். இராணுவத்துக்கு வெளியில் இருக்கும் உயர் அதிகாரிகள் மீதும்கூட இவ்வாறு குற்றம் சுமத்தப்படும்.

அதேபோல் சர்வதேச சட்டங்களின் பிரகாரம் வெளிப்படையாகவே சட்டவிரோதமாக அமைந்துள்ள உத்தரவுகளின் கீழ் செயல்பட்டு சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றம் செய்யும் நபர்கள், உயரதிகாரியின் உத்தரவுக்கு அமைய செயல்பட்டதை காட்டி குற்றச்செயலுக்கு பொறுப்பேற்க இயலாது என்று வாதிடுவதும் ஏற்கப்படமாட்டாது.

(*காண்க*, 1977 Additional Protocol I to the 1949 Geneva Conventions, Articles 28 and 33 of the Rome Statute of the International Criminal Court.)

குறிப்பிட்ட சில வகை மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் சம்பந்தமாக விபரம் அறிய "PRINCIPLES ON THE EFFECTIVE PREVENTION AND INVESTIGATION OF EXTRA-LEGAL ARBITRARY AND SUMMARY EXECUTIONS" [ECONOMIC AND SOCIAL COUNCIL (ECOSOC) OF THE UNITED NATIONS RESOLUTION 1989/65, 24 MAY 1989] *என்பதில் விதி எண்* 19*ஐ காண்க.*

"உயர் அதிகாரி ஒருவர் அல்லது அரசாங்க உயரதிகார பீடம் வழங்கிய உத்தரவு காரணமாக சட்டத்துக்கு அப்பாற்பட்ட, யதேச்சதிகாரமான அல்லது முறையான விசாரணைகள் அற்ற மரணதண்டனை நிறைவேற்றங்களை செய்ததாக ஒருவர் வாதிட இடமில்லை. உயர் அதிகாரிகள் அல்லது பிற அரசாங்க மேலதிகார பீடங்கள், தங்களது அதிகாரத்தின் கீழ் செயல்படும் ஒருவர் செய்யக்கூடிய அத்துமீறல்களைத் தடுக்க தமக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் இருந்தும், அத்துமீறல் நிகழ்வதை அவர்கள் தடுக்கத் தவறினால், அத்துமீறல்களுக்கு அவர்களும் பொறுப்பேற்க வேண்டும். யுத்த நிலை, முற்றுகை நிலை பிற அவசர நிலை என்று எந்த சூழ்நிலையிலும், சட்டத்துக்கு அப்பாற்பட்ட, யதேச்சதிகாரமான அல்லது ஒழுங்கான விசாரணைகள் அற்ற மரண தண்டனை நிறைவேற்றங்களைச் செய்தவராக சந்தேகிக்கப்படும் எவருக்கும் சட்ட நடவடிக்கையிலிருந்து முற்று முழுதுமான விலக்கு அளிக்கப்படக்கூடாது."

இலங்கையின் குற்றவியல் சட்டமானது கிரிமினல் குற்றங்களைச் செய்தல் மட்டும் அல்லாது அக்குற்றச் செயல்களுக்கு உதவுதல், தூண்டிவிடுதல், சதித்திட்டத்தில் ஈடுபடுதல், மறைத்தல் போன்றவற்றையும் தடுக்கிறது. (பிரிவு 102 மற்றும் 113பி). அதிலும் பிரிவு 111-113; பிரிவு 112 ஆகியவை அரசாங்க அதிகாரிகள் பற்றிக் குறிப்பிடுகின்றன.)

Penal Code (as amended), 1956, Volume 1, Chapter 19, Legislative Enactments of Sri Lanka (Consolidated).

ஈடுபட்டுள்ளனர்.[3] இலங்கையின் நீதித் துறையில் இருக்கக்குடிய சில குறைபாடுகள் மற்றும் பலவீனங்களை அதிகாரிகளும் செல்வாக்குடையவர்கள் வேறு சிலரும் முடிந்த அளவுக்கு மோசமாகப் பயன்படுத்திக்கொண்டு, சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு தடைகளை ஏற்படுத்திவந்துள்ளனர்.

கமாண்ட் ரெஸ்பான்ஸிபிலிடி எனப்படும் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுபவர் செய்த குற்றங்களுக்கு உயரதிகாரி பொறுப்பேற்றல் என்ற சட்டக் கொள்கையை நீதிமன்றங்கள் முறையாக அங்கீகரிப்பதில்லை என்பதால் இலங்கையில் இந்தப் பிரச்சினை மோசமடைந்துள்ளது. அதிக செல்வாக்கும் உள்ளவர்களும், உயர்மட்டத்தில் உள்ளவர்களும் தமது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தவும், அமலில் உள்ள சட்ட நடைமுறையில் காணப்படும் ஓட்டைகளை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவும் இடமளிக்கின்றன.

---

[3]உதாரணத்துக்கு ஜெரால்ட் மெர்வின் பெரேராவின் கொலை. பெரேரா 3 ஜூன் 2002 அன்று தவறுதலாக ஆள் மாற்றி கைதுசெய்யப்பட்டார். வத்தலை பொலிஸ் நிலையத்தில் இவர் சித்ரவதை செய்யப்பட்டிருந்தார். அதன் விளைவாக அவருக்கு சிறுநீரக கோளாறு ஏற்பட்டது. ஆனாலும் அவர் உயிர் பிழைத்திருந்தார். இலங்கை உயர்நீதிமன்றத்தின் முன்பு ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் விண்ணப்பத்தை அவர் 4 ஏப்ரல் 2003 அன்று தாக்கல் செய்திருந்தார். சித்ரவதை, சட்டவிரோத கைது நடவடிக்கை, போன்றவற்றை அவருக்கெதிராக வத்தலை பொலிஸ் நிலைய அதிகாரிகள் நிகழ்த்தியுள்ளனர் என்று நீதிமன்றம் முடிவுசெய்தது. வத்தலை காவல் நிலையத்தின் பொறுப்பு அதிகாரி (OIC) சேன சுரவீர உட்பட எழு அதிகாரிகள் மீது CAT Act No 22 of 1994ரின் கீழ் சட்ட மா அதிபர் 23 நவம்பர் 2003 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். ஆனால் OICயின் பெயரை குற்றப்பத்திரிகையிலிருந்து சட்ட மா அதிபர் பின்னர் நீக்கியிருந்தார். இந்த வழக்கில் சாட்சியம் வழங்குவதற்கு முன்பாக 21 நவம்பர் 2004 அன்று ஜெரால்ட் பெரேரா படுகொலை செய்யப்பட்டிருந்தார். பெரேராவை சித்ரவதை செய்ததற்கு நேரடி சாட்சியம் இல்லை மற்றும் சித்ரவதை செய்தவர்களை நேரடியாக அடையாளம் காட்டும் அணிவகுப்பு நடத்தமுடியவில்லை என்ற காரணங்களுக்காக மீதமிருந்த ஆறு பொலிஸ் அதிகாரிகளையும் நிகொம்பு மேல் நீதிமன்றம் நிரபராதி என்று முடிவுசெய்து 2 ஏப்ரல் 2008 அன்று தீர்ப்பளித்தது (Case No HC326/03). பெரேராவை சட்டவிரோதமாக கைதுசெய்து தடுத்துவைத்த அதிகாரிகளின் பெயர்களை உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தும்,, நல்ல உடல்நலத்தோடு காவல் நிலையம் கொண்டுசெல்லப்பட்ட பெரேரா வெளியில் வரும்போது மோசமாக காயம் அடைந்திருந்தார் என்று அந்நீதிமன்றம் உறுதிசெய்திருந்தும். இவ்வாறு நடந்தது. ஆசிய மனித உரிமைகள் ஆணையம் இது பற்றிக் குறிப்பிடுகையில், "கைது, தடுப்புக்காவல், நபர் மீதான கட்டுப்பாட்டு அதிகாரம் மற்றும் பொலிஸ் நிலையத்தில் இருந்த நேரம் காயம் ஏற்பட்டது என்ற விபரம், ஆகிய விஷயங்கள் நிரூபிக்கப்பட்டுவிட்ட நிலையில், தாங்கள் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பொலிஸ் அதிகரிக்களுக்கே உள்ளது என்ற நிலை சட்டத்தில் உருவாகிவிட்டது. ஆனாலும் சாதாரணமாக இலங்கையில் நடக்கும் மற்ற வழக்குகளில் கடைப்பிடிக்கப்படும் அந்த சட்ட விதிமுறையை எவ்வித காரணமும் தெரிவிக்காமல் கீழ் நீதிமன்ற நீதிபதி முற்றிலுமாக புறந்தள்ளியுள்ளார்..(The Asian Human Rights Commission dossier on the case of Gerald Mervin Perera. http://material.ahrchk.net/srilanka/geraldpereraacquittal.pdf)

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

மனித உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு

உயிர் வாழும் உரிமை என்பது ஒருவரது அடிப்படை மனித உரிமை ஆகும். சர்வதேச மனித உரிமை சட்டங்கள், அளவுகோள்கள், இலங்கை அரசாங்கத்தின் மீது கட்டாயமாக்கப்பட்ட சட்ட ஆவணங்களின் பிரகாரமும்கூட ஒருவது இந்த உரிமை எல்லா நேரத்திலும் மதிக்கப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும். இலங்கை ஒரு தரப்பாக அமைந்துள்ள மக்களுடைய சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்தில் (Covenant on Civil and Political Rights (ICCPR))பிரிவு எண் 6(1)கூட இதையே வலியுறுத்துகிறது. உயிர்வாழும் உரிமை மனிதர்கள் அனைவருக்கும் இயற்கையாகவே இருக்கிறது. அவர்களுடைய இந்த உரிமையைப் பாதுகாக்க வேண்டியது சட்டத்தின் பொறுப்பு. எவர் ஒருவருடைய உயிரும் யதேச்சதிகாரமாக பறிக்கப்படக் கூடாது.

"*தேசத்தின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாய் அமைந்துள்ள அவசரநிலை இருந்தாலும்கூட உயிர் வாழ்வதற்கான மனித உரிமை காப்பாற்றப்படவே வேண்டும்*" *என்று இந்த ஒப்பந்தத்தின்* 4*ஆம் ஷரத்து குறிப்பிடுகிறது*

சர்வதேச மனிதாபிமான சட்டங்களில் ஒன்றான 1949ன் ஜெனீவா ஒப்பந்தங்கள் நான்கிலுமே பிரிவு மூன்று சொல்வது யாதெனின், "மோதலில் செயலூக்கத்துடன் பங்குகொள்ளாத நபர்கள்... எல்லா சந்தர்ப்பங்களிலும் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட வேண்டும்" என்று கூறுகிறது. சர்வதேச அளவில் அல்லாத மோதலகள் நடக்கும் இலங்கை உள்ளிட்ட நாடுகள் மீது இது கடமையாக்கப்பட்டுள்ளது. "அந்த நபர்களுடைய உயிருக்கும் உடலுக்கும் தீங்கு ஏற்படுவதுபோன்ற வன்முறையை எந்நேரத்திலும் எவ்விடத்திலும் செய்வது, குறிப்பாக எந்த வகையிலும் அவர்கள் கொல்லப்படுவது முற்றிலுமாக தடைசெய்யப்பட்டுள்ளது." அப்படியான கொலைகள் சர்வதேச சட்டங்களின் அடிப்படையிலும் குற்றச்செயல்கள் ஆகும்.

1. *உதாரணத்துக்கு* THE ROME STATUE OF THE INTERNATIONAL CRIMINAL COURT, ADOPTED ON 17 JULY 1998 (A/CONF.183/9), ENTERED INTO FORCE 1 JULY 2002, ARTICLE 8(2)(C)(I) *என்பதை காண்க*

இலங்கையின் குற்றவியல் நீதி நிர்வாகக் கட்டமைப்பில் சில மோசமான கோளாறுகள் காணப்படுகின்றன. மனித உரிமை பறிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதில் இந்தக் கோளாறுகள் இடைஞ்சல்களாக உள்ளன. அரசியல் அழுத்தங்கள் காரணமாக சாட்சிகளுக்கு முறையான பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என்பதோடு, நீதி நிர்வாக இயந்திரமும் மிக மிக மந்தகதியிலேயே செயல்படும் நிலை காணப்படுகிறது. கடந்த இருபது ஆண்டுகளில் நடந்த பெரும்பான்மையான மனித உரிமை மீறல் சம்பவங்கள் விசாரிக்கப்படவே இல்லை, நீதிமன்றத்தின் முன்பு அவை வரவே இல்லை என்று கூறும் அளவுக்கு இலங்கையில் நிலைமை மோசமாக உள்ளது. அப்படியே ஒரு சில வழக்குகள் நீதிமன்றங்கள் முன்பு வந்தாலும், குற்றம் செய்தவர் தண்டனை பெறுவது என்பது மிக மிக அரிதாகவே நடந்துள்ளது. ஏனென்றால் குற்றத்தை நிரூபிக்க போதிய அளவு சாட்சியங்கள் கிடைக்காது, சாட்சிகள் வாக்குமூலம் வழங்க மறுத்துவிடுவார்கள், நீதிமன்ற விசாரணைகள் தொடர்ந்தும் தாமதமாகிக்கொண்டே போகும், சில முக்கிய மனித உரிமை வழக்குகளில் வழக்கை நடத்த அரசு தரப்பு முன்வருவதில்லை[4] போன்ற

4 வ்வ, தியவன்னவ ஆகிய ஏரிகளில் 23 தமிழ் பட்டிருந்தன. இவர்களின் கொலை தொடர்பாக விசேட அதிரடிப் படையின் உறுப்பினர்கள் (STF) 22 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.. ஆனால் 1996ன் ஆரம்ப கட்டத்தில் இவர்கள் பிணையில் வெளிவந்து பணியில் சேர்ந்திருந்தனர். இவர்களுக்கு எதிரான வழக்கில் சட்ட மா அதிபரோ அவருடைய பிரதிநிதியோ தொடர்ந்து ஆஜராகவில்லை என்பதால் கொழும்பு தலைமை குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கு பட்டியலிலிருந்து இவ்வழக்கு மார்ச் 1997ல் நீக்கப்பட்டிருந்தது. (பார்க்கவும்g Vasu Bombard AG on Bolgoda", Sunday Times, 27 April 1997 http://sundaytimes.lk/970427/frontm.html#vasu). ஆனாலும் பின்னர் உயர்நீதிமன்றத்தில் இவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆட்களைத் கடத்தியது, சட்டவிரோதமாக தடுத்துவைத்தது, கொலை செய்தது ஆகிய குற்றங்கள் சட்டப்பட்டன. ஜூன் 2000ல் இந்த வழக்கு

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

சூழ்நிலை காரணமாக குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பித்துவிடுகிறார்கள். போதிய நிதி இல்லை, கட்டமைப்பில் போதிய திறன் இல்லை என்பவை இதிலே இடையூறாக அமைந்திருந்தாலும், அவற்றால் மட்டுமே பிரச்சினை என்று சொல்லிவிட முடியாது. நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற உறுதிப்பாடு அரசியல் அமைப்பில் இல்லை என்பதும் ஒரு பிரச்சினைதான்.

மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களைக்கூட தடுக்கவும் விசாரிக்கவும் இலங்கையின் சட்ட ஒழுங்கு மற்றும் நீதி நிர்வாகக் கட்டமைப்புகள் தவறுகின்றன என்பது இலங்கை அரசாங்கத்தின் மீது தசாப்தக் கணக்கில் இருந்துவருகிற உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தத்தின் முக்கிய காரணியாக அமைந்துள்ளது. அந்த அழுத்தம் காரணமாக சில வேளைகளில் இலங்கை அரசாங்கம் குறிப்பிட்ட சில மோசமான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை ஆணையங்களை நியமித்துள்ளது. குற்றவாளிகளை சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவருவது என்பதில் இந்த விசாரணை ஆணையங்களும் அதே அளவுக்கு புண்ணியமில்லாமலேயே இருந்துவிட்டுள்ளன. அரசாங்கம் அண்மையில் செய்த அப்படிப்பட்ட ஒரு முயற்சிதான் "மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள்" என்று கூறப்படுகிற குறிப்பிட்ட 16 சம்பவங்களை விசாரிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட ஜனாதிபடியின் விசாரணை ஆணையம் ஆகும். இந்த மனித உரிமை மீறல் சம்பவங்களில் பாதி அளவிலானவை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் சமயத்தில் இலங்கை அரச படையினர் செய்த உரிமை மீறல்கள் என்று குற்றம்சாட்டப்படுகிற சம்பவங்கள் ஆகும்.[5]

விசாரணைக்கு வந்தது என்றாலும் முக்கிய சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததன் காரணமாக தொடர்ந்து தாமதம் ஏற்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்களில் குறைந்தது ஒருவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாகத் தெரிகிறது. "சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பொலகொட ஏரி கொலைச்வ்சம்பவம் தொடர்பாக குற்றம்சாட்டிருந்த காவல்துறை கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.பி. மடகும்புர தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள அதிகாரிகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளார். கொழும்பு இரண்டாம் உயர் நீதிமன்றத்தில் நடந்த கொலை வழக்கில் அவர் பல காலம் சமூகமளித்திருக்கவில்லை. அவர் நாட்டை விட்டு சென்றுவிட்டதாக நம்பப்படுகிறது. [sic]. தற்போது NPC அவருக்கு பதவி உயர்வு வழங்குவது குறித்து பரிசீலிக்கிறது. தெரிவுசெய்யப்பட்டுள்ள அதிகாரிகள் பட்டியலில் சேர்த்துள்ளது? இது எவ்வகையில் சரி? சம்பந்தப்பட்ட STF அதிகாரி வெளிநாட்டில் வாழ்வதாக கூறப்படுகிறது." "Police cry foul over promotions; National Police Commission says...", The Island 14 July 2004, www.island.lk/2004/07/14/news20.html

[5] பல வழக்குகளில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்த 16 சம்பவங்களிலே 10ல் அரசாங்கத்துக்கு சம்பந்தம் உள்ளதாக குற்றம்சாட்டப்படுகிறது. சில வழக்குகளில் இருதரப்புக்குமே சம்பந்தம் இருப்பதாக சொல்லப்படுகிறது. விடுதலைப் புலிகள் மீது எட்டு சம்பவங்கள் தொடர்பாக குற்றம்சாட்டப்படுகிறது.. (இதிலே இரண்டிலே, அரச படையினர் மீதும் வலுவான குற்றச்சாட்டுகள் உள்ளன.) பல வழக்குகளிலே கருணா பிரிவினர் மீதும் குற்றம்சாட்டப்படுகிறது.. தனியாகவுமோ, இலங்கை படையினருடன் இணைந்துமோ இவர்கள் அவற்றில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் கடற்படையினர் நான்கு சம்பவத்திலே

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் நடந்த இச்சம்பவங்கள் மற்றும் அவை தொடர்பாக நடந்த விசாரணைகளின் விபரங்கள் இங்கே விபரிக்கப்படுகிறது. பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருந்த பிரமுகர்கள் படுகொலை செய்யப்பட்டது, தொண்டு நிறுவன ஊழியர்களும் பிற பொதுமக்களும் கொல்லப்பட்டது. ஆட்கள் கடத்தப்பட்டது போன்றவை இவற்றில் அடங்கும். இந்த சம்பவங்கள் பனிப்பாறையின் மேல் முகடுகள் மட்டும்தான். ஆழ ஆராய்ந்தால் இப்படியான பெரும் பெரும் மலைகளே மூழ்கிக் கிடப்பது தெரியவரும்.

இலங்கையில் விசாரணை ஆணையங்கள் நீதி கிடைப்பதற்கான இயந்திரங்களாக செயல்பட்டிருக்கவில்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற இந்த ஆணையங்கள், அரசியல் போட்டியாளர்கள் மீது பக்கச்சார்புடன் நடவடிக்கை எடுப்பதற்கான கருவியாகவும், மனித உரிமை மீறல்களில் அரசாங்கத்துக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று திட்டவட்டமான ஆதாரங்கள் இருப்பதைக் கண்டு அரசுகள் தம்மீதான விமர்சனங்களை திசைதிருப்பும் கருவியாகவும் செயல்பட்டு வந்துள்ளனவே ஒழிய, இவற்றைக் கொண்டு பெரிய அளவில் நீதி கிடைத்தது கிடையாது. இந்த விசாரணை ஆணையங்கள், நீதி நிர்வாக அமைப்புகள் இல்லாதபடியால், அவற்றிலிருந்து அதிகபட்சம் எதிர்பார்க்கக்கூடியது, உண்மை வெளிவருவதற்கான ஒரு சந்தர்ப்பமாக அது அமையும் என்பதுதான். யதார்த்தத்தில், இம்மாதிரியான விசாரணை ஆணையங்களால் சில வழக்குகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஓரளவு பண நஷ்ட ஈடு கிடைத்துள்ளது என்றாலும், வழமையான கிரிமினல் சட்ட நடவடிக்கைகள் தாமதம் அடையவும், சாட்சியங்கள் வீணடிக்கப்படுகிற நிலை உருவாகவும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் மீதான ஆபத்து அதிகரிக்கவும் இவை வழிவகுத்துள்ளன.

விசாரணை ஆணையங்களால், நீதி கிடைக்கும் வாய்ப்பு அதிகரிக்கிறது, மனித உரிமை மீறல்கள் குறைகின்றன என்ற விளைவுகள் ஏற்படாத பட்சத்தில், எதிர்காலத்தில் □□□□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□□□ இன்னொரு விசாரணை ஆணையம் நியமிக்கப்படுவதால் □□□□□□□ சர்வதேச மனித உரிமை கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றுவதில் எவ்வித நிஜமான முன்னேற்றமும் ஏற்படாது. தற்போது செயல்பாட்டில் உள்ள விசாரணை ஆணையமானது, சுதந்திரமாக செயல்படுவதை அனுமதிக்கிற அரசியல் சூழல் இலங்கையில் நிலவுகிறது என்றால் இலங்கையின் கிரிமினல் நீதி நிர்வாகக் கட்டமைப்புக்கு ஒரு முக்கிய இணைப்பாக அதனால் பங்காற்ற முடியும். ஆனால் மோசமான மனித உரிமை மீறல்கள் நீடிக்கிற மற்றும் மனித உரிமைகள் மீதும் நீதி நிர்வாகக்

தொடர்புகொண்டிருப்பதாக குற்றம்சாட்டப்படுகிறது. விசேட அதிரடிப் படை உள்ளிட்டு இலங்கை பொலிசார் மீது ஐந்து சம்பவங்களில் குற்றம்சாட்டப்படுகிறது.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

கட்டமைப்பின் மீது துஷ்பிரயோகங்களுக்கு பெயர்போன தற்போதைய அரசாங்கத்தின் இறுக்கமான பிடியும் அரசியல் தலையீடுகளும் காணப்படும் தற்போதைய சூழலில், தற்போதைய விசாரணை ஆணையத்தால் நீதி கிடைக்கச்செய்வதில் (முந்தைய விசாரணைக் ஆணையங்களைப் போலவே) வெற்றி பெற கொஞ்சமும் வாய்ப்பில்லை. நிஜமான சீர்த்திருத்தங்கள் எதுவுமே இல்லாத நிலையில், இலங்கையின் விசாரணை ஆணையங்கள் மற்றவர் பார்வைக்கான வெற்று அலங்காரம் மட்டுமே. நீதி கிடைக்கச் செய்வதில் விசாரணை ஆணையங்கள் தொடர்ந்து தவறிவரும் நிலையில் பொதுமக்களிடையே அவநம்பிக்கையும் விரக்தியும் பெருகி, வன்முறை நீடிக்க வழிவகுத்திடும்.

சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழு (IIGEP) கண்டறிந்து வெளியிட்ட விடயங்கள் நீதி வழங்கும் ஒரு உத்தியாக விசாரணை ஆணையங்கள் செயல்படத் தவறியிருக்கின்றன என்பதனை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன. □□□□□□□□□ □□□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□ விசாரணை ஆணையம் செயல்படும் விதத்தை அவதானிப்பதற்காக இலங்கை ஜனாதிபதியால் அழைக்கப்பட்டிருந்த இந்த சர்வதேச நிபுணர்கள், "இலங்கை அரச படையினரின் செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்பப்படும் இந்த வழக்குகள் குறித்து நிஜமாகவே சிரத்தையாக விசாரிக்க இலங்கை அரசு ஆர்வம் காட்டவில்லை" என்று முடிவு தெரிவித்திருந்தனர். "ஆரம்ப விசாரணைகளை பயனற்றவையாக மாற்றும் நிறுவன ரீதியான பிழைகள் மற்றும் நீதி கிடைப்பதில் உள்ள தடங்கல்களை வெளிக்கொண்டுவரப்படுவதை அரசு விரும்பவில்லை" என்றும் இந்தக் குழுவினர் குறிப்பிட்டிருந்தனர்.[6]

[6]IIGEP பொது அறிக்கை, 14 ஏப்ரல் 2008, REF: IIGEP-PS-006-2008.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

சட்டவிரோத ஆட்கொலைகளை விசாரித்து, குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் கடமை

சட்டவிரோத ஆட்கொலைகள் பற்றி தெரிவிக்கப்படும் நியாயமான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் விசாரிக்க வேண்டும் என்று சர்வதேச சட்டங்களும், தர அளவுகோல்களும் கூறுகின்றன. குற்றச் செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது வகையில் நிவாரணம் வழங்கப்படுகிறது என்பதை உறுதிசெய்வதில் ஒரு அரசாங்கத்துக்கு இருக்கின்ற பொறுப்பை பிரதிபலிப்பதோடு, நாட்டில் மனித உரிமைகளை பாதுகாப்பது, குற்றவாளிகளை தமது செயல்களுக்கு சட்டத்தின் முன் பதில் சொல்ல வைப்பது, எதிர்காலத்தில் இப்படியான மனித உரிமை மீறல்கள் நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுப்பது உள்ளிட்ட கடப்பாடுகளையும் இந்த கொள்கை பிரதிபலிக்கிறது.

மனித உரிமை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமை மீறப்பட்டிருந்தால் அவருக்கு "பலன் அளிக்கும் வகையில் நிவாரணம்" வழங்கப்படுவதை உறுதிசெய்வதையும் மற்ற காரியங்களோடு ஒன்றாக அரசாங்கங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று *ICCPR* ஒப்பந்தத்தின் பிரிவு *2(3)* கூறுகிறது. "உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் தாமதமின்றியும், முழுமையாகவும், பலனளிக்கும் வகையிலும் சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற அமைப்புகள் மூலமாக விசாரணைகள் செய்ய வேண்டிய கடமை அரசுகளுக்கு உள்ளது." என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தனது அதிகாரபூர்வ அபிப்பிராயம் ஷரத்து *2*ல் குறிப்பிட்டுள்ளது. மேலும் "உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு விசாரிக்கத் தவறும் பட்சத்தில் அதுவேகூட மனித உரிமை ஒப்பந்தத்தை மீறும் செயலாக அமையும்." என்று மனித உரிமைக் குழு தெரிவித்துள்ளது. மனித உரிமை ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ள சில உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்தால், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய பொறுப்பு அரசாங்களுக்கு உள்ளது. விசாரிக்கவோ, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும் அரசுகள் தவறுமானால், அதுவேகூட மனித உரிமை ஒப்பந்தத்தை மீறும் ஒரு செயலாக அமையும்" என்று மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது. உள்நாட்டு சட்டங்கள் அல்லது சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் கிரிமினல் குற்றங்களாக கருதப்படும் உரிமை மீறல்கள் அதிலும் குறிப்பாக யதேச்சதிகாரத்துடனும் முறையான விசாரணை இன்றியும் நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் குறித்து விசாரிக்கவும், சட்ட நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கள் மீது கடப்பாடுகள் உள்ளன. [2]

அதேபோல சட்டத்துக்கு அப்பாற்பட்ட முறையான விசாரணைகளற்ற மரண தண்டனைகளை தடுப்பதற்கும் விசாரிப்பதற்குமான கொள்கைகளில் கொள்கை[3] எண் 9 கூறுவது யாதெனின், " சட்டத்துக்கு அப்பாற்பட்ட, யதேச்சதிகார மற்றும் முறையான விசாரணைகளற்ற மரண தண்டனை நிறைவேற்றங்களாக சந்தேகிக்கப்படும் சம்பவங்கள் அனைத்தையும் தாமதமின்றியும், முழுமையாகவும், பக்கச்சார்பற்ற வகையிலும் விசாரிக்க வேண்டும்; செயற்கையாக மரணம் நிகழ்ந்துள்ளது என்று உறவினர்கள் முறையிடுகிறார்கள் அல்லது பிற நம்பக்கூடிய தகவல்கள் அவ்வாறு தெரிவிக்கின்றன என்றால் அவற்றை மேற்சொன்ன வகையில் விசாரிக்க வேண்டும். முறையான பிரேதப் பரிசோதனை நடத்தப்பட வேண்டும், தடயங்களும் ஆவணங்களும் சாட்சிகளுடைய வாக்குமூலங்களும் சேகரிக்கப்பட்டு, ஆராயப்பட வேண்டும் என்பதும் இதில் அடங்கும்." குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று கொள்கை 18 கூறுகிறது. அவ்வாறு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அவரைச் சார்ந்திருந்தவர்களுக்கு நியாயமாகவும் போதுமான அளவிலும் நிவாரணம் வழங்கவேண்டும்; நியாயமான ஒரு காலகட்டத்துக்குள் இந்த நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்று கொள்கை 20 கூறுகிறது.

ஒப்பந்தத்தின் 2ஆம் பிரிவு குறித்து மனித உரிமைகள் குழு தெரிவிக்கும் பொது அபிப்பிராயம்: THE NATURE OF THE GENERAL LEGAL OBLIGATION IMPOSED ON STATES PARTIES TO THE COVENANT, UN DOC CCPR/C/74/CRP.4/REV.6, 21 *ஏப்ரல்* 2004, *பத்தி* 15.

[2] இதே ஆவணத்தில் 18ஆம் பத்தியில் மேலதிக விபரங்கள் உள்ளன.

[3] பொருளாதார மற்றும் சமூக மன்றத்தின் தீர்மானப் பரிந்துரை, 1989/65, 24 மே 1989

விசாரணை ஆணையம் செயல்படும் விதம் ஒளிவுமறைவின்றியும் சர்வதேச விழுமியங்களுக்கும் அளவுகோல்களுக்கும் அமைய இருக்கின்றனவா என்பதை உறுதிசெய்யும் பொருட்டு இலங்கை ஜனாதிபதி IIGEP குழுவை அழைத்திருந்தார். ஆனால் ஆரம்பம் முதற்கொண்டே விசாரணை ஆணையத்தின் வழக்கங்களை

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

மேம்படுத்த மாண்புமிக்கோர் குழு எடுத்த முயற்சிகள் அனைத்துமே அரசாங்கத்திடம் இருந்து எதிர்ப்பையும் விரோதத்தையும் சந்தித்தது. " IIGEP விடயத்தில் அரசாங்கம் கடைப்பிடித்த இந்த உடன்பாடற்ற மற்றும் மோதல் போக்கு என்பது அதன் உத்தியோகபூர்வ கடிதப் பரிமாற்றத்திலேயே வெளிப்பட்டது. உறவு "சுமூகமற்றதாகவும் விரும்பத்தகாத நிலையிலும்"[7] இருந்ததாக முடிவுதெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் □□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□ விசாரணை ஆணையத்தின் செயல்முறைகளை மேம்படுத்துவதில் உதவ IIGEP □□□□□□□□□ எடுத்த முயற்சிகள் தோல்விகண்டிருந்தன. இறுதியில், விசாரணை ஆணையம் சர்வதேச தரத்தில் இல்லை என்று மாண்புமிக்கோர் குழு முடிவுதெரிவித்திருந்தது. 1) விசாரணை ஆணையத்தின் பக்கச்சார்பற்ற நிலையை பாதிக்கக்கூடிய அளவில் யாருடைய நலன் முன்னிருத்தப்படுகிறது என்பதில் மோசமான முரண்பாடுகள் காணப்பட்டன. 2) குற்றச்செயலால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் ஒழுங்காக பாதுகாக்கப்படுவது என்பது போதிய அளவுக்கு இல்லை. 3) விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை இல்லை மற்றும் கால எல்லைகளுக்குள் அவர்கள் செயல்படுவதில்லை. 4) அரசாங்க நிறுவனங்கள் வழங்கும் ஒத்துழைப்பு போதிய அளவில் இல்லை; மற்றும் 5) நிதி ரீதியில் சுயாதீனமாக விசாரணை ஆணையம் அமைந்திருக்கவில்லை ஆகிய ஐந்து முக்கிய விஷயங்கள் மாண்புமிக்கோர் குழுவின் முடிவில் குறிப்பிடப்பட்டிருந்தன.

ஏப்ரல் 2008ல் சர்வதேச மாண்புமிக்கோர் குழுவினர் தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாக கண்காணிப்பு பணியை நிறுத்திக்கொண்டனர். அதன் பின்னர் விசாரணை ஆணையத்தின் உறுப்பினர்கள் பலர் தமது பதவிகளை இராஜினாமா செய்திருந்தனர். கடந்த நவம்பர் மாதம், விசாரணை ஆணையத்தின் பணிகளை சுயாதீன கண்காணிப்பாளர்களாக அவதானித்து வந்த வந்த ஏழு சமூக குழுக்களும் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டனர். சாட்சிகளாக அமைந்திருக்கின்றவர்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் மற்றும் பலவீனமான சாட்சிகள் பற்றிய விபரங்களின் இரகசியம் பேணப்படாமை ஆகியவை குறித்து அவர்கள் கவலை வெளியிட்டிருந்தனர். தவிர வீடியோ தொடர்பு மூலம் வாக்குமூலம் வழங்கும் நடைமுறை ரத்துசெய்யப்பட்டது குறித்தும், குற்ற சந்தேக நபர்கள் எதிரான சட்ட நடவடிக்கை வெற்றிபெற வாய்ப்பில்லாத நிலை குறித்தும் இவர்கள் அதிருப்தி வெளியிட்டிருந்தனர். இவையனைத்தின் மூலமாகவும் தெளிவாக வெளிப்பட்ட செய்தி என்பது தமது பிரஜைகளை பாதுகாப்பதில் இலங்கை அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்பதும் நீதி கிடைக்கச்செய்வதில் அது ஆர்வம் காட்டவில்லை என்பதும்தான்.

[7]IIGEP பொது அறிக்கை, 14 ஏப்ரல் 2008, REF: IIGEP-PS-006-2008.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

பிப்ரவரி 2009 சமயம், இலங்கையின் அரச படையினர் விடுதலைப் புலிகள் வசம் இருந்த நிலப்பகுதியில் கணிசமானவற்றை கைப்பற்றினர். வடக்கில் புலிகள் வசம் எஞ்சியிருந்த நிலப்பகுதிகளையும் அவர்கள் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிடுகின்ற ஒரு சூழல் தென்பட்டது.

மோதல்களின்போது பொதுமக்களுடைய உரிமைகளை மீறினார்கள் என்று இருதரப்பினர் மீதும் குற்றம்சாட்டப்படுகிறது. மரபு ரீதியான யுத்தம் கொஞ்சம் கொஞ்சமாக முடிவுக்கு வரும் நிலையில், (விடுதலைப் புலிகளின் கெரில்லா தாக்குதல்கள் நீடிக்கும் வாய்ப்புள்ளது) தசாப்தங்கள் கணக்கில் நடந்திருந்த துஷ்பிரயோகங்களுக்கு பதில் சொல்லுதல், பெருமளவில் இடம்பெயர்ந்துள்ள மக்களையும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களையும் பராமரித்தல், அத்தியாவசிய வசதிகளை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் பல ஆண்டுகளாக யதேச்சதிகார பாதுகாப்புச் சட்டங்களை சார்ந்திருந்தபடியால் சமூகக் கட்டமைப்பிலும் சட்டத்தின் மாட்சிமையிலும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நிவர்த்தி செய்தல் போன்ற சுமைகளை இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும். பொதுமக்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் செய்த துஷ்பிரயோகங்களை பலனளிக்கக்கூடிய வகையில் விசாரிக்கின்ற வல்லமை அரசாங்க அதிகாரிகளுக்கு இல்லை. மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் இலங்கை அரச படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரித்து சட்ட நடவடிக்கை என்பதைப் பொறுத்தவரை நிலைமை மேலும் மோசமாக இருக்கும் என்றே தெரிகிறது.

அண்மையில் நடந்த மிக மோசமான அட்டூழியம் அல்லது கடைசியாக அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் மீது குவிந்துள்ள இலங்கையின் உள்நாட்டு மக்கள் இடையிலான மற்றும் சர்வதேச சமூகத்தினர் இடையேயான விவாதத்தின் கவனத்தை மாற்றி, இலங்கையில் □□□□□□□□வருகின்ற உரிமை மீறல்களை தடுப்பதற்கான அவசியம் மற்றும் கடந்த காலங்களில் துஷ்பிரயோகங்கள் செய்தவர்கள் நிஜமாகவே தங்களது காரியங்களுக்கு பதில் சொல்ல வைத்தல் என்பதிலே அவர்களது விவாதத்தின் கவனத்தை மீண்டும் குவியச் செய்வது சர்வதேச பொதுமன்னிப்பு சபையின் நோக்கம். நிறுவன ரீதியாக திட்டமிட்டும், தொய்வின்றியும் மனித உரிமை நிலவரங்களை சர்வதேச அளவில் கண்காணிப்பதன் மூலமாகவும் தொழில்நுட்ப உதவிகள் வழங்குவதன் மூலமாகவும் அதனைச் செய்ய முடியும் என்பதே இந்த அறிக்கையின் எண்ணம். இலங்கை தன்னளவிலே இதனைச் செய்வது சாத்தியமே இல்லை.

பரிந்துரைகளின் சாராம்சம்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

இலங்கையில் நிலவும் சூழல் கடினமானவை என்பதை மறுப்பதற்கில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடந்துவரும் யுத்தம் இலங்கை அரசின் வளங்களையும் ஆதாரங்களையும் வற்றச்செய்து திராணி அனைத்தையும் எடுத்துவிடுகிறதுதான். ஆனாலும் விமர்சகர்கள் மீது அரச அதிகாரிகள் காட்டும் விரோதம் என்பதும், வெலிநாடுகளின் தலையீட்டுக்கு எதிரான அவர்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்பு என்பதும், மனித உரிமை விவகாரங்களில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்பை சிக்கலாக்கிவிடுகிறது. ஆனால் நீதி கிடைப்பதில் உள்நாட்டளவில் காணப்படும் ஆழமானப் பிரச்சினைகளும், மனித உரிமை மீறல்கள் தொடர்ந்துவருகிற மோசமான யதார்த்த சூழலும், சர்வதேச தலையிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைக் உணர்த்துகிறது. மனித உரிமை மற்றும் மனிதாபிமான சர்வதேச சட்டங்கள் மீறப்பட்ட கடந்த கால சம்பவங்களை விசாரித்து, குற்ற சந்தேக நபர்கள் மீது சர்வதேச அளவுகோல்களுக்கு அமைய நியாயமான சட்ட நடவடிக்கைகளை எடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதை உறுதிசெய்து, எதிர்காலத்தில் உரிமை மீறல்கள் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு இலங்கையின் அதிகாரிகளை ஊக்குவிக்க சர்வதேச சமூகம் தமது கணிசமான செல்வாக்கை பயன்படுத்த வேண்டும்.

இலங்கையினை வன்முறை பாதையிலிருந்து திசை திருப்பக்கூடிய குறிப்பிட்ட சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் தருகிற வலுவான நிலையில் சர்வதேச சமூகம் உள்ளது. இலங்கையில் குற்றவாளிகள் சட்டத்திற்கு பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லாத நிலை இருப்பதை எதிர்த்துப் போராடுவதில் அந்நாடு முன்னேற்றம் அடைகிறதா என்பதை அவதானித்து, அவர்களுக்கு அளவுகோல்களை நிர்ணயிப்பது பற்றி சர்வதேச சமூகம் பரிசீலிக்க வேண்டும்.

இலங்கையில் குற்றச்சந்தேக நபர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தொடர்ந்தும் தப்பித்துவரும் நிலையை முடிவுக்கு கொண்டுவர இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் பின்வரும் வழிகளில் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை கேட்டுக்கொள்கிறது:

- மனித உரிமை மீறல்களைச் செய்த குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய செயல்முறையை திட்டமிடுவது, நடைமுறைப்படுத்துவது மற்றும் திட்டத்துக்கு உறுதுணையாக செயல்படுவது;

- அரசாங்கப் படையினர் செய்த தவறுகளை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு அவற்றை வன்மையாக கண்டிக்க வேண்டும்;

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

- குற்றவாளிகள் □□□□□□ மீதும், அவர்கள் அரசியல் செல்வாக்குள்ளவர்களாக இருந்தாலும் சரி சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துடையவர்களாக இருந்தாலும் சரி, □□□□□□□ □□□□ பலன் தரக்கூடிய விசாரணைகள், சட்ட □□□□□□□□□□□□ மற்றும் விரைவான வழக்□□□□□ □□□□□□ மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்;

- போதுமான நிதி மற்றும் பிற ஆதாரங்களுடனும், கவனமான திட்டமிடலுடனும், தொழில்நுட்ப உதவிகளுடனும் கூடிய சாட்சிகள் பராமரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வரவேண்டும்.

தேவையான சீர்திருத்தங்கள் மற்றும் முன்னேற்றங்களை நிறைவேற்றும் பொருட்டு, கள நிலைமையை அவதானிக்கும் சுயாதீன அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். விசாரணைகளை நடத்துவதற்கும், மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக தேசிய நிறுவனங்கள் நீதி கிடைக்கச் செய்வதில் உதவுவதற்கும் இவர்களுக்கு வலுவான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

அந்த அமைப்பு சுயாதீனமாக செயல்படுவதை உறுதிசெய்யும் முகமாக, அது சர்வதேச உத்தரவின் கீழ் ஏற்படுத்தப்பட வேண்டுமே ஒழிய ஜனாதிபதியின் உத்தரவின் கீழ் ஏற்படுத்தப்படக் கூடாது.

அவ்வாறு வெற்றிகரமான அமைப்பொன்று உருவாக்கப்பட:

- அனைத்து தரப்பினர் செய்யும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கவும், சிவிலியன்களைப் பாதுகாக்கவும், தேசிய நிறுவனங்களது வல்லமையை மேம்படுத்த உதவவும், ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரது அலுவலகத்திடம் (OHCHR) கோரிக்கை விட வேண்டும், அவர்களது நடவடிக்கைகளுக்கு ஆத□□□ □□□□□ □□□□□□□□.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

1. இலங்கையின் விசாரணைக் ஆணையங்களும் அங்கு குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படாது போதலும்.

> *இலங்கையில் தொடர்ந்து நடக்கும் அதிர்ச்சி தரும் சம்பவங்களுக்கு, தற்காலிகமாக பதிலளிக்கும் ஒரு நடவடிக்கைதான் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது என்பது. மேலும் சம்பந்தப்பட்ட சட்ட அமலாக்கப் பிரிவினர் எடுக்கவேண்டிய பலனளிக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு இது மாற்றாகாது. தொலைநோக்குப் பார்வை கொண்ட, முழுமையான மற்றும் பலனளிக்கக்கூடிய மனித உரிமை பாதுகாப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதன் அவசியத்தை இது திசைதிருப்பக்கூடாது..*
>
> **லூயிஸ் ஆர்பர், ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர், ஒக்டோபர் 2008ல் இலங்கைக்கான தனது பயணத்தின் முடிவில் கூறியிருந்தது..**

சட்டரீதியான விளக்கமும் சரித்திரமும்

அரசுத் திணைக்களங்களையும், அலுவலகங்களையும், நிறுவனங்களையும் நிர்வகிப்பதற்குத் தேவையான விசாரணைகளையும் , அரசாங்க சேவையிலுள்ளவர் ஒருவர் முறைகேடாக நடந்துகொண்டதாக எழும் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளையும் செய்ய ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய ஒரு வழிமுறையாக விசாரணை ஆணையங்கள் பயன்பட வேண்டும் என்பதுதான் 1948ஆம் ஆண்டின் 17ஆம் சட்டமான ஜனாதிபதி விசாரணை ஆணையச் சட்டத்தின் நோக்கம் ஆகும் .[8] மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் வழிமுறையாக விசாரணை ஆணையம் செயல்பட வேண்டும் என்பது அதன் நோக்கம் அல்ல. ஆனால் அந்தச் சட்டத்தில், பல விஷயங்களுக்கும் இடம்தருவது போன்ற மேலோட்டமான வார்த்தைப் பிரயோகம் காணப்படுகிறது. பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பான ஒரு பொதுவான விஷயங்களை குறிப்பிடும் பிரிவும் அதில் இடம்பெற்றுள்ளது. மேலும் பரந்துபட்ட நிறைவேற்று அதிகாரங்களுக்கு அது இடமளிக்கிறது. ஆகவே அடுத்தடுத்து பதவிக்கு வந்த இலங்கையின் ஜனாதிபதிகளுக்கு, அவர்கள் மனித உரிமை நிலவரம் தொடர்பில் பதில் சொல்ல வேண்டும் என்ற அழுத்தங்கள் எழுந்தபோது, இது ஒரு பிரயோஜமான கருவியாகப் பயன்பட்டுள்ளது. விசாரணை நடவடிக்கைகளை இறுதியாக கட்டுப்படுத்துகிற

[8]பார்க்க, பிரிவு 2(1) விசாரணை ஆணையச் சட்டம் 1948ஆம் வருட சட்ட எண் 17. பார்க்க, கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே எழுதிய , "Focus on Rights: Assessing Sri Lanka's presidential commission of inquiry", The Sunday Times, 14 ஜனவரி 2007, http://sundaytimes.lk/070114/Columns/focus.html

மற்றும் விசாரணை முடிவுகளை தீர்மானிக்கும் கடிவாளத்தை தங்களிடமே வைத்துக்கொள்ள நினைக்கும் ஜனாதிபதிகளுக்கு இச்சட்டம் உதவியுள்ளது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம், விசாரணை ஆணையங்களுக்கான, வரையறைகளையும் அதிகார எல்லைகளையும் நிர்ணயிக்கும் அதிகாரம், உறுப்பினர்களை நியமிக்கும், தனது விருப்பத்திற்கேற்ப புதிய உறுப்பினர்களை சேர்க்கும் அதிகாரம், விசாரணை ஆணையத்தை கலைப்பதாக எந்த நேரத்திலும் உத்தரவிடும் அதிகாரம், விசாரணை ஆணையத்தையோ அதன் தலைவரையோ கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக ஆணையத்துக்கு ஒரு செயலாளரை நியமித்து, அவருக்கு உத்தரவுகள் பிறப்பிக்கும் அதிகாரம் போன்ற அதிகாரங்கள் ஜனாபதியிடமே தங்கியுள்ளது. ஆணையத்தின் அறிக்கைகள் அல்லது பரிந்துரைகள் பொதுப்படையாக வெளியிடப்பட வேண்டும் என்பதை இச்சட்டம் கட்டாயமாக்கவில்லை. விசாரணை முழுவதையுமோ (அதன் ஒரு பகுதியையோ) பொதுமக்கள் பார்வைக்கு கொண்டுவருவது அல்லது கொண்டுவராமல் இருப்பது என்கிற முடிவும் ஜனாதிபதியின் விருப்பத்திலேயே தங்கியுள்ளது.

1977ஆம் ஆண்டு நடந்த இனவாத வன்முறையின் காரணங்கள் மற்றும் அது தொடர்பான சம்பவங்களை விசாரிப்பதற்காக அப்போதைய ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் எம்.சி. சன்சோனி தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்தது[9] தொடக்கம் மனித உரிமை விவகாரத்தில் அடுத்தடுத்து வந்த ஜனாதிபதிகளால் இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இது சூழ்நிலையை மேம்படுத்தவில்லை, தவறு செய்யும் அரச படைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை வராமல் பார்த்துக்கொள்ளும் முகமாக அரசாங்கம் புதிய சட்டங்களை இயற்ற வந்துள்ளது. விசாரணை ஆணையத்தின் நடவடிக்கைகள்

[9] பார்க்க, கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே, "Focus on Rights: Further Reflections on commission inquiries and rights violations – பாகம் மூன்று, The Sunday Times, 17 பிப்ரவரி 2008, http://sundaytimes.lk/080217/Columns/focus.html, ஹோல், ராஜன் ஆகியோர் மேற்கோள் காட்டப்பட்டிருந்தனர் (2001) "The Citizenship Acts and the Birth of the Federal Party", in Sri Lanka, The Arrogance of Power; Myths, Decadence and Murder, University Teachers for Human Rights (Jaffna), Wasala Publications, Colombo, பக்கம் 37: "முன்னாள் தலைமை நீதிபதி மிலியானி குளோத் சன்சோனி, தனக்குள்ளேயே ஒரு யுத்தம் நடத்திவரும் ஒரு நபர். விசாரணை ஆணையத்துடைய ஆயுளின் பிற்பகுதியில் அவர் தனது நெருங்கிய சகா ஒருவரிடம் வருத்தப்பட்டுக் கூறியது ஞ நான் ஒரு அரசியல் ஆணையத்துக்கு இதற்கு முன்பு தலைமையேற்றது இல்லை" என்றுதான்.
சன்சோனியின் அறிக்கையை மதிப்பிடும்போது, அவர் எப்படிப்பட்டவர் என்பதையும் தாண்டி அவர் எப்படிப்பட்ட சூழலில் பணியாற்றினார் என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும். நாட்டின் அரசியல் இஷ்டத்துக்கு போய்க்கொண்டிருக்க, அதிகாரிகள் அளவுக்கதிகமான அதிகாரம் கொண்டவர்களாகவும், கொஞ்சமும் மனசாட்சியில்லாதவர்களாகவும் இருக்கும் சூழ்நிலையில். பெரும் புள்ளிகள் சம்பந்தப்பட்டுள்ள ஒரு முக்கிய விடயத்தில் விசாரணை ஆணையம் ஒழுங்கான அறிக்கை வெளியிடும் என்று எதிர்ப்பார்க்க முடியாதுதான். அதேபோல தனிநபர்களிடம் இருந்து நாம் பெரிய அளவில் எதிர்பார்க்க முடியாது."

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

அரசியல் தலையீடுகள் காரணமாக தடங்கலுக்குள்ளாகியிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. வன்முறையின் காரணம் தொடர்பான பெரும்பங்கு பழியை அப்போதைய தமிழ் அரசியல் தலைமை மீது சுமத்தியிருந்த விசாரணை ஆணையம், அரசாங்கம் மீது குற்றம்சுமத்தும் முக்கியமான சாட்சியங்களைப் புறந்தள்ளியிருந்தது. (ஆனாலும் குற்றச்சாட்டுகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன.) பொதுமக்களைப் பாதுகாப்பதிலும் வன்முறையைத் தடுப்பதிலும் பொலிஸார் தவறியிருந்தனர் என்பதை சன்சோனி ஒப்புக்கொண்டிருந்தார், தவிர தமிழர்களுக்கு எதிரான வன்முறையை தூண்டிவிட்டிருந்த மற்றும் வன்முறையில் பங்குபெற்றிருந்த சில பொலிஸ்காரர்களை அவர் தனது விசாரணையில் அடையாளம் கண்டிருந்தார்.

வன்முறையில் பாதிக்கப்பட்டிருந்த தமிழர்களுக்கு நஷ்ட ஈடு, நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று அவரது அறிக்கை பரிந்துரைத்திருந்தது. ஆனால் குற்றம் இழைத்தவர்களாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக 1982ல் இலங்கை நாடாளுமன்றம் குற்ற விலக்கு சட்டம் (Indemnity Act) 1982 சட்டம் எண் 20 என்ற சட்டத்தை இயற்றியது. "1977 ஆம் ஆண்டுஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரைப்பட்ட காலகட்டத்தில் சட்ட ஒழுங்கை நிலை நாட்டுவதற்காக நல்லெண்ணத்தில்" அரசாங்க பிரதிநிதிகள் மற்றும் ஊழியர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக அவர்கள் மீது எந்த வகையிலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை இச்சட்டம் தடுக்கிறது. டிசம்பர் 1988ல் இச்சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. சட்ட நடவடிக்கையிலிருந்து விலக்கு அளிக்கும் காலகட்டத்தை 1988ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி வரைக்கும் இத்திருத்தம் நீட்டித்திருந்தது.[10]

ஜூலை 1983ல் வெடித்த தமிழர் எதிர்ப்பு கலவரம் தொடங்கி பின்னர் அரச படையினர் விடுதலைப் புலிகள் இடையில் வந்த முழு வீச்சிலான ஆயுத மோதல்களின் சமயத்தில், இலங்கையில் ஏராளமான எண்ணிக்கையிலானவர்கள் மோசமான மனித உரிமை மீறல்களுக்கு இலக்காகியிருந்தனர். 1980களின் பிற்பகுதியில், இலங்கையில் ஆட்கள் கடத்தப்படுவது என்பதும், சட்டத்துக்கு விரோதமாக கொல்லப்படுவது என்பதும் பெரும் எண்ணிக்கைகளை எட்டியிருந்தன. நாட்டில் அச்சமயம் நடந்துவந்த இரண்டு முக்கிய மோதல்களின் பின்னணியில் இந்த உரிமை மீறல்கள் நடந்துவந்தன. ஒன்று நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டுவந்த யுத்தம். இரண்டாவது அரசாங்கத்தை பதவியகற்ற முயன்றுவந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி. அதாவது ஜனதா விமுக்தி பேரமுனா) என்ற

[10] சட்ட நடவடிக்கை விலக்களிப்பு (திருத்தச்) சட்டம் Indemnity (Amendment) Act, No 60 1988.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

தென்னிலங்கை சிங்கள அரசியல் கட்சியினருக்கும் அரச படையினருக்கும் இடையில் நடந்துவந்த மோதல்கள். 1990ஆண்டு ஒக்டோபரில் பாரீஸில் நடந்த இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பின்னனியில், நாட்டில் மனித உரிமைகள் சூழல் மேம்படவில்லை என்றால் கொடையாளி நாடுகள் வழங்கும் நிதியுதவி விலக்கிக்கொள்ளப்பட வாய்ப்புள்ளது என்ற நிலையை இலங்கை எதிர்கொண்டது. இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளுடைய விமர்சனங்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது.[11]

இலங்கையில் மனித உரிமை சூழலை மேம்படுத்தும் நோக்கில் கூடுதலான ஒத்துழைப்பு வழங்கும் அணுகுமுறை கடைப்பிடிக்கப்படும் என்று வாக்குறுதிகள் வழங்கப்பட்ட அந்த மாற்றத்தை சர்வதேச மன்னிப்பு சபை வரவேற்றுள்ளது. ஆனால் அந்த வாக்குறுதிகள் தொடர்பில் அரசாங்கம் எப்போதுமே நிஜமான ஈடுபாடு காட்டவில்லை. இலங்கையின் புதிய ராஜீய வழிமுறை ஒரு திட்டத்தின் செயல்முறையை விட அதன் வடிவத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. விசாரணை ஆணையம் அமைத்தல், தற்காலிக நிறுவனங்களை உருவாக்குதல் என்று அடுத்தடுத்து வந்த ஜனாதிபதி உத்தரவுகள் மூலமாக விமர்சகர்களுக்கு இடம்தராமல் நடந்துகொண்டதன் விளைவாக கொடையாளி நாடுகள் நடவடிக்கை எடுப்பதென்பதை இலங்கையால் காலம் தாழ்த்திவர முடிந்துள்ளது.

ஆனால் மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வதிலோ, நிஜமான சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதிலோ ஜனாதிபதியின் உத்தரவுகள் எவ்வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இலங்கையின் மனித

[11] 1991ஆம் ஆண்டுவரையில் இலங்கை அரசாங்கம் தன் மீது எழுகின்ற மனித உரிமை விமர்சனங்களையும், உரிமை மீறல் நடந்துவருவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளையும் நிராகரிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தது. குற்றச்சாட்டுகளை விசாரிக்க முயலும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு நாட்டுக்குள் வருவதையும் அது தடுத்துவந்தது. 1982 தொடங்கி 1997 வரையில் சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு இலங்கை செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இலங்கையில் ஆட்கள் பலவந்தத்தின் விளைவாக ஆட்கள் காணாமல்போதல் தொடர்பாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை 1986ல் தனது முதல் பிரச்சாரத்தை ஆரம்பித்திருந்தது.. 1991ல் சொல்வதைச் செவிமடுக்கும் ஒரு புதிய சூழல் இலங்கையில் தென்பட்ட நிலையில், மனித உரிமை பாதுகாப்பு தொடர்பாக 32 பரிந்துரைகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை இலங்கைக்கு வழங்கியிருந்தது. அதிலே 30 பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அரசாங்கம் நிராகரித்திருந்த இரண்டு நடவடிக்கைகளுமே குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்கின்ற நிலைமை பற்றியதுதான்: 11 ஜனவரி 1991 அன்றுக்கு முன்பு நடந்திருந்த ஆட்கள் காணாமல்போன சம்பவங்களை விசாரிப்பதற்கு ஜனாதிபதி உத்தரவின் பேரில் விசாரணை ஆணையம் அமைப்பதற்கு அரசாங்கம் மறுத்துவிட்டது,. தவர சட்ட நடவடிக்கை விலக்களிப்பு (திருத்தச்) சட்டத்தை ரத்து செய்யவும் அது மறுத்துவிட்டது. அந்த சட்டம் இப்போது புழக்கத்தில் இல்லை என்று அரசாங்கம் கூறியிருந்தது..

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

உரிமை நிலவரம் என்பது தொடர்ந்தும் உலகில் மிக மோசமானவற்றுள் ஒன்றாகவே இருந்துவருகிறது.

1991ஆம் ஆண்டு கடத்திச் செல்லப்பட்டவர்கள் மற்றும் விருப்பமின்றி காணாமல் போனவர்கள் பற்றி விசாரிப்பதற்கான ஐ.நா. செயலணியிடம் ஆட்கடத்தல்கள் குறித்த சுமார் 15 ஆயிரம் முறைப்பாடுகள் வந்திருந்தன. அவற்றிலே சுமார் 4,932 முறைப்பாடுகள் இலங்கை அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டிருந்தன..[12]
"விருப்பத்திற்கு எதிராக ஆட்கள் அகற்றப்பட்டிருந்தது தொடர்பான" முதல் விசாரணை ஆணையத்தை **1991** ஜனவரியில் ஜனாதிபதி □□□□□□□ பிரேமதாஸ அமைத்திருந்தார். அந்த ஆணையத்தின் பணி மிகவும் குறுகியதாகவே இருந்தது. விசாரணை ஆணையம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் புதிதாக நடைபெறும் ஆட்கள் காணாமல் போன சம்பவங்களை மட்டுமே அவர்களால் விசாரிக்க முடிந்திருந்தது. (இலங்கையில் பல்லாயிரக்கணக்கானோர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவங்களில் பெருமளவிலானவை **1988**க்கும் **1990**க்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்திருந்தன.) **1991**ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையில் ஆட்கடத்தல்களையும் ஏராளமான பிற மனித உரிமை விசாரிப்பதற்கான விசாரணை ஆணையங்கள் □□□□□□ □□□□ அமைக்கப்பட்டுள்ளன..[13] இவற்றில் பெரும்பான்மையானவை சொல்லப்போனால் அனைத்துமே குற்ற சந்தேக நபர்களை அடையாளம் கண்டிருந்தாலும், மிகச் சிலர் மீதே மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1994ஆம் ஆண்டு சர்வதேச பொதுமன்னிப்பு சபை "இலங்கை: எப்போது நீதி கிடைக்கும்?" என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. 1983ஆம்

[12]இலங்கை: பலவந்தமாக மற்றும் விருப்பத்துக்கு விரோதமாக ஆட்கள் காணாமல்போன சம்பவங்கள் தொடர்பான ஐ.நா. செயலணி 1991 மற்றும் 1992ஆம் ஆண்டுகளில் இலங்கை சென்றுவந்ததன் பின்னர் செய்த பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துதல், AI Index: ASA 37/04/98.

[13]விருப்பத்துக்கு விரோதமாக ஆட்கள் அகற்றப்படுதல் சம்பந்தமாக முன்று தடவை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவினால் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டிருந்தது. (1991,1992,1993); விருப்பத்துக்கு விரோதமாக ஆட்கள் அகற்றப்படுதல் சம்பந்தமாக ஜனாதிபதி டி.பி.விஜெதுங்கவினால் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம் (1993); விருப்பத்துக்கு விரோதமாக ஆட்கள் அகற்றப்படுதல் சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவினால் அமைக்கப்பட்ட மூன்று பிராந்திய அளவிலான விசாரணை ஆணையங்கள் (1994); குறிப்பிட்ட நபர்கள் விருப்பத்துக்கு விரோதமாக அகற்றப்பட்டது தொடர்பாக அமைக்கப்பட்ட தேசிய அளவிலான விசாரணை ஆணையம் (1998); படலண்ட வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் சட்டவிரோதமாக ஆட்களைத் தடுத்துவைக்கவும் சித்ரவதை செய்வதற்கும் உண்டான இடங்கள் ஏற்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டுவந்தது தொடர்பான விசாரணை ஆணையம் (1995); 25 ஒக்டோபர் 2000 அன்று பிந்துனுவேவ புனர்வாழ்வு மையத்தில் நடந்தவை தொடர்பான விசாரணை ஆணையம் (2001); (1981-1984) காலத்தில் நடந்த இன வன்முறை தொடர்பாக ஜனாதிபதி அமைத்த உண்மை கண்டறியும் ஆணையம் (2001).

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஆண்டு சமயத்திலே நடந்திருந்த பரவலாக அறியப்பட்ட சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனை நிறைவேற்ற சம்பவங்கள் மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்கள் 18 தொடர்பான அரசாங்க விசாரணைகள் பற்றிய விபரங்கள் அந்த அறிக்கையில் இடம்பெற்றிருந்தன. இந்த சம்பவங்களில் 750 பேர் வரையிலானவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். வழக்கறிஞர் ஒருவர் பொலிஸ்காவலில் சித்ரவதை செய்யப்பட்டதால் உயிரிழந்தது முதல் கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாம் ஒன்றிலிருந்து 159 பேர் ஒட்டுமொத்தமாக காணாமல் போனது உள்ளிட்ட சம்பவங்கள் இதில் அடங்கும். அச்சமயம் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ந்து வரும் நாடாளுமன்ற உறுப்பினராக தற்போதைய அதிபர் மஹிந்த ராஜபக்ஷ, ஆட்கடத்தல்கள் தொடர்பாக சர்வதேச அளவில் குரல்கொடுத்திருந்தார். சர்வதேச சமூகத்தினர், அதிலும் குறிப்பாக இலங்கையின் கொடையாளி நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது உரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பில் அழுத்தம் தர வேண்டும் என்று அவர் வலியுறுத்திவந்தார்.[14] சர்வதேச பொதுமன்னிப்பு சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த சம்பவங்களில் வெறுமனே இரண்டில் மட்டுமே குற்றம் நிரூபிக்கபட்டது. அந்த இரண்டும் கீழ்மட்ட அதிகாரிகள் மீது கொலைக்குற்றத்துக்கும் குறைவான குற்றச்சாட்டுகள். 1989ல் வழக்கறிஞர் ஒருவர் பொலிஸ் சித்ரவதையில் உயிரிழந்தது ஒரு சம்பவம். 1989லும் 1990லும் இராணுவத்தினரால் கைதான பின்னர் எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் கடத்தப்பட்டது மற்றொரு சம்பவம். ஆகும்.[15]

---

[14]1990ஆம் ஆண்டு, இலங்கையிலிருந்து ஜெனீவாவில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு ஆட்கள் காணாமல்போன சம்பவங்கள் தொடர்பான ஆவணங்களை எடுத்துச் செல்ல முயற்சித்தமைக்காக கொழும்பு விமான நிலையத்தில் மஹிந்த ராஜபக்ஷ கைதுசெய்யப்பட்டிருந்தார்..

[15]சட்டத்தரணி விஜேதாஸ லியனராச்சி கொலையில் சம்பந்தப்பட்டிருந்த பொலிசார் மீது சதியில் ஈடுபட்டது, சட்டவிரோதமாக தடுத்துவைத்தது போன்ற குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு அவர்களுக்கு சில காலம் கழித்து தண்டனை நிறைவேற்றப்படும் என்று 1991ல் தீர்ப்பாகியிருந்தது. 1995ல் படலண்ட ஆணையத்தின் முன்பு இந்த வழக்கு மீண்டும் பரிசீலிக்கப்பட்டபோது, விஜேதாஸ ஒரு இரகசிய தடுப்புக்காவல் மையத்தில் வைத்து சித்ரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அது தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எம்பிலிப்பிட்டிய வழக்கிலோ, சதியில் ஈடுபட்டது, கொல்லும் நோக்கத்தில் ஆட்கடத்தல் செய்தது, சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டது ஆகிய குற்றங்கள் நிரூபிக்கப்பட்டவர்களுக்கு 10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.. இந்த இரண்டு வழக்குகளிலுமே மூத்த அதிகாரி கடைசியில் தண்டனையிலிருந்து தப்பித்துவிட்டார். எம்பிலிப்பிட்டிய வழக்கில் மேல்முறையீட்டின் பின்னர், நான்கு சிப்பாய்கள் மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூட தலைமையாசிரியர் மீதான குற்றங்கள் 2002ஆம் ஆண்டு ஆரம்பகட்டத்தில் ஊர்ஜிதமாகியிருந்தன. ஆனால் இச்சம்பவத்தில் பிள்ளைகள் கொல்லப்படுவதற்கு முன் தடுத்துவைக்கப்பட்டிருந்த செவனை இராணுவ முகாமின் தளபதியான பிரிகேடியர் லியனகேவுக்கு இந்தக் கடத்தலில் நேரடியாகச் சம்பந்தம் இருந்ததற்கு போதிய ஆதாரம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். "அதிகார வரிசையின் அடுத்தடுத்த மேல் மட்டங்களில் உள்ள ஏனையோருக்கு இருக்கும் அளவு பொறுப்புதான் பிரிகேடியர்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

1994ஆம் ஆண்டுக்கு பின்னர் பிற பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் நூற்றுக்கணக்கானோர் மீது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டிருந்தும், குறிப்பாக சித்ரவதை, ஆட்கடத்தல், மற்றும் சட்டவிரோதமாக தடுத்துவைத்தல்), மிகச் சிறிய எண்ணிக்கையிலேயே குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்தது.[16] சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு தெரிந்த அளவிலே சித்ரவதை □□□□□□□□ இதர □□□□□□□□□□□□□□□□□ □□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□ □□□□□□□□ □□□□□□□□□□ ஒழிப்பு சட்டத்தின் **(CAT Act)** கீழ் குற்றம் நிரூபிக்கப்பட்டது மூன்று பேர் மீது மட்டுமே. 2007ஆம் ஆண்டுவரை என்று எடுத்துக்கொண்டு பார்த்தாலுமேகூட ஆட்கடத்தல்கள் மற்றும் சட்டவிரோதமாக தடுத்துவைத்தல் தொடர்பில் 30க்கும் குறைவானவர்கள் மீதே குற்றம் நிரூபிக்கப்பட்டது.(அதிலும் குற்றச்சாட்டுகள் பொதுவாக ஆட்கடத்தல்கள்

லியனகேவுக்கும் இருக்கிறது அதற்கு அதிகமாகவோ குறைச்சலாகவோ இல்லை என்று நீதிமன்றம் முடிவுசெய்தது மிகுந்த விமர்சனத்துக்கு உள்ளானது .” (SC Application No 506/99, SCM 25.11.99 per ARB நீதவான் அமரசிங்கே), (கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே, “Focus on Rights: Imperative revisions to the criminal law to ensure accountability・, The Sunday Times, 20 மே 2007)

[16]உலக நாடுகளின் மனித உரிமை செயற்பாடுகள் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை 2007 வெளியிட்ட அறிக்கைக்கு வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லாகம மார்ச் 2008ல் இலங்கை அரசின் பதிலைத் தெரிக்கையில், “a) அரச படையினர் மற்றும் இலங்கை பொலிசார் சுமார் 600 பேர் மீது மொத்தத்தில் 150க்கும் அதிகமான குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படுள்ளன. ஆட்கடத்தல்கள், ஆட்கள் காணாமல்போன சம்பவங்கள், சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டது மற்றும் கொலைகள் உள்ளிட்டவை அவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தன; b) 2004ஆம் ஆண்டு முதற்கொண்டு, சித்ரவதை குற்றச்சாட்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் விளைவாக மேல் நீதிமன்றங்களுக்கு சட்ட மா அதிபர் துறையிலிருந்து 90 பேருக்கு எதிரான 42 குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும் மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடவடிக்கையை ஆரம்பிக்கச் சொல்லி பொலிசாரிடம் 31 வழக்குகள் பரிந்துரை செய்யப்பட்டிருந்தன." (உலக நாடுகளில் மனித உரிமை நிலவரம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை 2007ல் வெளியிட்ட அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்த பதில், 31 மார்ச் 2008, www.lankamission.org/content/view/64/). " ஆனாலும் CAT சட்டம் அமலுக்கு வந்த பின்னர், குற்றம் நீரூபிக்கப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை கவலை தரும் அளவிலேயே உள்ளது. CAT சட்டம் அமலுக்கு வந்த 14 வருடங்களில் வெறும் 3 வழக்குகளில்தான் குற்றவாளி தண்டிக்கப்பட்டிருந்தார்." (Sri Lanka; The Right Not to Be Tortured: A critical analysis of judicial response எழுதியோர் கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே மற்றும் லீஸா கொய்ஸ், Law & Society Trust, ஜூன் 2008).

"1998 முதல் 2007 வரையிலான 10 வருட காலத்தில், பொலிசார், இராணுவத்தினர், சிவில் நிர்வாக ஊழியர்கள் 27 பேர் மீது ஆட்கடத்தல், சட்டவிரோதமாக தடுத்துவைத்தல் ஆகிய குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருந்தன." இலங்கை வெளியுறவு அமைச்சின் நிரந்தர செயலர் பாலித கோஹொன வழங்கிய புள்ளிவிபரத்தின் அடிப்படையில் ஹியூமன் ரைட்ஸ் வாட் வெளியிட்ட மூன்று பக்க அறிக்கையில் வெளியிடப்பட்டிருந்த விஷயம் இது. ஒக்டோபர் 2007ல் வாஷிங்டன் டிசி நகரத்தில் நடந்த ஒரு சந்திப்பில் அவர் இந்த புள்ளி விபரங்களை வழங்கியிருந்தார்.. “RECURRING NIGHTMARE; STATE RESPONSIBILITY FOR ‘DISAPPEARANCES’ AND ABDUCTIONS IN SRI LANKA”, HUMAN RIGHTS WATCH, 5 மார்ச் 2008, WWW.HRW.ORG/EN/NODE/62398/SECTION/9#_FTN273

சம்பந்தமாகவே அமைந்திருந்தது.) கொலைக் குற்றத்துக்காக பாதுகாப்புப் படையினர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்தது ஒரே ஒரு வழக்கில்தான். 1998ல் கிரிஷாந்தி குமாரசாமி என்ற பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட் பிரபலமான ஒரு வழக்கு அது.[17]

1994ஆம் ஆண்டு சர்வதேச பொதுமன்னிப்பு சபை □□□□□□□ நீதி கிடைத்த பாடில்லை □□□□□ □□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□□. குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதை நோக்கமாக கொண்டிருப்பதை விட எதிர்ப்புக் குரல்களை சரிகட்டுவது என்பதையே இந்த விசாரணைகள் சில நோக்கமாகக் கொண்டுள்ளன என்று தெரிகிறது. இந்த விசாரணைகளால் வெளித்தெரிவதுமாதிரியான விளைவுகள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. இலங்கையில் நடந்திருந்த சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனை நிறைவேற்றங்கள் மற்றும் 'ஆட்கள் காணாமல்போதல்' சம்பவங்களில் பெருமளவிலானவை எந்த காலத்திலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பதினான்கு ஆண்டுகள் கழித்து இப்போது மறுபடியும் □□□□□□□ □□□□□□□□□□□□□□ □□□ கருதுவது இதையேதான். ஏற்பட்டுள்ள மாற்றம் என்பது, புதிய மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நீடிக்கின்றன என்பதுதான், மேலும் சர்வதேச மனித உரிமை சட்டங்கள் மற்றும் மனிதாபிமான சட்டங்கள் அடிப்படையில் இலங்கை மீதுள்ள கடப்பாடுகளுக்கு ஏற்ப மனித உரிமை மீறல்களைத் தடுக்கவும் தவிர்க்கவும், முறையாக விசாரிக்கவும், குற்ற சந்தேகநபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதை உறுதிசெய்யவும் அந்த நாட்டில் தொடர்ந்து அரசியல் உறுதிப்பாடு இல்லாமலேயே இருந்துவருகிறது.

மூதூரில் ஏ.சி.எஃப். (பசி ஒழிப்பு நடவடிக்கை) தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவம் என்பது அரச படையினர் மீதுள்ள பழியைத் துடைப்பதற்காக இலங்கை அரசு தடயங்களை திரித்தும் அழித்தும் வருவதைக் காட்டும் சம்பவங்களின் நீண்ட பட்டியலில் மேலும் ஒன்று. பிந்துனுவேவ படுகொலை சம்பவம் (2000), செம்மணியில் உடல்கள் எரிக்கப்பட்ட சம்பவம் (1998), கடத்தப்பட்டிருந்த தமிழர்கள் சுமார் இருபது பேரின் சடலங்கள் பொல்கொடா ஏரியிலும் பிற இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் (1995) எல்லாம் இந்தப் பட்டியலில் மேலும் சில உதாரணங்கள் ஆகும்.

[17] 20 செப்டம்பர் 1996 அன்று வெளியாகியிருந்த URGENT ACTION FOR KRISHANTHI KUMARASWAMY (F) ASA 222/96.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

எம்.சி.எம் இக்பால், இலங்கை தேசிய மனித உரிமை ஆணையத்தின் முன்னாள் ஆலோசகராக இருந்து பின்னர் சர்வதெச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவினருக்கு உதவுகின்ற தேசிய தொடர்பு அதிகாரியாக செயல்பட்டவர்

1990கள் முழுக்கவும் யுத்தம் நீண்டுகொண்டே போனது, மனித உரிமை நிலவரத்தில் நாட்டில் முன்னேற்றமே ஏற்படவில்லை. குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக சட்டம் தன் கடமையைச் செய்வதில் எவ்வித நிஜமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஒரு போர்நிறுத்தம் ஆரம்பமாகியிருந்தது. இதனால் பொதுமக்கள் வாழ்வில் சற்றே நிம்மதி பிறந்திருந்தது, யுத்தம் தொடர்பான மனித உரிமை மீறல்கள் எண்ணிக்கை குறைந்திருந்தாலும், பொலிஸ்காவலில் ஆட்கள் சித்ரவதைக்கு உள்ளாகுதல் போன்ற பிற மனித உரிமை மீறல்கள் நீடிக்கவே செய்தன, எதிரணித் தமிழ் குழுக்கள் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்திருந்தன, நிலுவையிலிருந்த வழக்குகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை.[18] 2005ஆம்

[18]கட்டளையின் கீழ் நடக்கும் நடக்கும் குற்றங்களுக்கு கட்டளைக்குரிய இடத்தில் இருப்பவர் பொறுப்பேற்க வேண்டும் என்ற சட்டக் கொள்கையை இலங்கை நீதிமன்றங்கள் மனித உரிமை வழக்குகளில் அங்கீகரிக்க மறுத்திருந்தாலும், ~பொலிஸ், இராணுவம், இதர அரச சேவைகளில், கீழதிகாரிகள் செய்யும் மனித உரிமை மீறல்களுக்கு மேலதிகாரிகளும் பொறுப்பேற்கின்ற சட்ட நிலையை நீதிபதிகள் அங்கீகரித்துள்ளனர் ." " கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே எழுதிய Focus on Rights: Imperative revisions to the criminal law to ensure accountability",, The Sunday Times, 20 மே 2007, http://sundaytimes.lk/070520/Columns/focus.html

ஆனால் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் வருந்தத்தக்க அளவில் மாறிமாறி வந்துள்ளன.. ஜூன் 2008ல் சட்டமும் சமூகமும் அறக்கட்டளை (LST) நடத்திய ஆய்வு இதைச் சுட்டிக்காட்டுகிறது. அடிப்படை உரிமை தொடர்பான தீர்ப்புகளில், பொலிஸ் அதிகாரிகளின் மீது சித்ரவதை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தாலும், பதவி உயர்வுக்காக அவர்களது பெயர் பரிசீலிக்கப்படுவதை நிறுத்தத்தேவையில்லை என்று சில சமயம் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதற்கு LST காட்டும் உதாரணம்: கீர்த்தி நுவன் வேதசிங்கே மற்றும் இந்திகா ஹப்புகொட எதிர் ரஞ்சித் அபெசூரிய மற்றும் பிறர், SCFR No 392/2004, SCM20.02.2006, Law & Society Trust, கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே மற்றும் லீஸா கொய்ஸ் எழுதிய Sri Lanka: the right not to be tortured; a critical analysis of the judicial response, , June 2008.

விளக்கம்: *"இந்த வழக்கிலே ஒரு நிலத் தகராறு தொடர்பாக ஒரு உள்ளூர் தொழிலதிபர் மீது புகார் கொடுத்திருந்த பெண்ணொருவரை இந்திகா ஹப்புகொட எனும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சித்ரவதை செய்ததாக அடிப்படை மனித உரிமைகள் மனுவிலே உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. பொலிஸாருடன் தொடர்புகளைக் கொண்டிருந்த அந்த தொழிலதிபரின் தூண்டுதலின் பேரில் நிதம்புவ காவல் நிலைய அதிகாரிகள் அந்தப் பெண்ணைக் கைதுசெய்து, தடுத்துவைத்து, சித்ரவதை செய்திருந்தனர். அடிப்படை மனித உரிமை மீறப்பட்டதாக அவர் தாக்கல் செய்திருந்த மனுவில், பொலிஸார் அவரை சித்ரவதை செய்திருந்தார்கள் என்பதை உயர் நீதிமன்ற நீதிபதி மார்க் .ஃபெர்னாண்டோ உறுதிசெய்திருந்தார்.. ஆனால் பின்னர், அவ்வழக்கில்*

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஆண்டில், போர்நிறுத்தம் ஆட்டம் காண ஆரம்பமாகியதிலிருந்து, இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்கள் மீண்டும் கடுமையாக அதிகரித்திருந்தன. ஆனால் இந்த புதிய சம்பவங்களை விசாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இலங்கையின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் பயனில்லாத அமைப்பாகியிருந்தது, அரசியல் தலையீடு இல்லாமல் சுயாதீனமாக அதனாஅல் செயல்பட முடியாது என்பதாலும், அது அரசியல் சாசனத்தின் மூலம் உருவாக்கபபட்ட ஒரு அமைப்பு இல்லை என்பதாலும் அதைக் கொண்டு பிரயோஜனம் ஏற்படவில்லை. தவிர இலங்கையில் சர்வதேச அமைப்பினர் மூலம் மனித உரிமை நிலவரம் கண்காணிக்கப்பட வேண்டும் என்று உள்நாட்டிலிருந்து சர்வதேச அமைப்புகளிடம் இருந்தும் குரல்கள் ஓங்கி ஒலித்திருந்தன.

மீண்டும் ஒருமுறை காலம் கடத்துவ - இலங்கையின் விசாரணை ஆணையங்கள்

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் நடந்திருந்த ஆட்கடத்தல்கள், ஆட்கள் காணாமல்போன சம்பவங்கள், சட்டவிரோத ஆட்கொலைகள் போன்றவற்றை விசாரிப்பதற்காக சர்வதேச அளவிலான சுயாதீன குழு ஒன்றுக்கு அழைப்பு விடுப்பதாக 4 செப்டம்பர் 2006 அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதிலும், சர்வதேச பொதுமன்னிப்பு சபை நீண்ட காலமாக பரிந்துரைத்திருந்த வகையில் சர்வதேச அரங்கில் செயல்படுவதிலும் இலங்கை அரசாங்கம் காட்டிய அக்கறையை சர்வதேச பொதுமன்னிப்பு சபை வரவேற்றிருந்தது. ஆனால் 6 செப்டம்பர் 2006 அன்று இலங்கை ஜனாதிபதி, மனித உரிமை மீறல்களை

சம்பந்தப்பட்டிருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் தாங்கள் தேசிய பொலிஸ் ஆணையத்தால் பதவி உயர்வுக்கு அங்கீகரிக்கப்படவில்லை என்று முறையிட்டிருந்த ஓர் மனுவில். தலைமை நீதிபதி சரத் சில்வா, பதவி உயர்வு கிடைக்கிற விடயத்தில் முந்தைய நீதிமன்றத் தீர்ப்பு தடையாக இருக்கக்கூடாது என்று முடிவு தெரிவித்திருந்தார்.. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டது, சம்பவம் நடந்த சமயத்தில் அவர் காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக (OICயாக) இருந்தார் என்ற விபரத்தின் அடிப்படையில் மட்டும்தான். ஆதலால் அவரது பதவி உயர்வு பாதிக்கப்படக்கூடாது என்று தலைமை நீதிபதி முடிவு எடுத்திருந்ததாகத் தெரிகிறது. ஆனால் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இந்திகா ஹப்புகொட சித்ரவதை செய்யும் காரியங்களில் ஈடுபட்டிருந்தார் (காதர் எதிர் மல்லாவ குமார மற்றும் பிறர் என்ற வழக்கைக் காண்க)

"குற்றத்துக்குரியவர் என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது (அது பிறர் செய்த காரியத்துக்கு பொறுப்பேற்பதாக இருப்பினும்) என்றாலும்கூட அது பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வுக்கு தடையில்லை என்று நீதிமன்றம் முடிவு வழங்கியிருப்பது, அடிப்படை உரிமைகளைக் காப்பதிலே நீதிமன்றங்களுக்கு இருக்கும் விசேட அதிகாரத்தின் நோக்கத்தையே வீணடிப்பதாய் இருக்கிறது. அடிப்படை உரிமைகளைக் காக்கும் நீதிமன்றத்தின் அதிகாரத்தையே இது கெடுத்துவிடுகிறது.", கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

உள்நாட்டளவில் செயல்படும் விசாரணை ஆணையம் விசாரிக்கும் என்றும் அந்த ஆணையத்தின் பணிகளை கண்காணிப்பதற்காக சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவை தான் அழைப்பதாகவும் மாற்றி அறிவித்திருந்தார். 2 நவம்பர் 200 அன்று, ஜனாதிபதி விசாரணை ஆணையத்தை நியமித்திருந்தார். "1 ஆகஸ்ட் 2005க்கு பின்னர் இலங்கையில் குற்றம்சாட்டப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் தொஅர்பில் விசாரணை செய்வதற்கும் புலனாய்வு செய்வதற்குமான விசாரணைக் ஆணையத்தை" அவர் நியமித்திருந்தார். அதன் பின்னர் மூன்று மாதங்கள் கழித்து பிப்ரவரி 2007ல் சர்வதேச மாண்புமிக்கோர் குழு முழு அளவில் உருவாகியிருந்தது.

> *இந்த விசாரணை ஆணையம் அமைத்ததன் மூலமாக, தேசிய மனித உரிமை ஆணையம் போன்ற மனித உரிமை பாதுகாப்பு அமைப்புகள் செயல்பட்டுவந்த விதம் மீது குவிந்திருந்த கவனத்தை திசை திருப்பியதில் அரசாங்கம் காட்டிய லாவகம் நம்பமுடியாத அளவில் இருந்தது. (ஏதோ சர்வதேச கண்காணிப்பாளர்கள் இலங்கையில் உதவிப் பணி செய்வார்கள் என்ற தோற்றத்தை இது ஏற்படுத்தியிருந்தது.) இலங்கை தவர்த்து வேறொரு தெற்காசிய நாட்டில் அரசாங்கம் இப்படி அப்பட்டமான ஏமாற்று வேலையில் ஈடுபட்டிருந்தால் அது நிச்சயம் பொதுமக்கள் மத்தியில் அம்பலமாகியிருக்கும்.*
>
> **கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே, ∴போகஸ் ஆன் ரைட்ஸ் (உரிமைகள் மீதான கவனம்), சண்டே டைம்ஸ் பத்திரிகை, 7 ஜனவரி 2007)**

குற்றவாளிகள் தண்டிக்கப்படாத நிலையை எதிர்த்துப் போராடுவதற்கும் நாட்டில் வேகமாக மோசமடைந்துவரும் மனித உரிமை சூழலின் வேகத்தை குறைப்பதற்கும் உறுதியளிக்கும் எந்த ஒரு முயற்சியையும் இலங்கையில் பலரும் வரவேற்கத் தயாராக இருக்கிறார்கள் என்றாலும், சிலர் எதிர்பார்த்து இருந்தது போல ஐ.நா.வுடைய ஏற்பாட்டில் கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்படும் என்ற அளவுக்கு ஜனாதிபதியின் திட்டம் செல்லவில்லை. அரசாங்கம் "அவகாசம் தேடிக்கொள்ளவும் ", அத்துமீறல்களுக்கு பொறுப்பானவர்கள் தமது காரியங்களுக்கு பதில் சொல்ல நிர்பந்திக்கும் கட்டமைப்புகளைக் குலைப்பதுமே இந்த விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டதன் நோக்கம் என்றுகூட சிலர் கருதுகின்றனர்.[19]

---

[19]உதாரணத்துக்கு கலாநிதி பி.சரவணமுத்து எழுதி 7 பிப்ரவரி 2007 அன்று The Morning Leader ரில் வெளியானg The sham of independence without human rights protection,"னைப் பாருங்கள்: "மனித உரிமைகள் பாதுகாப்பிலே தனது மோசமான நிலை குறித்து சர்வதேச நாடுகளின் தண்டனை நடவடிக்கையிலிருந்து தப்பித்து நேரம் கடத்த வேண்டும் என்பதுதான், ஜனாதிபதி உத்தரவின்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

நவம்பர் 2006ல் ஜனாதிபதி ராஜபக்ஷவின் மாறிய நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிடும் முகமாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை பின்வருமாறு கோரியது:

- முன்மொழியப்பட்டுள்ள விசாரணை ஆணையத்தில் சுயாதீன, பக்கச்சார்பற்ற, திறன்மிக்க சர்வதேச நிபுணர்களைச் சேர்க்க வேண்டும்;
- அரசு சாரா அமைப்புகள் உள்ளிட்டு சிவில் சமூகத்தின் முக்கிய பிரதிநிதிகளின் கலந்தாலோசனைகளுடன் விசாரணை ஆணையத்தின் பணிகள் உருவாக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்;
- விசாரணை ஆணையம் தான் சேகரிக்கும் தகவல்களை, சர்வதேச மனித உரிமை சட்டங்கள், சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட இலங்கை சட்டங்களுக்கு அமைய பரிசீலித்து மதிப்பிடுவதை உறுதிசெய்ய வேண்டும்;
- விசாரணை ஆணையத்தின் சுதந்திரம் பேணப்படுவதையும், அவர்களுக்கு சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களையும் தகவல்களையும் அணுகமுடிவதையும், பொதுமக்கள் அவர்களை அணுகமுடிவதையும், சாட்சிகள் பாதுகாக்கப்படுவதையும், அவர்கள் வெளித் தலையீடுகள் இல்லாது செயல்படுவதையும், அவர்களுடைய இடைக்கால மற்றும் பிற அறிக்கைகள்

பேரில் அரசாங்கம் விசாரணை ஆணையம் ஆரம்பித்தது மற்றும் சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழு (IIGEP) அமைத்ததன் உள்நோக்கம். இந்தக் குழு பிப்ரவரி 12ஆம் தேதி கூடவுள்ளது. இலங்கையில் விசாரணை ஆணையங்கள் பலன் தராது என்று கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் தெரிவிக்கப்படுகிற அவநம்பிக்கை ஒரு புறம் இருந்தாலும், இந்த விசாரணை ஆணையம் அறிவிக்கப்பட்டது, நிறுவப்பட்டது, IIGEP குழு நியமிக்கப்பட்டது எல்லாம் நிச்சயமாக மனித உரிமைகள் பாதுகாப்பில் அரசு அக்கறையும் ஈடுபாடும் கொண்டுள்ளது என்று காட்டுவதற்காகத்தான். ஆனால் அதிகாரப் படிநிலைகளிலும், கட்டுப்பாட்டு படிநிலைகளிலும், தொடர்பு வழித்தடங்களிலும் இந்த நோக்கம் பரவியிருக்கவில்லை. மனித உரிமை பாதுகாப்பில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது என்பதுதான் இதன் நோக்கமா என்று சந்தேகம் எழுகிற நிலையை இது உருவாக்கிவிட்டது. எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் செய்ய அரசாங்க அதிகாரிகள் பயப்படும் ஒரு விடயமாக விசாரணை ஆணையம் மற்றும் IIGEP குழு அறிவிக்கப்பட்ட விதமோ நிறுவப்பட்ட விதமோ அமைந்திருக்கவில்லை.

"துஷ்பிரயோகங்கள் அதிகரித்துவருகின்றன. தினம் தினம் நடக்கும் விஷயமாகிவிட்டன. இருக்கக்கூடிய பல வழக்குகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தப்பட்டது, கிருத்தவ மதகுரு ஞானசீலன் சம்பந்தப்பட்ட வழக்கு ஆகியவற்றை உதாரணத்துக்கு இங்கே குறிப்பிடுகிறேன். ஆணையம் விசாரிக்கின்ற வழக்குகளின் எண்ணிக்கை இப்படி அதிகரித்துக்கொண்டேபோவதால், ஆணையம் எவ்வளவு காலம் விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்லவே முடியாத நிலை உருவாகிவிடும். ஆணையத்தின் முடிவு மற்றும் IIGEP பரிந்துரைகள் வந்த பின்னர்தான் மனித உரிமை பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கைகளை வலுப்படுத்த முடியும் என்று அரசாங்கம் சாக்குபோக்கு சொல்லி வரலாம். குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பது என்பது ஏற்கனவே வழக்கமாகிவிட்ட நிலையில், இன்னும் தாமதம் ஏற்பட்டால், அது வேரூன்றி வளர ஆரம்பித்துவிடும்.

www.cpalanka.org/Newspaper_Articles/Leader_7_Feb_2007.pdf

பிரசுரிக்கப்படுவதையும் ஜனாதிபதி உறுதிசெய்ய வேண்டும்;

- விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகளை கவனமாக பரிசீலிக்க வேண்டும். அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்.

மேற்சொன்ன தரத்தில் விசாரணை ஆணையம் அமைக்கப்படவில்லை, செயல்பட அனுமதிக்கப்படவில்லை என்றால், சர்வதேச சட்ட மீறல்களை அர்த்தமுள்ள வகையிலும் சர்வதேச தர அளவுகோல்களின் பிரகாரமும் கையாளுகிற ஒரு விசாரணை அமைப்பாக அதனால் செயல்பட முடியாது என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை கருதுகிறது.[20]

சர்வதேச மற்றும் தேசிய அரசு சாரா அமைப்புகள், தனியார் பலர் விடுத்த குரல்கள் செவிமடுக்கப்படாது சென்றதுபோலவே தமது குரலும் செவிமடுக்கப்படவில்லை என்பதையிட்டும் விசாரணைகளை நடத்துவதில் சர்வதேச தர அளவுகோல்களுக்கு அமைய செயல்படுவதில் விசாரணை ஆணையம் பின்வருமாறு தவறியுள்ளதையிட்டும் சர்வதேச பொதுமன்னிப்பு சபை வருந்துகிறது.

விசாரணை ஆணையங்களின் (CoI) பணி குறித்த ஆய்வு

"விசாரணைக்கும் புலனாய்வுக்குமான" பதினைந்து சம்பவங்கள், ஆணையத்தை நியமித்து நவம்பர் 2006ல் பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவுடன் வந்த அட்டவணையில் பட்டியலிடப்பட்டிருந்தன. பதினாறாவது சம்பவமான நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ்ஜினுடைய படுகொலை பின்னர், ஜனாதிபதி அவர்களாளேயே நேரடியாக சேர்க்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. "சுயாதீனமான மற்றும் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளவும்" மற்றும் "மோசமான மனித உரிமை மீறல்களாக அமைந்துள்ள இதுபோன்ற சம்பவங்கள் மீது ஏற்கனவே நடந்திருந்த விசாரணைகள் எந்த அளவுக்கு போதுமானவையாக இருந்தன, அவை எந்த அளவுக்கு முறையாக மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதை ஆராயவும்", ஜனாதிபதியின் உத்தரவில் விசாரணை ஆணையத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. தன்னுடைய புலனாய்வுகளை இரகசியமாக மேற்கொள்வதிலும். மக்களை விசாரிப்பதிலும் விசாரணை ஆணையம் கவனம் செலுத்தியிருந்ததே ஒழிய, இதே சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரும் சட்டமா அதிபரின் அலுவலகமும் செய்த விசாரணைகளில் என்னென்ன விஷயங்களில் கோட்டை விடப்பட்டிருந்தது

[20]Sri Lanka: Observations on a Proposed Commission of Inquiry and International Independent Group of Eminent Persons, AI Index: ASA 37/030/2006, 17 நவம்பர் 2006, pp2-3.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

என்பதில் அது கவனம் செலுத்திருக்கவில்லை என்பது விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளில் இன்றளவும் தெரிவிக்கப்படும் முக்கிய குறைபாடு ஆகும். இரண்டு அமைப்புகளின் செயல் திறன் குறித்த ஒரு விரிவான விமர்சனம் உடனடியாக வேண்டும், ஏனெனில் மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதில் இவ்வமைப்புகள் தொடர்ந்தும் தோல்வியடைந்து வந்துள்ளன என்பதை கீழே விவாதிக்கப்படும் முக்கிய சம்பவங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

விசாரணை ஆணையத்தினால் கீழே பட்டியலிடப்படும் சம்பவங்கள் விசாரிக்கப்படும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது:[21]

1. இலங்கையின் வெளியுறவு அமைச்சராக இருந்த மாண்புமிகு லக்ஷ்மண் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம்.
2. சர்வதேச தொண்டு நிறுவனமான பழி ஒழிப்பு நடவடிக்கையைச் (ஏ.சி.எ.ப்.) சேர்ந்த பதினேழு ஊழியர்கள் 2006 ஆகஸ்ட் மாதத்தின் ஆரம்பத்தில் கொல்லப்பட்டிருந்த சம்பவம்.
3. ஆகஸ்ட் 2006 ஆரம்பத்தில் மூதூரில் முஸ்லிம் கிராமவாசிகள் கொல்லப்பட்டதாக குற்றம்சாட்டப்படும் சம்பவம் மற்றும் மூதூர் வாசிகள் 14 பேர் ஆம்புலன்ஸ் வண்டியில் கொண்டுசெல்லப்படும்போது வெலிக்கந்தையில் கொல்லப்பட்ட சம்பவம்.
4. 25 டிசம்பர் 2005 அன்று நடாளுமன்ற உறுப்பினர் ஜோச.ப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம்.
5. ஜனவரி 2006 அன்றோ அந்த நெருக்கத்திலோ திரிகோணமலையில் ஐந்து இளைஞர்கள் கொல்லப்பட்டது.
6. இலங்கை சமாதான செயலகத்தின் துணை தலைமை இயக்குநர் கேதீஷ் லோகநாதன் 12 ஆகஸ்ட் 2006 அன்று படுகொலை செய்யப்பட்ட சம்பவம்.
7. ஆகஸ்ட் 2006 சமயத்தில் நாதளமொட்டன்குளத்தில் (செஞ்சோலை) 51 பேர் கொல்லப்பட்டது.
8. 28 ஆகஸ்ட் 2006 அன்று அல்லைப்பிட்டியின் .பிலிப் நேரி தேவாலயத்தைச் சேர்ந்த அருட்தந்தை நிஹால் ஜிம் பிறெளன் காணாமல்போன சம்பவம்.
9. 17 ஜூன் 2006 அன்று பேசாலை கடற்கரையிலும் தேவாலயத்திலுமாக ஐந்து மீனவர்களும் மேலும் ஒருவரும் கொல்லபட்ட சம்பவம்.
10. வெள்ளணை பொலிஸ் பகுதியில் 13 மே 2006 அன்று 13 பேர் கொல்லப்பட்டது.

[21]விசாரணை ஆணையம் அமைக்கப்பட்ட உத்தரவில் இந்த பட்டியல் ஒரு இணைப்பாக சேர்க்கப்பட்டிருந்தது. ஆணையத்தின் இணையதளத்தைக் காண்க: Presidential Commission of Inquiry to Investigate and Inquire into Serious Violations of Human Rights, www.pchrv.gov.lk/full_mandate.html

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

11. பொட்டுவில் பொலிஸ் பகுதியில் உள்ள ரதெல்லவில் முஸ்லிம் கிராமவாசிகள் 10 பேர் 17 செப்டம்பர் 2006 அன்று கொல்லப்பட்ட சம்பவம்.
12. 15 ஜூன் 2006 அன்று கெபிதிகொல்லாவவில் 68 பேர் கொல்லப்பட்ட சம்பவம்.
13. 29 ஏப்ரல் 2006 அன்று அவிசாவளையில் தலையற்ற ஐந்து சடலங்கள் கண்டெடுக்கப்பட்டது தொடர்பான சம்பவம்.
14. வெலிக்கந்தையில் 29 மே 2005 அன்று 13 பேர் கொல்லப்பட்ட சம்பவம்.
15. சிகிரியவில் உள்ள திகம்பதனையில் 16 அக்டோபர் 2006 அன்று பாதுகாப்பு படையினர் 98 பேர் கொல்லப்பட்டது.
16. 10 நவம்பர் 2006 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டது.

நடந்துவருகின்ற மனித உரிமை மீறல்களை கண்காணிக்கின்ற அனுமதி விசாரணை ஆணையத்துக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதை கவனிப்பது முக்கியம். ஆனால் வழக்குகளைச் சேர்க்கக்கூடிய வளைந்துகொடுக்கும் தன்மை அதற்கு இருந்தது. ஆனபடியால்தான் நடராஜ் ரவிராஜாவுடைய படுகொலைச் சம்பவம் பிற்பாடு சேர்க்கப்பட முடிந்தது.

மந்தகதியிலான செயல்முறை மற்றும் வழக்குகளிடையே பாரபட்சம் காட்டுதல்

விசாரணை ஆணையம் ஆரம்பத்தில் மிகவும் மந்தமாகவே செயல்பட்டது. அதுவும் குறிப்பாக விசாரிக்கப்படவேண்டிய சம்பவங்களின் தீவிரத்தன்மையோடு ஒப்பிடுகையில் அது மிகவும் மெதுவாக செயல்பட்டிருந்தது. தனத் நிர்வாக விஷயங்களை ஒழுங்கு செய்வதற்கும், ஊழியர்களைப் பணியமர்த்துவதற்கும், விசாரணைகளைத் தொடங்குவதற்குமே அதற்கு ஆறு மாதங்கள் ஆனது. முதலாம் ஆண்டிலே, அதன் விசாரணைகள் அனைத்தும் வீடியோ தொடர்பாடல் மூலம் மேற்கொளப்பட்டிருந்தது. அதாவது பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களும், பொதுமக்களும் விசாரணைகளுக்காக நேரில் ஆஜராக வேண்டிய அவசியம் இல்லாது இருந்தது. 5 ஜனவரி 2008ல் விசாரணை ஆணையம் தான் புலன் விசாரணை செய்த வழக்குகளில் ஒன்றில் மட்டும் வெளிப்படையான விசாரணையை ஆரம்பித்திருந்தது.

"புலனாய்வுகள்" மற்றும் "விசாரணைகள்" இடையில் வேறுபாடுகள் இருப்பதாக விசாரணை ஆணையம் செயல்பட்டது. புலனாய்வுகள் அதாவது இன்வெஸ்டிகேஷன் என்ற வார்த்தை மூலம் அது சுட்டிக்காட்டுவது ஜனாதிபதி உத்தரவின் பிரிவு 8ன் கீழ் குறிப்பிடப்படும் விஷயமான பொதுமக்கள் பார்வையில் அல்லாமல் வீடியோ பதிவு மட்டும் செய்யப்பட்டு நடத்தப்படும் விசாரணைகள்

ஆகும். விசாரணைகள் அதாவது இன்கொயரி என்ற வார்த்தை மூலம் அது சுட்டிக்காட்டுவது பொதுமக்கள் முன்னிலையில் நடத்தப்படும் விசாரணைகள் ஆகும். பொதுமக்கள் பார்வையிலிருந்து விலகி நடக்கும் வீடியோ விசாரணைகள் தேவைதான் ஏனென்றால் ஆரம்பத்தில் நடந்திருந்த புலனாய்வுகள் மிகவும் மோசமாக நடத்தப்பட்டிருந்தமையால் அவற்றை தாங்கள் மீண்டும் நடத்தி, சாட்சி ஒருவருரின் வாக்குமூலம் பலன் தருமா என்பதையும், பொதுமக்கள் முன்னிலையில் நடக்கும் விசாரணையில் அதனை சேர்க்க வேண்டுமா என்பதையும் தாங்கள் தீர்மானிக்க வேண்டியுள்ளது என விசாரணை ஆணையம் வாதிட்டிருந்தது. ஆனால் இந்த ஏற்பாட்டை மாண்புமிக்கோர் குழு விமர்சித்திருந்தது. நேரத்தை விரயமின்றி பயன்படுத்துவதற்கும் சரி, சர்வதேச அளவுகோல்களுக்குரிய வெளிப்படைத் தன்மையுடன் விசாரணை நடைபெறுவதற்கும் சரி, இந்த வகை விசாரணைகள் ஒத்துவராதவை என்று அது கூறியிருந்தது. சட்டத்துக்கு அப்பாற்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டவர்களுடைய உறவினர்களுக்கு, அது சம்பந்தமாக எந்த விசாரணை நடந்தாலும் அதைப் பற்றி தெரிந்துகொள்வதற்கும், வந்து பார்ப்பதற்கும், புலனாய்வு தொடர்பான விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும், கூடுதல் தடயங்களை சமர்ப்பிப்பதற்கும் உரிமை இருக்கிறது என்று சர்வதேச தர அளவுகோல்கள் வலியுறுத்துகின்றன.[22]

ஜனவரி 2009ல், அதாவது விசாரணை ஆணையம் ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் கழிந்திருந்தும், விசாரணை ஆணையம் செயல்படுவதற்கான உத்தரவு இரண்டு தடவைகள் நீட்டிக்கப்பட்டதன் பின்னரும்[23], மொத்தமுள்ள 16 சம்பவங்களில் வெறுமனே நான்கு சம்பவங்கள் தொடர்பாக மட்டும்தான் பொதுமக்கள் முன்னிலையில் விசாரணை நடந்திருந்தது. ஒரே ஒரு சம்பவம் தொடர்பாகத்தான் விசாரணையை (ஜனவரி 2006ல் திருகோணமலையில் இளைஞர்கள் ஐந்து பேர் கொல்லப்பட்டது தொடர்பான விசாரணை) நிறைவுசெய்ய ஆணையத்தால் முடிந்திருந்தது. □□□□□□□□□□□□□□□□□□ □□□□□□□□ [□□□□□□□ □□□□□□□] □□□□□ □□□□ தொண்டு நிறுவனமான பசி ஒழிப்பு நடவடிக்கையின் (ஏ.சி.எ□ப்) 17 ஊழியர்கள் மூதூரில் கொல்லப்பட்ட சம்பவம் (சம்பவம் எண் 2) தொடர்பில் விசாரணைகள் ஜனவரியிலும் நீடித்தபடிதான் இருந்தன. கெபிதிகொல்லாவவில் 68 பேர் கொல்லப்பட்ட 15 ஜூன் 2006 சம்பவம் (சம்பவம் எண் 12) தொடர்பிலும்,

[22]சட்டத்துக்கு அப்பாற்பட்ட, யதேச்சதிகார மற்றும் முறையான விசாரணையற்ற மரண தண்டனை நிறைவேற்றங்களைத் தவிர்ப்பதற்கும் விசாரிப்பதற்குமான ஐ.நா.வின் கொள்கைகள், பொருளாதார மற்றும் சமூக மன்றத்துடைய தீர்மானம் ஒன்றினால் பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் 1989/65 of 24 May 1989, para 16.

[23]ஒரு வருடம் என்கிற கணக்கில் கடைசியாக செய்யப்பட்டிருந்த ஆணையத்துக்கான நீட்டிப்பு உத்தரவு 4 நவம்பர் 2008 என்ற தேதியோடு காலாவதியாகிவிட்டது. அதன் பின்னர் ஆணையத்தை ஜனாதிபதி மே 2009 வரை என ஆறு மாத காலத்துக்கு நீட்டித்துள்ளார்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

திகம்பதனையில் பாதுகாப்பு படையினர் 98 பேர் கொல்லப்பட்ட 16 ஒக்டோபர் 2006 சம்பவம் (சம்பவம் எண்15) தொடர்பாகவும் செப்டம்பர் 2008ல்தான் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

பொது விசாரணைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட வழக்குகளிலிருந்து தெரியவருவது என்னவென்றால், அரசியல் ரீதியிலும் இன ரீதியிலும் சமநிலையைப் பேண விசாரணை ஆணையம் முயன்றுள்ளது என்று தோன்றுகிறது. மூதூர் மற்றும திருகோணமலை சம்பவங்களை தெரிவுசெய்ததன் மூலம் தமிழ் சிவிலியன்களுக்கு எதிரான வழக்குகளுக்கும், கெபிதிகொல்லாவ கொலைகள் மற்றும் திகம்பதனை பஸ்வண்டி குண்டுத்தாக்குதல் ஆகியவற்றை தேர்ந்தெடுத்தது மூலம் சிங்களப் பொதுமக்கள் மற்றும் அரச படையினர் சம்பந்தமான வழக்குகளுக்கும் அது இடமளிக்க முயன்றுள்ளது. மே 2008ல் மாகாண சபை தேர்தல்கள் வருவதை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் ஸ்திரநிலையை ஏற்படுத்த அரசாங்கம் காட்டிய ஆர்வம் அதிலும் குறீப்பாக திருகோணமலையின் கேந்திர ரீதியான முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், பொது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்குகளில் முதல் இரண்டும் இந்தப் பகுதியில் நடந்த சம்பவங்களாக அமைந்திருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை என்று காட்டுகிறது. அதே நேரம் பொதுமக்களின் கவனம் பெரிய அளவில் தேவைப்பட்ட மிக மோசமான சம்பவங்கள் அவை. இரண்டிலுமே அரசாங்கம் குற்றத்துக்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதற்கு வலுவான ஆதாரங்கள் இருந்தன.

ஒரு வருடத்துக்கும் அதிகமானதொரு காலகட்டத்தில், விசாரணை ஆணையமானது பொதுமக்களின் பார்வையிலிருந்து விலகி நடத்திய விசாரணைகளில் அதிக கவனம் செலுத்தியது திருகோணமலை சம்பவத்திலும், ஏ.சி.எ.ப். ஊழியர்கள் கொலைச் சம்பவத்திலும்தான். அதன் பின்னர் அது பொட்டுவில்லில் முஸ்லிம் ஊழியர்கள் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் செஞ்சோலையில் விமானப்படையினர் நடத்திய குண்டுவீச்சில் தமிழ் பள்ளி மாணவிகள் கொல்லப்பட்ட சம்பவம் பற்றிய விசாரணைகளை நடத்தியிருந்தது. ஆக இந்த வழக்குகள் அனைத்துமே அரசாங்கத்துக்கு ஏதோ வகையில் பங்கு இருக்கிறது என்று பழிசுமத்தப்படும் சம்பவங்கள் ஆகும். நெடுங்காலம் தாண்டி சர்வதேச மாண்புமிக்கோர் குழுவினர் விலகிய பின்பும், சமூக ரீதியில் பக்கச்சார்போடு முனைந்து செயல்படுவதற்கு பெயர்போன சட்டத்தரணிகள் விசேட அதிரடிப்படை சார்பாகவும், இராணுவம் சார்பாகவும் வாதிட ஆரம்பித்ததன் பின்புதான், விடுதலைப் புலிகள் நடத்தியவை என்று சந்தேகிக்கப்படும் கெபிதிகொல்லாவ மற்றும் திகம்பதனை குண்டுவீச்சு சம்பவங்கள் பொது

விசாரணை தேவை என்ற சம்பவங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டன.[24]

விசாரணை ஆணையம் மந்தகதியில் செயல்படுவதன் காரணம் மோதல் பிரதேசங்களில் இருந்து அவர்கள் விபரங்களும் தடயங்களும் சேகரிக்க வேண்டியுள்ளது. அதில் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதால்தான் என, 27 ஜனவரி 2008 அன்று □□□□□□□□□□□□□□ நடந்த பத்திரிகையாளர் சந்திப்பொன்றில், இலங்கை வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லாகம என்று கூறியிருந்தார். ஆனால் அது மீண்டும் நல்ல செயல்பாட்டுக்கு திரும்பிவிட்டது என்று அவர் உறுதியளித்திருந்தார். "பெரும்பான்மையான சம்பவங்களுடைய விசாரணைகள் நிறைவடையும் கட்டத்தை நெருங்கிவருகின்றன" என்று அவர் கூறினார், "அதுவும் ஒரு சம்பவத்தில், பிரான்ஸின் சர்வதேச அரசு சாரா அமைப்பான ஏ.சி.எ◌ஃப்.பின் தொண்டூழியர்கள் 17 பேர் கொல்லப்பட்ட அந்த விசாரணையில் விரைவிலே அறிக்கை வெளியாகும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்." என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.[25] சர்வதேச மாண்புமிக்கோர் குழுவினரும், சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளும், விசாரணை ஆணையத்துக்குள்ளேகூட அதிக செயலாற்வமும் அனுபவமும் காட்டிய உறுப்பினர்களும் தற்போது வெளியேறிவிட்ட நிலையில், மற்ற சம்பவங்கள் பற்றிய விசாரணைகளை அவசரகதியில் ஏனோதானோவென்று நடத்தி முடித்துவிட்டு, பலவீனமான, தீர்க்கமான முடிவில்லாத முடிவுகளை விசாரணை ஆணையம் வெளியிடலாம் என்று அதன் செயற்பாடுகளை அவதானித்துவரும் விஷயம் தெரிந்தவர்கள் பலர் அச்சம் வெளியிடுகின்றனர்.

சம்பவ விபரங்கள்

2 ஜனவரி 2006 அன்று திருகோணமலையில் இளைஞர்கள் 5 பேர் கொல்லப்பட்டது

2006ஆம் வருடம் ஜனவரி 2ஆம் தேதி, திருகோணமலையைச் சேர்ந்த ஐந்து தமிழ் மாணவர்கள் இலங்கையின் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டும் மேலும் இருவர் கடுமையாக காயப்படுத்தப்பட்டும் இருந்தனர். திருகோணமலையின் ஸ்ரீகோணேஸ்வர் இந்துக் கல்லூரி மற்றும் புனித சூசையப்பர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் 2 ஜனவரி 2006 அன்று மாலை 7 மணியளவில் பேசிப் பொழுதைக் கழிப்பதற்காக கடற்கரையில் கூடியிருந்த

[24]STF சார்பாக எஸ்,எல்.குணசேகர ஆஜரானார். இரானுவம் சார்பாக கொமின் தயாஸ்ரீ ஆஜரானார்.

[25] "Sri Lanka denies abuses, says probes nearly complete" 28 ஜனவரி 2009, ராய்டர்ஸ் இந்தியா செய்தி இணையதளம் http://in.reuters.com/article/southAsiaNews/idINIndia-37688420090127

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

வேளையில் அப்பக்கமாக சென்ற முச்சக்கர வண்டியிலிருந்து அவர்கள் மீது எறிகுண்டு ஒன்று வீசப்பட்டிருக்கிறது. குண்டு விழுந்தவுடன் அவர்கள் தப்பித்து ஓடினார்கள் என்றாலும், குறைந்தபட்சம் மூன்று பேர் குண்டுவெடிப்பில் காயமடைந்தனர். சற்று நேரம் கழித்து விசேட அதிரடிப் படையின் (STF) சீறுடை அணிந்திருந்த 10 முதல் 15 பேர் வரையிலானோர் அங்கு வந்துள்ளனர். காயமுற்றுக்கிடந்தவர்களை தமது ஜீப் வண்டியில் தூக்கிப்போட்டு, துப்பாக்கிக் முனையால் அவர்களைக் குத்தியும் அடித்தும் இருக்கிறார்கள்; பின்னர் அவர்களை வண்டியிலிருந்து சாலையில் கீழே தள்ளிவிட்டுள்ளனர். பின்னர் பாதுகாப்பு படையினர் ஐந்து மாணவர்களை சுட்டுக் கொன்றதாக சம்பவத்தைக் கண்டவர் ஒருவர் கூறுகிறார்.[26] கொல்லப்பட்ட ஐந்து பேருக்குமே சுமார் 20 வயதுதான் இருக்கும். கஜேந்திரன் சண்முகராஜா, ரோஹன் லோஹிதராஜா, சிவானந்தா தங்கதுரை, ஹேமச்சந்திரன் யோகராஜா மற்றும் ரஜிஹர் மனோகரன் ஆகியோர் கொல்லப்பட்டவர்கள் ஆவர். காயங்களோடு உயிர் பிழைத்திருந்தவர்கள் கோகுலராஜ் பரராஜசிங்கம் மற்றும் பூங்குழலோன் யோகநாதன் ஆகிய இருவர். காயமடைந்தவர்களும் இறந்தவர்களின் சடலங்களும் ஒரு ஜீப் வண்டியில் ஏற்றப்பட்டு ஒரு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. ஐந்து பேருமே கொல்லப்பட்டது (அவர்கள் எடுத்துவந்ததாக குற்றம்சாட்டப்பட்ட) ஒரு கையெறிகுண்டு யதேச்சையாக வெடித்ததால்தான் என்று பாதுகாப்பு படையினர் ஆரம்பத்தில் வாதிட்டிருந்தனர். ஆனால் அந்த ஐந்து பேருமே துப்பாக்கி குண்டு தாக்கியதாலேயே உயிரிழந்துள்ளனர் என்பது பிற்பாடு பிரேதப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. அதிலே மூன்று பேருக்கு தலையிலே குண்டு பாய்ந்திருந்தது.[27]

கையெறிகுண்டு வெடித்ததை அடுத்து சம்பவ இடத்தில் இருந்த கடற்படை உறுப்பினர்கள் அப்பகுதியிலுள்ள சாலைகளில் போக்குவரத்தை தடைசெய்தனர், பிள்ளைகளைக் காணாது கவலையடைந்துள்ள பெற்றோர் சம்பவ இடத்துக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக. சம்பவ இடத்தில் எரிந்துகொண்டிருந்த தெருவிளக்கும் அணைக்கப்பட்டது, இருட்டாக இருந்தால் யாரும் எதையும் பார்க்க கடினமாக இருக்கும் என்பதற்காக. அந்த இடத்தில் நின்றிருந்தவர்கள் எல்லாம்,

---

[26] "மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன்", UA 114/06, AI Index: ASA 37/013/2006, 3 மே 2006.

[27] "திருகோணமலை நீதிமன்ற மருத்துவ அதிகாரி[JMO] மருத்துவர் காமினி குணதிலக பிரேதப் பரிசோதனைகளை செய்துவிட்டு இறந்தவர்கள் ஐந்து பேருமே குண்டு பாய்ந்ததில்தான் கொல்லப்பட்டுள்ளனர் என்று முடிவு தெரிவித்திருந்தார். அதிலே மூன்று பேர் தலையில் குண்தத பாய்ந்ததிலும், மற்ற இருவருக்கும் வயிற்றிலும் நெஞ்சிலும் குண்டு பாய்ந்ததிலும் கொல்லப்பட்டனர். குண்டுக் காயம் தவிர்ந்த பிற காயங்களும் அவர்களின் உடலில் காணப்பட்டிருந்ததை தான் அவதானித்ததாக JMO தெரிவித்திருந்தார். ஆனால் உயிர் பிரியக் காரணம் குண்டுக் காயங்கள்தான். டி.பி.எஸ்.ஜெயராஜ் , "TERRIBLE TRUTH OF THE TRINCOMALEE TRAGEDY", TAMIL WEEK, 15 ஜனவரி 2006, WWW.TAMILWEEK.COM/TRINCOMALEE_TRAGEDY_0115.HTML, □□□□□□□ □□□□□□□□□□□□□ UA 114/06 (Index 37/013/2006) 3 □□ 2006.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டு, மண்டியிடவோ தரையில் விழுந்து படுக்கவோ செய்யப்பட்டனர் என்று சாட்சி வாக்குமூலம் தெரிவிக்கிறது. விடுமுறைக்காலம் முடிகிற தருணமது, நிறையெ பேர் கூடுகிற இடமது என்பதால், சம்பவம் நடந்த நேரம் அவ்விடத்தில் நிறைய சிவிலியன்கள் இருந்துள்ளனர். . சாட்சியம் வழங்கினால் பாதுகாப்புக்கு பங்கம் வராது என்று போதுமான உத்திரவாதம் வழங்கப்பட்டிருந்தாலோ, பலன் தரக்கூடிய வாக்குமூலங்கள் கிடைக்கும் வரைக்கும் போதுமான விசாரணைகள் நடந்திருந்தாலோ, அம்மக்களிடம் இருந்து திட்டவட்டமான சாட்சியங்களைப் பெற்றிருக்க முடியும். ஆனால் துரதிருஷ்டவசமாக, ஆரம்ப விசாரணைகளில் ஆழமான பிழைகள் இருந்தன, சாட்சியாக அமையக்கூடியவர்கள் அனைவருமே மோசமான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருந்தனர். ஆரம்ப விசாரணைகள் கோட்டை விட்ட விஷயங்கள் குறித்து விசாரணை ஆணையம் அதிக கவனம் செலுத்தியிருந்தால், சாட்சிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை மேம்படுத்துவது என்பதில் அவர்களால் ஒரு முக்கியமான பங்களிப்பினைச் செய்திருக்க முடியும்.

மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் மற்றும் அவருடைய குடும்பத்தினர் மீதான அச்சுறுத்தல்கள்

இந்த சம்பவம் நடந்த பிறகு அது பற்றி தாங்கள் வாய் திறக்காது இருக்க வேண்டும் என்று தாங்கள் மிரட்டப்பட்டதாகவும் தங்கள் மீது அழுத்தம் தரப்பட்டதாகவும் பாதிக்கப்பட்டோரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர். அச்சம் காரணமாக பெரும்பாலானவர்கள் வாய் திறக்கவே இல்லை. ஆனால் கொல்லபட்ட ராஜிஹர் மனோகரனின் தந்தையான மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் மட்டும் அதற்கு விதிவிலக்காக அமைந்திருந்தார். 10 ஜனவரி 2006 அன்று திருகோணமலை குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்த மரண விசாரணையில் மருத்துவர் மனோகரன் சாட்சியம் வழங்கியிருந்தார்.அன்றிரவு அவரது வீட்டுக்கு வெளியிலிருந்து யார் யாரோ கத்தியதை அவரது குடும்பத்தினர் கேட்க முடிந்திருந்தது. அவர் வீட்டின் மீது கற்களும் வீசப்பட்டிருந்தன. அன்றிரவும் அடுத்த அடுத்த இரவுகளிலும் மனோகரன் வீட்டுக்கு பல தடவை தொலைபேசியழைப்புகள் வந்திருந்தன. தான் யார் என்று கூற மறுத்த ஒருவர் தொலைபேசியில் பேசினார். சிங்களத்தில் பேசினாரென்றாலும் அதிலே ஆங்காங்கே தமிழ் வார்த்தைக் கலப்பும் இருந்தது. மரண விசாரணையில் சாட்சியம் வழங்கியமைக்காக மனோகரனும் அவரது குடும்பத்தாரும் கொல்லப்படுவர் என்று அந்த ஆசாமி மிரட்டியிருந்தார்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

இத□□□□ அடுத்த வாரம் குற்றவியல் நீதிமன்றத்தில் தொடர்ந்த விசாரணைகளில் சாட்சியம் வழங்கியவர்களில் மருத்துவர் மனோகரனும் ஒருவர். அது சமயம் நீதிமன்றத்தில் ஆஜரான சிங்கள பொலிஸ் அதிகாரி ஒருவர் சாட்சிகளை கொட்டிய (புலிகள்) அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறியதாக தெரிவிக்கப்படுகிறது. நீதிமன்ற விசாரணைகள் முடிந்து ஒரு சில நாட்கள் கழித்து, முகம் தெரியாதபடிக்கு ஹெல்மெட் அணிந்து மோட்டார் சைக்கிளில் மனோகரன் வீட்டுக்கு வந்தவர் ஒருவர், மனோகரன் எங்கே என்று கேட்டிருந்தார். தானும் ஒரு மருத்துவரான மனோகரனின் மனைவி, தான் மருத்துவ உதவி செய்ய தயார் என்று கூறியும், மனோகரனைத்தான் பார்க்க வேண்டும் என்று அந்த ஆள் வற்புறுத்திக் கேட்டிருந்தார். ஆனால் அது சாத்தியப்படாது என்று உணர்ந்து அவர் திரும்பிச் சென்றுவிட்டார்.

□□□□□□□□ □□□□ □□□□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□□□□□. □□□□□□ □□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□ □□□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□. □□□□□□□□□ □□□□□ □□□□□□□□□□□□□□□□□□□□□□□ □□□□□ □□□□□□□□□□□□ □□□□□□□ □□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□ (□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□ □□□□□□□, □□□□□□□□□□□□, □□□□□□□□□□□, □□□□□□□□ □□□□□ □□□□□□□□ □□□□□□□□□□□□□□□□ □□□□□), □□□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□ (ICRC), □□□□□□□□ □□□□□□□□□□□ ஜ.□□. □□□□□ □□□□□□□□□□□□□□□□□ (UNHCR), □□□□□□ □□□□□ □□□□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□ □□□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□□□□.

ஜூன் 2006ல், குற்றவியல் நீதிமன்றத்தில் கொலைச்சம்பவம் மீதான வழக்கு ஆரம்பமாகவிருந்த சமயத்தில் மனோகரன் மீதான அச்சுறுத்தல்கள் தீவிரமடைந்திருந்தன. அந்த நேரத்தில் குற்றம்சுமத்தும் தரப்பிலே சாட்சி சொல்ல உடன்பட்ட ஒரே சாட்சியம் மனோகரன் தான். அவரையும் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளச் செய்வதற்கான முயற்சியாகத்தான் இந்த மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. மனோகரனும் அவரது குடும்பத்தினரும் சொல்வதன்படி, ஜூன் 12ஆம் தேதி திருகோணமலையில் மனோகரனின் இன்னொரு மகனான சார்ஹர், ஏ லெவல் பூகோளப் பரிட்சை எழுதச் சென்ற வழியில் இரண்டு பொலிஸ்காரர்களால் நிறுத்தப்பட்டுள்ளார். சார்ஹரிடம் அப்பொலிஸ்காரர்கள் அடையாள அட்டையைக் காட்டச்சொல்லியிருந்தனர். அவர் மருத்துவர் மனோகரனின் மகன் என்று தெரியவரவே, “உன் அப்பா, விஷயத்தை சர்வதேச அளவில் பெரிதுபடுத்தி வருகிறார், இது உன் குடும்பத்துக்கு நல்லதல்ல. இப்போது நீ பரிட்சை எழுதப் போகிறாய் என்பதால் இப்போது உன்னை விடுகிறோம். இன்னொரு சமயம் உன்னைப்பார்த்துக்கொள்கிறோம்" என்று அவர்கள் கூறியிருந்தனர். மனோகரன் குடும்பத்தினர் சார்பாக சர்வதேச பொதுமன்னிப்பு சபையும் பிற அமைப்புகளும் அந்த சம்பவம் தொடர்பில்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்துவந்ததையே இந்த அச்சுறுத்தலின்போது அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிகிறது. போலீஸார் மிரட்டியதை அடுத்து சார்ஹர் மிகவும் பயந்துபோய் பரிட்சையை எழுதி முடிக்காமலேயே வீடு திரும்பிவிட்டுள்ளார்.[28]

பின்னர் ஜூன் 21ஆம் தேதியன்று மருத்துவர் மனோகரன் திருகோணமலையில் ஒரு முச்சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கையில், ஒரு பொலிஸ் சோதனைச் சாவடியில் அவர் நிறுத்தப்பட்டிருந்தார். பணியிலிருந்த பொலிஸ்காரர்கள் அவரிடமிருந்து அடையாள அட்டையை காட்டச்சொல்லி கேட்டிருந்தனர். அவர் யார் என்பது தெரிந்த பின்னர், "உன் மகன் தான் செத்துவிட்டானே" என்று அவர்கள் சொல்லியதாக தெரிவிக்கப்படுகிறது. மற்ற வாகனங்களெல்லாம் சோதிக்கப்படாமல் அனுமதிக்கப்பட மனோகரன் மட்டும் ஒரு காரணமும் இல்லாமல், சாலை ஓரத்திலேயே அரை மணி நேரம் நின்றுகொண்டிருந்ததாக கூறப்படுகிறது. நகரின் மூத்த காவல்துறைக் கண்காணிப்பாளரிடமோ, நாட்டின் தலைமைக் காவல் அதிகாரியிடமோ சாலையில் மறிக்கப்பட்டதாக புகார் சொல்வேன் என்று அந்தப் பொலிஸ்காரர்களிடம் மனோகரன் கூறியதைக் கேட்டு, பொலிஸ்காரர்களில் ஒருவர், "நீங்களெல்லாம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருகிறீர்கள். எங்களுடைய உயர் அதிகாரிகள் உங்களைப் போன்றவர்களுக்கு ஆதரவு தருகிறார்கள். நிலைமை இப்படி இருந்தால் நாங்கள் எப்படி எங்களது கடமையைச் செய்வது?" என்று கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் மனோகரன் தனது வழியில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மனோகரன் தனக்கும் தனது குடும்பத்தினரது உயிருக்கும் ஆபத்து இருப்பதாக அஞ்சியதால், நாட்டுக்கு வெளியில் சென்று பாதுகாப்பு தேடிக்கொள்ள வேண்டும் என்று அவர் முடிவெடுக்கச் செய்தது. அறிவிக்கப்படாத ஒரு இடத்திலிருந்து வீடியோ தொடர்பாடல் மூலமாகத்தான் விசாரணை ஆணையத்திடம் அவர் சாட்சியம் வழங்கியிருந்தார். அந்த வாக்குமூலத்தில்தான் மேற்சொன்ன சம்பவங்களை அவர் விபரித்திருந்தார். மகனது கொலை தொடர்பில் தான் வாய்மூடியிருந்தால், அதற்கு பிரதிபலனாக கொழும்பில் தனக்கு ஒரு வீடு தருவதாகவும், மனோகரனின் மற்ற பிள்ளைகளுக்கு கல்விக்கூடங்களில் இடம்வாங்கித் தருவதாகவும் மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தன்னிடம் கூறியிருந்தார் என்றும் மனோகரன் கூறியிருந்தார்.

பொன்னுதுரை யோகராஜாவின் வாக்குமூலம்

[28]Sri Lanka: Further information on fear for safety, 28 ஜூன் 2006, AI Index: ASA 37/019/2006.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

பிப்ரவரி 2008ல், பொன்னுதுரை யோகராஜா தனது கதையை மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற யாழ்ப்பாண அமைப்பைச் சேர்ந்த (UTHR(J)) ராஜன் ஹோலெவிடம் சொல்லியிருந்தார். அவரது மகன் ஹேமச்சந்திரன் கொல்லப்பட்ட கடற்கரைக்கு அருகில்தான் □□□□□□□□□□ யோகராஜாவும் குடும்பத்தினரும் வசித்துவந்தனர். சம்பவம் நடந்த மாலைப்பொழுதில், கையெறிகுண்டு வெடித்த சத்தம் அவருக்கும் அவருடைய மனைவிக்கும் கேட்டிருந்தது. என்ன நடந்தது என்று அறிந்துகொள்வதற்காக அவர் கிளம்பிச்சென்றுள்ளார். ஆனால் முக்கிய சாலைக்கு சென்றவுடன் இராணுவத்தினர் போன்று சீருடை அணிந்திருந்தவர்கள் அவரை தடுத்து நிறுத்தியதோடு, அவரைத் தாக்கியும் தரையில் தள்ளியும் இருந்தனர்.

ஒருத்தர் என்னை நோக்கி துப்பாக்கியை காட்டிக்கொண்டு "ஒக்கம கொட்டி, வெடி தியண்ட ஒனா" (எல்லாரும் புலிங்க. இவங்களையெல்லாம் சுட்டுக் கொல்லணும்) என்று சிங்களத்தில் கத்தினார். அங்கிருந்த பெண்கள் சிலர் பயத்திலே கூச்சல்போட்டாங்க... நான் தரையிலே விழுந்து, நெஞ்சு தரையிலே பதிவது போல குப்புறப் படுத்துவிட்டேன். அதேபோல வேற இருபது இருபத்தைந்து பேர் படுத்துக்கிடப்பதையும் நான் பார்த்தேன். விருந்தினர் விடுதி இருக்கும் அந்த முனையிலே உள்ள கடற்படையினரின் சோதனைச் சாவடி ஒன்று உள்ளது. அங்கே எந்நேரமும் கடற்படை ஆட்கள் இருப்பார்கள்.... சாலை ஓரத்திலே இருக்கின்ற ஒரு பெரிய விளக்கு அந்நேரம் அணைக்கப்பட்டிருந்தது. விளக்கு அணைந்து சில நிமிட நேரத்திலே, பல பசங்க ஐயோ, அம்மா என்று கத்தியது கேட்டது. அவர்களோட கதறல் ஐந்து நிமிஷங்களுக்கு கேட்டிருந்தது. அதுக்கப்புறம் துப்பாக்கி வெடித்த சத்தங்கள் கேட்டது. ஆமாம், அந்த வெடிச்சத்தம், மேலே பார்த்து சுட்டது மாதிரியான சத்தம் இல்லே, ஆனால் தரையைப் பார்த்து சுட்டது மாதிரியான தெளிவான சத்தம் அது. ஏதோ ஒரு பயங்கரம் நடந்துவிட்டது என்று நான் உணர்ந்தேன். இருபதிலேர்ந்து முப்பது தடவை துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. பத்து நிமிஷம் கழித்து. எங்களையெல்லாம் எழுந்து வந்த வழியிலேயே போகச் சொன்னார்கள். நீல நிற உடுப்பு அணிந்திருந்த கடற்படை ஆட்களும் அங்கே இருந்தார்கள். அவர்கள் எங்களை ஒன்றுமே செய்யவில்லை. காக்கி சீருடை போட்டிருந்தவர்கள்தான் எங்களை படுக்கவைத்தது, அடித்தது, பின்னர் போகச் சொன்னது எல்லாம். அவர்கள் பொலிஸாக இருக்கலாம் இல்லாவிட்டால் விசேட அதிரடிப் படையாக இருக்கலாம். ரோட்டிலே படுக்கவைக்கப்பட்டவர்களிலே பெண்களும் இருந்தார்கள். அந்த

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

இடத்துக்கு கடைசியாக வந்தவன் நானாகத்தான் இருக்கவேண்டும். என் முதுகிலே குத்தினாங்க என்பதைத் தவிர வேறு ஒருத்தரையும் அவர்கள் அடிச்சதை நான் பார்க்கவில்லை...

ஐந்து மாணவர்கள் மற்றும் ஏ.சி.எ.ஃ.ப். துயர சம்பவங்களிலே தனது மகன்கள் சம்பந்தமாக பொன்னுதுரை யோகராஜா, பிப்ரவரி 2008ல் வழங்கியிருந்த வாக்குமூலம், UTHR Special Report No 30

அதன் பின்னர் யோகராஜா வீடு திரும்பினார். தனது மகனுக்கு என்னானதோ என்ற கவலை அவருக்கு ஏற்பட்டது. மருத்துவமனைக்கு சென்று மகனைத் தேடப்போவதாக மனைவியிடம் அவர் சொன்னார்.

என் மகன் ஹேமச்சந்திரனுக்கு ஏதோ ஆகிவிட்டது என்று என் மனசு கிடந்து தவித்தது. கதறிய குரல்களிலே ஒரு குரல் என் மகனோடது என்று எனக்கு அங்கேயே பட்டது. மாலை சுமார் 7.50மணிக்கு நான் என் சைக்கிளை எடுத்துக்கொண்டு வேறு ஒரு மாற்று வழியிலே புறப்பட்டேன். ஆஸ்பத்திரி போற வழியிலே ஆங்காங்கே கடற்படை ஆட்கள் நின்றுகொண்டிருந்ததை பார்த்தேன். கடற்படை ஆட்கள் ஏற்படுத்தியிருந்த வீதி சோதனைச் சாவடிகள் மூன்று நான்கையும் நான் கடந்துசெல்லவேண்டியிருந்தது. அவர்கள் என்னை நிறுத்தவோ என்னிடம் கேள்விகள் கேட்கவோ இல்லை. நான் மருத்துவமனை சென்ற நேரம், அதன் நுழைவு வாயிலிலே இராணுவத்தினர் யாரும் இருக்கவில்லை. சில மருத்துவர்கள் வாசலை பார்த்துக்கொண்டு அங்கு நின்றிருந்ததை நான் கண்டேன். ஏதும் ஆகிவிட்டதா என்று அங்கிருந்த கண்காணிகள் (கண்காணிப்பாளர்கள்) சிலரிடம் கேட்டேன். ஏதோ நடந்திருப்பதாகத்தான் கேள்விப்பட்டோம் அதான் எல்லாரும் உஷார் நிலையில் இருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். எட்டு மணி தாண்டி அங்கே ஒரு ஜீப் வண்டி வந்தது. ஆஸ்பத்திரி கட்டிடத்தின் வாசற்கதவோடு வண்டி நின்றது. நான் வண்டியை நெருங்கி உள்ளே எட்டிப்பார்த்தேன். உள்ளே இரண்டு உடல்கள் இருந்தன. அதைத்தவிர வேறொன்றும் இல்லை. ஜீப்பின் முன்பாகத்திலே பொலிஸ்காரர்கள் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தனர். பக்கவாட்டிலே உள்ள வழியாக நான் ஜீப் வண்டிக்குள் ஏறி, ரத்தக் கறை படிந்திருந்த அந்த முகங்களைத் திருப்பி என் மகன் இருக்கிறானா என்று பார்த்தேன். என் மகன் இருக்கவில்லை. உடல்களை ஏற்றிக்கொண்டு வண்டி வந்ததோடு கண்காணிகள் போய் ஸ்டெரெச்சர்களை எடுத்து வந்தனர். அந்த உடல்களை தூக்கிச் செல்வதில் நானும் உதவினேன். பத்து நிமிஷங்கள் கழித்து வேறு இரண்டு ஜீப் வண்டிகள் வந்தன. அவற்றில் முதலிலே வந்த வண்டியில் மூன்று சடலங்களும் அடுத்து வந்த வண்டியிலே இரண்டும் இருந்தன.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

முதல் வண்டியிலே நான் ஏற்கனவேபோல ஏறிப் பார்த்தேன். அந்த முகங்களை எனக்கு அடையாளம் தேரியவில்லை என்றாலும், அவற்றிலே என் மகன் இல்லை. கடைசியாக வந்த வண்டியில் இருந்த ஒரு சடலம் என் மகனைப்போல இருந்தது. ஆடையும் அவன் உடுத்தியிருந்ததுதான். அதைப் பார்த்துவிட்டு நான் அலற ஆரம்பித்துவிட்டேன். சடலங்களை இறக்கியவுடன் ஜீப் வண்டிகள் வேகமாகத் திரும்பி சென்றுவிட்டன.

ஆஸ்பத்திரியில் ஏழு சடலங்களும் வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. இரண்டு மூன்று மருத்துவர்கள் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். அதிலே தமிழில் பேசிய மருத்துவர் ஒருவர், இரண்டு சடலங்கள் தாடை அசைவதை கவனித்துவிட்டு அவற்றை மட்டும் சிகிச்சை அறைக்கும் மற்றவற்றை சவக்கிடங்குக்கும் கொண்டு போகச் சொன்னார். சவக்கிடங்கு செல்லவிருந்த சடலங்களில் எனது மகனதும் ஒன்று. என் மகனை நான் இழந்துவிட்டேன் என்பதை நான் உணர ஆரம்பித்தேன். சுமார் ஒரு மணித் தியாலம் நான் வைத்தியசாலையில் இருந்தேன். என் மகனது உடலம் பிணவறைக்கு கொண்டுசெல்லப்பட்டதன் பிறகு, சற்று நேரம் வெளியில் உட்கார்ந்து அழுதேன். அதன் பிறகு வீட்டுக்கு கிளம்பிப் போனேன்.

ஐந்து மாணவர்கள் மற்றும் ஏ.சி.எ.ஃப். துயர சம்பவங்களிலே தனது மகன்கள் சம்பந்தமாக பொன்னுதுரை யோகராஜா, பிப்ரவரி 2008ல் வழங்கியிருந்த வாக்குமூலம், UTHR Special Report No 30

கொல்லப்பட்ட மாணவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களாக இருந்தவர்கள் என்று தாங்கள் கூறுவது போன்ற போலியான வாக்குமூலங்களில் தன்னையும் ஏனைய பெற்றோரையும் கையெழுத்து போடச்சொல்லி திருகோணமலையில் உள்ள பொலிஸ்காரர்கள் மிரட்டியிருந்தனர் என்று மார்ச் 2008ல் வழங்கிய சாட்சியத்தில் விசாரணை ஆணையத்தில் பொன்னுதுரை யோகராஜா தெரிவித்திருந்தார்.

பிரேதப் பரிசோதனை நடந்துகொண்டிருந்த சமயத்திலேயேகூட பொலிஸ்காரர்கள் என்னை மிரட்டினார்கள். என் மகன் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவன் என்று கூறுகிற ஒரு ஆவணத்தில் என்னை அவர்கள் கையெழுத்து போடச்சொன்னார்கள். அப்படிக் கையெழுத்து போடாதவரையில் மகனோட உடலை தர மாட்டோம் என்று கூறினார்கள். மற்ற பிள்ளைகளுடைய பெற்றோர்களையும் அதேபோன்ற ஆவணத்தில் கையெழுத்து போடச்சொல்லி மிரட்டியிருந்தார்கள் என்பது பின்னர் எனக்குத் தெரியவந்தது. அந்த நேரத்தில் துறைமுக பொலிஸ் துறையைச்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

சேர்ந்த அதிகாரிகள் சிலரும் அந்த வட்டாரத்தின் வேறு சில முக்கிய பொலிஸ் அதிகாரிகளும் ஆஸ்பத்திரியில் இருந்தனர். அவர்கள் சொல்வதை என்னால் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? என் மகன் அப்பதான் ஏ-லெவெல் பரிட்சைகளை எழுதிவிட்டு பல்கலைக்கழகத்தில் சேருவதற்காக காத்திருந்தான். என் மகனுக்கு விடுதலைப் புலிகளுடன் எந்த வகையிலும் சம்பந்தம் இருக்கவில்லை என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருந்தது. அப்படி ஒரு பொய்யான வாக்குமூலத்தில் நான் கையெழுத்திட மாட்டேன் என்று சொல்லி நான் கடுமையாக மறுத்தேன். சுமார் ஒரு மணி நேர வாக்குவாதத்துக்கு பிறகு, உடல்களை தந்துவிடச் சொல்லி ஆஸ்பத்திரியில் இருந்த பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டிருந்து.
விசாரணை ஆணையத்தில் பொன்னுதுரை யோகராஜா வழங்கிய வாக்குமூலம், 17 மார்ச் 2008.[29]

தனது மகனின் கொலைக்கு பெயர் சொல்லி அவர் குறிப்பிட்ட ஒரு பொலிஸ் அதிகாரியின் உத்தரவின் பேரில் செயல்பட்ட விசேட அதிரடிப் படையினரே காரணம் என்பதை ஒரு பொலிஸ்காரரிடம் இருந்து தான் தெரிந்துகொண்டதாக பொன்னுதுரை யோகராஜா கூறினார்.

என் மகன் கொல்லப்பட்டதற்கு இரண்டு வாரம் கழித்து, மஜிஸ்டிரேட் அவர்களால் மரண விசாரணை ஒன்று நடத்தப்படவிருப்பதாக டாக்டர் மனோகரன் ஒருவர் மூலமாக எனக்குச் சொல்லியனுப்பினார். நீதிமன்றத்திலிருந்து விசாரணை பற்றி எனக்கு ஒருபோதும் தெரிவிக்கவே இல்லை... நான் நீதிமன்றம் சென்றபோது அங்கே தமிழ் பொலிஸ் அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் பெயர் எனக்கு நினைவுக்கு வரவில்லை. ஆனால் அவரை 45 வயதுக்கும் மேலிருக்கும். அவர் துறைமுக பொலிஸைச் சேர்ந்தவரல்ல, வேறொரு காவல் நிலையத்தைச் சேர்ந்தவர். எங்களது பிள்ளைகளுக்கு நேர்ந்ததை நினைத்து அவர் ஆத்திரமாக இருந்தார். அவ்விடத்தில் இருந்த வேறொரு பொலிஸ்காரரை அவர் சுட்டிக்காடினார். இன்னொரு அதிகாரியின் பெயரை அவர் பெயர் சொல்லி குறிப்பிட்டார். இந்தக் கொலைகளுக்கு விசேட அதிரடிப்படையினரே காரணம் என்று என்னிடமும் சண்முகராஜாவிடமும் (கொல்லப்பட்ட வேறொரு மாணவரின் தந்தை) அவர் சொன்னார். அவர் பெயர் குறிப்பிட்ட அந்த பொலிஸ்காரரின் உத்தரவின் பேரிலேயே விசேட அதிரடிப்படையினர் செயல்பட்டிருந்தனர் என்று அவர் தெரிவித்தார்.
விசாரணை ஆணையத்தில் பொன்னுதுரை யோகராஜா வழங்கிய

[29] "Crying for justice!", Daily Mirror, 22 March 2008; and , "Witness accuses police of intimidation", Daily Mirror, 18 மார்ச் 2008.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

வாக்குமூலம், 17 மார்ச் 2008.[30]

சில மாதங்கள் கழிந்து கொல்லப்பட்ட மாணவர்களுக்காக நடந்த ஒரு நினைவுச் சடங்கில், அதே பொலிஸ் அதிகாரி இறந்த மாணவர்களது குடும்பத்தினரை அச்சுறுத்த முயன்றிருந்தார் என்றும் யோகராஜா கூறியிருந்தார்.

> சம்பவம் நடந்த தொண்ணூறாவது நாளன்று, அவர்கள் கொல்லப்பட்ட இடத்தில் ஒரு நினைவுச் சடங்கு நடத்தப்பட்டது. இறந்த ஐந்து மாணவர்களது குடும்பத்தாரும் சில உறவினர்களும் அங்கே கூடியிருந்தனர். அந்த சமயத்திலே அதே பொலிஸ்காரர் அந்தப் பக்கமாக வாகனத்தில் சென்றார். எங்களைப் பார்த்தவுடன் நான்கைந்து பொலிஸ்காரார்களை அழைத்துக்கொண்டு அவர் அந்த இடத்துக்கு திரும்பி வந்து. சடங்கு நடக்கும்போது எங்களுக்கு முன்னாலே வந்து நின்றுகொண்டிருந்தார். பிள்ளைகளை இழந்து பறிதவித்துக்கொண்டுள்ள எம் குடும்பங்களை மிரட்டிவைக்க வேண்டும் என்பதைத் தவிர அவரது செயலுக்கு வேறெந்த காரணமும் இருந்திருக்க முடியாது.
> **விசாரணை ஆணையத்தில் பொன்னுதுரை யோகராஜா வழங்கிய வாக்குமூலம், 17 மார்ச் 2008.**[31]

ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகள் நடத்தப்பட்டிருந்த விதம் குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலைகளைக் கொண்டுள்ளது. விசாரணைக்கு பொறுப்பேற்றிருந்த பொலிஸ் அதிகாரி செய்த காரியங்கள், அவர் எந்த அளவுக்கு அக்கரையின்றி கவனக்குறைவாக செயல்பட்டுள்ளார் திறமையில்லாமல் செயல்பட்டுள்ளார் என்பதற்கு ஆதாரங்களாக அமைந்துள்ளன.
கொல்லப்பட்டவர்கள உடலில் இருந்த காயங்களை ஆரம்பத்திலேயே கணிக்கத் தவறியது தொடங்கி, அவசர சேவைப் பிரிவுகளுக்கோ, கண்காணிப்பு உயர் அதிகாரிகளுக்கோ, மருத்துவமனைக்கோ தெரியப்படுத்தத் தவறியது, சம்பவ இடத்துக்கு உடனடியாகச் செல்லத் தவறியது, சம்பவ இடத்திலிருந்து தடயங்களை எடுக்கத் தவறியது, சம்பவ இடத்தில் இருந்த பாதுகாப்பு படை உறுப்பினர்கள் உள்ளிட்டு சாட்சிகளாக அமையக்கூடியவர்களிடம் இருந்து வாய்வழியாக விபரங்களை கேட்டறியத் தவறியது, அவர்களுடைய ஆயுதங்களை பரிசோதித்து, அவை பற்றிய விபரங்களை குறித்துக்கொள்ளத் தவறியது வரை வரிசையாக அவர் பல சந்தர்ப்பங்களில் கோட்டைவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான அதிகாரிகளின் அறிக்கைகளில் நிறைய

---

[30] "Witness accuses police of intimidation", The Daily Mirror, 18 மார்ச் 2008.

[31] இந்தக் கட்டுரையிலேயே மேலதிக விபரங்கள் உள்ளன.

எண்ணிக்கையிலான முரண்பாடுகள் இருந்தன. கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள், தாங்கள் கொண்டுவந்த கைகுண்டு வெடித்ததினால் அவர்கள் இறந்தனர், பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டிருந்தனர் என்று திருகோணமலையின் இராணுவ கமாண்டர் ஆரம்ப அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.[32] பாதுகாப்பு படை உறுப்பினர்களிடம் இருந்து பெறப்பட்ட பல வாக்குமூலங்களில் விடுதலைப் புலிகள் மீதே பழிசுமத்தப்பட்டிருந்தது. ஏதோ முன்னாலேயே ஒத்திகை பார்த்துவிட்டுப் பேசுவதுபோல எல்லோரும் ஒரே மாதிரியாக வாக்குமூலம் வழங்கியிருந்தனர். துப்பாக்கி சூடு பற்றியோ குண்டுக் காயங்கள் பற்றியோ பாதுகாப்பு படையினர் சம்பந்தப்பட்டிருந்தது குறித்தோ ஆரம்ப வாக்குமூலங்கள் எவற்றிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. கொல்லப்பட்டவர்கள் கிட்டேயிருந்து சுடப்பட்டுள்ளனர் என்று நீதிமன்ற மருத்துவ அதிகாரியின் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ளது என்ற செய்தி வெளியானதை அடுத்து அதுபற்றிய முறையான விசாரணை வேண்டும் என்ற அழுத்தம் மேலோங்கியது.[33] ஆனால் அழுத்தமும் பரபரப்பும் சட்டென ஓய்ந்துவிட்டது.

இந்தக் கொலைகளில் விசேட அதிரடிப்படையினருக்கு சம்பந்தம் இருந்தது என்று தி சண்டே டைம்ஸ் பத்திரிகையின் கட்டுரை ஆசிரியர் இக்பால் அத்தாஸ் 8 ஜனவரி 2006 அன்று எழுதியிருந்தார். அவருடைய முதல் கட்டுரையில், பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகரான ஹெச்.எம்.ஜி.பி. கோட்டகதெனிய இச்சம்பவம் தொடர்பில் ஆற்றியிருந்த பங்கு குறித்து கவனம் செலுத்தியிருந்தது. இலங்கையின் பாதுகாப்புச் செயலர் இந்தியா சென்றிருந்த நேரத்தில் திருகோணமலைக்கு விசேட அதிரடிப் படையினரை அனுப்பியதை கோட்டகதெனிய தன்னிச்சையாக செய்திருந்தார் என்று அந்த கட்டுரையில் குறிப்புணர்த்தப்பட்டிருந்தது. ஒரு வாரம் கழித்து 16 ஜனவரி 2006 அன்று அதே கட்டுரைப் பகுதியில், திருகோணமலைக்கு விசேட அதிரடிப்படையினரை அனுப்ப உத்தரவிட்டது தானே என்று கோட்டகதெனியவும் ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் பாதுகாப்புச் செயலரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தாபய ராஜபக்ஷவிடம் இருந்து அனுமதி வாங்கிக்கொண்டுதான் தான் அவ்வாறு செய்ததாக அவர் வலியுறுத்தியிருந்தார்:

> *நான் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் பேசி அவரது ஒப்புதலை வாங்கியிருந்தேன்... படையினர் அங்கு பணியமர்த்தப்பட்டிருந்தமைக்கு நானே பொறுப்பு என்பதை*

[32] Army denies killing Tamil youths", BBC News இணையதளம், 3 ஜனவரி 2006, http://news.bbc.co.uk/2/hi/south_asia/4578868.stm

[33] Sri Lanka orders probe into killing of students, AFP செய்தி, 4 ஜனவரி 2006.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஏற்றுக்கொள்கிறேன். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசுப் பயணமாக இந்தியா சென்றபோது பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ உடன் சென்றிருந்தார். அந்தப் பயணத்துக்கு நீண்ட நாள் முன்பாகவே ஒப்புதல் பெறப்பட்டிருந்தது. அந்த வட்டகையிலிருந்த சிங்கள மக்களிடம் இருந்து எனக்கு புகார்கள் வந்திருந்தன. அப்பகுதியில் அவர்கள் 40 பேருக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். திருகோணமலையின் கேந்திர முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு அங்கு சட்ட ஒழுங்கை நிலைநாட்ட அப்பகுதியில் பொலிஸாரின் எண்ணிக்கையை உயர்த்தவது அவசியம் என்று நான் உணர்ந்திருந்தேன். அப்பகுதியில் களப்பணி செய்வதில் தனது உறுப்பினர்களை அனுமதிக்க விசேட அதிரடிப் படையின் தளபதி (டி.ஐ.ஜி. நிமல் லெவ்கே) விருப்பம் காட்டவில்லை. அப்படையினர் மீது ஏற்கனவே பெரும் வேலைப்பளு இருப்பதாக அவர் கூறினார். ஆனால் இது முக்கிய விஷயம் என்றும் உடனடியாக அதைச் செய்ய வேண்டும் என்றும் நான் வலியுறுத்த வேண்டியிருந்தது...

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகரான ஓய்வுபெற்ற காவல்துறை துணை பொலிஸ் மா அதிபர் ஹெச்.எம்.ஜி.பி. கோட்டகதெனிய கூறியதாக, 15 ஜனவரி 2006 அன்றைய தி சண்டே டைம்ஸ் பத்திரிகையில், "சிச்சுவேஷன் ரிப்போர்ட்" கட்டுரையில் இக்பால் அத்தாஸ் மேற்கோள் காட்டியிருந்தது.

கொலைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் விசேட அதிரடிப்படை உறுப்பினர்களைக் கைது செய்யச் சொல்லி சி.ஐ.டி. பொலிஸாருக்கு பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவும் பாதுகாப்புச் செயலரிடம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. 13 பிப்ரவரி அன்று சி.ஐ.டி. பொலிஸார். அவசரகால விதிமுறைகளின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவுகளை பாதுகாப்பு அமைச்சக கையொப்பத்துடன் பெற்றிருந்தனர். திருகோணமலை காவல் நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் மற்றும் விசேட அதிரடிப்படை உறுப்பினர்கள் 12 பேரை விசாரணை நிமித்தம் ஒரு மாத காலம் தடுத்துவைப்பதற்கு அனுமதிக்கும் உத்தரவு அது.[34] ஆனால் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சந்தேக நபர்களை விடுவிக்கச் சொல்லி சட்ட மா அதிபரின் உத்தரவு சி.ஐ.டி. பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் சட்ட மா அதிபரின் அலுவலகம் அதற்கான காரணம் எதனையும் தெரிவித்திருக்கவில்லை. ஆனால் அரசாங்க ஆய்வாளர் துறை "கொல்லப்பட்டவர்களின் உடலில் பாய்ந்திருந்த குண்டுகள் எதுவும் விசேட அதிரடிப் படையினருக்கு வழங்கப்பட்டிருந்த துப்பாக்கியிலிருந்து வெடித்தவை அல்ல" என்று தீர்மானித்ததன் பின்னரே சந்தேக நபர்களை விடுவிக்கும் முடிவு

[34] "Situation Report: Geneva: How far can the two sides go?" இக்பால் அத்தாஸ் எழுதியது, The Sunday Times, 19 பிப்ரவரி 2006 http://sundaytimes.lk/060219/index.html

எடுக்கப்பட்டிருந்தது.[35] அத்தோடு அந்த விசாரணையும் முடிவுக்கு வந்துவிட்டிருந்ததாகத் தெரிகிறது.

13 மார்ச் 2008 அன்று, மருத்துவர் மனோகரன் விசாரணை ஆணையத்திடம் வழங்கியிருந்த வாக்குமூலத்தில், மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தன்னை 2006 ஏப்ரல் மாதம் சமயத்தில் தொலைபேசியில் அழைத்து, உங்களது மகன் கொல்லப்பட்டது "ஒரு துரதிருஷ்டமான துயர சம்பவம். கொல்லப்பட்ட மாணவர்களை விடுதலைப் புலி உறுப்பினர்கள் என படையினர் நினைத்துக்கொண்டனர்" என்று கூறியிருந்தாகத் தெரிவித்திருந்தார்.

சர்வதேச அரசு சாரா அமைப்பான பசி ஒழிப்பு நடவடிக்கை அமைப்பின் (ஏ.சி.எ.ப்.) தொண்டூழியர்கள் ஆகஸ்ட் 2006ல் கொல்லப்பட்டது.

பசி ஒழிப்பு நடவடிக்கை (ஏ.சி.எ.ப்.) என்ற பெயர்கொண்ட பிரஞ்சு தொண்டு நிறுவனத்தின் ஊழியர்கள் 15 பேரது சடலங்கள், 6 ஆகஸ்ட் 2006 அன்று அவர்களுடைய மூதூர் அலுவலகத்தின் முன்புள்ள புல்வெளியில் கிடந்தது தெரியவந்தது. குப்புறக் கிடந்த அச்சடலங்களின் தலையிலும் கழுத்திலும் குண்டுக் காயங்கள் இருந்தன. மரண தண்டனை நிறைவேற்றம் பாணியில் மிக அருகில் வைத்து அவர்கள் சுடப்பட்டுள்ளனர் என்பதை அவை சுட்டிக்காட்டின. மேலும் இரண்டு ஊழியர்கள் சடலம் ஆகஸ்ட் 8ஆம் தேதியன்று அப்பகுதியில் நின்றிருந்த ஒரு காரில் இருந்து கண்டெடுக்கப்பட்டிருந்தன. தப்பித்துச் செல்ல முயன்றபோது அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம். 4 பெண்கள் 13 ஆண்களுமாக, மொத்தத்தில் ஏ.சி.எ.ப். அமைப்பின் ஊழியர்கள் 17 பேர், 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 மற்றும் 5 தேதிகளில், அடையாளம்காணப்படாத ஆயுததாரிகளால் தாக்கிக் கொல்லப்பட்டிருந்தனர். இவ்வாயுததாரிகள் பாதுகாப்பு படை உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஏ.சி.எ.ப். படுகொலையில் அரச படையினர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சர்வதேச அமைப்புகள் பல வலுவான சந்தேகங்கங்களை எழுப்பியிருந்தன. அரசாங்கமோ இக்கொலைகளைச் செய்தது விடுதலைப் புலிகள் என்று கூறியிருந்தனர். ஏ.சி.எ.ப். ஊழியர்களைக் கொன்றது யார் என்பது கொலைகள் நடந்த காலகட்டத்தைப் எது என்பதிலேயே பெருமளவில் தொத்தி நின்றது, ஏனென்றால் ஆகஸ்ட் முதல் வாரப் பகுதியில் அவ்விடத்தின் கட்டுப்பாட்டை விடுதலைப் புலிகளும் இலங்கை பாதுகாப்புப் படையினரும் மாறி மாறி

[35] "STF SUSPECTS IN TRINCO YOUTH MURDER TO BE RELEASED," டி.பி.எஸ்.ஜெயராஜ் எழுதியது , TAMIL WEEK, 4 மே 2006, HTTP://TAMILWEEK.COM/NEWS-FEATURES/ARCHIVES/311

கைகொண்டுவந்துள்ளனர். சம்பவ இடத்தைச் சென்று பார்வையிட இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு பாதுகாப்பு படையினரால் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இச்சமபவம் அரச தரப்பால் மேற்கொள்ளப்பட்ட ஒரு போர்நிறுத்த மீறல் என்று கண்காணிப்புக் குழுவினர் கூறியிருந்தனர்.[36] 6 ஆகஸ்ட் 2006 அன்று மூதூருக்கு சென்றிருந்த ராய்ட்டர்ஸ் நிறுவன செய்தியாளர் பீட்டர் அப்ஸுக்கு பாதுகாப்புப் படையினர் அளித்திருந்த செவ்வியில், விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து முந்தைய நாளே பின்வாங்கியிருந்தனர் என்று தெளிவாகச் சொல்லியுள்ளனர். ஆதலால் அந்தக் படுகொலைச் சம்பவம் நடந்த சமயத்தில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலேயே நகரம் இருந்தது என்று அச்செய்தியாளர் நம்புகிறார்.

> *ஏற்கனவே என்னிடம் கேட்டவர்களுக்கு பலமுறை நான் சொல்லியிருந்ததையே இங்கே மீண்டும் சொல்கிறேன். இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் பயணத்தில் பங்குகொண்டு சம்பவத்துக்கு அடுத்த நாள் நான் அந்த நகரில் சென்றிறங்கிங்கியிருந்தேன். நகரைச் சுற்றிலும் ஆங்காங்கே மோதல்கள் நடந்துவந்தாலும், மூதூர் நகரம் மீண்டும் தங்களது கைகளுக்கு வந்துவிட்டது என்று காட்டுகிற ஆர்வம் இராணுவத்திற்கு இருந்ததால் இந்த பயணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏ.சி.எ.ஃப். ஊழியர்களைக் காணவில்லை என்ற விபரம் அப்போது எனக்குத் தெரியாது. ஆனால் அந்தப் பகுதியில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளின் விபரங்கள் தொடர்பில் அப்பகுதிக்கான இராணுவ தளபதியிடம் வலிந்து கேள்விகளைக் கேட்டேன். அந்தப் படுகொலை பற்றி அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை - ஆனால் விடுதலைப் புலிகள் அந்த இடத்திலிருந்து முதல் நாளே பின்வாங்கி விலகியிருந்தனர் என்பதை அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.*[37]

இந்த சம்பவம் தொடர்பில் மிக முக்கிய தடயமாக அமைந்தது, மனிதாபிமான நிறுவனங்களின் ஒன்றியம் (சி.ஹெச்.ஏ) என்ற அமைப்பின் ஊழியர்கள் எடுத்திருந்த புகைப்படங்கள் ஆகும். கொலைகள் நடந்த பின்னர் சம்பவ இடத்துக்கு முதலில் சென்ற வெளிநபர்களாக ஆகஸ்ட் 6ஆம் தேதியே அவர்கள் சென்றிருந்தனர். சடலங்கள் கெட ஆரம்பித்திருந்த நிலையை வைத்துப் பார்க்கையில், ஆகஸ்ட் 4ஆம் தேதி அல்லது 5ஆம் தேதி விடியற்காலைதான் சம்பவம் நடந்திருக்க வேண்டும் அதற்கு பின்னர் நடந்திருக்க வாய்ப்பில்லை என்ற கூற்றுக்கே வலு சேர்ப்பதாக புகைப்படங்கள் காட்டியிருந்தன. மனித

[36] " Military 'killed Lanka aid staff'", BBC Sinhala இணையதளம், 30 August 2006, http://news.bbc.co.uk/1/hi/world/south_asia/5298470.stm

[37] பீட்டர் அப்ஸ் எழுதிய , "Aid worker massacre remains unsolved", Reuters AlertNet கட்டுரை, 3 ஆகஸ்ட் 2007, www.alertnet.org/db/blogs/36072/2007/07/3-161605-1.htm

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பினர் (UTHR(J)) பல மாதங்கள் சிரமப்பட்டு மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர், ஏ.சி.எ.ப். ஊழியர்கள் ஆகஸ்ட் 4ஆம் தேதி மதியம் கொல்லப்பட்டுள்ளனர் என்று இறுதியில் முடிவு தெரிவித்திருந்தனர். பாதுகாப்பு படையின் உறுப்பினர்கள் மூன்று பேர் மீதும், கடற்படையின் விசேட கமாண்டோக்கள் மூதூரில் உள்ள ஏ.சி.எ.ப் அலுவலகத்துக்கு சென்றபோது அவர்களுடன் உடன் சென்றதாகக் கூறப்படும் ஹோம்கார்டாக வேலைபார்த்துவந்த முஸ்லிம் ஒருவரும், இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் இந்தக் கொலைகளுக்கு பொறுப்பானவர்கள் என்று அவர்கள் குற்றம்சாட்டியிருந்தனர்.[38] இந்தக் கொலைகள் முன்னதாகவே, அதாவது ஆகஸ்ட் நான்காம் தேதி காலையிலேயே நடந்திருந்தன அச்சமயம் அவ்விடம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது என்று அரசாங்கம் கூறிவந்தது. நீதிமன்ற மருத்துவ அதிகாரியின் **(JMO)** அறிக்கையில் மரணம் ஏற்பட்ட நேரமாக மதிப்பிடப்பட்டிருந்த நேரத்தை அரசாங்கம் சுட்டிக்காட்டியிருந்தது.

(UTHR(J))யின் அறிக்கையில் அச்சமயம் மூதூர் பகுதியில் இருந்த இராணுவத்தினர் நடமாட்டம் குறித்து விரிவானத் தகவலகள் இருந்தன. சம்பவம் வேறு விதமானது என்று சாட்சியம் வழங்க முடிந்திருக்ககூடிய வேறு நபர்கள் அந்த இடத்தில் இருந்திருந்தனர் என்று குறிப்புணர்த்தும் விடயங்களும், விசாரணையில் போதிய ஆர்வம் காட்டப்பட்டோ, சாட்சிகளுக்கு ஒழுங்கான பாதுகாப்பு உத்திரவாதங்கள் வழங்கப்பட்டோ இருந்தால், அவர்கள் சாட்சி சொல்ல முன்வந்திருப்பார்கள் என்று குறிப்புணர்த்தும் விடயங்களும் அந்த அறிக்கையில் இருந்தன.

இலங்கையிலே மனிதாபிமானப் பணிசெய்துவந்த தொண்டூழியர்கள் மீது நடந்த மிகப் பெரிய தாக்குதல் இது தான் என்ற நிலையிலும், சம்பந்தபட்ட நேரங்களில் மூதூருக்கு உள்ளேயும் அதன் அருகிலும் அரச படையினர் இருந்திருக்கிறார்கள் எனும் போதிலும், ஏ.சி.எ.ப். ஊழியர்கள் படுகொலை தொடர்பில் பாதுகாப்பு படையின் எந்தப் பிரிவும் விசாரணை எதனையும் நடத்தியதாகத் தெரியவில்லை.

ஏ.சி.எ.ப். அலுவலக வளாகத்தில் குற்றம் நடந்த இடத்திற்கு யாரும் நுழையாதபடி பாதுகாக்க பொலிஸார் தவறியிருந்தனர் என்பது தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக முறைப்படி தடயங்களைச் சேகரிக்க முடியாமல் போயிருந்தது. "சம்பவம் நடந்த ஐந்தாவது நாள் மாலையிலிருந்து ஏ.சி.எ.ப். வளாகத்தில் எவ்வித பாதுகாப்பும் இல்லை என்பதால் இவ்விடத்து தடயங்களை பாழ்பண்ணும் விஷயம் பல நாட்களுக்கு நடந்திருந்தது"

[38] UTHR(J) வழங்கிய, "Unfinished business of the five students and ACF cases – a time to call the bluff", விசேட அறிக்கை எண் 30, 1 ஏப்ரல் 2008.

என்று (UTHR(J)) தனது விசேட அறிக்கை எண் 27ல் சுட்டிக்காட்டியிருந்தது. அந்த இடத்திலிருந்து பொலிஸார் சடலங்களை அப்புறப்படுத்தியிருக்கவில்லை. ஆதலால் கொல்லப்பட்டவர்களது சடலங்களை அவர்களோடு வேலைபார்த்துவந்தவர்களே சேகரித்து திருகோணமலைக்கு கொண்டுசெல்ல வேண்டி. ஏ.சி.எஃப். படுகொலை தொடர்பாக தொடர்ச்சியான அறிக்கைகளை எழுதித் தொகுத்திருக்கும் (UTHR(J)) அமைப்பு பின்வருமாறு குறிப்பிடுகிறது:

> *[கொல்லப்பட்டவர்களுடன் சேர்ந்து வேலைபார்த்துவந்தவர்கள்] கிளம்புவதற்கு முன்னாலே, கொல்லப்பட்ட கோகிலா என்ற பெண்ணின் மாமா ஏ.சி.எஃப். அலுவலகத்தை தொலைபேசியில் அழைத்திருந்தார். இவர் மூதூர் பகுதியில் மருத்துவராக இருப்பவர். கொல்லப்பட்டவர்களது சடலங்களை எரித்துவிட அதிகாரிகள் திட்டமிடுவதாக மூதூரிலிருந்து சில பேர் தனக்கு தொலைபேசியில் சொல்லியிருந்ததாக இவர் ஏ.சி.எஃப். ஊழியர்களிடம் அப்போது தெரிவித்திருந்தார். செருவிலை மற்றும் மூதூர் பொலிஸ் பிரிவுக்குமான எல்லையில் அமைந்துள்ள பாலம் வந்தவுடன், அந்த ஏ.சி.எஃப். குழுவுடன் சென்றிருந்த பொலிஸ்காரர்கள் இருவரும் மேற்கொண்டு வர மறுத்துவிட்டனர். மூதூர் பிரிவுக்குள் தாங்கள் நுழையக்கூடாது என்பதே திருகோணமலையிலிருந்து தங்களுக்கு வந்துள்ள உத்தரவு என்று அவர்கள் கூறியிருந்தனர். தம்முடைய ஏ.சி.எஃப். பொருட்கள் மற்றும் ஆன்டென்னாக்கள் போன்றவை அனைத்தையும் அவர்கள் கழற்றிப்போடாத வரையில் இராணுவத்தினர் அவர்களை மேற்கொண்டு பயணிக்க விடவில்லை. ஆதலால் அவர்கள் சாதாரண சிவிலியன்கள் போலேதான் உள்ளே போகமுடிந்துள்ளது. அவர்கள் மூதூர் சென்றடையும்போது மதியம் 3 மணியாகியிருந்தது. அங்கே அவர்கள் சென்றபோது, குற்றம் நடந்த இடத்தை பாதுகாக்க பொலிஸார் ஒரு நடவடிக்கையும் எடுக்காதது, சம்பவ இடங்களை குறித்துவைக்காதது எல்லாம் சென்றவர்களுக்கு ஆச்சர்யத்தைத் தந்திருந்தன. இரண்டு நாட்களாக பொலிஸார் அதனை அறிந்திருந்தும் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை... படுகொலை சம்பவம் தொடர்பில் ஏ.சி.எஃப்.பின் சக ஊழியர்களுக்கு முதலில் தெரிவித்திருந்த உள்ளூர் அரசியல்வாதி ஒருவர் வந்து பார்த்துவிட்டு, ஏன் அவர்கள் எல்லாம் முன்னதாகவே வரவில்லை என்று கேட்டார். சடலங்களை எல்லாம் அங்கிருந்து அகற்றி அவற்றை அழித்துவிட அதிகாரிகள் திட்டமிட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.*
> **UTHR(J) Report No 25**

கொல்லப்பட்டவர்களது பிரேதப் பரிசோதனைகளைச் செய்ய அநுராதபுரத்திலிருந்து நீதிமன்ற மருத்துவ அதிகாரி (JMO) ஒருவரை அரசாங்கம்

நியமித்திருந்தது. திருகோணமலையின் JMO அதிகாரி அதனைச் செய்ய வேண்டுமென திருகோணமலை மஜிஸ்திரேட் வழங்கிய ஆரம்ப உத்தரவை மாற்றி அரசாங்கம் இதனைச் செய்திருந்தது. அநுராதபுரத்து JMO மருத்துவர் வைத்தியரத்ன ஆரம்பத்தில் முழுமையான பிரேதப் பரிசோதனையை நடத்தியிருக்கவில்லை. "காயங்களையும் மரணம் ஏற்பட்டதன் காரணத்தையும் குறித்துக்கொண்டதைத் தவிர அவர் வேறு எதனையும் செய்திருக்கவில்லை."[39] பரிசோதனைகளை மீள நடத்துவதில் இலங்கை அதிகாரிகளுக்கு உதவுவதற்காக ஆஸ்திரேலிய அரசாங்கம் அனுப்பிய தடயவியல் மருத்துவ மூத்த நிபுணரான மருத்துவர் மால்கம் டாட் வழங்கிய அறிக்கையில், டாக்டர் வைத்தியரத்னவும் அவருடைய உதவி மருத்துவர் ஒருவருமாக 17 பேருடைய சடலங்களிலும் ஆரம்ப பரிசோதனைகளை நடத்தியிருந்தனர். 8 ஆகஸ்ட் 2006 அன்று மொத்தமாக ஐந்து மணி நேரத்துக்குள் பரிசோதனைகள் முடிந்துவிட்டிருந்தன, "ஒழுங்காக பரிசோதனை நடத்துவதற்கு உரிய சூழ்நிலையில் அவை நடத்தப்பட்டிருக்கவில்லை."[40]

மூதூரின் குற்றவியல் நீதவான், இந்த வழக்கில் மரண விசாரணைகளின் முடிவை அறிவிக்க இருந்ததற்கு முதல் நாள் திடீரென்று வழக்கு அவ்விடத்திலிருந்து மாற்றலாகியிருந்தது உள்ளிட்டு பல வகைகளில் விசாரணைகளில் அரசியல் தலையீடு நீடித்துவந்தது. இந்த வழக்கில் விசாரணைகள் போதாது என்பதாக மூதூர் மஜிஸ்திரேட் முடிவுசெய்திருந்தார். அவர் தனது முடிவை அறிவிக்க திட்டமிட்டிருந்தார், ஆனால் வழக்கு மாற்றலானது என்பது அவரை நன்றாக வாயடைத்துப்போகச் செய்துவிட்டது. பொதுவாக இவ்வகையான உத்தரவுகள் நீதித்துறைச் சேவைகள் ஆணையத்தின் செயலரிடம் இருந்துதான் வரும். ஆனால் மூதூர் நீதிமன்றத்திலிருந்து வழக்கை மாற்றச் சொன்ன உத்தரவு, நீதித்துறைச் செயலர் தொலைபேசியில் அறிவுறுத்தியதன் பேரி மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மூதூர் மஜிஸ்திரேட்டிடம் இருந்து அநுராதபுரத்து மஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு வழக்கு மாற்றப்பட்டிருந்ததன் விளைவாக தமிழில் விசாரிக்கப்பட்டு வந்த வழக்கு சிங்களத்தில் விசாரிக்கப்படுகிற நிலை உருவானது. இது கொல்லப்பட்டவர்களது குடும்பத்தினருக்கு ஒரு கூடுதல் சிரமமாக மாறியது. அவர்கள் தமிழ் பேசுபவர்கள், சிங்களத்தில் வழக்கு நடப்பது அவர்கள் புரிந்துகொள்ளப் பிரச்சினையாக இருந்தது. வழக்கை அவதானிக்க தொலைவில் உள்ள அநுராதபுரத்துக்கு பயணிக்க

[39]UTHR(J) விசேட அறிக்கை எண் 27, பக்கம்24.

[40]"INDEPENDENT FORENSIC INVESTIGATION OF THE MUTTUR MASSACRE, SRI LANKA, AUGUST 2006," மருத்துவர் மால்கொம் ஜே டொட், மூத்த தடயவியல் மருத்துவ நிபுணர், விக்டோரியா தடயவியல் மருத்துவ மையம், சவுத்பேங்க், விக்டோரியா, ஆஸ்திரேலியா.

வேண்டும் என்பதும் அவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியிருந்தது. செப்டம்பர் 2006ல் இந்த வழக்கு மீண்டும் மாற்றப்பட்டது. இந்த தடவை கந்தளாய்க்கு வழக்கு மாற்றலானது. அந்த ஊர் திருகோணமலைக்கும் மூதூருக்கும் அருகிலுள்ள ஒரு நகரமாதலால் சாட்சிகள் சென்றுவருவதில் இருந்த சிரமம் குறைந்தது. ஒரு நீதிமன்றம் விசாரித்துவந்த வழக்கை இன்னொரு நீதிமன்றத்துக்கு மாற்றுவது என்பது இலங்கையைப் பொறுத்த அளவிலே அரிதாக நடக்கும் விஷயம் என்றில்லை. குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துவிடுகிற பிரச்சினைக்கு அந்த வழக்கமும் கணிசமான அளவிலே பங்காற்றியுள்ளது. மனித உரிமைகள் தொடர்பான முக்கியமான பல வழக்குகள் வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து வெளியிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. வடக்கிலும் கிழக்கிலும் மனித உரிமை மீறல்கள் செய்ததாக குற்றம்சாட்டப்படும் பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் தங்களுடைய பாதுகாப்பு காரணங்களுக்காக என்று கூறிக்கொண்டு தங்கள் மீதான வழக்குகளை தமிழ் பிரதேசங்களிலிருந்து மாற்றி சிங்களம் பேசும் பகுதிகளில் வைத்து விசாரிக்கவேண்டும் என்று நீதிமன்றத்தில் விண்ணப்பிப்பது வழக்கமாக இருந்துவருகிறது. அவ்வாறு வழக்கு மாற்றப்படும்போது அது சிக்கலையும் செலவுகளையும் ஏற்படுத்துவதோடு, சாட்சிகளுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆபத்தாகவும் அமைந்துவிடுகிறது. அவர்கள் நீதிமன்றம் சென்றுவருவதில் இது சிரமத்தை ஏற்படுத்துவதால், அவர்கள் நீதிமன்றம் செல்லாமல் இருந்துவிடுகிற வாய்ப்பு அதிகரிக்கிறது. அது நடந்தால், போதிய ஆதாரம் இல்லை என்று கூறி வழக்கு தள்ளுபடியாகும் நிலைமை உருவாகும்.[41]

---

[41] 2000ஆம் ஆண்டு டிசம்பரில், யாழ்ப்பாணம் அருகிலுள்ள மிருசுவில்லில் இருந்து ஒன்பது சிவிலியன்களைக் காணவில்லை என்று செய்திகள் வந்தன. காணாமல்போனது இடம்பெயர்ந்திருந்தவர்கள், தங்களது காலி வீடுகளையும், இடங்களையும் பார்த்துவிட்டு வருவதற்காக இலங்கை இராணுவத்திடம் அனுமதி பெற்றுச் சென்றிருந்தவர்கள் இவர்கள். காணாமல்போயிருந்தவர்களில் ஒருவரான பொன்னுதுரை மகேஸ்வரன் என்பவர் இராணுவத்தினரின் தடுப்புக்காவலில் இருந்து தப்பித்திருந்தார். சித்ரவதையை எதிர்கொண்ட மோசமான காயங்கள் இவருக்கு இருந்தன. அவர் வழங்கிய விபரங்களின் அடிப்படையில் ஓரிடத்தில் இருந்து ஒரு எட்டு பேரின் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டிருந்தன. அதிலே ஒன்று ஐந்து வயதுக் குழந்தையுடைய சடலம். அந்த சடலத்திலும்கூட சித்ரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் இருந்தன. 2000 டிசமபர் 25 ஆம் தேதி இந்த உடல்கள் எரிக்கப்பட்டன; சாவகச்சேரி மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இது சம்பந்தமான வழக்கு நடந்தது, இராணுவத்தினர் 14 பேர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். ஐந்து பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு முதலி அநுராதபுரத்திற்கும் பின்னர் கொழும்புக்கும் மாற்றப்பட்டிருந்தது. கொழும்பிலே இது கிடப்பில் போடப்பட்டது. மே 2005ல் கொழும்பு உயர்நீதிமன்ற Trial-at-Bar அமைப்பு இந்த வழக்கை நடத்த மூன்று உறுப்பினர்கள் கொண்ட பெஞ்ச் ஒன்றை நியமித்திருந்தது. ஆனாலும் தாமதங்கள் நீடிக்கவே செய்தன. (சர்வதேச பொதுமன்னிப்பு சபையின் சர்வதேச அறிக்கை 2001, கிடைக்கும் முகவரி: www.unhcr.org/refworld/docid/3b1de37b13.html [பார்த்த தேதி 17 மார்ச் 2009]; மனித உரிமைகளுக்கான ஆசிய மையம், சார்க் அமைப்பினுடைய இலங்கை தொடர்பான மனித

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

கொல்லப்பட்டவர்களின் உடல்களில் பிரேதப் பரிசோதனை மீண்டும் நடக்க வேண்டும் என்பதால் அவற்றை எரிப்பதற்கு அனுமதியளிக்கக்கூடாது என்று அவர்களின் குடும்பத்தினர் அழுத்தம் தந்ததாகக் கூறப்படுகிறது. இறுதியில் ஒக்டோபர் 2006ல் ஆஸ்திரேலிய மருத்துவர் டாட் கண்காணித்துக்கொண்டிருக்க நீதிமன்ற மருத்துவ அதிகாரி மருத்துவர் வைத்தியரத்ன மற்றும் குழுவினரால் 11 சடலங்களில் மீண்டும் பிரேதப் பரிசோதனைகள் செய்யப்பட்டிருந்தன. அந்த 11 பேருமே துப்பாக்கி குண்டுக் காயங்களினாலேயே உயிரிழந்துள்ளனர் என்றும் அதிலே ஆறு பேர் உடலிலிருந்து "எவ்வித சேதமும் அடையாத நிலையிலும் மற்றும் லேசாக சிதைந்த நிலையிலும்" 7.62 மில்லிமீட்டர் அளவுள்ள குண்டுகள் இருந்தன என்றும் மீள்பரிசோதனைகளில் தெரியவந்தது. 5.56 மில்லிமீட்டர்

உரிமைகள் நிலவர அறிக்கை 2006, www.achrweb.org/reports/saarcar2006/srilanka.htm

இடா கார்மலீடா என்பவர் முன்பு விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர், இவர் பொலீசில் வந்து சரணடைந்து ஒரு மாதமே ஆகியிருந்த நிலையில், மன்னார் மாவட்டம் பள்ளிமுனையில், 12 ஜூலை 1999 அன்று இவர் இராணுவத்தினர் ஐந்து பேரால் கூட்டாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டிருந்தார். அவருடைய பெண்குறியின் உள்ளே துப்பாக்கியால் சுடப்பட்டிருந்தது. அப்பெண்ணின் மார்பகங்களிலும் உதடுகளிலும் கடிக்கப்பட்ட தழும்புகள் உள்ளிட்டு அவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருந்தையும், பாலியல் ரீதியான வன்முறைக்கு ஆளாக்கப்பட்டிருந்ததையும் மன்னார் மாவட்ட மருத்துவ அதிகாரி தனது அறிக்கையில் ஆவணப்படுத்தியிருந்தார். அந்தப் பெண்ணின் தம்பிக்கும் அண்டை வீட்டுக்காரர் ஒருவக்கும் சந்தேகநபர்கள் இருவரின் முகம் நினைவில் இருந்தது. அடையாள அணிவகுப்பில் அவர்கள் அடையாளம் காட்டியதை அடுத்து, கார்ப்போரல் ஒருவரும் சிப்பாய் ஒருவரும் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். சி.ஐ.டி. பொலிஸார் சட்ட மா அதிபருக்கு வழங்கிய அறிவுறுத்தலின் பேரில், இந்த வழக்கு ஜூன் 2000த்தில் கொழும்பு தலைமை மஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருந்தது. முக்கிய சாட்சிகள் அச்சுறுத்தப்பட்டும், பின்னர் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறியும் இருந்த நிலையில், இந்த வழக்கில் முன்னேற்றம் ஏற்படவில்லை. சந்தேக நபர்கள் பிணையில் வெளிவந்துவிட்டனர். (சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், SRI LANKA: RAPE IN CUSTODY; 28 ஜனவரி 2002, ASA 37/001/2002)

1992 ஆகஸ்ட் மாதம், மட்டக்களப்பு மாவட்டம் மைலான்தனை கிராமத்தில் பொதுமக்கள் 35 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இது சம்பந்தமாக இலங்கை அரச படையினர் 21 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது. இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு நீதிமன்றங்கள் ஆரம்பத்தில் விசாரணைகளை நடத்தியிருந்தன (குற்றம்சாட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை பின்னர் 18ஆக குறைக்கப்பட்டிருந்தது. வழக்கு முதலில் சிங்களர்கள் பெரும்பான்மையக வாழும் பொலன்னறுவைக்கும் பிறகு கொழும்பிற்கும் மாற்றப்பட்டிருந்தது. இந்த சம்பவத்திலே பலியாகியிருந்தது வாழைச்சேனையில் பல வருடங்களாக இடம்பெயர்ந்து வந்தவர்கள். ஏழைகளாக இருக்கக்கூடிய இவ்வழக்கின் சாட்சிகள், விசாரணைக்காக கொழும்பு சென்று திரும்புவது என்பது அவர்களுக்கு செலவுமிக்கதாகவும் சிரமமானதாகவும் இருந்தது. 2002ல் இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். அந்தத் தீர்ப்பை எதிர்த்து சட்ட மா அதிபர் மேல் முறையீட்டுக்கு விண்ணிப்பிக்க வேண்டுமென பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 2003ஆம் ஆண்டு கோரியிருந்தனர். ஆனால் மேல்முறையீட்டுக்கும் விண்ணப்பிக்க சட்ட மா அதிபர் அனுமதிவழங்கவில்லை.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

தோட்டா ஒன்றும் (இரண்டாவது வகையிலான ஆயுதமும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை இது குறிப்புணர்த்துகிறது.) கொல்லப்பட்ட ஒருவருடைய மண்டை ஓட்டுக்குள்ளிருந்து எடுக்கப்பட்டிருந்தது.[42]

இப்படுகொலையில் எத்தனை விதமான ஆயுதங்களிலிருந்து குண்டுகள் பாய்ந்துள்ளன என்பதைத் தீர்மாணிக்க விரிவான ஆயுதப் பயன்பாட்டு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மருத்துவர் டாட் தனது அறிக்கையில் பரிந்துரைத்திருந்தார். சடலங்களிலிருந்து எடுக்கப்பட்ட தோட்டாக்களை நீதிமன்ற மருத்துவ அதிகாரியிடம் இருந்து பொலிஸார் வாங்கிக்கொண்டு, அவர்கள் அவற்றை அரசாங்க ஆய்வாளரின் அலுவலகத்தில் தடயமாக கையளித்துள்ளனர், அப்போது ஆஸ்திரேலிய ஆயுத நிபுணர் இல்லை என்பது போன்ற விடயங்கள் முக்கியமான சில தடயங்களை பாழ்பண்ணியிருக்கலாம் என்று நோக்கர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய அரசாங்கங்களுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில், ஆஸ்திரேலிய நிபுணரின் முன்னிலையில் தடயங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது ஓர் நிபந்தனை, குற்றவியல் நீதவானும் அப்படியே உத்தரவும் இட்டிருந்தார். "ஆனால் துரதிருஷ்டவசமாக, தோட்டாக்கள் யார் வசம் இருக்க வேண்டும் என்ற விதி மீறப்பட்டிருந்தது, அநுராதபுரத்து நீதிமன்ற மருத்துவ அதிகாரி டாக்டர்.வைத்தியரத்னவிடம் இருந்து சி.ஐ.டி. பொலிஸார் வசம் தோட்டாக்கள் கைமாறியிருந்தன. அதன் பின்னர்தான் அவை ஆய்வுகளுக்காக அரசாங்க ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.[43]

பின்னர் ஆணையத்தின் விசாரணைகளுக்கு பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டுவந்தனர். தேசியப் பாதுகாப்பை காரணம் காட்டி ஆணையத்துக்கு விபரம் வழங்க அவர்கள் மறுத்துவந்தனர். தனியார் சட்டத்தரணி ஒருவர் செய்த கூத்து வேலைகள் பொதுமக்கள் முன்னிலையில் நடத்தப்பட்ட விசாரணைகளுக்கு தடங்கலை ஏற்படுத்திவந்தது. அந்த விசாரணைகளில் அவர் பேசிவற்றிலும் சரி அவர் வெளியிட்ட ஏராளமான அறிக்கைகளிலும் சரி அவர் சாட்சியங்களையும், விசாரணை ஆணையத்தின் உறுப்பினர்களையும், ஏ.சி.எ.ப். அமைப்பினரையும் சர்வதேச மாண்புமிக்கோர் குழுவினரையும் ஆத்திரம் உண்டுபண்ணக்கூடிய வார்த்தைகளாலும் அரசியல் ரீதியிலும் சாடி

---

[42] இந்த விஷயத்தை அரசாங்க ஆய்வுத்துறையினர் தவறு என்றனர். எடுக்கப்பட்ட எல்லா தோட்டாக்களுமே 7.62 மில்லிமீட்டர் ரகம்தான் என்றனர் அவர்கள். மருத்துவர் டொட் அவர்களைப் பின்னர் தொடர்புகொண்டு கேட்டபோது, தான் ஆயுதங்கள் நிபுணர் அல்ல என்றும் அந்த தோட்டா 7.62 மி.மீ. ரகத்தின் நடுப்பகுதியாகக்கூட இருக்கலாம் என்றா தனது அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டார்.

[43] " Killing of 17 ACF aid workers, Rigor mortis sets into investigations: CID subverts chain of custody by 'hijacking' incriminating bullets from exhumed bodies", The Nation on Sunday கட்டுரை, 26 ஆகஸ்ட் 2007.

வந்திருந்தார்.[44]

சாட்சிகளின் மூக்குமூலங்களை பேச்சு வழியாகவும் சரி எழுத்து வழியாகவும் சரி மொழிமாற்றம் செய்வதில் கடுமையான பிரச்சினைகள் இருந்ததும் விசாரணைகளுக்கு தடையாய் இருந்தன. சி.ஐ.டி.யினர் வழங்கியிருந்த ஆவணங்களுடைய மொழிமாற்றத்திலும் இதே பிரச்சினைகள் இருந்தன. 25 ஏப்ரல் 2008 டெய்லி மிர்ரர் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையில் விபரிக்கப்பட்டிருந்த ஒரு உதாரணம் பின்வருமாறு:

மொழிமாற்றத்தின்போது முக்கியமான தடயங்கள் கெட்டுவிடுகின்றனவா?

> *ஏ.சி.எ.ஃப். மூதூர் அலுவலகத்துக்கு 4 ஆகஸ்ட் 2006 அன்று தான் கடைசியாக சென்றது குறித்தும் அன்றைய தினம் அவர் மூதூரில் கண்ட போராளிகள் குறித்தும் தகவல் தரும் விதமாக 2006ல் சி.ஐ.டி. பொலிஸாரிடம் சாட்சிகள் தெரிவித்த வாக்குமூலங்களுக்கும் அவற்றின் மொழிமாற்றங்களுக்கும் இடையில் திரிபுகள் இருப்பதால் விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.*
>
> *துணை சொலிசிட்டர் ஜெனரல் யசாந்த கொட்டகொட, விசாரணை ஆணையத்தின் சார்பாக தடயங்களை வழங்கியபோது, 4 ஆகஸ்ட் 2006 அன்று சி.ஐ.டி.பொலிஸார் பதிவுசெய்திருந்த வாக்குமூலங்கள் தொடர்பில் அவர் சாட்சிகளிடம் கேள்விகளைக் கேட்கத் தொடங்கியபோது, மொழிமாற்றங்களில் தவறு செய்யப்பட்டிருக்கும் விவகாரம் எழுந்திருந்தது. ஆகஸ்ட் 4ஆம் தேதி காலை 8.30 மணிக்கு ஏ.சி.எ.ஃப். ஊழியர்களை தான் சந்தித்திருந்ததாக சாட்சி கூறினார். இந்த விஷயம் அவர்களுடைய ஆரம்ப வாக்குமூலத்தில் விடப்பட்டுள்ளதா என்ற குழப்பம் எழுந்திருந்தது.*
>
> *மேலும் வாக்குமூலங்கள் சிங்களத்திற்கும் ஆங்கிலத்திற்கும் மொழிமாற்றம் செய்யப்பட்டபோது சில விபரங்கள் விடப்பட்டுள்ளன என்பதும் வெளிச்சத்துக்கு வந்தது. சாட்சி தனது வாக்குமூலத்தில் "நாங்கள்*

[44] ஆணையத்தின் விசாரணைகளில் இலங்கை இராணுவத்தின் சார்பாக சட்டத்தரணி கொமின் தயாஸ்ரீ ஆஜராகினார். இலங்கையைக் காப்போம் என்ற குழுவின் உறுப்பினராக இருப்பவர் கொமின் தயாஸ்ரீ. இந்த குழு தன்னுடைய நோக்கம் பற்றி தெரிவிக்கும் விளக்கம் என்னவென்றால், " இலங்கையில் வெளிநாட்டுத் தலையீடு ஏற்படுத்தும் பாதிப்பு, சமாதானத்துக்கும், ஒழுங்கான கண்ணோட்டத்தில் மனித உரிமைக்கும் இத்தலையீடு எந்தவகையில் அச்சுறுத்தலாய் அமைந்துள்ளது என்பதை இலங்கை மக்கள் அனைவரிடமும் எடுத்து விளக்குவது. நாட்டின் மேம்பாட்டுக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் இறையாண்மையைப் பாதுகாப்பது என்பதற்கும், நாடு துண்டாடப்படுவதை தடுப்பதற்கும் நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டை பேணுவதற்குமான கருத்துருவாக்கக் களம் h என்பதாகும். www.protectsrilanka.org/About-us.html

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

எங்களது மோட்டார் சைக்கிளில் மருத்துவமனையை நோக்கி செல்லும் வழியில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலர் துப்பாக்கியுடன் அஞ்சலக சந்தியிலும் கோயில் சந்தியிலும் நின்றிருந்ததை நாங்கள் கண்டோம்... மூதூர் படகுத்துறையை நோக்கி நாங்கள் சென்றோம். துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டதை அடுத்து பயத்தில் நாங்கள் திரும்பிவிட்டோம். ஏ.சி.எஃப். வளாகத்தை நோக்கி நாங்கள் சென்றபோது அவ்வலுவலகத்தின் அருகில் சிலர் கூடி நிற்பதையும், மணிவண்ணன் (கூடுதல் பிராந்திய செயலாளர்) அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தார். முட்டாள்கள் போல் அங்கே நின்றுகொண்டிருக்காமல் உடனடியாக தேவாலயத்தை நோக்கி போகச் சொல்லிக்கொண்டிருந்தார். இராணுவத்தினரை நான் படகுத் துறை திசையிலும், விடுதலைப் புலிகளை நான் மூதூர நகர திசையிலும் கண்டேன்." என்று கூறியிந்தார்.

"நேரம் எது என்று கண்டறிவதற்காக (ஒரு சம்பவம் எப்போது நடந்திருந்தது என்பதை தீர்மானிப்பதற்காக) ஒரு விஷயத்தை நாங்கள் ஊர்ஜிதப்படுத்த நாங்கள் முயன்ற சமயத்தில் எல்லாம் ஒவ்வொரு மொழியிலும் வாக்குமூலம் வெவ்வேறு மாதிரி இருந்ததாகப் பட்டது" என்று விசாரணை ஆணையர் மனூரி முட்டெட்டுவெகம கூறினார்.

"என்னிடம் தரப்பட்ட உறுதிச் சான்றிதழ் பெற்ற மொழிமாற்றத்தை நான் இப்போது வாசிக்கிறேன்" என்று திரு.கொட்டகொட வெறுத்துபோய்க் குறிப்பிட்டார்.

சாட்சியை 10 நிமிடங்கள் வெளியில் சென்று காத்திருக்கச் சொல்லிவிட்டு மொழிமாற்றங்கள் இடையில் காணப்படும் வேறுபாடுகளால் எழுந்த பிரச்சினையைத் தீர்க்க விசாரணை ஆணையம் முயன்றது. சாட்சி வழங்கியிருந்த நான்கு வாக்குமூலத்திற்குமான எந்த ஒரு மொழிமாற்றமுமே சரிதானா என்ற கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. 2006ல் சாட்சி வழங்கியிருந்த சம்பந்தப்பட்ட வாக்குமூலங்களின் நகல் ஒன்று விசாரணை ஆணையத்தின் சட்டத்தரணியிடம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்ற விஷயம் பின்னர்தான் வெளிச்சத்து வந்தது.

ஆணையர்கள் விரக்தியடைந்தது விசாரணைகள் வழமைக்கு முன்பாகவே ஒத்திப்போடப்படுவதற்கு வழிவகுத்திருந்தது. "இது நிஜமாகவே பெரும் தொல்லையாகப் போய்விட்டது" என்று ஆணையர் முட்டெட்டுவெகம விசாரணை ஆணையத்தின் தலைவர் நிஸ்ஸாங்க உடலகமவிடம் சொல்கிற அளவுக்கு அவர்கள் விரக்தியடைந்திருந்தனர்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

விசாரணை ஆணையத்தின் மொழிபெயர்ப்பாளர்களைக் கொந்து "உறுதிச் சான்றிதழ் பெற்றப்பட்ட மொழிமாற்றங்களைப் புதிதாக செய்வது" என்று விசாரணை ஆணையம் இறுதியில் தீர்மானித்திருந்தது. காரணம் "வாக்குமூலங்களின் உறுதிச் சான்றிதழ் பெற்ற மொழிமாற்றங்களாக சி.ஐ.டி. பொலிஸாரால் வழங்கப்பட்டிருந்தவற்றில் பிழைகள் இருப்பதாக நிரூபணமாகியுள்ளது" என்று அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.
டெய்லி மிர்ரர் பத்திரிகை, 25 ஏப்ரல் 2008

ஜூலை 2008ல் ஏ.சி.எ.ஃப். அமைப்பினர் இலங்கையில் இருந்து வெளியேறினர். தங்களது உள்ளூர் களப் பணியாளர்கள் 17 பேரின் கொலை தொடர்பான அரசு விசாரணைகளில் தாங்கள் நம்பிக்கை இழந்துவிட்டதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். நவம்பரில் விசாரணை ஆணையத்தின் முன்பு சாட்சியம் வழங்குவதற்காக ஏ.சி.எ.ஃப். பிரதிநிதிகள் சிறிதுகாலம் இலங்கை சென்று திரும்பியிருந்தனர்.

அக்டோபர் 2008, விசாரணை ஆணையத்தின் தலைவர் நிஸ்ஸாங்க உடலகம, திருகோணமலை கொலைகள் மற்றும் ஏ.சி.எ.ஃப். கொலைகள் ஆகியவை தொடர்பில் இடைக்கால அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் விசாரணை ஆணையம் சமர்ப்பிக்கும் என்றும் அதிலே மூதூர் மற்றும் திருகோணமலையில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நிவாரணம் வழங்குவது உள்ளிட்ட பரிந்துரைகளும் இடம்பெறும் என்று கூறியிருந்தார். நிவாரணம் கோரி உறவினர்கள் விசாரணை ஆணையத்தில் விண்ணப்பிக்கலாம் என்று அழைப்புவிடுக்கப்பட்டும், அவ்வாறு செய்யும்போது விண்ணப்பதாரி தான் யார் என்பதையும் கொல்லப்பட்டவருக்கு தான் எந்த வகையில் சொந்தம் என்பதையும் விளக்கி உறுதிச் சான்றிதழ் ஒன்றை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டும் இருந்தது.[45]

15 ஜூன் 2006ல் கெபிதிகொல்லாவவில் 68 பேர் கொல்லப்பட்டது

15 ஜூன் 2006 அன்று காலை, இலங்கையின் வவுனியாவுக்கும் ஹொரவபத்தனைக்கும் இடையில் வடமேற்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள சிங்களர்கள் அதிகமாக வாழும் கெபிதிகொல்லாவ அருகில் 150 பேருக்கும் அதிகமானோரை ஏற்றிச்சென்ற பொதுப்போக்குவரத்து பஸ்வண்டி ஒன்றில்

---

[45] "Patachara scenario at Kebitigollawa hearing ", Daily Mirror, 4 ஒக்டோபர் 2008 www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=28235

[1] www.navy.lk/index.php?id=297

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

கிளேமோர் குண்டு வெடித்திருந்தது. இதிலே 68 பேர் கொல்லப்பட்டிருந்தனர். அதிலே குறைந்தது 12 பேர் குழந்தைகள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது மாதிரியாக பலர் அதில் இருந்தனர். மேலும் சுமார் 70 பேர் காயமடைந்தும் இருந்தனர். இந்தப் பேருந்துப் பயணிகளில் பலர் யகவேவ என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அந்த கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக அம்மக்கள் பயணித்திருந்தனர். முன்பு ஊர்க்காவல் படையில் இருந்த அந்த இளைஞர், வவுனியா அருகில் வசித்துவந்திருந்தார். பேருந்துக்கு குண்டுவைத்தது விடுதலைப் புலிகள்தான் அரசாங்கம் குற்றம்சாட்டியிருந்தது. தரையில் புதைத்துவைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் இரண்டை தூரத்திலிருந்து இயக்கி பஸ் வண்டியை அழித்துவிட்டதாக இலங்கை இராணுவம் கூறியிருந்தது.[46] பலியானவர்களின் குடும்பத்தாருக்கு ரூ.50,000 ($500) நஷ்ட ஈடாக வழங்கபபடும் என்று மீள்குடியேற்ற அமைச்சகம் அறிவித்திருந்தது.[47]

ஜூன் 2006ல் கெபிதிகொல்லாவ மருத்துவமனையில் இருந்தபடி, தி ஐலண்ட் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருந்த சம்பவத்தில் உயிர் பிழைத்திருந்த நபர் ஒருவரான என். திஸ்ஸநாயகே என்பவர், மருமகன் ஒருத்தரின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக சென்ற பயணிகள் அந்தப் பேருந்தில் இருந்ததாகவும், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், புத்த பிக்குகள், ஊர்க்காவல் படையினர் சுமார் 15 பேர் வரையில் அதில் இருந்ததாகவும் கூறினார். "வண்டியில் கூட்டம் நிரம்பி வழிந்ததால் நான் படியிலே நின்றுகொண்டிருந்தேன். பஸ் ஓடிக்கொண்டேயிருக்க திடீரென்று இரண்டு பெரிய குண்டுகள் வெடித்தன. 25, 30 மீட்டர் வரைக்கும் அந்த பஸ் அப்படியே தூக்கியெறியப்பட்டது. அவ்வளவுதான் எனக்கு நியாபகம் இருக்கிறது." என்று அவர் குறிப்பிட்டார்.[48]

இந்த குண்டுவெடிப்பு காரணமாக அக்கம்பக்கத்து கிராமங்களில் தங்கியிருந்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் அப்பகுதியை விட்டு வெளியேற நேர்ந்தது. இடம் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பது தொடர்பில் விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினர் இடையில் போட்டி நிலவிய ஒரு பகுதி இது. "எல்லைக் கிராமங்கள்" என்று கூறப்படும் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள், மோதல் காலகட்டம் நெடுகிலும் மீண்டும் மீண்டும் இடம்பெயர நேர்ந்துள்ளது.[49] ஜூன் **2006**ல் நடந்த தாக்குதலில் பல குடும்பங்கள், வருமானம்

---

[46] "Massacre and mayhem, Tigers – spawned motto", Sunday Observer, 10 பிப்ரவரி 2008, www.sundayobserver.lk/2008/02/10/fea04.asp

[47] "AMIDST FUNERALS VILLAGERS FLEE FEARING TIGER TERROR", சிரில் பஸநாயக கட்டுரை , THE ISLAND, 17 ஜூன் 2006, WWW.ISLAND.LK/2006/06/17/NEWS1.HTML

[48] "Twin blasts kills 61 civilians in CTB bus" The Island, 16 ஜூன் 2008, www.island.lk/2006/06/16/news2.html

[49] கெபிதிகொல்லாவ □□□□□□□□□ □□□□ □□□ □□□□□□□□ அபிமானபுரத்தில் 2007ல் இரண்டாவதாக ஒரு பேருந்தில் குண்டுவெடித்திருந்தது, இதில் 16 பேர் கொல்லப்பட்டிருந்தனர்; 2008 ஜனவரியின்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஈட்டக்கூடியவர்களை பறிகொடுத்திருந்தது. யகவேவ கிராமம் இத்தாக்குதலில் 54 பேரை இழந்திருந்தது. மொத்தமாகவே இந்த கிராமத்தில் 128 குடும்பங்கள்தான் வாழ்ந்துவந்தன. அதிலே 45 குடும்பங்கள் (குண்டுவெடிப்பிலே ஒருவரையோ அல்லது அதற்கும் அதிகமானோரையோ இழந்திருந்த குடும்பம் இவை), சம்பவம் நடந்து ஓராண்டு ஆகிவிட்ட நிலையிலும், கெபிதிகொல்லாவவில் இடம்பெயர்ந்துள்ளவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள அகதி முகாமிலேயே தொடர்ந்து வாழ்ந்துவருகிறார்கள். இந்த முகாம்களில் வாழ்பவருக்கான உதவிகளை அரசாங்கம் நிறுத்திவிட்டபோதிலும் அவர்கள் அங்கேயே இருந்துவருகிறார்கள். முகாம்களில் நீடித்தவர்கள், தாங்கள் திரும்பிச் செல்லாமல் இருப்பதற்கு பாதுகாப்பு மற்றும் பொருளாதார காரணங்களை முன்வைத்ததோடு, அத்தனை குடும்ப உறுப்பினர்களை பறிகொடுத்திருந்த அந்த இடத்துக்கு திரும்பிச் செல்வதில் உணர்வு ரீதியில் தங்களுக்கு பிரச்சினை இருக்கிறது என்றும் தெரிவித்திருந்தனர்.[50]

> *யகவேவ கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பலர் பாதுகாப்பு காரணங்களுக்காக பொரலுகண்ட முகாமில் வாழ்ந்துவருகிறார்கள். அதேநேரம் கிராமத்தில் உள்ள தமது வீட்டைப் பற்றி நினைத்தாலே கடந்த காலம் பற்றிய சோகம் தன்னை வந்துக் கவ்விக்கொள்கிறது என்பதனால் முகாமிலேயே தொடர்ந்து அவ்விப்பதாகவும் ஒருவர் கூறுகிறார். சம்பவ நாள் தொடர்பான அலைக்கழிக்கும் பயங்கர நினைவுகள் வந்துபோவதை தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே ஊர்க்காவல் படையைச் சேர்ந்த பிரியந்த தொடர்ந்தும் முகாமில் இருந்துவருகிறார். கெபிதிகொல்லாவ துயர சம்பவத்தை அடுத்து ஜூன் 15 2006 அன்று அனைத்து பத்திரிகையிலுமே மடிந்த தனது மகனைப் அணைத்துக்கொண்டு பிரியந்த கதறும் நெஞ்சை நெகிழவைக்கும் புகைப்படம் வெளியாகியிருந்தபடியால், ஒரே நாளில் அவரது முகம் பலரும் அறிந்த ஒன்றானது. தனது மனைவி, இரண்டு வயதே ஆகியிருந்த தன்னுடைய ஒரே மகன், மற்றும் தனது குடும்பத்தைச் சேர்ந்த 23 மூன்று பேரை ஒரேயடியாக அந்த பயங்கர சம்பவத்தில் பறிகொடுத்துவிட்ட பிரியந்த, பிரிவின் சோகத்தைத் தாங்கியபடி வாழ்ந்துவருகிறார். அவரை வாட்டிவதைக்கும் துயரம் அவர் முகம் முழுக்க எழுதி ஒட்டப்பட்டுள்ளது.*

ஆரம்பத்தில் கெபிதிகொல்லாவவின் தல்கஸ்வேவ என்ற இடத்தில் இராணுவ வாகனம் ஒன்று குண்டுத் தாக்குதலுக்குள்ளானதில் படையினர் 3 பேர் கொல்லப்பட்டிருந்தனர்; 24 ஜனவரி 2008 அன்று, ஹொரபதனை - கெபிதிகொல்லாவ சாலையில் ஹிஜ்ராபுர எனும் இடத்தில் அடையாளம் தெரியாத 16 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த சடலங்கள் அனைத்தும் 25க்கும் 40க்கும் இடைப்பட்ட வயதுடைய ஆடவர்களுடையது என்றும் அவர்களது கைகள் முதுகுப்பக்கமாக சேர்த்துக்கட்டப்பட்டிருந்தன, கண்கள் கட்டப்பட்டிருந்தன என்றும் பொலிசார் கூறினர். அவர்கள் அனைவர் உடலிலும் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்திருந்தன.

[50] "A tragedy of the survivors", ரோஹன் அபேவர்த்தன எழுதியது, www.sundaytimes.lk/070624/News/nws23.html

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

சம்பவ தினம் அவர் சைக்கிளில் கெபிதிகொல்லாவ செல்ல முடிவெடுக்காது இருந்திருந்தால், அவரும் தனது குடும்பத்தோடு அழிந்துபோயிருப்பார்.

என்னாலே எப்படி அந்த வீட்டுக்கு திரும்பப் போகமுடியும்? ஒருத்தரும் இல்லாம என்னாலே எப்படி அங்கே போய் மறுபடியும் வாழமுடியும்? என்று அவர் கேட்கிறார்.[51]

2008 டிசம்பர் 9ஆம் தேதி, விசாரணை ஆணையத்தின் தலைவரான ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி நிஸ்ஸாங்க உடலகம, கெபிதிகொல்லாவ வழக்கில் தனது விசாரணையை நிறைவுசெய்துவிட்டது என்று அறிவித்திருந்தார். ஒக்டோபரில் பொதுமக்கள் முன்னிலையிலான விசாரணைகள் ஆரம்பித்திருந்த சமயத்தில், குண்டுவெடிப்பில் உயிர் பிழைத்திருந்தவர்களிடம் இருந்து விசாரணை ஆணையம் வாக்குமூலங்களைக் கேட்டிருந்தது. அவர்களிலே ஒருவர் 48 வயதான பத்மாவதி என்ற பெண்மணி. அவர் தனது கணவரையும், நான்கு மகன்களில் இருவரையும், நெருங்கிய உறவினர்களையும் நண்பர்களையும் இந்தத் தாக்குதலில் இழந்திருந்தார். அவரும்கூட கெபிதிகொல்லாவவிலேயே தனது காயம்பட்ட மகனுடன் இருந்துவிடலாம் மீண்டும் கிராமத்துக்கு திரும்ப வேண்டாம் என்றே முடிவெடுத்திருந்தார். ஊருக்கு திரும்பினால் அது தங்களுக்கு மிகுந்த துன்பத்தைத் தரும் என்று அவர் விசாரணை ஆணையத்திடம் தெரிவித்திருந்தார்.[52]

16 ஜனவரி 2006 அன்று சிகிரிய, திகம்பதனையில் பாதுகாப்புப் படையினர் 98 பேர் கொல்லப்பட்டது

16 ஒக்டோபர் 2006 அன்று வெடிப்பொருட்கள் நிரம்பியிருந்த ஒரு டிரக் வண்டியை ஒரு தற்கொலை குண்டுதாரி ஓட்டிவந்து ஒரு பஸ்வண்டித் தொடரணியில் மோதி வெடிக்கச் செய்ததில் இலங்கை கடற்படையினர் 102 பேர் கொல்லப்பட்டும் சிவிலியன்கள் உட்பட 116 பேர் காயமடைந்தும் இருந்தனர். திருகோண்மலை-கபரனை சாலையில் உள்ள திகம்பதனை இடைத்தரிப்பு முகாமில் பஸ்வண்டிகள் நின்றிருந்த நேரம் இந்தத் தாக்குதல் நடந்திருந்தது. சம்பவம் நடந்த சமயத்தில் அந்த இடத்தில் கடற்படையினர் சுமார் 300 பேர் இருந்திருந்தனர். விடுமுறையில் வீடு சென்றுகொண்டிருந்தவர்களும், கடமைக்கு திரும்பிக்கொண்டிருந்தவர்களும் அதில் அடங்குவர்.[53] இந்தத் தாக்குதலை நடத்தியது விடுதலைப் புலிகள் தான்

[51] "Forgotten Kebithigollewa," The Sunday Leader, 17 ஜூன் 2008 www.thesundayleader.lk/20070617/issues-1.htm

[52] "Patachara scenario at Kebitigollawa hearing" Daily Mirror, 4 ஒக்டோபர் 2008, www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=28235

[53] Personnel killed and injured at Digampathana, இலங்கை கடற்படை இணையதளம்,

என்று இலங்கை அரசாங்கம் குற்றம்சாட்டியிருந்தது. வசாரணை ஆணையம் திகம்பதனை தாக்குதல் தொடர்பாக தனது விசாரணைகளை 20 ஒக்டோபர் 2008 அன்று ஆரம்பித்திருந்தது. அவ்விசாரணையில் முதல் இரண்டு சாட்சிகள் வாக்குமூலம் வழங்கியது ஊடகங்களின் பார்வையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.[54]

ஆகஸ்ட் 2006ல் நாதளமொட்டன்குளம் (செஞ்சோலையில்) 51 பேர் கொல்லப்பட்டது

மேலே குறிப்பிட்டதுபோல ஆணையத்தின் விசாரணைகள் முதல் வருடம் முழுக்கவும் பொதுமக்கள் பார்வையின்றி வீடியோ பதிவு செய்யப்பட்டு நடந்திருந்தன; விசாரணை ஆரம்பமாகியிருந்த சில வழக்குகளில் பொதுமக்கள் முன்னிலையிலான வழக்கு நடக்கவே இல்லை. ஆதலால் இந்த வழக்குகள் தொடர்பில் கூறுவதற்கு அதிகம் இல்லை. செஞ்சோலையில் நடத்தப்பட்ட வான் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் முன்னிலையில் விசாரணை நடந்திருக்கவில்லை என்றாலும் அது தொடர்பில் ஆணையம் மேற்கொண்ட விசாரணையில் மேலதிக விவாதம் தேவைப்படுகிறதுதான். 14 ஆகஸ்ட் 2006ல் இலங்கை விமானப் படை முல்லைத்தீவு மாவட்டத்தில் செஞ்சோலை என்று அழைக்கப்படுகிற வளாகத்தின் கட்டிடத் தொகுதி மீது குண்டுகளை வீசியிருந்தது. அங்கே கூடிநின்ற உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 150 பேர் காயமடைந்தும் இருந்தனர். (ஆரம்பத்தில் அனாதை இல்லமாக செயல்பட்டுவந்த) இந்த வளாகம் எப்படிப்பட்டது, அதில் தங்கியிருந்தவர்களுக்கு எவ்விதமான பயிற்சி வழங்கப்பட்டுவந்தது என்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினரும் விடுதலைப் புலிகளும் ஒருவருக்கொருவர் பழிசுமத்திக்கொண்டனர். அங்கிருந்த இளம்பெண்களுக்கு "தலைமைத்துவ" அல்லது முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டிருந்து என்று விடுதலைப் புலிகள் கூறினர். ஆனால் அவர்களெல்லாம் விடுதலைப் புலிகளின் ஆயுதப் படையில் சேர்க்கப்பட்டவர்கள் என்று அர்சாங்கம் வலியுறுத்தியது.

இச்சம்பவம் தொடர்பான ஆணையத்தின் விசாரணைகள் எல்லாம் பொதுமக்கள் பார்வையிலிருந்து விலக்கப்பட்டு இரகசியமாக நடந்திருந்தாலும், சம்பவம் தொடர்பான பல விபரங்கள் எழுத்து ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலமாக ஏற்கனவே பரவியிருந்தன.செஞ்சோலை குண்டுவீச்சில் காயங்களுடன்

---

www.navy.lk/index.php?id=297

[54]"COI commences probe into Digampathana bomb blast", Daily Mirror; 21 ஒக்டோபர் 2008, www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=29740

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

உயிர்பிழைத்திருந்த மூன்று இளம்பெண்கள் பொலிஸ் காவலில் இருந்த நேரத்தில், அரசு ஊடகங்களுக்கு வீடியோ பேட்டி கொடுக்கச்சொல்லி அவர்கள் வற்புறுத்தப்பட்டிருந்தனர். பின்னர் அவர்கள் விசாரணை ஆணையத்தின் பொதுமக்கள் பார்வையன்றி நடத்தப்பட்ட விசாரணைகளின்போது மறுபடியும் விசாரிக்கப்பட்டிருந்தனர். அரசாங்கத்தின் சமாதான செயலகத்தில் (SCOPP) சட்ட விவகார இயக்குநரான ஸ்ரீராணி குணதிலக, விசாரணை ஆணையத்தில் குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பராமரிப்பு பிரிவுடைய ஆலோசகராகவும் இருந்தார். அதிக ஆபத்தான நிலையிலிருந்த இந்த சாட்சிகளை விசாரணை ஆணையத்துக்கு கூட்டிவந்து திரும்பி அழைத்துப்போகும்போதும் உடன் சென்றுவந்ததோடு, அவர்கள் வாக்குமூலம் வழங்கும்போதும் ஸ்ரீராணி உடனிருந்தார்.[55]

SCOPP அமைப்பானது ஆணையத்துடைய விசாரணை முடிவுகளை முந்திக்கொண்டு, சம்பவம் பற்றி அதுவாகவே நவம்பரில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. "வடக்கில் நடந்த மனிதாபிமான சேவைகள்" என்ற தலைப்பில் சமாதான செயலகம் 10 நவம்பர் 2008 அன்று வெளியிட்ட அறிக்கையில்:

> *இரண்டு வருடங்கள் முன்பு தற்போதைய மோதல்கள் ஆரம்பமானதன் பின்னர் நடத்தப்பட்டிருந்த 350 விமான குண்டுவீச்சுத் தாக்குதல்களில், 50க்கும் குறைவான சிவிலியன்கள் கொல்லப்பட்டதாகவே குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன. விடுதலைப் புலிகள் தமது அமைப்பில் வலுக்கட்டாயமாக சேர்த்திருந்தவர்கள் என்று தெரியவரும் 61 பேர் இதில் சேரவில்லை. ஒரு பயிற்சிக் கூடம் என்று தகவல் தெரிவிக்கப்பட்ட இடத்தின் மீதே விமானப் படையினர் இலக்குவைத்திருந்தனர். இராணுவச் சீருடையில் ஆயுதம் ஏந்திய பெண்கள் இருந்ததைக் காட்டும் படங்கள் இராணுவத்தினருக்கு கிடைத்த விபரம் சரிதான் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் இது ஒரு அனாதை இல்லம். அந்த இடத்தைத் தாக்கிவிட்டார்கள் என்று கூறியிருந்தனர். ஆனால் அங்கு செயல்பட்டுவந்த அனாதை ஆசிரமம் சில ஆண்டுகள் முன்பாக கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டிருந்தது என்ற விபரம் தெரியவந்ததை அடுத்து புலிகள் தாங்கள் சொன்னதை மாற்றிக்கொண்டார்கள். அவ்விடத்தில் நடந்தது முதலுதவிக்கான பயிற்சி என்று அவர்கள் கூறியது பொய். படையில் சேர்க்கப்பட்டிருந்த பெண்களுடைய வீட்டிற்கும் சம்பவ இடத்துக்குமான தூரம் மட்டுமல்லாது, எவ்வாறு அப்பெண்கள் உடுப்பு அணியவும் செயல்படவும் நிர்பந்திக்கப்பட்டிருந்தார்கள் என்று காட்டிய புகைப்படங்களால்*

[55] இரகசிய தொடர்பாடல்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

மட்டுமல்லாது, மீட்கப்பட்டு அரசாங்கப் பராமரிப்பில் வைக்கப்பட்டிருந்த இரண்டு பேர் வழங்கிய வாக்குமூலங்களாலும், புலிகள் சொன்னது பொய் என்று தெரியவந்தது. மீட்கப்பட்டிருந்த பெண்கள் மூவரில் ஒருவர் வட இலங்கையில் ஒரு மருத்துவமனையில் இருந்த சமயத்தில் மர்மமான முறையில் உயிரிழந்ததை அடுத்து மற்ற இருவரும் அரச பராமரிப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.[56]

கண்டி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை முடிந்த ஒரு சில நாட்களிலேயே அவர் அங்கிருந்து வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தர். அங்கே அவர் உயிரிழந்தார். அவர் உயிரிழந்த காரணம், சூழல் போதுமானதாய் விளக்கப்பட்டிருக்கவே இல்லை.[57] பாதிக்கப்பட்ட இன்னொருவரிடமும் மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு செல்லலாம் என்று தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் அவர் கண்டி மருத்துவமனையிலிருந்து வெளிவந்தவுடன் அவரை கண்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ளனர். அங்கே அவரிடம் இருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. தான் சொன்ன விஷயங்களை மேலும் ஒருமுறை செய்தியாளர்களிடம் சொல்லச் சொல்லியும் அவர் நிர்பந்திக்கப்பட்டிருந்தார். அவருடைய பேட்டி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்டவர்கள் சிலர், பாதிக்கப்பட்டவர் ஒருவரின் தாய் ஆகியோருடைய பேட்டிகளும் அதே நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகியிருந்தன. இது அவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளை, குறிப்பாக விடுதலைப் புலிகளால் இவர்கள் பழிவாங்கப்படுவதற்கான ஆபத்துகளை மிகவும் அதிகப்படுத்திவிட்டது. இந்த வீடியோ பேட்டிகள், இலங்கை பாதுகாப்பு அமைச்சக இணையதளத்தில் தொடர்ந்தும் பார்க்கக்கூடியதாக இருந்துவருகிறது.[58] இதுமாதிரியான பெரிய விவகாரங்கள் தொடர்பில் ஏற்கனவே நடந்திருந்ததைப்போலவே, சாட்சிகளின் முழு பெயர்களும் தெளிவாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவர்களை மற்றவர்கள் அடையாளம் கண்டுகொள்ளாதிருக்க வேண்டும் என்பதற்கான ஏற்பாடு எதுவுமே செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட அந்த நபர் பின்னர் கொழும்பில்

---

[56] "Humanitarian Services to the North ・, SCOPP அமைப்பின் அறிக்கை, 10 நவம்பர் 2008, www.peaceinsrilanka.org/peace2005/Insidepage/SCOPPDaily_Report/SCOPP_report101108.asp

[57] வால்டர் ஜெயவர்த்தனே எழுதிய கட்டுரை, "Mystery surrounds the death of Sencholai victim Dayalini; judge asks why she was transferred back to Vavuniya from Kandy", Asian Tribune, 1 ஒக்டோபர் 2006, www.asiantribune.com/index.php?q=node/2236. மனித உரிமைகளுக்கான வடகிழக்கு செயலகம் (NESOHR), அப்பெண் கண்டியில் மருத்துவர்களால் ஒழுங்காக கவனிக்கப்படவில்லை. அவர்களின் அலட்சியம் காரணமாகவே இவர் உயிரிழந்திருந்தார் என்று கூறியிருந்தது: "Inhuman politics with a human tragedy – An appeal for international intervention", www.nesohr.org/inception-sept2007/human-rights-reports/Sensolai.pdf

[58] இலங்கை தேசியத் தொலைக்காட்சியான ரூபவாஹினியிலும், அரச கட்டுப்பாட்டில் இயங்கும் பொது நிறுவனமான ஐ.டி.என்.னிலும் (ITN) இந்தச் செய்திகள் தொடர்ந்து காட்டப்பட்டு வந்தன. இந்த வீடியோ படங்கள் எல்லாம் தொடர்ந்தும் இலங்கை பாதுகாப்பு அமைச்சக இணையதளத்தில் காணக்கூடியதாக இருக்கிறது.

அரசாங்கக் காவலுக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அரசாங்கத்தின் "பராமரிப்பு" என்று சமாதான செயலகம் குறிப்பிடுகிற அந்த விஷயத்திலேதான் கண்டி பொலிசாராலும், கொழும்பு அதிகாரிகளாலும் தடுத்துவைக்கப்படுவதும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதும் அடங்கும். காயமடைந்திருந்த அந்த சாட்சிகள் மீது எவ்வித குற்றமும் சுமத்தப்பட்டிருக்கவில்லை. அவர்கள் எல்லாம் ஏ-லெவெல் படித்துவந்த மாணவர்கள். தமது பள்ளிக்கூடத்திற்கு வெளியில் இருந்து கடத்தப்பட்டு, தமது விருப்பத்திற்கு எதிராக விடுதலைப் புலிகளால் செஞ்சோலைக்கு கொண்டுவரப்பட்டவர்கள். குண்டுவீச்சு நடப்பதற்கு ஒரு சில நாட்கள் முன்புதான் அவர்கள் விடுதலைப் புலிகளால் அங்கு கொண்டுவரப்பட்டிருந்தனர். அந்த மாணவிகள் இராணுவச் சீருடை அணிந்திருக்கவில்லை ஆயுதம் ஏந்தியிருக்கவில்லை, அவர்களது பயிற்சியாளர்கள்தான் அவ்வாறு இருந்தனர் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு அறியக்கிடைப்பதாய் உள்ளது. அம்மாணவிகள் முதலுதவிப் பயிற்சியும், துப்பாக்கி ஒன்றை பாகம் பாகமாக பிரித்துவிட்டு மறுபடியும் ஒன்று சேர்ப்பது எப்படி என்று காட்டும் பயிற்சியும் பெற்றுவந்ததாக கூறப்படுகிறது. அப்பெண்களுக்கு ஏதோ ஒரு வகையில் இராணுவப் பயிற்சி கொடுப்பதே விடுதலைப் புலிகளது எண்ணம் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. (விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் பலரும் கட்டாய இராணுவப் பயிற்சிக்கு உட்படுத்தப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் படையில் சேருவதில்லை). இந்தப் பயிற்சி விமானப் படையினரின் தாக்குதலால் இடையிலேயே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. இச்சம்பவத்தில் சாட்சியாக அமைந்துள்ள மூன்று பேரும் இளம் வயதினர் (18,19 மற்றும் 20 வயதானவர்கள் இவர்கள் என்று ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது), விடுதலைப் புலிகள் இவர்களை தங்கள் நோக்கத்துக்காக பயன்படுத்தியும், அவர்களது உயிர்களுக்கு ஆபத்தை உருவாக்கியும் இருந்தனர். தற்போது அரசாங்கமும் தங்களது நோக்கங்களுக்காக இவர்களைப் பயன்படுத்தியும் அவர்களது உயிர்களுக்கு ஆபத்தை உருவாக்கியும் வருகிறது.

17 செப்டம்பர் 2006 அன்று பொத்துவில் பொலிஸ் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள ரதெல்லவில் முஸ்லிம் கிராமவாசிகள் 10 பேர் கொல்லப்பட்டது

18 செப்டம்பர் காலை, ரதெல்லவில் உள்ள ஒரு பழைய நீர்த் தேக்கமான ரட்டகுளத்தில், வெட்டிக் கொல்லப்பட்டிருந்த 10 இளைஞர்களது சடலம் கண்டெடுக்கப்பட்டிருந்தது. அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் நகரிலிருந்து 9 கிலோமீட்டர் தொலைவில், லகுகல தேசியப் பூங்காவை ஒட்டி இந்த நீர்த்தேக்கம் அமைந்துள்ளது. கொல்லப்பட்டவர்கள் அனைவருமே 18 முதல்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

25 வயதுக்குட்பட்ட முஸ்லிம்கள். இவர்களுக்கும் பார்க்க வயது கூடியவரான மீரா மொஹிதீன் என்பவர் தாக்குதலில் காயங்களுடன் உயிர்ப் பிழைத்திருந்தார். அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பொத்துவில் பிரதேச செயலகம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீர்த்தேக்கத்தில் அணைக்கதவை பழுதுபார்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த ஒப்பந்தக்காரர்களுக்காக இவர்கள் வேலைபார்த்து வந்தனர். வேலைபார்த்துவந்தவர்களும் அவர்களைக் கொண்டுவரச் சென்றிருந்த உடன் பணியாற்றும் ஊழியர்களும் 17 செப்டம்பர் மாலை வீடு திரும்பாததை அடுத்து, அங்கிருந்து நான்கு மைல்கள் தொலைவில் சாஸ்திரவெளியில் நிலைகொண்டிருந்த விசேட அதிரடிப் படையினரிடம் சென்று, இவர்களை தேட ஆள் அனுப்புமாறு கிராமவாசிகள் கோரியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. விசேட அதிரடிப் படையினர் உதவ முன்வராததை அடுத்து, அக்கிராமவாசிகள் தாங்களாகவே காணாமல் போனவர்களைத் தேடச் சென்றிருந்தனர். அன்றிரவு வேலை நடந்துவந்த இடத்தில் காலி சாராயக் பாட்டில்களை அவர்கள் கண்டெடுத்திருந்தனர். அடுத்த நாள் காலை அவர்கள், காணாமல் போனவர்களின் சடலங்களைக் காண நேர்ந்தது, கைகால்களும், கண்களும் கட்டப்பட்ட நிலையில், தொண்டையிலும் கழுத்திலும் ஆழமான வெட்டுக் காயங்களுடனும் அவை காணப்பட்டிருந்தன.[59] உயிர் தப்பிய ஒரே நபரான மீரா மொஹிதீனையும் அவர்கள் மீட்டிருந்தனர். கழுத்தில் வெட்டுக்காயங்கள் உட்பட அவர் மோசமான காயங்கள் அவரது உடலில் இருந்தன. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

விசேட அதிரடிப் படையினருக்கும் அப்பகுதி முஸ்லிம் சமூகத்தினருக்கும் இடையில் ஏற்கனவே பிரச்சினைகள் இருந்ததைச் சுட்டிக்காட்டி, இக்கொலைகளுக்கு விசேட அதிரடிப் படையினரே பொறுப்பு என்று விடுதலைப் புலிகளும் அப்பகுதியின் முஸ்லிம் தலைவர்களும் குற்றம்சாட்டியிருந்தனர். இலங்கையின் அதிகாரிகளோ விடுதலைப் புலிகள் மீது பழிசுமத்தினர். உயிர் பிழைத்திருந்த மீரா மொஹிதீனும், தாக்கியது விடுதலைப் புலிகள்தான் என்று பொலிஸாரிடம் தெரிவித்திருந்ததாக அவர்கள் கூறினர். மீரா மொஹிதீன் விஷயத்தைப் பொறுத்தவரை, சம்பவத்தின் பின்னர் அவரைப் பார்க்க வாரக் கணக்கில் இடம்தரவில்லை என்று அவரது மகளேகூட புகார் தெரிவித்திருந்தார். ஆரம்பத்தில் கல்முனை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருந்த அவர், பின்னர், "பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றும் நோக்கில் அம்பாறையில் உள்ள இராணுவ தள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்" என்று இலங்கை

[59]The Choice between Anarchy and International Law with Monitoring, UTHR(J) விசேட அறிக்கை எண் 23, 7 நவம்பர் 2006, www.uthr.org/SpecialReports/spreport23.htm#_Toc174529736

பாதுகாப்பு அமைச்சு சொல்லியது.[60] பின்னர் அவர் கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

> *பொத்துவில் பிரதேச மருத்துவ அதிகாரி எழுத்துமூலமாக வழங்கிய அறிவுறுத்தலின் பேரில் காயமடைந்த மீரா மொஹிதீன் ஒரு ஆம்புலன்ஸ் வண்டியில் கொண்டுசெல்லப்பட்டு கல்முனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். கல்முனையில் அஷ்ரஃப் நினைவு மருத்துவமனை என்ற ஒன்றும் தமிழர் பகுதியிலே பழைய இராணுவ தள மருத்துவமனை ஒன்றும் இருக்கிறது. 2004ஆம் ஆண்டின் சுனாமி சம்பவத்திற்கு பின்னர் இந்த மருத்துவமனைகளில் நல்ல மருத்துவ வசதிகள் இருந்துவருகின்றன. காரை தீவிலுள்ள விசேட அதிரடிப்படை சோதனைச் சாவடியைக் கடந்து ஆம்புலன்ஸ் வண்டி கல்முனைக்கு சற்று வெளியில் உள்ள மலியக்காடு என்ற இடத்திற்கு வந்தபோது, அங்குள்ள பொலிசார் ஆம்புலன்ஸை நிறுத்தி, காயம்பட்டவரை அம்பாறை மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தனர்.*
>
> *... இந்த விஷயம் 19ஆம் தேதியே ஊடகங்களுக்கு கசிந்துவிட்டது. "துப்பாக்கிகள், கதிர் அறுவாள், கத்திகள், கோடாரிகள்" சகிதம் தங்களை வந்து தாக்கி கொலைகளைச் செய்தது விடுதலைப் புலிகளே என்று அரசாங்கம் அறிவித்திருந்த ஒரு விசேட பொலிஸ் விசாரணைக் குழுவிடம் மீரா மொஹிதீன் கூறியிருந்தார் என்று விஷயம் வெளியாகியிருந்தது. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீரா மொஹிதீனைச் சந்திக்க முயன்றபோதும், பொலிஸாரால் அவர்கள் திருப்பியனுப்பப்பட்டிருந்தனர். முஸ்லிம் மனித உரிமைக் குழு ஒன்று அவரது குடும்பத்தினரைத் தொடர்புகொண்டபோதும், மீரா மொஹிதீன் மிகவும் பலவீனமாக இருக்கிறார் அவரால் எதுவுமே பேசமுடியவில்லை பொலிஸ் குழுவிடம் அவர் வாக்குமூலம் அளிப்பது சாத்தியமில்லை, அவர் ஏதோ கொஞ்சம் உளறுகிறார் ஆனால் அது ஒன்றுமே விளங்கவில்லை என்று தெரிவிக்கப்படுவதாக அவர்கள் கூறியிருந்தனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையும் குடும்பத்தினரையும் பொலிஸார் பார்க்கவிடாமல் திருப்பியனுப்பியமைக்கு இதுவே காரணமாக கூறப்பட்டிருந்தது. 22ஆம் தேதிதான் கண்காணிப்புக் குழுவினர் அவரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டிருந்தது. அதற்கு இடைப்பட்ட காலத்தில், கொலைகளுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என முஸ்லிம் அமைச்சர்*

[60] "'Pottuvil massacre" heinous crime by the LTTE", பாதுகாப்பு அமைச்சக இணையதளம் 7 நவம்பர் 2006, www.defence.lk/new.asp?fname=20060919_01

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஃபெளஸி உட்பட அரசாங்கம் சார்பாகப் பேசவல்லவர்கள் பழிசுமத்தியிருந்தனர்.[61]

27 செப்டம்பர் மீரா மொஹிதீன் அம்பாறை பொது மருத்துவமனையில் தனது மருத்துவமனைக் கட்டிலில் இருந்தபடியே வழங்கிய பேட்டி ஒன்று தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டிருந்தது. தாக்கியவர்கள் எல்லாம் தமிழ் பேசினார்கள் என்றும் விடுதலைப் புலிகள் அவர்கள் என்று தான் நினைப்பதாகவும் அவர் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவிடம் கூறியது அப்பேட்டியில் இடம்பெற்றிருந்தது.[62] இலங்கை பாதுகாப்பு அமைச்சக இணையதளத்தில் இடம்பெற்றிருந்த இந்த வீடியோ பேட்டி, அரசாங்க ஆதரவு இணையதளம் ஒன்றில் இப்போதும் இடம்பெற்றிருக்கவே செய்கிறது.[63] மீரா மொஹிதீன் அந்தப் பேட்டியை வழங்கியிருந்த சமயத்தில் அவர்தம் குடும்பத்தினர் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. பின்னர் குடும்ப உறுப்பினர் ஒருவர் அந்தப் பேட்டி பற்றி மொஹிதீனிடம் கேட்டபோது, அப்படி ஒரு பேட்டி கொடுத்ததாகவே தனக்கு நினைவில்லை என்று அவர் கூறியதாக **UTHR(J)** தெரிவிக்கிறது.

ஒக்டோபர் 4ஆம் தேதியன்றோ அல்லது அடுத்தடுத்த நாளிலோ, மீரா மொஹிதீன் அம்பாறை மருத்துவமனையிலிருந்து கொழும்பு மருத்துவமனையில் பணம் கட்டித் தங்கும் வார்டு ஒன்றுக்கு மாற்றப்பட்டிருந்தார். மீரா மொஹிதீன் நன்றாக குணமடைந்துவருகிறார். சில நாட்களில் அவர் வீட்டுக்கு அனுப்பப்படுவார் என்று அம்பாறையின் மருத்துவ கண்காணிப்பு அதிகாரி கூறியிருந்தும் அவர் மாற்றப்பட்டிருந்தார். அதற்கான காரணமும் அறிவிக்கப்படவே இல்லை. மொஹிதீன் தான் வீட்டுக்கு செல்லவேண்டும் என்று பிடிவாதம் செய்ததாகவும் அதனால் கொழும்பில் அவரை வைத்திருப்பது என்பது மருத்துவர்களுக்கு சிரமாகியது என்றும் அவருடைய குடும்பத்துக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர். பொத்துவில் இருந்து மொஹிதீனின் மருமகனை கொழும்பு வரவழைக்கப்பட்டிருந்தார். அவர் மொஹிதீனை சமாதானப்படுத்தி மேலும் சில காலம் கொழும்பில் தங்கியிருப்பதற்கு சம்மதம் வாங்கியிருந்தார். அம்பாறை பொலிஸார் மொஹிதீனை வந்து சேர்த்துவிட்டிருந்தபடியால், அவர்கள் வந்து ஒப்புதல் கொடுக்காமல் மொஹிதீனை அனுப்ப முடியாது என்பதுதான் கொழும்பு மருத்துவமனையின் பிரச்சினையாக இருந்ததாகத்

---

[61] The Choice between Anarchy and International Law with Monitoring, UTHR(J) விசேட அறிக்கை எண் 23, 7 நவம்பர் 2006, www.uthr.org/SpecialReports/spreport23.htm#_Toc174529736

[62] "STF OIC files FR petition against former IGP and Rauff Hakeem", சுஷீதா ஆர் ஃபெர்னாண்டோ எழுதியது, Daily Mirror, 19 ஒக்டோபர் 2006.

[63] "Tamil Tigers Terrorist behind Pottuvil (Sri Lanka) Muslim massacre: Sole survivor, Srilankalion", 29 செப்டம்பர் 2006, www.youtube.com/watch?v=wrMThYTADKY

தெரிகிறது.[64]

பின்னர் ஒருவழியாக மீரா மொஹிதீன் மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்டு வீடு திரும்பி, குடும்பத்தினருடன் இணைந்தார்.

மீரா மொஹிதீன் நடத்தப்பட்ட விதத்துக்கும் செஞ்சோலை குண்டுவீச்சு சம்பவத்தில் உயிர் பிழைத்திருந்த நடத்தப்பட்டிருந்த விதத்துக்கும் இடையில் சில மோசமான ஒற்றுமைகள் இருக்கிறது. இந்த இரண்டிலுமே, மருத்துவ ரீதியில் தேவைப்பட்ட காலத்தையும் தாண்டி பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஒரு பாதுகாப்பு ஏற்பாடாகவோ, அல்லது விபரம் வெளிவருவதைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவோ இது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களை மற்றவர்கள் தொடர்புகொள்ளவே முடியாத நிலை இருந்துள்ளது. ஆனால் மருத்துவமனையில் இருந்தபடியே பொலிஸ் முன்னிலையில் அவர்கள் ஊடகங்களில் வீடியோ வாக்குமூலம் வழங்க நிர்பந்திக்கப்பட்டுள்ளார்கள். இரண்டு சம்பவங்களிலுமே அவர்களுடைய அடையாளத்தை மறைக்க பேட்டி கண்டவர் எவ்வித முயற்சியும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பராமரிப்பு

இலங்கையில் சாட்சிகள் பராமரிப்பு செயல்திட்டங்கள் கிடையாது. தங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களிலிருந்து சாட்சிகளுக்கு பலன் தருகின்ற பாதுகாப்பு இல்லை என்பது அங்கே மனித உரிமை மீறல் வழக்குகளில் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிற்கவைப்பதில் ஒரு மோசமான தடையாக இருந்துவருகிறது. சாட்சிகளையும் தகவல் தர விரும்புபவர்களையும் இந்த அச்சுறுத்தல்கள் வாய் திறக்க விடாமல் செய்துவிடுவதால், விசாரணை ஆணையத்தின் பணியும் பாதிக்கப்பட்டுள்ளது.[65] அச்சமான சூழ்நிலை என்பது விசாரணை ஆணையாளர்களைக் கூட விட்டுவைக்கவில்லை என்று முன்னாள் ஆணையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக முன்மொழியப்பட்ட ஒரு சாதாரண ஆரம்பநிலைக் கட்டமைப்புக்கான சட்ட மசோதாவே ஜூன் 2006 முதல் அமலுக்கு வராமல் தடைபட்டுள்ளது. சாட்சிகள் பராமரிப்பு தொடர்பில் பலனளிக்கக்கூடிய கட்டமைப்பு ஒன்றுக்கான அவசியம் நாட்டில் இருக்கிறது அதற்கான வரவேற்பு இருக்கிறது என்றாலும் முன்மொழியப்பட்ட சட்ட மசோதாவிலும், அது வரையப்பட்ட

[64]The Choice between Anarchy and International Law with Monitoring, UTHR(J) விசேட அறிக்கை எண் 23, 7 நவம்பர் 2006

[65]IIGEPயினரின் பொது அறிக்கை, 15 ஏப்ரல் 2008, www.iigep.org/prelease/estatement8.pdf

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

நடைமுறையிலும் பெரிய அளவிலான ஓட்டைகள் இருப்பதை இலங்கையின் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். சுயாதீனமான பாதுகாப்பு ஏற்பாடு என்று ஒன்று இதில் இல்லை என்பதும் (பாதுகாப்பு தொடர்பில் இலங்கையின் பொலிஸாரையே இத்திட்டம் சார்ந்திருந்தது), சாட்சிகள் பராமரிப்பு தொடர்பில் வெளிநாட்டினரின் உதவி பெறுவதில் தடை இருந்தும், சாட்சி ஒருவர் வாக்குமூலம் வழங்கும்போது அரசாங்க அதிகாரி ஒருவர் கட்டாயம் உடனிருக்க வேண்டும் என்று நிபந்தனை இருப்பதும் அந்த ஓட்டைகளிலே மிக மோசமானவை என்று சொல்லலாம்.

ரகசியமாக வைக்கப்பட்டுள்ள நபர்கள் குறித்த விபரங்களை அதிகாரிகள் கசியவிட்டால் அது கிரிமினல் குற்றம் ஆகும் என்ற நிலையை மாற்றி, 'நல்லெண்ணத்திலோ' அல்லது உத்தரவுக்கமையவோ [பிரிவு 7(5) மற்றும் 7(8)] அப்படிச் செய்தால் அது குற்றமாகாது என்று இந்த மசோதாவில் விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. மேலும் தேச நலனைக் கருதி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்டு எவ்வித சட்ட நடவடிக்கையையும் இடைநிற்த்தும் அதிகாரத்தை இம்மசோதா சட்டமா அதிபருக்கு வழங்கியிருந்தது. [பிரிவு 10(1)]. குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான தேசிய அதிகார சபை ஏற்படுத்தப்படும் என்று இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டிருந்தது (அதிகாரிகள் பெரும்பான்மையாக இருப்பர் என்பது போன்ற அமைப்பு இது) [பிரிவு 12(1)]. மேலும் எந்த இடத்தில் ஒருவர் வாக்குமூலம் வழங்கினாலும் அங்கு ஒரு அதிகாரி கட்டாயம் உடனிருக்க வேண்டும் என்று இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது [பிரிவுகள் 29(A) மற்றும் 29(B)].[66]

கூடுதலாக, சாட்சிகள் பராமரிப்பு தொடர்பில் சட்டம் இயற்றவது என்பதில் இப்படி மீண்டும் மீண்டும் தாமதங்கள் ஏற்படுவது அவ்விஷயத்தில் பலன் தரக்கூடிய முன்னேற்றம் கொண்டுவரவேண்டும் என்ற உறுதிப்பாடு அரசியல்வாதிகளிடம் இல்லை என்பதை குறிப்புணர்த்துகிறது.

நிறுவப்பெற்ற ஒரு சாட்சிகள் பராமரிப்பு கட்டமைப்பு இல்லாத நிலையில், விசாரணை ஆணையம் தனக்காகவென பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவு (VWAP) ஒன்றை 2007ல் உருவாக்கிக்கொண்டது. இலங்கை துணை பொலிஸ் மா அதிபரான (DIG) தங்கவேலு அப்பிரிவுக்கு தலைமை ஏற்றிருந்தார் . VWAP அமைப்பதற்கான ஒப்புதல் பிப்ரவரி 2007ல் கிடைக்கப்பெற்றிருந்தது. 8 மே 2007 அன்று அப்பிரிவை ஏற்படுத்துகிற செயல்திட்டத்தை விசாரணை ஆணையம் கையேற்றிருந்தது. 19

[66] பார்க்க, Objections to the Assistance and Protection to Victims of Crime and Witnesses Bill, சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளை, 17 ஜூன் 2008.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஜூன் 2007 அன்றுதான் DIG தங்கவேலு அதில் உத்தியோகரீதியாக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த நியமனத்தைத் தொடர்ந்து, ஒரு பகுதி நேர துணைத் தலைவர், மூன்று பகுதி நேர ஆலோசகர்கள் மற்றும் 13 முழுநேர ஊழியர்கள் VWAP பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தனர்.[67] இருந்தபோதிலும் இந்தப் பிரிவுக்கு ஆட்பலமோ வசதிகளோ போதாது, சுயமாக செயல்படுவதற்கான அதிகாரங்களும், தமது பணியைச் செய்வதற்குத் தேவையான பயிற்சி மற்றும் கண்காணிப்பு வசதிகளும் இதற்குப் போதாது **. VWAP** பிரிவு எப்போதாவதுதான் செயல்படும், அதுவும் மிகவும் தற்காலிகமான முறையிலேயே அதன செயற்பாடு அமைந்திருக்கும் என்று முன்னாள் ஆணையாளர்களும் **, IIGEP** கண்காணிப்பாளர்களும் விசாரணை ஆணையத்தின் நடவடிக்கைகள் பற்றி நன்கு அறிந்துள்ளவர்கள் பிறரும் குறிப்பிடுகின்றனர்.[68] விசாரணை ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவரான தேவநேசன் நேசையா இது பற்றிக் குறிப்பிடுகையில், இலங்கையில் தங்கியுள்ள சாட்சிகளுக்கு விசாரணை ஆணையம் வழங்கியிருக்கக்கூடிய பராமரிப்பு என்பதன் அளவும் சரி பராமரிப்பு கிடைக்கக்கூடிய நேரம் என்பதும் சரி மிகவும் குறைவானது என்றே சொல்லவேண்டும்." என்றார்.[69]

சாட்சிகளுக்கு எதிராகவும் , VWAP பிரிவின் உறுப்பினர்களுக்கு எதிராகவுமேகூட மோசமான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. ஆனால் அச்சுறுத்தல் இருந்ததாக வெளிப்படையாக ஒப்புக்கொள்ள VWAP உறுப்பினர்கள் மறுத்துவந்துள்ளனர்.

விசாரணை ஆணையம் விசாரிக்க வேண்டிய சமபவங்கள் அனைத்துமே பெரிய அளவில் உணர்வலைகளை ஏற்படுத்தக்கூடிய வழக்குகள்தான். கொலைகள் மரணதண்டனை நிறைவேற்றும் பாணியில் நடந்துள்ளன என்பதே, அவை அந்த நோக்கத்துக்காகத்தான் செய்யப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது. தவிர அவை முன்பே திட்டமிடப்பட்டிருக்கவும் வாய்ப்புள்ளது. தவிர இக்கொலைகளில் அரசாங்கத்தின் அதியுயர்மட்டத்தில் உள்ளவர்களின் சம்பந்தம் இருக்கிறது என்ற குற்றச்சாட்டுகளும் இருக்கின்றன. சாட்சிகள் பாதுகாப்பு தொடர்பில் செயல்படக்கூடிய எவ்விதத் திட்டமும் இல்லாமலேயே ஏ.சி.எ.ப். சம்பவத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்பதால் "படுகொலை சம்பவம் பற்றி நிறைய பேரிடம் தகவல்கள் இருந்தும் அவர்களெல்லாம் அது பற்றிப் பேச அஞ்சியதில் ஆச்சரியமில்லை" என மூத்த சட்டத்தரணி ஒருவர் சர்வதேச பொதுமன்னிப்பு சபையிடம் தெரிவித்துள்ளார். ஏ.சி.எ.ப். படுகொலையின்

[67]பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு பிரிவு ஏற்படுத்தப்படுதற்கான ஆணை, அதனுடைய கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு விதிகள். நிறைவேற்றப்பட்ட நாள் 27 பிப்ரவரி 2007.

[68]இரகசிய தொடர்பாடல்கள்

[69]தேவநெசன் நேசையாவின் பதவி விலகல் கடிதம்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

சாட்சிகள் மூன்று பேர் ஏற்கனவே கொல்லப்படுவிட்டனர் என்றும் நான்காவதாக சாட்சி ஒருவரைக் காணவில்லை என்றும் UTHR(J) தெரிவிக்கிறது.[70] கொல்லப்பட்ட ஏ.சி.எஃப். ஊழியர்களது குடும்பத்தினர் பலர் உயிருக்கு அஞ்சி நாட்டை விட்டு வெளியேற நேர்ந்துள்ளது. விசாரணை ஆணையத்தில் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் சாட்சிகள் பாதுகாப்பு கோரியிருந்த சம்பவங்கள் இருக்கின்றன. ஆனால் எவ்வித பாதுகாப்பு ஏற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை.[71]

ஏ.சி.எஃப். சம்பவம் பற்றிய பொதுமக்கள் முன்னிலையிலான விசாரணையில் 25 மார்ச் 2008 அன்று ஆஜராகியிருந்த சாட்சி ஒருவர் அங்கு இவ்வாறு கூறியிருந்தார்:

> *சில விஷயங்களைச் சொல்லி அதை மட்டுமே நான் வாக்குமூலத்தில் தெரிவிக்க வேண்டும் என்று கோரி எனக்கு கடிதங்கள் வருகின்றன. வாக்குமூலம் தருகையில் சில விஷயங்களை நான் வெளியில் சொன்னால் என் குடும்பத்தையே பூண்டோடு அழித்துவிடுவதாக மிரட்டும் வகையிலான கடிதங்களும் எனக்கு வந்துள்ளன. எனக்கு இந்த மாதிரியான மிரட்டல்கள் வந்துகொண்டு இருந்தாலும், மூத்த பொலிஸ் அதிகாரிகள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. நான் மிரட்டல்கள் பற்றி அவர்களிடம் ஒன்றுமே சொல்லியிருக்கவில்லை என்று அவர்கள் கூறிவந்தனர். அவர்கள் திரும்பவும் என்னிடம் மிரட்டல்கள் பற்றி கேளுங்கள் என்று அவர்களிடம் கூற எனக்கு விருப்பம்.*[72]

மூதூரிலே சாட்சிகளாக அமையக்கூடிய மற்ற நபர்களுடைய பெயர்களைக் குறிப்பிட அவர் மறுத்துவிட்டார்.

> *இப்போதுகூட நான் இங்கே வந்திருக்கிறதாலே நான் இலங்கையிலே தொடர்ந்து வாழ்வதில் பிரச்சினைகளை நான் எதிர்கொள்கிறேன். நான் பெயர்களை தெரிவித்தேன் என்றால் எனது குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் எனது சந்ததியினரும்கூட மூதூரில் வாழ வழியில்லாது போய்விடும்.*[73]

---

[70] "Report blames forces in Sri Lanka aid massacre", ராய்டர்ஸ் செய்தி 1 ஏப்ரல் 2008, http://uk.reuters.com/article/worldNews/idUKL3170510720080401?pageNumber=2&virtualBrandChannel=0.

[71] தடயங்கள் கிடைக்கப்பெற்றதை அடுத்து ஏ.சி.எஃப். படுகொலை சம்பவத்தின் முகிய சாட்சி ஒருவர் மீது அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் முறைப்படி புகார் தெரிவித்துள்ளார். பார்க்க , 'WITNESS "THREATENED" BY OFFICIALS', பிபிசி சிங்கள சேவை இணையதளம், 5 மே 2008, WWW.BBC.CO.UK/SINHALA/NEWS/STORY/2008/05/080505_MUTTUR_WITNESS.SHTML

[72] 'ACF case: witness under threat', Daily Mirror செய்தி, 26 மார்ச் 2008.

[73] இதே கட்டுரையில் மேலும் விபரங்கள் உள்ளன.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஏப்ரல் மாதம் அந்த சாட்சி விசாரணை ஆணையத்தில் வாக்குமூலம் வழங்க வேண்டியதற்கு முதல் நாள் அவருக்கு மீண்டும் ஒரு கொலை மிரட்டல் வரவே அவர் தனக்கு "கூடுதலான பாதுகாப்பு" வேண்டும் என்று கோரியிருந்தார்.[74]

விசாரணை ஆணையத்தின் முன்பு சாட்சியம் வழங்க அழைக்கப்பட்டிருந்த இன்னொரு சாட்சியிடம், முழு விபரத்தையும் வாக்குமூலத்தில் தெரிவிக்கக் கூடாது என விசாரணை ஆணைய அலுவலகத்தில் வைத்தே பொலிஸார் தெரிவித்தாகவும் மிரட்டியதாகவும் கூறப்படுகிறது. விசாரணை ஆணைய நடவடிக்கைகள் நடந்த அதே வளாகத்திலேயே சாட்சிகள் சந்தித்திருந்த மிரட்டல்கள் குறித்து விசாரணை ஆணைய நடவடிக்கைகளைப் பார்வையிட அனுமதிக்கபட்டிருந்த சிவில் சமூக அமைப்புகள் ஆணையத்தின் தலைமைக்கு எழுதிய விலகல் கடிதத்தில் குறிப்பிடுகையில்:

> *இது மாதிரியான மிரட்டல்களிலேயே மிகுந்த கவலையை ஏற்படுத்திய மோசமான சம்பவம் என்று ஆணையம் விசாரித்த இரண்டாவது வழக்கில் [ஏ.சி.எஃப். சம்பவம்] குறிப்பிட்ட சாட்சி ஆணையத்தில் ஆஜராகும்போது இரண்டு தடவை மிரட்டப்பட்டிருந்ததைச் சொல்லலாம். முதலிலே, அவருடைய அனுமதியோ அவருக்காக இலங்கை இராணுவம் நியமித்திருந்த சட்டத்தரணியின் ஒப்புதலோ இல்லாமல் அவர் கையகத் தொலைபேசிகளைக் கொண்டு புகைப்படம் எடுக்கப்பட்டிருந்தார். இரண்டாவது சம்பவம் என்பது ஆணையத்தில் தேனீர் இடைவேளையின்போது அவருக்கு அடையாளம் தெரியாத இரண்டு பேர் வந்து அவரை மிரட்டியிருந்தனர் என்பது. விசாரணை ஆணையம் முன்பு அவர் வழங்கிவருகின்ற வாக்குமூலம் தொடர்பில் அவர்கள் ஆக்ரோஷமாக கேள்விகள் கேட்டிருந்ததாக அந்த சாட்சி பின்னர் தெரிவித்தார். இந்த சம்பவம் தொடர்பிலே அதிர்ச்சியூட்டும் இன்னொரு விஷயம், அந்த நபர்கள் சாட்சியை மிரட்டியபோது, சாட்சிகள் பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் அந்த இடத்தில் இருந்தும், சாட்சியைப் பாதுகாக்கும் முகமாக அவர்கள் தலையிடவே இல்லை என்று பின்னர் ஆணையர்கள் விசாரித்தபோது தெரியவந்தது என்பதாகும். கடைசியில் மிரட்டிய அந்த நபர்கள் ஆணையத்துடைய விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் ஆவர்; அப்பிரிவின் கண்காணிப்பாளருக்குத் தெரியாமல் இவர்கள் அப்படி நடந்துகொண்டிருந்தனர்.* [75]

---

[74] "ACF inquiry: Witness threatened the night before he testified",, Daily Mirror செய்தி 25 ஏப்ரல் 2008

[75] சிவில் சமூக அமைப்புகள் விசாரணை ஆணைய நடவடிக்கைகளுக்கு எழுதிய கடிதத்தில், மோசமான மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் படி வேண்டியிருந்தனர், நிலுவையில் உள்ள வழக்கு எண் 2 தொடர்பாக விசாரணை ஆணைய செயற்பாடுகளிலிருந்து சிவில்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஆபத்தில் இருக்கும் சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் நடைமுறை தொடர்பில் விசாரணை ஆணையத்தில் இருந்த மோசமான பிரச்சினைகளை இப்படியான சமபவங்கள் சுட்டிக்காட்டுகின்றன (தேனீர் இடைவேளையின்போது வழக்கறிஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிறர் சாட்சிகளுடன் பேச இடமிருந்துள்ளது என்பதை பிரச்சினையின் ஒரு உதாரணமாகச் சொல்லலாம்.) இவ்வகையான சம்பவங்களும் தெரியவரும் பிற பிரச்சினைகளும் சாட்சிகள் விசாரணை ஆணையத்தின் முன்பு வெளிப்படையாகவும் அச்சமின்றியும் வாக்குமூலம் வழங்குவதற்கு முட்டுக்கட்டைகளாய் இருந்துள்ளன.

சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவினர், 11 ஜூன் 2007 அன்று, முதல் தடவையாக வழங்கிய அறிக்கையிலேயேகூட பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்.:

> *இலங்கை சட்டத்திலே குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்க போதுமான விடயங்கள் இல்லை என்பது எங்களுக்கு கவலையளிக்கிறது. விசாரணை ஆணையம் முன்புள்ள மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரிப்பதற்கு சாட்சிகள் பாதுகாப்பு என்ற விஷயம் இன்றியமையாத தேவை என்று நாங்கள் கருதுகிறோம். பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாக்கும் நோக்கில் சர்வதேச விதிகளுக்கும் தர அளவுகோள்களுக்கும் ஏற்ப கூடிய விரைவில் சட்டங்கள் இயற்றப்படவும் நடைமுறை படுத்தப்படவும் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாக்கும் வழிமுறை எதனையும் விசாரணை ஆணையம் இதுவரை பெற்றிருக்கவில்லை என்பது குறித்து நாங்கள் வருந்துகிறோம். பொருத்தமான சட்டமோ, பலனளிக்கக்கூடிய திட்டமோ, செயல்படக்கூடிய பாதுகாப்பு பிரிவோ இல்லாத நிலையில், பொதுமக்களை சாட்சி சொல்ல வாருங்கள் என்று அழைக்க விசாரணை ஆணையத்தால் எப்படி அழைக்க முடிந்தது என்பதை எங்களால் விளக்கிக்கொள்ளவே முடியவில்லை.*[76]

தங்களுடைய அடுத்தடுத்த அறிக்கைகளிலும் முடிவான அறிக்கையிலும்கூட இதே போன்ற கவலைகளை IIGEPயினர் வெளியிட்டிருந்தனர்.[77]

நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் IIGEPயினர், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் பராமரிப்பு □□□□□□□□ விசாரணை ஆணைய□□ □□□□□□□□□□□□□□□□□

ச்மூக அமைப்புகள் விலகிக்கொள்ளுதல் தொடர்பான கடித்தம் இது, 6 நவம்பர் 2008 தேதியிட்டது.

[76] சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவின் பொது அறிக்கை, 11 ஜூன் 2007, www.iigep.org/prelease/estatement.pdf pp1-2.

[77] சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவின் பொது அறிக்கை, 15 ஏப்ரல் 2008, www.iigep.org/prelease/estatement8.pdf pp8-10.

பற்றி பின்வருமாறு கருத்துவெளியிட்டிருந்தது:

> *.....அந்தப் பிரிவுக்கு சட்டபூர்வமான அடிப்படை எதுவும் கிடையாது. முழுமையான பயிற்சிகள் பெற்ற ஊழியர்கள் அதற்குக் கிடயாது விசாரணை ஆணையத்தில் தோன்றியமைக்காக பழிவாங்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு தேவைப்படுகிறவர்களுக்கு போதுமான அளவில் உதவுவதற்கு ஏற்ற நிதி அதற்கு கிடையாது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரை அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதை விசாரணை ஆணையம் உறுதிசெய்திருக்கவில்லை. அவர்களுக்கு சட்டத்தரணி மூலம் சட்ட ஆலோசனை வழங்கப்படுகிறதா என்பதையும் ஆணையம் உறுதிசெய்திருக்கவில்லை. மேலும், விசாரணை ஆணையம் செயல்படுகின்ற காலம் கடந்த பிறகு சிறிய அளவிலேகூட சாட்சிகளுக்கு பாதுகாப்பு நீட்டிக்கப்படுவதற்கான ஏற்பாடு எதுவும் இருக்கவில்லை. இப்படிப்பட்ட சூழலில். பாதிக்கப்பட்டோரும், சாட்சிகளும் சாட்சியம் வழங்க முன்வரவில்லை என்பதில் ஆச்சரியம் இருக்க முடியாது. முக்கியமான சாட்சிகள் பலர் உயிருக்கு அஞ்சி வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டுள்ளனர். அதேபோல, அரசாங்கத் தரப்பின் பிழைகள் பற்றி விபரம் வெளியிடவும், அதிகாரிகள் முறைகேடாக நடந்துகொண்டது பற்றி சாட்சியம் வழங்கவும் விரும்புகிற அரசு ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு எவ்வித திட்டமோ ஏற்பாடோ இருக்கவில்லை.*[78]

சாட்சிகளுக்கு ஆபத்தை உண்டாக்கக்கூடிய மற்றும் சாட்சியங்களை பாதிக்கக்கூடிய வகையிலும் விசாரணை ஆணையம் செயல்படுள்ளது. அவற்றில் பின்வருவன அடங்கும்:

- பொதுமக்கள் சாட்சியம் வழங்க முன்வாருங்கள் என்று விசாரணை ஆணையம் அழைப்பு விடுத்ததன் காரணமாக (VWAP பிரிவு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாகவேகூட) சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய திறன் ஆணையத்துக்கு இருக்கிறது என்று மக்கள் நம்புவதற்கு ஆணையத்தின் செயற்பாடு இடமளித்துள்ளது. தனது வல்லமை குறித்து சாட்சிகளிடமும் பொதுமக்களிடமும் அது போலியான பிரமையை ஏற்படுத்தியிருந்தது;[79]
- ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து போதிய அளவில் மதிப்பீடு செய்ய தவறியது;

[78] சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவின் பொது அறிக்கை: "The Members Of The IIGEP submit their concluding public statement on the work of the Commission of Inquiry and find a lack of political will to support a search for the truth ・, 15 ஏப்ரல் 2008, p2, www.iigep.org/prelease/estatement8.pdf

[79] "Inviting Representations: Notice to the Public, Presidential Commission of Inquiry to investigate and inquire into serious violations of human rights ・, www.pchrv.gov.lk/news/Inviting.html

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

- ஆணையத்தின் விசாரணையாளராக சி.ஐ.டி. பொலிஸ் அதிகாரி ஒருவரை பணியமர்த்தியது. விசரணை ஆணையம் விசாரிக்கவேண்டிய ஒரு தரப்பாக சி.ஐ.டி. பொலிஸார் இருக்கின்றனர். சாட்சிகளை மிரட்டியதாக அவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது என்று தெரிந்தும் அதைச் செய்தது;
- அரச படையினர் மீது குற்றம்சுமத்தப்படும் ஒரு சம்பவத்தை விசாரிக்கையில், ஜனாதிபதி செயலக ஊழியர் ஒருவர் (SCOPP சட்ட விவகாரங்கள் இயக்குநர்) அச்சம்பவத்தின் சாட்சி ஒருவரை சந்திக்க இடமளித்தது.(விபரங்களுக்கு மேலே பார்க்கவும்);
- ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள சாட்சிகளிடம் கடுமையாக கேள்விகேட்கப்படுவதால், அவர்கள் மீண்டும் மீண்டும் மன உளைச்சலுக்கு ஆளாவதையும், அச்சுறுத்தலுக்கு ஆளாவதையும் தடுக்கும் பொருட்டு அவ்விஷயத்தில் தலையிடத் தவறியது.

விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளை அவதானிக்க அனுமதி கேட்டு சிவில் சமூக அமைப்புகள் விண்ணப்பித்ததே சாட்சிகள் பாதுகாப்பு காரணமாகத்தான். இலங்கை இராணுவத்தினராலும், விசேட அதிரடி பொலிஸ் படையினராலும் நியமிக்கப்பட்டுள்ள தனியார் சட்டத்தரணிகளால் "சாட்சிகள் மோசமாகவும், அநியாயமாகவும் துன்பத்துக்கு ஆளாக்கப்பட்டதை" அவதானித்த பிறகே தாங்கள் விண்ணப்பம் செய்ததாக பின்னர் ஒரு கட்டத்தில் சிவில் சமூக அமைப்புகள் தெரிவித்திருந்தனர். விசாரணை ஆணையம் 2008 ஆரம்பத்திலிருந்து பொதுமக்கள் முன்னிலையில் விசாரணை நடத்தும் பாங்குக்கு மாறியதும். ஆபத்தை எதிர்கொள்ளும் சாட்சிகள் வெளிநாட்டில் இருந்தபடியே வீடியோ தொடர்பாடல் மூலம் சாட்சியம் வழங்கும் முறையை ஆணையம் பயன்படுத்தியது என்பதும் சிவில் சமூக அமைப்புகள் விண்ணப்பம் செய்வதற்கு ஊக்கமளித்திருந்தது.

இராணுவம் சார்பாக ஆஜரான சட்டத்தரணி கோமின் தயாசிறியும் விசேட அதிரடிப் படையின் சட்டத்தரணியான எஸ்.எல்.குணசேகரவும், சாட்சிகள் அழுத்தத்துக்கு உள்ளாவது வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கே தெரியும் என்கிற மாதிரி அவர்களிடம் கடுமையாக கேள்விகள் கேட்டு வதைத்திருந்தனர் என்று நோக்கர்கள் பலர் குறிப்பிட்டிருந்தனர். விசாரணை ஆணையம் ஒரு நீதிமன்றம் அல்ல என்ற நிலையில் அங்கு இவ்வகையாகக் கேள்வி கேட்பது என்பது முறையல்ல. ஆதாரமாக அமையக்கூடிய விஷயங்களை சாட்சிகள் சொல்லவருவதை அது தடுத்துவிடும். டெய்லி மிர்ரர் பத்திரிகையில் பத்திரிகையாளர் பூர்ணிமா வீரசேகர எழுதிய ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது பி.யோகராஜா [திருகோணமலையில் கொல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரது தந்தை] மிகவும் அழுத்தத்துக்குள்ளாகியிருந்தார் என்பது அவர் தலை குணிந்தபடி நின்றிருந்ததிலேயே விளங்கியது. தனது நம்பகத்தன்மையைக் குலைப்பதற்காக அதிரடிப்படையின் சட்டத்தரணி தன் மீது சரமாரியாக கேள்விக் கணைகளைத் தொடுத்தன் காரணமாக தான் அடைந்த எரிச்சலுக்கும் விரக்திக்கும் வடிகால் தேடும் விதமாக அவர் தாளை மடித்து காற்றாடி செய்துகொண்டே பேசினார். தான் இரண்டாம் வகுப்பு வரைதான் படித்துள்ளேன் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருந்த ஒரு சாட்சியிடம், திருகோணமலையில் புத்த மத சிலை நிறுவப்பட்டது தொடர்பிலான குறிப்பிட்ட சில நீதிமன்ற உத்தரவுகள் பற்றி சட்டத்தரணி நிறைய கேள்விகள் கேட்டு, அந்த சாட்சியை சங்கடத்தில் ஆழ்த்தியிருந்தார்.[80]

இறுதியாக , IIGEP குழுவின் சட்ட விவகார ஆலோசகர் டி. அர்பன், இவ்விவகாரத்தில் தலையிட்டிருந்தார்:

சாட்சி ஒருவர் சொல்வது உண்மைதானா என்பதை உறுதிசெய்ய அவரிடம் கடுமையாக கேள்விகள் கேட்க சட்டத்தரணிக்கு இடமிருக்கிறது என்றாலும், அப்படிக் கேள்வி கேட்கும்போது அதிலே நியாயம் இருக்க வேண்டும். அவ்வகையில் கேள்விகள் கேட்பதற்கு காரணம் இருக்க வேண்டும். தான் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லாத ஒரு காரியத்தை பொதுநலன் கருதி செய்ய அவர் முன்வந்திருக்கிறார். ஆதலால் அவர் மரியாதையுடன் நடத்தப்படவும், நியாயமாகவும் நடத்தப்பட வேண்டும். இரண்டு பிள்ளைகளை பறிகொடுத்துவிட்டு நிற்கும் அவர் கனிவாக நடத்தபட வேண்டும். இலங்கை அரசாங்கத்துக்கு விளம்பரம் தேடித் தருவதல்ல இந்த விசாரணையின் நோக்கம் மேலும், திருகோணமலை நகர மையத்தில் புத்தமதச் சிலை சட்டப்படி நிறுவப்பட்டதாக ஒழுங்காக நிறுவப்பட்டதா என்பதெல்லாம் ஆணையத்தின் விசாரணைக்கு நேரடியாக தொடர்புடைய விஷயங்கள் அல்ல. இருந்தும் விசேட அதிரடிப் படையின் சட்டத்தரணி யோகராஜாவின் நம்பகத்தன்மையை பரிசோதிப்பதற்கு சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்டு அவரை சங்கடப்படுத்தியுள்ளார்.[81]

விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளை அவதானித்து வந்த அமெரிக்க

[80] "Crying For Justice", பூர்ணிமா வீரசேகர எழுதியது, Daily Mirror, 22 மார்ச் 2008,

[81] இதே கட்டுரையில் கூடுதல் விபரங்கள் உள்ளன

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

வழக்கறிஞர் ஒருவர், அச்சுறுத்தல் நிலவும் சூழல் அங்கு காணப்பட்டது தொடர்பில் மே 2008ல் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

> *அரசாங்கத்துடைய பாதுகாப்புப் படையினர் (SLA) குற்றம்புரிந்தவர்கள் என்று கூறிய வாக்குமூலங்களை வழங்கியிருந்த சாட்சிகளிடம் இராணுவத்தினரது சட்டத்தரணியும் விசேட அதிரடிப்படையின் (STF) சட்டத்தரணியும் வெளிப்படையாகவே காட்டிவந்த கடுமை, சிவில் சமூக குழுக்கள் அவதானிக்கத் தொடங்கியதிலிருந்து மட்டுப்பட்டிருந்தது. ஆனால் மிரட்டுகிற யுத்திகள் ஏதோவகையில் நீடித்துக்கொண்டே இருந்தன. சாட்சிகளைப் பற்றிய எல்லா விடயங்களும் தங்களுக்குத் தெரியும் என்பதை காட்டிக்கொள்ளும் விதமாகவே அரச சட்டத்தரணிகள் அவர்களிடம் கேள்வி கேட்க ஆரம்பித்தது அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சாட்சி தொழில் செய்கிறார், அவருடைய வீட்டு முகவரி , குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியவற்றை சாட்சி உறுதிப்படுத்தும் விதமாக கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. ஒரு தடவை சட்டத்தரணியானவர் பெரியதொரு நாடகமே நடத்திக்காட்டினார். சாட்சியின் முன்னிலையில், இராணுவ உளவுப் பிரிவின் சீருடையணிந்த அதிகாரி ஒருவர் ஒரு பிளாஸ்டிக் உரையில் போட்டு சீல்வைக்கப்பட்ட ஒரு வீடியோ கஸெட்டை சட்டத்தரணியின் மேஜையில் வைத்திருந்தார். பின்னர் சட்டத்தரணி அந்தக் கஸெட்டை கையில் எடுத்து சாட்சியிடம் காட்டுவதுபோல அசைத்துக்கொண்டு, விசாரணைக்குரிய சம்பவம் பற்றிய கண்காணிப்பு கேமரா படங்கள் இதில் உள்ளன. சாட்சியும் இந்த வீடியோவில் பதிவாகியிருக்கலாம். ஆதலால் சாட்சி கவனமாக வாக்குமூலம் வழங்க வேண்டும் என்று பொதுப்படையாக கூறியிருந்தார்.*
>
> *இது ஒரு மறைமுக மிரட்டல் என்று சிவில் சமூக அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணிகள் கேள்வியெழுப்பியிருந்தனர். தவிர விசாரணை ஆணையம் பார்வையைத் தாண்டி வீட்டிலே இருக்கும்போது சாட்சிகளும் குடும்பத்தினரும் தமது அன்றாட வாழ்வில் எப்படிப்பட்ட ஆபத்துகளை எதிர்கொள்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக இந்த சம்பவம் அமைந்துள்ளது. சாட்சியங்களை அடையாளம் காட்டும் தகவல்களை வெளியிட வேண்டாம் என்று ஊடகங்களிடம் கேட்டுக்கொள்வதைத் தவிர சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் வேறு எந்த வல்லமையும் விசாரணை ஆணையத்துக்கு இருக்கவில்லை என்பது துரதிருஷ்டமாகும். ஆகவே நீதியை பலிகடாவாக்குவதாக அல்லது தமது உயிரைப் பலிகடாவாக்குவதா என்ற பயங்கர இக்கட்டான நிலைக்குள் ஆபத்தை எதிர்கொள்ளும் சாட்சிகள்*

தள்ளப்படுகிறார்கள்.[82]

- சாட்சிகளை மனிதாபிமானத்துடனும், மரியாதையுடனும் நடத்தத் தவறியிருந்தது.

விசாரணை ஆணையத்திலே தேனீர் இடைவேளையின்போது ஆணையாளர்கள் ஒரு தனி அறைக்குச் சென்றுவிட சாட்சிக் கூண்டிலேயே நின்று சாட்சி ஒருவர் அழுதுகொண்டிருந்த காட்சிகளை பொதுமக்கள் முன்னிலையில் நடந்த விசாரணைகளின்போது கண்டிருந்த நோக்கர்கள் வருணித்துள்ளனர்.

- சாட்சிகளுடைய வாக்குமூலங்கள் சரியாக மொழிமாற்றம் செய்யபடுவதை உறுதிசெய்யத் தவறியது.

துல்லியமில்லாமலும் முக்கிய விபரங்கள் விடுபடும் வகையிலும் எழுத்துமூல மொழிமாற்றங்களும் வாய்வழி மொழிமாற்றங்களும் செய்யப்பட்டிருந்தபடியால் பொதுமக்கள் முன்னிலையில் நடந்த விசாரணைகளில் தடங்கல்கள் ஏற்பட்டிருந்தன. சில சந்தர்ப்பங்களில் விசாரணை ஆணையாளர்களே சாட்சிகளுடைய வாக்குமூலத்தை மீண்டும் மொழிபெயர்க்க வேண்டிவந்தது.[83]

- சுயாதீன ஆணைக்குழு நடத்துகிற விசாரணைக்கும் அரசாங்கத் தரப்பில் செய்யப்படும் விசாரணைக்கும் இடையிலான வேறுபாடுகளை மழுங்கச் செய்கிற மாதிரி இரண்டு நோக்கத்துக்காக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது அனுமதிக்கப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்டவர்களும், சாட்சியாக அமையக்கூடிய வேறு நபர்களும்

---

[82] Witness Intimidation, ஆடம் நோர்ட் எழுதியது, www.advocacynet.org/blogs/index.php/2008/05/04/witness_intimidation?blog=104

[83] "மொழிபெயர்ப்பின்போது முக்கிய விபரங்கள் விடுபட்டுப்போனதா? மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட சிரமங்களும் பிரச்சினைகளும்கூட விசாரணையில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. "சில விஷயங்களை அர்த்தப்படுத்திய விதம் துல்லியமானதாக இல்லை. சொல்லப்போனால் ஆங்கிலத்தில் உள்ள மொழிபெயர்ப்புக்கு அப்படியே நேர் எதிரான விஷயமாக இவை அமைந்திருந்தன' என்றுகூட IIGEP சட்ட ஆலோசகர் குறிப்பிட்டுந்தார். "நான் நாட்டை (இலங்கையை) விட்டு வெளியில் வந்திருக்கவில்லை என்றால், என்னால் சாட்சி சொல்ல முடிந்திருக்காது" என்று பி.யோகராஜா தனது வாக்குமூலத்தில் மூன்று இடங்களில் வலியுறுத்தியிருந்த ஓர் வாக்குமூலம் முற்றாகவே மொழிமாற்றம் செய்யப்படாது விடப்பட்டிருந்தது. மொழிபெயர்த்துக் கூறுபவர்களின் தொனி சாட்சிகளை அச்சுறுத்தும் விதமாக இருந்தது என்று தான் கருதியதால் ஆணையர் மனூரி முட்டெட்டுவெகெம மொழிபெயர்ப்பாளர்களைச் சற்று தணிவகாகப் பேசும்படி ஒரு கட்டத்தில் கூறியிருந்தார். நாடாளுமன்றத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாளருமே கூட இங்கே மொழிபெயர்க்கும்போது, தான் மிகவும் கஷ்டப்பட்டுப்போனதாய் உணர்ந்ததாக குறிப்பிட்டிருந்தார். "Crying for Justice!" Daily Mirror கட்டுரை, 22 மார்ச் 2008.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

வாக்குமூலம் வழங்க முன்வருவதற்கு இது தடையாக இருக்கும். சாட்சிகளை இது தவறாக வழிநடத்தவும், சில சாட்சிகளுடைய உரிமைகள் அதிலும் குறிப்பாக வன்முறை மற்றும் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்ற சாட்சிகளுடைய உரிமைகள் மீறப்படுவடுதற்கு இது இடமளிக்கும். ஏதோ ஒரு கட்டத்தில் இவர்களும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வாய்ப்பிருக்கும் நிலையில் நியாயமாக நடத்தபடுவதற்கான அவர்களின் உரிமையும் மீறப்படுவதற்கு இடமளிக்கலாம்.

செப்டம்பர் 2007ல் ஆணையமானது தமது விசாரணைப் பிரிவின் உறுப்பினர்களை (முழு நேர அடிப்படையில் ஆணையத்தில் வேலை பார்த்த பொலிஸ் அதிகாரிகள் இவர்கள்) விட்டு ஆணையத்தின் முன்பு ஏற்கனவே வாக்குமூலம் கொடுத்திருந்த சாட்சிகள் அனைவரிடமும் இரண்டாவது தடவையாகவும், தவிர வாக்குமூலம் வழங்கியிருக்காதவரகளிடமும் (ஆணையாளர் முன்னிலையில் அன்றி) வாக்குமூலங்களை பதிவுசெய்ய ஆரம்பித்தது. இதற்கு இரண்டு நோக்கங்கள் இருந்தன. கூடுதலான அல்லது புதிய தகவல்கள் கிடைக்கிறதா என்று பார்ப்பது ஒன்று, பின்னர் நடக்கக்கூடிய வாய்ப்புள்ள கிரிமினல் சட்ட நடவடிக்கைக்காக தடயங்களைச் சேகரிப்பது (விசாரணை ஆணையம் உருவாகப்பட்டதற்கான நோக்கங்களில் இது இடம்பெறவில்லை) என்பது இரண்டு. விசாரணை ஆணையத்தால் சேகரிக்கப்பட்ட தடயங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனும்போது அந்த பிரச்சினையை நிவர்த்தி செய்யும் ஒரு முயற்சியாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆக ஆணையத்தினுடைய விசாரணைப் பிரிவின் உறுப்பினர்கள் சுயாதீன விசாரணையாளர்களாக நடந்துகொள்ள வேண்டிய அதேநேரம் அரசாங்கத்துக்கு விசுவாசமான பொலிஸ் அதிகாரிகளாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது என்பதுதான் இதன் அடிநாதமான விடயம்.

இந்தக் செயல்திட்டத்தின் நடைமுறையில் மோசமானப் பிரச்சினைகள் இருந்தன. அவற்றுள் முக்கியமான ஒரு பிரச்சினை என்பது விசாரணையாளர்களின் சுயாதீன நிலையை அது மோசமாக பலவீனப்படுத்தியிருந்தது. அதன் விளைவாக சாட்சிகள் அச்சுறுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகரித்திருந்தன. பொலிஸாரும் பிற அரச படையினரும் குற்றம்சாட்டப்படும் வழக்காக இவ்வழக்குகள் பல அமைந்துள்ளன என்பதோடு சாட்சிகள் ஏற்கனவே பலமுறை அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டிருந்தனர்.

> *உண்மையைக் கண்டறியும் நோக்கத்தை விசாரணை ஆணையம் பின்பற்ற வேண்டுமாயின் அது புலன் விசாரணை செய்யும் ஒரு பங்கையும்*

ஆற்றியாக வேண்டும். ஆனால் பொலிஸார் செய்ய வேண்டிய விசாரணைகளை செய்வதற்குப் பொருத்தமான ஏற்பாடுகள் அல்ல இவ்வகையான ஆணையங்கள். மேலும் ஏற்கனவே நடந்த புலன் விசாரணைகளில் அடிப்படையிலேயே பிழைகள் இருந்துள்ள நிலையில், அவை பலன் அளித்திராத நிலையில் அப்படியான விசாரணைகளை ஆணையம் செய்யக்கூடாது. ஆனால் அணையம் இதுநாள் வரையில் அப்படியான ஒரு பணியையே செய்ய முயன்றுள்ளது. அதாவது குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் எதோ பொலிசாருக்கு மாற்றாக நடந்துகொள்ள வேண்டும் என்பதுபோலவே அது செயல்பட்டுள்ளது என்று IIGEP கவலை தெரிவித்திருந்தது. அப்படி புலன் விசாரணை செய்வதற்கான தொழில்திறனோ, நிதி மற்றும் ஆட்பலமோ, 16 சம்பவம் தொடர்பாகவும் விரிவான புலன் விசாரணைகளை நடத்துவதற்கான நேரமோ அதற்குக் கிடையாது.[84]

வீடியோ தொடர்பாடல் மூலம் சாட்சியம் வழங்கும் விவகாரம்

விசாரணை ஆணையம் நடத்திய பொதுமக்கள் முன்னிலையிலான விசாரணைகள் அதிலும் குறிப்பாக ஆபத்துள்ள சாட்சிகள் ஆணையம் வராமல் வீடியோ தொடர்பாடல் மூலம் தொலைவில் இருந்தே வாக்குமூலம் வழங்கலாம் என்பது வெளிப்படைத் தன்மை மேம்படவும், ஊடகங்களும் பொதுமக்களும் ஆணையத்தின் செயற்பாடுகள் மீது ஆர்வம் காட்டவும் வழிவகுத்தது. 2008 ஏப்ரல் மாத நிலவரப்படி திருகோணமலையில் இருபது தடவை பொதுமக்கள் முன்னிலையிலான விசாரணைகளை ஆணையம் நடத்தியிருந்தது. ஐந்து சம்பவங்கள் குறித்தும், உயிராபத்து காரணமாக வெளிநாடு சென்றுவிட்ட சாட்சிகளிடம் இருந்து ஆறு தடவை வீடியோ தொடர்பாடல் மூலம் விசாரணை செய்தது, ஏ.சி.எ.ஃப். படுகொலை தொடர்பில் ஏழு முறை பொதுமக்கள் முன்னிலையில் விசாரணைகளை நடத்தியது போன்றவற்றைச் செய்திருந்தது.

திருகோணமலை சம்பவத்தில் கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான மருத்துவர் மனோகரன், உணர்வுபொங்கவும், தைரியமாகவும் வாக்குமூலம் வழங்கியது தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பட்டதை அடுத்தே விசாரணை ஆணையத்தின் மீது மக்களுக்கு ஆர்வம் அதிகரித்திருந்தது. மேலே விபரிக்கப்பட்டிருந்த திருகோணமலை சம்பவத்தை அடுத்து தமது மற்ற குடும்ப உறுப்பினர்களுடன் மனோகரன் இலங்கையை விட்டு வெளியில் சென்றுவிட்டார். வெளிப்படையாகவே தெரிந்த மனோகரனுக்கு ஏற்பட்டிருந்த உணர்வுரீதியான

[84]IIGEP குழுவினரின் பொது அறிக்கை, 14 ஏப்ரல் 2008, REF: IIGEP-PS-006-2008

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

பாதிப்பு, அவர் தெள்ளத்தெளிவாக முன்வைத்த குற்றச்சாட்டுகள் எல்லாம் இலங்கையில் தொலைக்காட்சி செய்தி நிகழ்ச்சிகளில் இடம்பெற்றிருந்தன. அது இந்த சம்பவங்கள் மீது பொதுமக்களின் கவனத்தை ஈர்த்ததோடு பாதிக்கப்பட்டவர்கள் மீது புதிதான இறக்கம் தோன்றக் காரணமாக இருந்தது.

இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சரான மஹிந்த சமரசிங்க, 2008 மார்ச் 3 அன்று, ஐ.நா.மனித உரிமை சபையின் உயர்மட்ட குழுவினரது கூட்டத்தில் ஒரு அறிக்கை வாசித்திருந்தார். குற்றவாளிகளை சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கின்ற நிலையை இலங்கை அரசாங்கம் ஊக்குவிக்கிறது என்ற குற்றச்சாட்டுகளை அதில் அவர் மறுத்திருந்தார். விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகள், அதிலும் குறிப்பாக வீடியோ தொடர்பாடல் மூலம் சாட்சியம் வழங்குவது என்பதை அவர் நியாயப்படுத்தியிருந்தார்:

> *சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவினருடைய கண்காணிப்பின் கீழ் விசாரணை ஆணையம் நடத்திவரும் தீவிரமான விசாரணைகளும் புலனாய்வு நடவடிக்கைகளும் நல்ல அளவிலே முன்னேற்றம் கண்டுள்ளன. பசி ஒழிப்பு நடவடிக்கை தொண்டு நிறுவனத்தின் 17 இளம் ஊழியர்கள் உயிரிழந்த கண்டிக்கத்தக்க சம்பவம் தொடர்பிலே விசாரணை ஆணையம் பொதுமக்கள் முன்னிலையில் இன்றைய தினம் விசாரணைகளை ஆரம்பிக்கிறது. விசாரணைகள் நிறைவுபெரும் கட்டம் நெருங்கிவருகிறது. விசாரணை ஆணையம் தங்களுடைய செயற்பாடுகளை நிறைவுசெய்தவுடன் நீதியை நிலைநாட்டப்படுகிற ஒரு நல்ல விளைவு உருவாகும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். திருகோணமலையில் ஐந்து இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் முன்னிலையிலான விசாரணைகள் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பமாகியிருந்தன. வெளிநாடுகளில் உள்ள சாட்சிகளிடம் இருந்து வீடியோ தொடர்பாடல் முலம் வாக்குமூலங்களைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிழக்கில் உள்ள பொத்துவில் நகரத்தில் 10 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலும் விசாரணை ஆணையத்தின் முன்புள்ள மற்ற சம்பவங்கள் பற்றியும் விசாரணைகள் நடந்துவருகின்றன. குற்றவாளிகள் தப்பிக்கிறார்கள் என்று குற்றம்சாட்டுபவர்கள் அரச படைகளுக்கு எதிரான உள்நோக்கம் கொண்டவர்கள். ஆகவே அது அவசரப்பட்டு முடிவெடுப்பதாகிவிடும் என்பதையும் அது பிழையானது என்பதையும் தலைவரிடம்*

தெரிவித்துக்கொள்கிறேன்.[85]

ஆனால் இதற்கு பின்னர் இரண்டு மாதங்கள் மட்டுமே கழிந்த நிலையில், விசாரணை ஆணையம் நடத்தும் பொதுமக்கள் முன்னிலையிலான விசாரணைகளில் வீடியோ தொடர்பாடல் மூலம் சாட்சிகள் வாக்குமூலம் அளிப்பது என்பதை ஜனாதிபதி செயலகம் இடைநிறுத்தியிருந்தது. விசாரணை ஆணையத்தின் செயற்பாட்டுக்கு இம்முடிவு ஒரு பெரும் பின்னடைவாக அமைந்துவிட்டது. விசாரணை ஆணையத்தினர் உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிய சிறிது காலத்தில் தேவநேசன் நேசையா பின்வருமாறு கூறியிருந்தார்:

> *வீடியோ தொடர்பாடல் வழக்கம் ஜனாதிபதி செயலக உத்தரவின் பேரில் ரத்துசெய்யப்பட்டது ஒரு பெரும் பின்னடைவாகிவிட்டது. ஏ.சி.எஃப். தொண்டுழியர்கள் கொலை சம்பவத்திலும் திருகோணமலை இளைஞர்கள் படுகொலை சம்பவத்திலும் வேறு சில வழக்குகளிலும்கூட திருப்திதரும் முடிவுகள் வந்திருக்க வாய்ப்பிருந்ட்ய்ஹது. ஆனால் ஜனாதிபதி செயலக உத்தரவின் விளைவாக அந்த வாய்ப்பு ரொம்பவும் குறைந்துவிட்டது.*[86]

நாட்டுக்கு வெளியில் இருந்தபடி வீடியோ இணைப்பு மூலம் சாட்சிகள் வாக்குமூலம் அளிக்கும் வழக்கத்தை இடைநிறுத்திய ஜனாதிபதியின் உத்தரவானது, எதிர்காலத்தில் வரவுள்ள சாட்சிகள் பராமரிப்பு சட்டத்தை காரணமாகக் காட்டியிருந்தது. வெளிநாட்டு நிதியோடு செயல்படுவதற்கு தடைவிதிப்பது முன்மொழியப்பட்ட இந்த புதிய சட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் ஆகும். சாட்சிகள் பாதுகாப்பு சட்ட மசோதாவின் இந்த குறிப்பிட்ட விதி விசாரணை ஆணையம் ஏற்படுத்தியிருந்த முன்னேற்றங்களை குலைப்பதற்கான ஒரு முயற்சி என்றே சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளை தெரிவித்திருந்தது:

> *தற்போதைய விசாரணை ஆணையத்தை இலக்காகக் கொண்டு இந்த விதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விசாரணை ஆணையம் வீடியோ தொடர்பாடல் மூலம் 2008 ஏப்ரலில் வாக்குமூலங்களைப் பதிவுசெய்திருந்ததை சட்டப்படி செல்லாது என்றாக்கும் ஒரு முயற்சியாக முன்னர் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்களுக்கும் இது பொருந்தும் என்றும் எதிர்காலத்திலும் வீடியோ பயன்பாடு கூடாது என்றும் இந்த விதி*

---

[85] "Minister Mahinda Samarasinghe addresses High Level Segment of the 7th Session of the UN HRC", இலங்கை வெளியுறவு அமைச்சு இணையதளம், 5 மார்ச் 2008. www.slmfa.gov.lk//index.php?option=com_content&task=view&id=1155&Itemid=1

[86] லக்பிம செய்திகள் என்ற ஊடகத்துக்காக நாமினி விஜெதாசவுக்கு தேவநேசன் நேசையா வழங்கிய பேட்டியை மேற்கோள்காட்டி FEDERALiDEA இணையதளம் 2 ஆகஸ்ட் அன்று வெளியிட்ட செய்தி, http://federalidea.com/fi/2008/08/dr_nesiah_president_wanted_me.html

அமைந்திருந்தது.[87]

வீடியொ தொடர்பாடல்களுக்கு நிதியும் பிற அனுசரணைகளும் வழங்கியது வெளிநாட்டு அரசாங்கள். இது பற்றி சட்ட மா அதிபரும் வெளியுறவு அமைச்சகமும் முழுமையாக அறிந்திருந்தன.

இரண்டாவது சுற்று வீடியோ வாக்குமூலங்கள் 2 ஜூன் 2008 அன்று துவங்கி இரண்டு வார காலகட்டத்துக்கு நடப்பதாய் இருந்தது, ஆனால் அது இப்படி அவசரமாக நிறுத்தப்பட்டுவிட்டது. (பயிற்சி, முகாமைத்துவம் மற்றும் ஆராய்ச்சிக்கான அரசுத்துறை அமைப்பான) வளர்ச்சி நிர்வாகத்துக்கான இலங்கை மையம் (SLIDA) என்ற மையத்தில் வீடியோ தொடர்பாடல் வசதிகளைப் பயன்படுத்தத் தேவையான நிதியை வழங்க ஜனாதிபதி செயலகம் மறுத்துவிட்டது. வீடியோ தொடர்பாடல் மூலமாக பெற்றப்பட்ட தடயங்களின் அந்தஸ்து என்ன என்று சட்டம் தெளிவாக இல்லை என்பது நிதி மறுக்கப்பட்டமைக்கான காரணமாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்திருந்தது. சாட்சிகள் பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்படும்வரை விசாரணை ஆணையம் காத்திருக்க வேண்டும். அப்போதுதான் விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகள் சட்டப்படி சரிதானா என்பது தெரியவரும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்து: "ஜனாதிபதி செயலகமிடம் இருந்து இந்தக் கடிதம் வந்த நேரத்தையும், அந்த சட்டமசோதாவில் உள்ள குறிப்பிட்ட அத விதியையும் சேர்த்துப் பார்க்கும்போது, விசாரணை ஆணையம் வீடியோ தொடர்பாடலை இனியும் பயன்படுத்துவதை தடுக்க வேண்டும் என்ற காரணத்துக்காகத்தான் இந்த விதியே கொண்டுவரப்படுகிறது என்ற சந்தேகம் வலுப்பெறுகிறது."[88]

விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளில் அரசாங்கம் தலையிடுகிறதா என்று □□□□□□□ □□□□□□□□ கேட்டபோது, "ஆணையம் ஒவ்வொரு விஷயத்தும் தனித்தனியாக ஜனாதிபதி செயலகத்திடம் செலவுக் கணக்கு காட்டவேண்டும் என்பது தமது பணிக்கு தடையாக இருப்பதாக" □□□□□□□□ நேசையா கூறியிருந்தார். "வீடியோ தொடர்பாடல் மூலம் சாட்சியங்களைப் பெறுவதற்கு முதலில் அனுமதித்தது மிகவும் உதவியாக இருந்தது. ஆனால் இரண்டாவது அதைச் செய்வதற்கு தடை விதித்தது பெரும் பின்னடைவாகிவிட்டது. விசாரணை ஆணையத்தை கலந்தாலோசிக்காமலேயே வீடியோ தொடர்பாடல் மூலம் வாக்குமூலம் வழங்கப்படுவதை தடைசெய்வதென்று ஜனாதிபதி செயலகம் முடிவெடுத்துவிட்டது. அந்த முடிவு எமது செயற்பாடுகளை

[87] சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளையின் கட்டுரை, "Position paper: Objections to the assistance and protection to victims of Crime and Witnesses Bill", 17 ஜூன் 2008.

[88] இதே கட்டுரையில் கூடுதல் விபரங்கள் உள்ளன.

முடங்கச்செய்துவிட்டது." என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.[89]

சாட்சிகளுக்கு பாதுகாப்பு இருப்பதையும் உறுதிசெய்யும் விதமாக விசாரணைகளை நடத்துவதற்கு வீடியோ கலந்துரையாடல் மிக முக்கியமான ஒரு கருவியாகும். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணை அணையம் நாட்டினுடைய குற்றவியல் நீதித்துறையின் ஒரு அங்கம் அல்ல என்பதால் அதிலே வீடியோ மூலம் சாட்சியம் வழங்குவதை தடை செய்வதற்கு சட்ட அடிப்படை இல்லை என்று இலங்கையின் சட்டத்துறை நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். "விசாரணை ஆணையங்கள் தொடர்பாக தற்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்டங்கள் என்பன 1948ஆம் வருடத்தின் விசாரணை ஆணையங்கள் சட்டமும், தடயவியல் அவசரச் சட்டமும், ஒரு விசாரணை ஆணையம் அமைக்கப்படும்போது குறிப்பிடப்படுகிற உள்-அளவிலான விதிமுறைகளுமே ஆகும். வீடியோ தொடர்பாடல் மூலம் சாட்சியம் பெறக்கூடாது என்ற தடை இவை எவற்றிலுமே இல்லை. மேலும், தடயவியல் அவசரச் சட்டம் பிரகாரம் செல்லாது என்ற விஷயங்களுக்கும்கூட 1948ன் விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் பிரிவு எண் 7(D) தெளிவாக விலக்கு அளித்துள்ளது"[90]

ஒரு சாட்சி வாக்குமூலம் வழங்கும்போது அரசாங்கப் பிரதிநிதி ஒருவர் அந்த இடத்தில் பிரசன்னமாகியிருக்க வேண்டும், அந்த சாட்சி இலங்கையில் இருந்தாலுமோ வெளிநாட்டில் இருந்தாலுமோ அதிகாரி உடனிருக்கத்தான் வேண்டும் என்று இந்த சட்டமசோதாவில் நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதும், உயிராபத்து உள்ள சாட்சிகள் வீடியோ ஒளிப்பதிவு மூலம் சாட்சியம் வழங்குவதன் நோக்கத்தைப் பாழ்பண்ணுவதாகவே அமைந்துள்ளது. இந்த மசோதா சட்டமாக வந்தால், திருகோணமலை சம்பவம் தொடர்பில் விசாரணை ஆணையம் பெற்ற பெருமதிப்பு கொண்ட தடயங்களைப்போல பிற சாட்சிகளும் வாக்குமூலம் வழங்க முன்வருவதற்கு தடையாக அமைந்துவிடும்.[91]

> *இலங்கையில் உள்ள ஒருவர் நீதிமன்றத்து நேரடியாக வராமல் ஒருவர் சாட்சியம் வழங்கும்போது (பிரிவு எண் 29(A)) சாட்சியத்தின் நம்பகத்தன்மையை உறுதிசெய்யும் பொருட்டு அரசு அதிகாரி ஒருவர் உடனிருப்பது நல்லதுதான் என்று ஒப்புக்கொண்டு பார்த்தாலும்,*

[89]லக்பிம செய்திகள் என்ற ஊடகத்துக்காக நாமினி விஜெதாசவுக்கு தேவநேசன் நேசையா வழங்கிய பேட்டியை மேற்கோள்காட்டி FEDERALiDEA இணையதளம் 2 ஆகஸ்ட் அன்று வெளியிட்ட செய்தி, http://federalidea.com/fi/2008/08/dr_nesiah_president_wanted_me.html

[90]"குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கு உதவி கிடைப்பது பற்றிய சட்ட மசோதாh, சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளையின் நிலைபாட்டை விளக்கும் ஆவணம், 17 ஜூன் 2008.

[91]சாட்சிகள் பராமரிப்பு சட்ட மசோதா, பிரிவுகள் 29(a) மற்றும் (b).

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

விசாரிக்கப்படும் குற்றச்செயலில் அரசு தரப்பைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டிருக்கலாம் என்கிறபோது இப்படியான நிபந்தனை இருப்பது அந்த சாட்சியின் பாதுகாப்பை மிக மோசமாக பாதிக்கிறது. இலங்கைக்கு வெளியில் இருந்தபடியே சாட்சியம் வழங்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் நபர்களைப் பொறுத்தவரை (பிரிவு எண் 29(B)) இது இன்னும் அதிகமான பிரச்சினைகளை ஏற்படுத்திவிடுகிறது. ஏனென்றால் சட்டமா அதிபரும் வெளியுறவு அமைச்சகமும் பரிந்துரைக்கின்ற "தகுதிபடைத்த நபர்" ஒருவர் அந்த சாட்சியானவர் வாக்குமூலம் அளிக்கும்போது உடனிருக்க வேண்டும் என அது நிபந்தனை விதிக்கிறது. திருகோணமலை சம்பவத்தில் கொல்லப்பட்ட மாணவர்களுடைய குடும்பத்தாரின் நிலைமையை கருத்தில் கொண்டு பாருங்கள்: அரசாங்கத்து தொடர்புடையவர்களால் தண்டிக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக இர்வர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். இலங்கைக்குள்ளாகவே அவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கும் திறனோ, அதற்கான மனோவலிமையையோ அரசாங்கத்துக்கு இல்லை. திருகோணமலை சம்பவ வழக்கிலும் சரி ஏனைய வழக்குகளிலும் சரி, பாதிக்கப்பட்டவர்களது குடும்பத்தினர் தமது உயிராபத்து கருதி வெளிநாடுகளில் தஞ்சம் கோரி வாழ்ந்துவரும் நிலையில், அவர்கள் எந்த அரசாங்கத்திடம் இருந்து தப்பித்து வந்தார்களோ அதே அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவர் அவர்களுடன் உடனிருக்க வேண்டும் என்று வாதிடுவதற்கு கொஞ்சமும் இடமில்லை."[92]

விசாரணையாளர்கள் மீது அழுத்தம்

அரசியல் தலையீடு விசாரணை ஆணையத்தின் பணிகளை தொடர்ந்தும் பாதித்துவந்துள்ளது. முந்தைய விசாரணை ஆணையங்களில் பணியாற்ற பழுத்த அனுபவம் பெற்றிருந்த பல ஆணையாளர்களின் மதிப்புமிக்க திறமைகளை வீணடித்ததோடு அவர்கள் செய்த விசாரணைகளையும் பாழ்பண்ணிவிட்டது அரசாங்கம்.[93]

பல்வேறு அரசாங்க அமைப்புகளிடம் இருந்து விமர்சனத்தையும் அழுத்தத்தையும் ஆணையாளர்கள் எதிர்கொண்டிருந்தனர். குறிப்பாக விசாரணை ஆணையாளர் கலாநிதி. தேவநேசன் நேசையா ஆற்றிய பங்கு குறித்து இராணுவம் சார்பாகவும்

---

[92] "குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கு உதவி கிடைப்பது பற்றிய சட்ட மசோதாவுக்கு எதிரான கருத்துகள்", சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளையின் நிலைபாட்டை விளக்கும் ஆவணம், 17 ஜூன் 2008.

[93] விசாரணை ஆணையமும் சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவும்: விவரணை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கொள்கை விளக்க அறிக்கை எண் 2, 2007, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கொழும்பு, www.cpalanka.org/research_papers/Policy_Brief_2_2007.pdf

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

விசேட அதிரடிப்படை சார்பாகவும் ஆஜரான சட்டத்தரணிகள் கடுமையான விமர்சனங்களை சொல்லியிருந்தனர். இவர் மூத்த அரசு அதிகாரி என்பதாலும், யாழ்ப்பாணத்தில் நடந்த ஆட்கடத்தல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக 2002ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் என்பதலும், விசாரணை ஆணையத்தில் இவர் இடம்பெற்றிருக்கவே கூடாது என்று அவர்கள் சாடியிருந்தனர். மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் என்ற சிவில் சமூக அமைப்பில் கலாநிதி நேசையா ஒரு ஆய்வு ஆலோசகராக பணியாற்றினார். இந்த அமைப்பு விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளை பார்வையிட்ட அமைப்புகளில் ஒன்றாகும். தன் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவர் மறுப்பு தெரிவித்திருந்தார். விசாரணை ஆணையத்தின் தனது அங்கத்துவம் குறித்து ஜனாதிபதியிடம் இருந்து உத்திரவாதம் ஏதும் வராத நிலையில் ஜூன் 2008ல் அவர் தனது பொறுப்பிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.[94] நவம்பர் மாத அளவில் பார்க்க நேசையா அல்லாது மேலும் இரண்டு ஆணையாளர்களும் தமது பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்திருந்தனர்.[95]

> *...விசாரணை ஆணையத்தின் முன்பு முட்டுக்கட்டையாக பல சிரமங்கள் இருந்தபோதிலும் விசாரணைகளில் மந்தகதியிலாவது முன்னெற்றம் ஏற்படவே செய்தது. விசாரணை ஆணையம் இலங்கையில் வாழ்ந்துவந்த சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதில், பாதுகாப்பின் அளவிலும் சரி, அது வழங்கப்படும் காலகட்டத்தின் அளவிலும் சரி, மிகவும் குறைவாகவே செயல்பட முடிந்துள்ளது. ஆனாலும், முக்கியமான சாட்சிகள் வெளிநாடு சென்றுவிட்ட நிலையில், வீடியோ தொடர்பாடல் மூலம் சாட்சியம் வழங்குவது என்பது அந்த சாட்சிகளில் பலரை எட்டுவதென்பதை சாத்தியப்படுத்தக்கூடிய ஒரு வழியாக இருந்தது. விசாரணைகளில் முன்னேற்றம் காணப்பட்டிருந்தது. அந்த புதிய உத்வேகம் நீடிக்கும்போல் தோன்றியது. ஆனால் வீடியோ மூலம் சாட்சியம் வழங்குவதற்கு தடை விதிக்கப்பட்டு, சாட்சிகள் பராமரிப்பு தொடர்பில் புதிய சட்டம் வரும் வரை விசாரணை ஆணையம் காத்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுவிட்டதன் பின்னர், விசாரணையில் மேலும் முன்னேற்றம்*

---

[94] □□□□ மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) இயக்குநர் சபையுடைய உறுப்பினர் □□□□□ □□□□□□□□□□□□ கலாநிதி தேவநேசன் நேசையா □□□□□□□□□□□□. CPA நிலையத்தில் ஆராய்ச்சி ஆலோசகராக மட்டுமே □□□□ □□□□□□□□□□□□ ஜனாதிபதியின் செயலாளருக்கு எழுதிய ஓர் கடிதத்தில் □□□□ தெரிவித்திருந்தார்.

[95] விசாரணை ஆணையத்தின் முன்பிருந்த வழக்கு எண் 2ல் அளித்துவந்த பங்களிப்பை சிவில் சமூக அமைப்புகள் 2 நவம்பர் 2008 அன்று நிறுத்திக்கொண்டது.ஆணையாளர்கள் ஜாவேத் யூசுப் மற்றும் மனூரி முட்டெடுவெகம ஆகியோர் பதவி விலகியதினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப ஃபைஸல் ராஸின் மற்றும் டென்ஸில் சரத் குணரத்ன ஆகிய இரண்டு சட்டத்தரணிகள் புதிய உறுப்பினர்களாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மங்கிவிட்டன. வரைவுச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள சில விதிகள் மிகவும் முக்கியமான சாட்சிகள் பலரையும் கலங்கவைக்கும். அவர்கள் சாட்சியம் வழங்க முன்வருவதற்கு தயங்கவைக்கும் என்பதே எனது கருத்து. அதன் விளைவாக 16 சம்பவங்களில் எந்த ஒரு சம்பவத்திலுமே விசாரணை ஆணையத்தால் தெளிவான துடிப்புமிக்க முடிவுக்கு வரமுடியாமல் போகலாம். அது விசாரணை ஆணையத்துக்கும், நீதி வேண்டி நிற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், நம்முடைய நாட்டின் நற்பெயருக்கும் பேரிடியாக அமையும். மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களில் கூட உண்மையையும் நீதியையும் நிலைநாட்ட்யும் திராணியற்றவர்கள் என்ற பழிக்கு இந்த தேசம் ஆளாகும். இராணுவத்தின் சட்டத்தரணி மற்றும் விசேட அதிரடிப்படை சட்டத்தரணி ஆகியோர் தலைமையிலும், அரசுக்கு சொந்தமான ஊடக நிறுவனங்களின் ஒரு பகுதியினராலும் எனக்கெதிராக திட்டமிட்ட பிரச்சாரம் நடந்ததன் பின்னர் உங்களது கடிதம் வருகிறது என்பது இதிலே மிகவும் வருந்ததக்க ஒரு அம்சம் ஆகும். எனக்கு எதிராகவும் வீடியோ தொடர்பாடல் மூலம் சாட்சியம் பெறும் நடவடிக்கைக்கு எதிராகவும் தொடர்ந்து நடத்தப்பட்ட தாக்குதலானது, வீடியோ தொடர்பாடல் மூலம் பலனுள்ள சாட்சியங்கள் பெறப்படுவதை தடுக்க வேண்டும் என்பதை உள்நோக்கமாகக் கொண்டுள்ளது. அப்படிச் செய்வதன் மூலம் விசாரணை ஆணையத்தின் பணிக்கு முட்டுக்கட்டை போட வேண்டும் என்பது அவர்களது எண்ணம்.

24 ஜூன் 2008 அன்றைய தேவநேசன் நேசையாவின் ராஜினாமா கடிதத்திலிருந்து

அரச நிறுவனங்களிடம் இருந்து ஒத்துழைப்பு கிடைக்காமல் போனது

அரசாங்க அமைப்புகள் ஒத்துழைக்காமல் போனது விசாரணை ஆணையத்தின் பணியை பாதித்திருந்தது. அதிலும் குறிப்பாக விசாரணை ஆணையத்தின் பணிக்கு தேவையான தகவல்களையும், வசதிகளையும் வழங்காமல் அரசாங்க அமைப்புகள் இழுத்தடிப்பு செய்திருந்தன. பாதுகாப்பு படையினர், சட்ட மா அதிபரின் துறை, குற்றப் புலனாய்வுத் துறை, தேசிய மனித உரிமை ஆணையம் என்று எல்லா துறைகளுமே ஆணையம் கோரிய தடயங்களை வழங்குவதில் தவறியிருந்தன. ஆணையம் அவர்களை வற்புறுத்த வேண்டிய நிலைதான் இருந்தது.

IIGEP குழுவினர் பொறுப்பில் இருந்து விலகுவதாக தெரிவித்திருந்த கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்:

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

நாங்கள் பணி செய்த காலம் முழுக்கவுமே விசாரணை ஆணையம் கோரிய விபரங்களையும் ஆவணங்களையும் வழங்க அரசாங்க அமைப்புகள் மறுப்பு தெரிவித்து வந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. மேலும், விசாரணைக்குரிய ஒரு சம்பவம் தொடர்பாக குறிப்பிட்ட ஒரு சமயத்தில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இராணுவத்தின் குறிப்பிட்ட ஒரு பிரிவனர் இருந்தார்களா இல்லையா என்று விபரம் தெரிவிக்க ஆயுதப் படைகளின் அதிகாரிகள் சிலர் மறுத்திருந்தனர். தேசத்தின் பாதுகாப்பு நலன் கருதி அவர்கள் மறுத்ததாக காரணம் கூறப்பட்டிருந்தது. இந்த வகையான தகவலை வழங்குவதையும் தேச நலன் கருதி மறுப்பதாக கூறுவதற்கு சட்ட அடிப்படை உண்டா என்பது தெளிவில்லாமல் இருக்கிறது. பதில் தெரிவிக்க மறுக்கப்படுவது தொடர்பாக உயரதிகாரியின் சான்றிதழும் அளிக்கப்பட்டிருக்கவில்லை, தேச பாதுகாப்பு நலன் ஏன் பாதிக்கப்படும் என்ற காரணமும் தெரிவிக்கபட்டிருக்கவில்லை. விசாரணை ஆணையமும்கூட இவ்விஷயம் தொடர்பில் சாட்சியங்களிடம் தொடர்ந்து கெள்விகள் கேட்டிருக்கவில்லை. [96]

விபரம் சேகரிப்பதற்கும், சாட்சிகளை வரச்சொல்லி உத்தரவிடவும், சாட்சியம் வழங்க மறுக்கும் அல்லது வழங்கத் தவறும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் விசாரணை ஆணையத்துக்கு அதிகாரம் இருக்கிறது. சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு தெரிந்தமட்டில் விசாரணை ஆணையம் தனது இந்த அதிகாரங்களை பயன்படுத்தியிருக்கவில்லை.

சட்ட மா அதிபர்

இலங்கையின் அதிவுயர் சட்ட அதிகாரி சட்ட மா அதிபர்தான் (AG). குற்றம்சாட்டப்படும் சம்பவங்கள் தொடர்பில் நடத்தப்படும் குற்றப் புலனாய்வுகளை மீளாய்வு செய்வது, குற்றவாளிகளுக்கு எதிரான கிரிமினல் சட்ட நடவடிக்கைகள் தேவையா என்பதை பரிசீலித்து அவற்றுக்கு ஆரம்பிப்பது, குற்றவாளிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பது சட்ட மா அதிபரின் துறைதான். கிரிமினல் குற்றங்களுக்கான ஒருவர் மீது சட்ட மா அதிபரின் பெயரால்தான் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும். ஆயுதப் படையினர், பொலிசார் தொடங்கி நாட்டின் படைகளுடைய தலைமைத் தளபதியாகவும் தற்போது பாதுகாப்பு அமைச்சராகவும் விளங்கும் ஜனாதிபதி வரையில் இலங்கை அரசாங்கத்தின் அனைத்து பிரிவினருக்கும் சட்ட ஆலோசனை வழங்குவது சட்ட மா அதிபர்தான். சட்ட விவகாரங்களில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்

[96] IIGEP குழுவின் பொது அறிக்கை, 14 ஏப்ரல் 2008, REF: IIGEP-PS-006-2008

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

சட்ட மா அதிபர்தான். நீதியை நிலைநாட்டுவது என்பதும் ஒரு பங்கிலே அவருடைய பொறுப்பு ஆகும். அவருடைய பொறுப்புகளை சட்டமே அப்படித்தான் வரையறுக்கிறது. அவர் சுயாதீனமாக செயல்பட வேண்டும் என்றாலும் அவருடைய சுயாதீன நிலை மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது.

சட்ட மா அதிபருடைய (மற்றும் பிற முக்கிய பொறுப்புகளுடைய) சுயாதீன நிலையை பாதுகாப்பதுதான் அரசியல் சாசனத்தின் 17ஆவது திருத்தத்தின் நோக்கம். இரண்டு தரப்பைக் கொண்ட அரசியல் சாசன சபை, சட்ட மா அதிபரின் நியமனத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று இந்த அரசியல் சட்ட சீர்திருத்தம் நிபந்தனை விதிக்கிறது. ஆனால் முதல் அரசியல் சாசன சபையின் ஆயுட்காலம் 2005ல் முடிந்த பின்னர் அது செயல்படவே இல்லை. அது முதல் முக்கியமான பொறுப்புகளுக்கு ஜனாதிபதி நேரடியாகவே ஆட்களை நியமித்து வருகிறார். சட்ட மா அதிபராக இருந்துவந்த சி.ஆர்.டிசில்வா ஓய்வுபெற்றதை அடுத்து டிசம்பர் 2008ல் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகரான மோஹன் பீரிஸ் இலங்கையின் புதிய சட்ட மா அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார்.(முன்பு இவர் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆலோசகராக இருந்தவர்.)

சன்சோனி ஆணையத்துக்கு பிறகு அமையப்பெற்ற ஜனாதிபதி நியமிக்கும் விசாரணை ஆணையங்களுக்கும் சட்ட மா அதிபரி அலுவலத்துக்கும் இடையில் பதற்றமும் பிரச்சினைகளும் இருந்துவரவே செய்கின்றன என்று இலங்கையின் சட்ட நிபுணரான கிஷாலி பிண்டோ ஜெயவர்தனே குறிப்பிடுகிறார். "அதன் விளைவாக சட்ட மா அதிபரின் அலுவலகம் அரசியல் அழுத்தங்களுக்கு உள்ளாகிற நிலையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. அரசியல் ரீதியில் மிகுந்த உணர்வலைகளை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான சம்பவங்களைக் கையேற்றுள்ள விசாரணை ஆணையங்களுக்கு உதவச் சொல்லி சட்ட மா அதிபரை அழைப்பது என்பது முறைப்படி சரியா? புலனாய்வு நடவடிக்கைகளில் காணப்படும் கோளாறுகளுக்கு குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கின்ற சூழல் என்பது எந்த அளவுக்கு ஒரு காரணமாக இருக்கிறதோ அதே அளவுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில் உள்ள கோளாறுகளும் காரணமாக இருக்கின்ற தற்போதைய சூழலில் சட்ட மா அதிபரிடம் அவ்வாறு உதவி கேட்பது சரியா?" என்று அவர் குறிப்பிடுகிறார்.[97]

விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளில் சட்ட மா அதிபரின் பங்கு

[97] கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே எழுதிய, "Focus on Rights: Further Reflections on Commission Inquiries and Rights Violations – பாகம் மூன்று The Sunday Times பத்திரிகை, 17 பிப்ரவரி, 2008, http://sundaytimes.lk/080217/Columns/focus.html.)

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஆணையத்தினால் விசாரிக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்பில் ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளின்போது பொலிசாருக்கு ஆலோசனை வழங்கியது சட்ட மா அதிபரின் அலுவலகம்தான். அப்படியிருக்கையில் ஆணையத்தின் விசாரணைகளில் உதவச் சொல்லிஅவரிடமே கேட்டால் அது சரி கிடையாது, காரணம் ஆரம்பத்தில் நடந்த விசாரணைகள் தோல்விகண்டது ஏன் என்று ஆராய்வதும் விசாரணை ஆணையம் செய்ய வேண்டிய ஒரு பணி ஆகும்.

விசாரணை ஆணையத்திலே சட்ட மா அதிபர் பங்காற்றுவது தொடர்பில் பலமுறை IIGEP குழுவினர் கேள்வியெழுப்பியிருந்தனர். ஏ.சி.எ.ப். சம்பவத்தை பொறுத்தவரையில். ஆரம்ப விசாரணைகளின்போது சி.ஐ.டி.பொலிசாருக்கு ஆலோசனை வழங்கியது துணை சொலிட்டர் ஜெனரல்தான் (விசாரணை ஆணையத்தின், சட்ட ஆலோசகர் ஒருவராக இருக்கும் இவர், சட்ட மா அதிபருக்கு கீழே பணியாற்றுபவர்) என்பது சி.ஐ.டி. பொலிசார் விசாரணை ஆணையத்துக்கு கொடுத்த ஆவணங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது என்பதை IIGEP குழுவினர் சுட்டிக்காட்டியிருந்ததனர்.[98] ஆரம்ப விசாரணைகள் தோல்வியடைந்ததன் சாட்சிகளாக சட்ட மா அதிபரும் அவருடைய துறையைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால், சட்ட மா அதிபரின் துறையைச் சேர்ந்தவர்கள் விசாரணை ஆணையம் விசாரணைகளைத் திட்டமிடுவதிலும், தடயங்களை சேகரிப்பதிலும் தயார் செய்வதிலும், சாட்சிகளிகளிடம் கேள்விகள் கேட்பதை முன்னின்று நடத்துவதிலும் ஆழ சம்பந்தப்பட்டிருந்தனர்.

விசாரணை ஆணையத்தின் சட்ட ஆலோசனை குழுவின் உறுப்பினர்கள் ஆற்றிய பின்வரும் பணிகள் ஆணையத்தின் நோக்கத்துக்கும் நலனுக்கும் முரணானவையாக இருந்தன:

- விசாரணை ஆணையம் சுயாதீனமாக செயல்படுவதென்றால் என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் ஆலோசனை வழங்க வேண்டும்;
- விசாரணை ஆணையத்தின் பணி தொடர்பில் (ஜனாதிபதி உள்ளிட) அரசாங்கத்துக்கு சட்ட ஆலோசகர்களாக செயல்படுவது;

[98] சட்ட மா அதிபரின் துறையில் சட்ட மா அதிபரும், அவருக்குக்கு அடுத்தபடியாக சொலிசிட்டர் ஜெனரலும், அதற்கும் கீழ் ஐந்து கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல்களும், 20 துணை சொலிசிட்டர் ஜெனரல்களும், 40 மூத்த அரசு சட்டத்தரணிகளும், 100 அரசு சட்டத்தரணிகளும், இரண்டு ஸ்டேட் அட்டார்னிகளும், 5 மூத்த துணை ஸ்டேட் அட்டார்னிகளும், 10 துணை ஸ்டேட் அட்டார்னிகளும் அடங்குவர். விசாரணை ஆணையத்தில் அதிகாரிகள் தரப்பிலே இடம்பெற்றிருந்த சட்டத்தரணிகள் பட்டியலில், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் பாலித .பெர்னாண்டோ, துணை சொலிசிட்டர் ஜெனரல் யசாந்த கொடகொட, மூத்த அரசு சட்டத்தரணி டி.ஹெச்.ஜெயகொடி, அரச சட்டத்தரணி எல்.கருணானவகே ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

- IIGEP யினர் வெளியிடும் அறிக்கைகளுக்கு பதில் தருவது;
- சட்ட மா அதிபர் துறைக்கு வரும் கிரிமினல் வழக்குகள் தொடர்பான வழமையான பணிகளை தொடர்ந்தும் செய்வது.

மனித உரிமை விவகாரங்களில் அரசாங்கம் சார்பில் பேசக்கூடியவராகவும் சட்ட மா அதிபர் செயல்பட்டுவந்துள்ளார்.

மார்ச் 2007ல் ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் மன்றத்துக்கு சென்ற இலங்கை அரசாங்கக் குழுவினரில் துணை சொலிசிட்டர் ஜெனரல் யசாந்த கொட்டகொடவும் சட்ட மா அதிபரும் சென்றிருந்தனர். விசாரணை ஆணைய□□ □□□□□□□□□□□□□ பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் □□□□□□□ □□□□□□□ பராமரிப்பு □□□□□□ தொடர்பாக ஆலோசனை வழங்கும் SCOPP அமைப்பின் சட்டத்துறை இயக்குநரான ஷிரானி குணதிலகவும் உடன்சென்றிருந்தார். மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரும் அங்அம் வகித்திருந்த இந்தப் பிரதிநிதிக் குழுவின் நோக்கம் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் நியாயமான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது என்று நியாயப்படுத்தி, மனித உரிமைகள் ஆணையம் கொண்டுவர எண்ணம்கொண்டிருந்த தீர்மானத்தை தடுப்பதுதான்.[99]

27 ஜூன் 2007 அன்று நடந்த ஏ.சி.எ.ப். சம்பவம் தொடர்பான அரசாங்க செய்தியாளர் கூட்டத்தில் சட்ட மா அதிபர் சார்பாக பேசியது துணை சொலிசிட்டர் ஜெனரல்தான். அந்த சம்பவத்திலே பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான தடயங்களை அரசாங்கம் களங்கப்படுத்தியதாக முடிவுதெரிவித்து சர்வதேச நீதிவல்லுநர்கள் ஆணையம் தனது அறிக்கையில் முன்வைத்த குற்றச்சாட்டுகளை அவர் அப்போது விமர்சித்திருந்தார்.

சட்ட மா அதிபரின் அலுவலகத்தின் செயற்பாடு தொடர்பாக கேள்விகள் எழுவதை தடுப்பதில் அரசாங்கம் ஈடுபடுகிறது என்று தோன்றியிருந்தது. ஆணையத்தின் விசாரணைகளிலிருந்து சட்ட மா அதிபர் மற்றும் அவர்தம் அலுவகத்தைச் சேர்ந்தவர்களுக்கு விலக்கு அளிப்பதாக ஜனாதிபதி அவர்கள் நவம்பர் 2007 தெரிவித்திருந்த விளக்கம் இந்த எண்ணத்தை அதிகரித்திருந்தது. "...சம்பந்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே நடந்த விசாரணைகளில் சட்ட மா அதிபரும் அவர்தம் அதிகாரிகளும் எவ்வாறு செயல்பட்டிருந்தனர் என்பது தொடர்பில் விசாரணை ஆணையம் எந்த வகையிலும் பரிசீலிக்க வேண்டும், ஆய்வுசெய்ய வேண்டும், கண்காணிக்க வேண்டும், புலனாய்வு செய்ய வேண்டும், விசாரணை

[99]The Morning Leader பத்திரிகை கட்டுரை "EU to move resolution on Lanka at Human Rights Council", 29 ஆகஸ்ட் 2007.

செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி அவர்கள் விசாரணையத்திடம் இருந்து எதிர்பார்க்கவில்லை..." என்று அந்த விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 30 நவம்பர் 2007 அன்று வழங்கப்பட்டிருந்த கூடுதலான "விளக்கம்" தரும் ஒரு கடிதத்தில், "சட்ட மா அதிபருடைய துறையைச் சேர்ந்த அதிகாரிகள் விசாரணக்குடுத்தப்படுவதற்கு எவ்வித அடிப்படையும் இருப்பதாக ஜனாதிபதி கருதவில்லை" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.[100]

உலக அளவில் மனித உரிமை நிலவரங்களை ஐ.நா. மனித உரிமை ஆணையம் வழமையாக பரிசீலிக்கும் நடவடிக்கையின்போது இலங்கையின் மனித உரிமை நிலவரம் சரியாகவே இருக்கிறது என்று வாதிடுவதற்காக ஜனாதிபதி அனுப்பியிருந்த பிரதிநிதிகள் குழுவில் சட்ட மா அதிபரும், துணை சொலிசிட்டர் ஜெனரலும் இடம்பெற்றிருந்தனர்.

சட்ட மா அதிபரின் அலுவலகமே விசாரணை ஆணையத்தில் முக்கிய பங்காற்ற வேண்டும் என்றிருந்த நிலை பற்றி கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே குறிப்பிடுகையில், "இந்த நிலைமையைப் பார்த்தால், 'நிஜமான திருடன் யாரென்று அந்த திருடனோட அம்மா கிட்டேயே போய்க் கேட்கிற மாதிரி" என்ற சிங்களப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. (ஹொரகே அம்மா கென் பென அஹனவ வகே).[101]

> *IIGEP குழுவினரிடம் இருந்து இப்படி வலுவான குற்றச்சாட்டுகள் வருகின்றன என்றால் அப்போது ஒரு நல்ல அரசாங்கம் என்ன செய்யும் தெரியுமா? சட்ட மா அதிபர் துறையின் செயற்பாடுகள் தொடர்பில் ஒரு உயர் மட்ட விசாரணைக் குழுவை அது அமைத்திருக்கும். அந்த வகையில் ஒரு விசாரணையை நடத்தி இந்த துறையை சரிசெய்வதற்கான தீர்மானமன முழுமையன நடவடிக்கைகளை எடுக்காத வரையில், தற்போதைய துரதிருஷ்ட சூழ்நிலை தொடரவே செய்யும். நீதியை தோற்கடிப்படுவதற்கென புத்திசாலித்தனமான குறுக்கு வழிகளை கண்டுபிடிக்கிற வேலையை மனமில்லாமல் செய்கிற நிலைமைதான் அவர்களுக்கு அவர்களுக்கு நீடிக்கும்.*
>
> *மனித உரிமை துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படும்*

[100] சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவினரின் பொது அறிக்கை, 19 டிசம்பர் 2007, "ஜனாதிபதியின் விசாரணை ஆணையம் சம்பவங்களை விசாரிப்பதற்காக நாங்கள் பரிந்துரை செய்யும் குறைந்தபட்ச நிபந்தனைகள் மற்றும் திருத்தங்கள் நடைமுறைப்படுவதற்கான அறிகுறி எதுவும் எங்களுக்கு (IIGEP) புலப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்." www.iigep.org/prelease/estatement5.pdf

[101] கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே எழுதிய, "Focus on Rights: Further Reflections on Commission Inquiries and Rights Violations" The Sunday Times பத்திரிகை, 17 பிப்ரவரி, 2008, http://sundaytimes.lk/080217/Columns/focus.html.)

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

பொலிஸார் இராணுவ அதிகாரிகள் என்று எவர் மீதும் தைரியமாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய தலைமை அதிகாரியாகவும் அதே நேரம் அப்படியான துஷ்பிரயோகங்கள் நடந்தனை என்பதை மறுக்கும் அரசாங்கப் பேச்சாளராகவும் சட்ட மா அதிபரே செயல்படுவது என்பது சாத்தியமல்ல.
ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் இயக்குநர் பசில் பெர்னாண்டோ[102]

இலங்கையின் சிவில் சமூக அமைப்புகள் குரலெழுப்பியமை

விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளில் பங்கேற்றுவந்த சிவில் சமூக அமைப்புகள் அப்பொறுப்பிலிருந்து விலகுவதாக 6 நவம்பர் 2008 அன்று அறிவித்திருந்தன. மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், மனித உரிமைகளுக்கான இல்லம், இன்பார்ம் ஆமிப்பு, சட்டம் மற்றும் சமூகத்துக்கான அறக்கட்டளை, இலங்கையின் தாய்மார்களும் மகள்களும் என்ற அமைப்பு, உடனடி உரிமைகள் - ஜனநாயக கூட்டணி என்ற அமைப்பு, இலங்கை தேசிய நீதிவல்லுநர்கள் ஆணையம் போன்ற அமைப்புகள் இதிலே அடங்கும். 29 மார்ச் 2008 அன்று அவர்களுக்கு அனுமதி கிடைத்தது தொடங்கி 4 நவம்பர் 2008 வரை அவர்கள் விசாரணை ஆணையத்தின் அனைத்து அமர்வுகளிலும் சட்டப் பிரதிநிதித்துவத்தில் பங்குகொண்டிருந்தனர். எழுத்துமூலமாக பல அறிக்கைகளையும் அவர்கள் வெளியிட்டிருந்தனர். [103]

"விசாரணை ஆணையத்தில் பொதுமக்கள் முன்னிலையில் நடந்த விசாரணைகளின்போது இராணுவம் சார்பாகவும் விசேட அதிரடிப்படை சார்பாகவும் வாதிட்ட சட்டத்தரணிகள் சாட்சிகளை திரும்பத் திரும்ப கஷ்டப்படுத்தும் வகையில் நடத்தியது கண்டு வேதனை அடைந்ததன்" காரணமாக விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளைக் பார்வையிடவும் பங்கேற்கவும் இந்த அமைப்புகள் விண்ணப்பித்திருந்தன என்பதை அவர்களே ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். உயிரச்சம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிவிட்ட மிக முக்கியமான சாட்சிகளை வீடியோ தொடர்பாடல் மூலம் ஆணையம் விசாரிக்கத் துவங்கியதை அடுத்து முன்னேற்றம் ஏற்படும் என்ற

---

[102] ' பசில் ஃபெர்னாண்டோ எழுதிய The compromising position of Sri Lanka's attorney general", , UPI Asia இணையதளம், 15 ஜூன் 2007, www.upiasia.com/Human_Rights/2007/06/15/commentary_the_compromising_position_of_sri_lankas_attorney_general/7701/ .

ஹாங்கொங்கில் இருந்து செயல்படுகின்ற ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் இயக்குநர் பசில் ஃபெர்னாண்டோ. இலங்கையைச் சேர்ந்த சட்டத்தரணி அவர். கம்போடியாவில் மூத்த மனித உரிமை பாதுகாப்பு அதிகாரியாக செயலாற்றியவர் அவர்.

[103] விசாரணை ஆணையம் விசாரித்த வழக்கு எண் 2ன் நடவடிக்கைகளிலிருந்து சிவில் சமூக அமைப்புகள் விலகிக்கொண்டது, 6 நவம்பர் 2006.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டிருந்ததும் அதற்கு காரணம்.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்த இந்த முன்னேற்றம் ஏற்படவில்லை என்று அவர்கள் சுட்டிக்கட்டியிருந்தனர். நவம்பர் 2006ல் பொறுப்புக்கு வந்ததிலிருந்து, தன்னிடம் அளிக்கப்பட்டிருந்த 16 மோசமான சம்பவங்களில் ஒரே ஒரு சம்பவம் குறித்தே விசாரணை ஆணையத்தால் முடிவுக்கு வரமுடிந்திருந்தது. தவிர விசாரணை ஆணையத்தின் வெளிப்படைத்தன்மை, சுயாதீன செயல்பாடு ஆகியவை தொடர்பில் ஆழமான கவலைகள் நீடித்துவரவே செய்தன. இது அதன் திறன் குறித்த நம்பிக்கையை பின்வரும் வகைகளில் கணிசமான அளவில் பாதிக்கச் செய்தது.

- வீடியோ தொடர்பாடல் மூலம் வாக்குமூலம் நடைமுறையை ஜனாதிபதி தன்னிச்சையாக நிறுத்தியது, விசாரணை ஆணையம் சுயாதீனமாக செயல்படும் என்ற அடிப்படையான கொள்கையை பாதித்திருந்தது. கிடைக்கக்கூடிய தடயங்அள் அனைத்தையும் பரிசீலிக்க வேண்டுமென்ற உறுதிப்பாடு இல்லத நிலையில், விசாரணை ஆணையம் விசாரணைகளில் முன்னேற்றம் காணும் என்பதற்கான வாய்ப்புகளை மங்கச்செய்து, அப்படி எதிர்பார்ப்பதை அர்த்தமற்றதாக்கிவிட்டது.
- சாட்சிகள் பராமரிப்பு அமைப்பு என்று ஒன்று செயல்படவே இல்லை என்ற நிலையில் அப்பிரச்சினையை எப்படி சமாளிப்பது என்பது பற்றிப் பேசவும் நடவடிக்கை எடுக்கவும் ஆணையம் தவறிவிட்டது. முன்னேற்றம் கொண்டுவருவதற்காக நாங்கள் கொண்டுவந்த யோசனைகளுக்கும் அது ஆக்கப்பூர்வமாக பதில் தந்திருக்கவில்லை. இந்த நிலையில், எந்த ஒரு சாட்சியாலுமே எப்படி சுதந்திரமாகவும் வெளிப்படையகவும் ஆணையத்தின் முன்பு சாட்சியம் வழங்க முடியும் என்ற கேள்வி எழுகிறது.
- சட்ட மா அதிபரின் அலுவலகம் விசாரணை ஆணையத்துக்கு சட்ட ஆலோசனை வழங்கும் விதமாக செயல்படுவது என்பது ஆணையத்தின் சுயாதீன நிலை, பக்கச்சார்பற்ற தன்மை ஆகிய அடிப்படை விஷயங்கள் தொடர்பில் கேள்விகளை எழுப்புகிறது. ஏனென்றால் நாட்டிலே மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடப்பதாக அரசாங்கத்தின் மீது குற்றப்படும்போது அதை வெளிப்படையாகவே மறுக்கும் அமைப்பாக சட்ட மா அதிபரின் அலுவலகம் செயல்படுகிறது. தவிர விசாரணை ஆணையத்தின் முன்புள்ள இரண்டாவது சம்பவத்தில் முந்தைய புலனாய்வு விசாரணைகளில் அது முக்கியமாக பங்காற்றியும் உள்ளது. தவிர சட்ட மா அதிபரின் அலுவலகத்தின் செயற்பாடு தொடர்பில் விசாரணையோ புலனாய்வோ நடக்க இடம்தராமல் ஜனாதிபதி அலுவலகம் அவர்களைப் பாதுகாக்க முயல்வது என்பது இப்படியான கேள்விகளுக்கு

வலுசேர்க்கின்றது.

- விசாரணை ஆணையம் ஆரம்பமாகி முதல் ஒரு வருடம் முழுக்கவும் அது மேற்கொண்டபொதுமக்கள் பார்வைக்கு அப்பாற்பட்ட விசாரணை நடவடிக்கைகளில் ஆழமான பிழைகள் இருக்கின்றன சுட்டிக்காட்டும் பரபரப்பான விஷயங்கள் 2008 ஆகஸ்ட் மாதத்தின் கடைசி வாரத்திலே நடந்திருந்தன. இலங்கை கடற்படையின் லியுடெனண்ட் தளபதி ஒருவர் வாக்குமூலம் வழங்குகையில், ஆணையத்தின் நடவடிக்கை தொடர்பான விபரங்களுடைய நகல் ஒன்றை முறைகேடான வழியில் தன்னால் வாங்க முடிந்திருந்தது என்பது வெளிச்சத்துக்கு வந்தது. அந்த விபரங்கள் சிவில் சமூக அமைப்புகளின் பார்வைக்கோ பொதுமக்களின் பார்வைக்கோ வந்துவிடக் கூடாது என்று விசாரணை ஆணையம் விரும்பியதும் தெரியவந்திருந்தது.
- ஜனாதிபதி அவர்கள் ஆணையாளர் ஒருவரை பதவி விலகச் செய்ததன் மூலம் ஆணையத்தின் செயல்பாடுகளில் அளவுக்கதிகமாக தலையிட்டிருந்தார். நியமிக்கப்பட்டிருந்த எட்டு ஆணையாளர்களில், அந்த ஆணையாளரைத் தொடர்ந்து வேறு மூன்று பேரும் பதவி விலகியிருந்தனர். இந்த பதவிவிலகல்களின் பெரும்பான்மையானவை வெளிப்படையான அறிவிக்கப்படவோ, விளக்கமளிக்கப்படவோ இல்லை. விசாரணை ஆணையத்தின் மீது இவ்வகையாக நேரடித் தலையீடுகள் இருந்ததும், ஆணையத்தின் உறுப்பினர்களில் ஏற்பட்டிருந்த மாற்றமும அதன் நம்பகத்தன்மை மற்றும் நியாயபூர்வ அங்கீகாரத்தில் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது.

விசாரணை ஆணையத்திற்கான நீட்டிப்பு உத்தரவு கடைசி நிமிடத்திலும் பகுதியளவிலும் மட்டுமே வழங்கப்பட்டது, ஜானாதிபதி அந்த நேரம் ஏதும் செய்ய வேண்டும் என்பதற்காக மட்டுமே இதன் மீது அக்கறை காட்டுகிறார் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக சிவில் சமூக அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வகையான போக்கு ஆணையத்தின் சுயாதீன நிலை மற்றும் வெளிப்படைத் தன்மைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். விசாரணை ஆணையம் கணிசமாக முன்னேற்றம் காணும் என்ற நம்பிக்கையில் கடைசி ஆறு மாத காலத்தில் பெரிய பின்னடைவு ஏற்பட்டுவிட்டது என்று குறிப்பிட்ட அவ்வமைப்புகள், "ஆபத்தான நிலையில் உள்ள சாட்சிகளின் பாதுகாப்பு மற்றும் மரியாதை தொடர்பில் தாங்கள் ஆழந்த கவலைகளைக் கொண்டுள்ளதாக"தெரிவித்துள்ளன.

2. சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவினர் (IIGEP) - வெற்றி பெற வாய்ப்பே இல்லை

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

இலங்கையில் ஐ.நா.மனித உரிமை ஆணையரின் அலுவலகம் ஒன்றைத் திறந்து அந்நாட்டின் மனித உரிமை நிலவரம் கண்காணிக்கப்பட வேண்டும் என்று அழுத்தம் அதிகரித்துவந்த நிலையில் அவ்வகையான அழுத்தங்களை திசைதிருப்புவதற்கான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ IIGEP குழுவை ஏற்படுத்தியிருந்தார். இலங்கை அரசாங்கம் தற்போதைய மற்றும் கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில் நிஜமான அக்கறை காட்டவில்லை, மாறாக தப்பிப்பதற்கு ஒரு வழியே தேடுகிறது என்பதற்கு இந்த விஷயம் ஒரு அறிகுறி. சிவில் சமூக உறுப்பினர்களுக்கு இந்த விஷயம் வெளிப்படையாகவே தெரிந்திருந்தது. சர்வதேச அளவில் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும் என்ற அழுத்தம் உள்நாட்டிலிருந்து மட்டுமட்டுமல்லாது சர்வதேச அமைப்புகளிடம் இருந்தும் வந்திருந்தது. உள்நாட்டு அளவிலான இலங்கையின் மனித உரிமை கண்காணிப்பு இயந்திரங்கள் குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டுவருவதில் திரும்பத் திரும்ப தோல்விகாணுகின்றன என்பதையும் அவற்றின் மீது அவநம்பிக்கை அதிகரித்துவருகிறது என்பதையும் இது பிரதிபலிப்பதாக இருக்கிறது.

இலங்கையில் உள்நாட்டளவில் மனித உரிமை கண்காணிப்பு செய்வதற்கான அமைப்பாக இருக்க வேண்டிய இலங்கையின் மனித உரிமை ஆணையம் எப்போதுமே பலன் தரும் வகையில் செயல்படும் ஒரு அமைப்பாக இருந்ததில்லை. அதிகாரிகளின் அளவுக்கதிகமான தலையீடு மற்றும் குறைவான நிதி போன்றவற்றால் இந்த அமைப்பு பாதிக்கப்பட்டிருந்தது என்றாலும், கடந்த காலங்களில் இந்த அமைப்பு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மக்கள் புகார் தெரிவிக்கக்கூடிய ஒரு முக்கியமான சுயாதீனமான அமைப்பாக செயல்பட்டுவந்துள்ளது. அதிலும் குறிப்பாக இவ்வமைப்பின் பிராந்திய அலுவலகங்கள் அப்படிச் செயல்பட்டுவந்துள்ளன. ஆனால் இந்த அமைப்பின் உறுப்பினர்களை நியமிப்பதற்கான பொறுப்பேற்றிருந்த அரசியல் சாசன சபை காலாவதியாகியதை அடுத்து 2006ஆம் ஆண்டுமுதல் இந்த அமைப்பு அரசியல் சாசன அடிப்படையில் அனுபவித்துவந்த சுயாதீன நிலையை இழந்தது. பின்னர் இந்த ஆணையத்துக்கான நியமனங்களை ஜனாதிபதியே நேரடியாக மேற்கொண்டார். அதனால் இந்த அமைப்பின் சுயாதீன நிலை என்பதும், அதன் சர்வதேச அங்கீகாரம் என்பதும், ஒட்டுமொத்தமாக அது ஏற்படுத்திவந்த தாக்கம் என்பதும் பாதிப்புக்குள்ளாகின.[104]

[104] இலங்கை அரசியல் சாசன சட்டத்தின் 17ஆவது சட்டத் திருத்தம் 2001ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. தேசிய பொலிஸ் ஆணையம், மனித உரிமைகள் ஆணையம் போன்றவற்றின் உறுப்பினர்களுடைய நியமனங்களில் அரசியல் தலையீட்டை நீக்கும் நோக்கம் கொண்டது இந்த சட்டத் திருத்தம். இப்படிப்பட்ட பொறுப்புகளில் நியமிக்கப்படுவதற்காக

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

நீதித்துறைக்கு அப்பாற்பட்டு, □□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□ மரண தண்டனைகள் தொடர்பான ஐ.நா.மன்ற விசேட அதிகாரி ஃபிலிப் அல்ஸ்டன், 2005ஆம் ஆண்டு கடைசியில் இலங்கை சென்றிருந்தது அங்கு மனித உரிமை மீறல்கள் அதிகரித்துவருவதாகவும் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவரும் நிலை அதிகரித்துவருவதாகவும் வந்த செய்திகள் மீது கவனம் குவியச் செய்திருந்தன. ஒக்டோபர் 2007 சித்ரவதை ஒழிப்பு தொடர்பான ஐ.நா.வின் விசேட தூதர் மன்ஃப்ரெட் நோவக்கும் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரும் இலங்கை சென்று திரும்பியபோதும் இதேபோன்ற கவலைகள் வெளிவந்திருந்தன. இந்த மூன்று அதிகாரிகளின் பயணமும் இலங்கையில் சர்வதேச கண்காணிப்பு அவசியம் என்ற குரல்கள் எழ ஊக்கம் அளித்திருந்தன. மார்ச் 2006ல் □□□□□□□ அல்ஸ்டன் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

> *சர்வதேச அளவில் மனித உரிமை நிலவரம் கண்காணிக்கப்பட வேண்டும் என்று என்னிடம் சிவிலியன் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் வலியுறுத்தியிருந்தனர். மனித உரிமை கண்காணிப்பில் பங்காற்றக்கூடிய பல அமைப்புகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அதில் மிக முக்கியமானது ஐ.நா.மன்றம், மனித உரிமைகள் கண்காணிப்பில் அவர்களுக்கு ஏற்கனவே நிறைய அனுபவமும் திறமையும் இருக்கிறது. அடுத்ததாக தெரிவிக்கப்பட்டிருந்த பெயர் இலங்கைக்கான கொடையாளி நாடுகள் அமைப்புக்கு கூட்டாக தலைமையேற்றுள்ள நாடுகளும், பெயர்*

முன்மொழியப்படும் பெயர்களுக்கு, அரசியல் சாசன சபை என்ற குழு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டிருந்தது. இந்த அரசியல் சாசன சபையானது, ஆளுங்கட்சி எதிர்க்கட்சி ஆகிய இருதரப்பிலிருந்தும் அரசியல் தாண்டிய பொது அமைப்புகளிலிருந்தும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு நியமனம் தொடர்பில் அரசியல் கட்சிகளிடையில் ஏற்பட்ட பிணக்கு காரணமாக 2006ல் அரசியல் சாசன சபை நீட்டிக்கப்படுவதற்கான ஆணை காலாவதியாக விடப்பட்டிருந்தது. அரசியல் சாசன சட்டத்தை பின்பற்றாத வழியில் சென்று, முக்கிய பொறுப்புகளுக்கு தானே ஆட்களை நியமிப்பது என்பதை ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவுசெய்திருந்தார். அதிக தகுதிகளும் அனுபவங்களும் நிறைந்த பல முன்னாள் ஆணையாளர்கள் அரசியல் சாசன காரணங்களை முன்னிட்டு தமது நியமனங்களைப் புறக்கணித்திருந்தனர். தேசிய மனித உரிமை ஆணையத்துக்கும், தேசிய பொலிஸ் ஆணையத்துக்கும் இதனால் பெரும் பாதிப்பு எற்பட்டது. இந்த இரண்டு அமைப்புகளுக்குமே மனித உரிமை கண்காணிப்பிலும் பாதுகாப்பிலும் முக்கியமான கடமைகள் இருந்தன. "அதிபர் ராஜபக்ஷவின் ஆதரவாளர்களும் நெருங்கிய நண்பர்களுமே இந்த ஆணையங்களில் பெரும்பான்மையாக நியமிக்கப்படுகின்ற நிலை" கடைசியில் உருவானது. அப்படி நியமிக்கப்பட்டிருந்தவர்கள் மனித உரிமை பாதுகாப்பு விஷயத்தில் பங்களிப்பு செய்தவர்களாக இருந்திருக்கவில்லை. கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே எழுதியது, "Contempt of the Constitution: Disregard for the rule of law and its impact on the ethnic conflict in Sri Lanka・ Commonwealth Human Rights Initiative Newsletter, Volume 13 No 2, புதுதில்லி, 2006 கோடைக்காலம்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

குறிப்பிடப்படாத நார்டிக் வட்டகை நாடு ஒன்றும், மனித உரிமை நிபுணர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றும். இப்படி சர்வதேச அமைப்புகளை அழைப்பதால் செலவு அதிகம் ஆகும் என்றாலும், இலங்கை மனித உரிமை ஆணையத்தால், நாட்டில் பல இடங்களிலும் நடந்த அரசியல் கொலைகளை விசாரிப்பது சாத்தியமல்ல என்பது பொதுவாகவே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் பங்கேற்பு இல்லாமலேகூட பலனளிக்கக்கூடிய கண்காணிப்பு செய்ய முடியும் என்று எனக்கு உதவி செய்திருந்த அதிகாரிகள் கருத்து தெரிவித்திருந்தனர்.[105]
நீதித்துறைக்கு அப்பாற்பட்டு,

மரண தண்டனைகள்

தொடர்பான ஐ.நா.மன்ற விசேட அதிகாரி

□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□ ஐ.□□.□□□□ □□□□□ □□□□□□□ ஐ.நா. □□□□□□□□□□□□□□□ தனது அறிக்கையில், இலங்கை பின்வருவ□□□□□□ச் செய்ய வேண்டும் என்று பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்:

நாட்டில் மனித உரிமை நிலவரத்தைக் கண்காணிப்பதற்கும், நாட்டின் தடுப்பு முகாம்கள் அனைத்திலும் தடையின்றி நுழைந்து பார்வையிடுவதற்கும், நீதி நிர்வாகம், பொலிஸ்துறை மற்றும் சிறைச்சாலை சீர்திருத்தம் போன்ற விஷயங்களில் தொழில்நுட்ப ஒத்தாசைகள் செய்வதற்கும் அதிகாரம் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரின் அலுவலகம் இலங்கையில் ஏற்படுத்தப்பட வேண்டும்.[106]

மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் சர்வதேச பங்களிப்பு வேண்டும் என்று குரல்கள் எழுந்திருந்ததை □□□□ □□□□□□□□□□□□□ ஐ.□□. □□□□ □□□□□□□□□□□□ சுட்டிக்காட்டிருந்தார். ஐ.நா.விடம் இருந்து உதவி பெற்றுக்கொள்வதில் அரசாங்கம் வெளிப்படையாகவே ஆர்வம் காட்டவில்லை என்பதை அவர் புரிந்துகொண்டிருந்தார் என்றாலும், உதவி செய்ய தாங்கள் தயார் என்று அவர் கூறியிருந்தார்:

நான் ஈடுபட்ட விவாதங்கள் அனைத்தின்போதுமே, மனித உரிமைகளைக்

---

[105] விசேட தூதுவர் ்பிலிப் அல்ஸ்டனுடைய அறிக்கை, Extrajudicial, summary or arbitrary executions; Addendum: இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணம் (28 நவம்பர் - 6 டிசம்பர் 2005) UN Doc E/CN.4/2006/53/Add.5, 27 மார்ச் 2006, paras 42, 44.

[106] சித்ரவதை, பிற கொடூரமான மற்றும் மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான கையாளுகை மற்றும் தண்டனை தொடர்பான விசேட தூதுவர் மன்பிரெட் நோவாக்கின் அறிக்கை, UN Doc A/HRC/7/3/Add.6, 26 பிப்ரவரி 2008, para. 94(y).

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

காப்பதில் உள்நாட்டளவில் இருக்கும் ஏற்பாடுகள் போதுமானதாக உள்ளது என்றே அரசாங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்திவந்தனர். ஆனால் அந்த உள்நாட்டு அமைப்புகளின் செயல்திறனை அதிகரிக்க வேண்டியுள்ளது, அந்த வகையில்தான் சர்வதேச சமூகத்திடம் இருந்து உதவி தேவைப்படுகிறது என்று அவர்கள் சொல்லிவந்தனர். ஆனால் அதற்கு மாறாக, மிக மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் போதிய பாதுகாப்பு வழங்குவதற்கான திறன் ஏற்கனவே இருந்துவருகின்ற சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு இருக்கிறதா என்பதில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று பல்வேறு சமூகங்களிலிருந்தும் பலதரப்பட்ட அரசியல் பின்புலங்களிலிருந்தும் மக்கள் தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் தம்முடைய கைகள் கட்டப்பட்டுள்ளன என்பதை இந்த அமைப்புகள் சில தாங்களே ஒப்புக்கொள்கிறார்கள்.

... இலங்கையில் மனித உரிமை பாதுகாப்பில் தற்போது காணப்படும் இந்த பற்றாக்குறைக்கு இந்த நிறுவனங்கள் திறன் குறைவாக இருக்கிறது என்பது மட்டுமே காரணமல்ல என்றே நான் கருதுகிறேன். ... இலங்கை மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் பெரிய அளவிலே பின்னடைந்த நிலையில் இருப்பதற்கு, அங்கே உரிமை மீறல்கள் தொடர்பான நியாயமான குற்றச்சாட்டுகள் பற்றி நம்பத்தகுந்த மற்றும் உத்தியோகப்பூர்வமான தகவல்கள் இல்லை என்பதே முக்கியக் காரணம், அதுவே ஆழ வேரூன்றியுள்ள பிரச்சினை என்று நான் நம்புகிறேன். ... ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகள் ஆணையம் (OHCHR) இலங்கை அரசாங்கத்துக்கு இது சம்பந்தமாக உதவுவதில் ஆர்வமாக உள்ளது. மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் சர்வதேச ஒத்துழைப்பு வேண்டும் என்று உள்நாட்டளவில் ஒரு துடிப்புமிக்க விவாதம் நடக்கிறது என்று நான் அறிகிறேன். தற்போது நடந்துவரும் மனித உரிமை மீறல்கள் எந்த அளவுக்கு மோசமானவை அதிலும் குறிப்பாக, மக்களுடைய உயிருக்கும் வாழ்க்கைக்கும் எதிராக அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு பார்க்கையில்ம் சர்வதேச மனித உரிமை ஆணையமும் (OHCHR) இலங்கை அரசும் ஆக்கப்பூர்வமாக ஒரு உறவை எதிர்காலத்தில் ஏற்படுத்திக்கொள்வது குறித்து தற்போது உடனடியாக விவாதிக்க வேண்டும் என்றே நான் நம்புகிறேன்.[107]

IIGEP குழுவை நியமித்ததன் மூலம், இலங்கையில் நடக்கும் மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் பணியில் சர்வதேச சமூகம் பங்காற்ற வேண்டிய

[107] மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் இலங்கைக்கான தனது பயணத்தின் நிறைவில் வெளியிட்ட பத்திரிகை அறிக்கை, கொழும்பு, 13 ஒக்டோபர் 2007, WWW.UNHCHR.CH/HURICANE/HURICANE.NSF/VIEW01/2C07EE5600DE5B19C12573750034C474?OPENDOCUMENT

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

அவசியம் இருக்கிறது என்று ஜனாதிபதி ராஜபக்ஷ ஒப்புக்கொண்டுள்ளார். 1990களில் நடந்ததைப் போலவே, ஜனாதிபதி இந்த நடவடிக்கை எடுத்த தருணம் மிகவும் முக்கியம். இலங்கையில் மீண்டும் வன்முறை தலைதூக்கியுள்ளது குறித்து இலங்கைக்கு கொடை வழங்கும் நாடுகள் கேள்வி கேட்கத் துவங்கிய நேரம் அது. இலங்கையின் ஆயுதப் படையினருக்கும் பொலிஸாருக்கும் மனித உரிமையைப் பேணுவது தொடர்பிலான பயிற்சிக்காகவும், நீதிமன்றக் கட்டமைப்பை மேம்படுத்தும் முயற்சிக்காகவும், சமாதான முன்னெடுப்புகளுக்காகவும் வழங்கப்பட்டிருந்த கொடையாளி நாடுகளுடைய நிதியைக் கண்டு நாட்டில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை என்று சலசலப்பு எழுந்திருந்த நேரம் அது. ஆனால் இலங்கை விவகாரத்தில் எவ்விதத்திலும் சர்வதேச தலையீடு வருவதை விரும்பாத அரசியல் சக்திகளுக்கு கட்டுப்பட வேண்டிய பெரிய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கு இருந்தது. ஆகவே இந்த இரண்டு அழுத்தங்களுக்கும் முகம்கொடுக்கும் இடமளிக்கும் விதமாக ஜனாதிபதி கொண்டுவந்ததுதான் இந்த IIGEP குழு.

மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் மீண்டும் மீண்டும் தோல்வியடைவது என்பது நிச்சயம் யதேச்சையாக நடக்கும் விஷயம் அல்ல என்றும் சட்ட அமலாக்கப்பிரிவினருக்கு வல்லமை போதவில்லை என்பதை இது பிரதிபலிக்கவில்லை என்றும் சர்வதேச பொதுமன்னிப்பு சபை நம்புகிறது. சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு பயிற்சி வழங்குவதிலும், குற்றப் புலனாய்வு வசதிகளை பெருக்கவும் வெளிநாட்டு உதவித் தொகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தும் மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் என்று வரும்போது, குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது என்பது கணிசமான அளவில் குறைந்துவிடுகிறது. அரசியல் சூழ்நிலை சாதகமான இருக்கும் பட்சத்தில் பலனளிக்கக்கூடிய புலனாய்வுகளை மேற்கொள்வதற்கான திறன் இலங்கை பொலிசாருக்கு இருக்கிறது என்றே □□□□□□□ □□□□□□□□□□□□□□ □□□. பொலிஸாரின் புலனாய்வுத் திறன்களைப் பெருக்குவதில் கணிசமான அளவு வெளிநாட்டு உதவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.[108]

[108] உதாரணமாக, இலங்கையின் பொலிஸ் துறையில் சீர்திருத்தம் செய்வதற்காக சுவீடன் நாணயத்தில் (SKr) 3 கோடிகளை (ஏறத்தாழ 3 கோடியே எழுபது லட்சம் அமெரிக்க டாலர்களை) சுவீடன் அரசு ஒதுக்கியிருந்தது. "இலங்கை பொலிசாரின் திட்டமிடல் மற்றும் கட்டமைப்பு திறனை மேம்படுத்ததவது; குற்றம் நிகழ்ந்த இடத்தில் செய்யப்படும் தடயவியல் புலனாய்வுகள் உட்பட்ட புலனாய்வுத் திறனை மேம்படுத்திக்கொள்வது; மனித உரிமைகளை மதித்து நடப்பது, பல்லின மற்றும் ஆண்பெண் சமத்துவத்தைப் பேணும் நோக்கில் செயல்படுவதற்கான திறனைப் பெருக்கிக்கொள்வது' ஆகியவை இந்த நிதி வழங்கலின் நோக்கமாக இருந்தது. சம்பவ இடத்து குற்றவிசாரணை அதிகாரிகள் (SOCOs) 271 பேருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது, நாட்டில் SOCO ஆய்வுக் கூடங்கள் 37 இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

திருகோணமலை மாணவர்கள் படுகொலை சம்பவம், மூதூர் ஏ.ழி.எஃப். ஊழியர்க□□ □□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□ □□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□ சம்பவம், பொத்துவில்லில் முஸ்லிம் தொழிலாளிகள் கொல்லப்பட்ட சம்பவம் என்று அனைத்திலுமே பொலிஸாரின் ஆரம்ப விசாரணை தோல்விகண்டிருந்தன என்பதையும், இந்த சம்பவங்களில் சாட்சிகளாக அமைந்திருக்கின்றவர்கள் வன்முறைக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகியிருந்தனர் என்ற தகவல்களையும் வைத்துப் பார்க்கும்போது இலங்கையில் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பது என்பது ஒரு கலாச்சாரமாகவே ஆகிவருகிறது என்று உணர்த்துகிறது. இந்தக் கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கென கவனமாகப் பாடுபடாமல் இப்படியான வழக்கங்களைப் பாதுகாப்பதில் இலங்கை அதிகாரிகள் பங்காற்றிவருகிறார்கள்.

> *விரைவாகவும், நியாயமாகவும் குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதுதான் வலுவான பதிலாக அமையுமே ஒழிய உண்மை கண்டறிவதற்கான விசாரணை ஆணையங்களை அமைப்பதன் மூலம் சட்ட நடவடிக்கைகளை ஈடுசெய்துவிட முடியாது. சர்வதேச "மாண்புமிக்கோர்" உதவினாலும் கூட வலுவான சட்ட நடவடிக்கைபோல் வராது. பேசுவதற்கு வேண்டுமானால் படோடபமாக இருக்கும் இந்த ஏற்பாடுகள் யதார்த்தத்தில் பலனளிக்காமல் போகவே வாய்ப்பு அதிகம். இந்த விஷயங்களுக்காக பெரிய அளவில் செலவு செய்தாலும் சிரமம் மேற்கொண்டாலும் அவற்றால் பெரும் பலன் ஏற்படாமல் போகலாம். நான் ஏதோ அடிப்படையில்லாமல் சந்தேகிக்கிறேன் என்று என் மீது பழிசுமத்தப்படலாம். ஆனால் அப்படிச் செய்பவர்களுக்கு பதிலாக கடந்தகால சம்பவம் ஒன்றைத்தான் என்னால் உதாரணமாகச் சொல்ல முடியும். 1994 தென்னிலங்கை ஆட்கடத்தல் சம்பவங்கள் விசாரணை ஆணையமானது, 1980களின் கடைசியிலும் 90களின் ஆரம்பத்தின்போதும் அரசாங்கத்தினருக்கும் மக்கள் விடுதலை*

ஆனால் அதற்கு மேற்பட்டு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படவில்லை. இத்திட்டம் கொண்டுவந்த நன்மைகள் குறித்து ஜூலை 2007ல் நடத்தப்பட்ட ஒரு மீளாய்வில், "இந்தத் திட்டத்தினால் மனித உரிமைகள் தொடர்பில் மாற்றங்கள், முன்னேற்றங்கள் ஏற்பட்டதற்கான உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை. தேசிய பாதுகாப்பு என்பது பிற அனைத்து விழுமியங்களையும் இருட்டடிப்பு செய்துவிடுவதால், முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் மோசமாகவே உள்ளது. நாட்டிலே தொடர்ந்தும் பெரிய அளவில் மனித உரிமை மீறல்கள் நடந்துவரும் நிலையில், இவ்வாறான முடிவுக்கே வரமுடிகிறது." என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. க்னத் ஒலாண்டர், கமில்லா ஒர்யுஎல்லா, ரோஹன் எதிரிசிங்க போன்றோர் மேற்கொண்ட இலங்கை பொலிஸ் சுவீட பொலிஸ் ஆகியோர் இடையிலான மேம்பாட்டு ஒத்துழைப்பு மீளாய்வு, Sida Evaluation 07/43, p5, www.sida.se/shared/jsp/download.jsp?f=Utv07-43_SIDA40261en.pdf&a=35261.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

முன்னணியினருக்கும் இடையில் மோதல்கள் நடந்துவந்த சமயத்தில் நடந்த ஆட்கடத்தல் சம்பவங்களில் 40 முதல் 75 சதவீதம் வரையிலானவற்றுக்கு பாதுகாப்பு படையினரே பொற்ப்பு கண்டறிந்திருந்தது. ஆனாலும் 2004ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் படி இந்த ஏராளமான சம்பவங்களில் வெறும் ஒன்பதில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருந்தனர்.

முந்தைய விசாரணை ஆணையங்களைப் போலவே கடைசியாக 2006ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டிருந்த ஆணையத்தாலும், (என்னதான் மனோதிடம் காட்டினாலும்) நல்லவிதமான சட்ட நடவடிக்கைகளை கொண்டுவருகின்ற சாத்தியம் இல்லை. தற்போதைய குற்றவியல் சட்டங்களில் வளைந்துகொடுக்கும் தன்மை இல்லாததால் அது சாத்தியம் இல்லை. கட்டளையின் கீழ் செயல்படுபவர்கள் புரியும் குற்றங்களுக்கு கட்டளையிடுபவரும் பொறுப்பேற்க வேண்டும் என்ற கொள்கை இல்லாதது இந்தக் கட்டமைப்பில் இருக்கக்கூடிய பிரச்சினைகளின் ஒரு பக்கம் மட்டுமே. சட்ட நடைமுறைகள் தாமதங்களும் சிரமங்களும் நிறைந்தாக இருப்பது , பலனளிக்கக்கூடிய சாட்சிகள் பராமரிப்பு திட்டம் இல்லாதது, நிஜமாக பாதிக்கப்பட்டவர்களிடம் கடுமை காட்டப்படுவது போன்ற பிரச்சினைகளால் பலமடங்கு சிக்கல்கள் நீதி நிர்வாகக் கட்டமைப்பில் ஏற்படுகிறது.
கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே[109]

விசாரணை ஆணையம் உருவாக்கப்பட்ட விதத்திலேயே அதன் கைகள் கட்டிப்போடப்பட்டிருந்தன. விசாரணை ஆணையங்கள் என்பன அப்போதைக்கு ஏதும் செய்ய வேண்டும் என்பதற்காக செய்யபப்பட்ட, குறுகிய கால கண்ணோட்டத்துடன் மேற்கொள்ளப்பட்ட, குறுகிய செயல்திறன் கொண்ட ஏற்பாடுகள்தான். இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்களினால் மட்டுமே இதனை ஏற்படுத்த முடியும். மேலும் அவர்கள் பொது விவாதம் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. ஆணையத்துக்கான நியமனங்கள், அதன் நடவடிக்கைகள், அது கண்டறியும் விடயங்கள் என்று எல்லாமே ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்தான் வரும். இலங்கையின் தலைவர்களுக்கு அவசரத்துக்கு கைகொடுக்கும் ஒரு அலங்காரப் பொருளாகவே பல தசாப்தங்களாக இந்த ஆணையங்கள் இருந்துவருகின்றன.

[109] கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தனே எழுதிய கட்டுரை, '"Imperative revisions to the criminal law to ensure accountability," Focus on Rights, The Sunday Times, 20 மே 2007.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

இலங்கையிலே அவ்வப்போது ஏற்படுத்தப்படும் விசாரணை ஆணையங்களுடைய பரிந்துரைகள் பெருமளவிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவே இல்லை. நந்நாட்டின் அரசியல் மனோவலிமை குறித்து இது கடுமையான சந்தேகங்களை எழுப்புகிறது. மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் நீதி கிடைக்கச்செய்ய வேண்டும் என்பதில் அரசியல் மனோவலிமை இருக்கிறதா? விசாரணை ஆணையகளின் பரிந்துரைகளையும் அவை நடைமுறைக்கு வராத சூழலையும் பார்க்கும்போது அப்படியான மனொவலிமை கொஞ்சமும் இல்லை என்பது தெரியும். ஆட்கடத்தல்கள் தொடர்பாக விசாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறைய எண்ணிக்கையிலான விசாரணை ஆணையங்கள், பல்வேறு விதமான திட்டங்கள்தான் இதனை அப்பட்டமாக விளக்கும் உதாரணங்கள். இவ்வகையான ஏற்பாடுகள் இருந்தும், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களிடம் இவர்கள் விரிவாகவும் பெரும் லட்சியங்களுடனும் பரிந்துரைகள் பல செய்திருந்தும், போர்நிறுத்தம் முடிவுக்கு வந்த பின்னராக காலகட்டத்தை எடுத்துக்கொண்டால், ஆட்கடத்தல்கள் மீண்டும் சர்வசாதாரணமாக நடந்துவரவே செய்கின்றன. இருந்தும் மக்களது உரிமைகளை துச்சமாக மதிக்கும் அடுத்தடுத்த அரசாங்கங்கள் இதுமாதிரியான விசாரணை ஆணையங்ங்களை திரும்பத் திரும்ப நியமித்துக்கொண்டுதான் இருக்கின்றன. தொடர்ந்தும் இப்படியான விசாரணை ஆணையங்கள் ஏதோ அர்த்தமுள்ள நடவடிக்கை என்பது போல சிவில் சமூகத்தின் ஆதரவு பெரும்பாலும் இவற்றுக்கு கிடைக்கவே செய்கிறது.(சிவில் சமூகத்தின் முக்கியப் பிரமுகர்கள் இந்த ஆணையங்களில் சென்று அமர்வதற்கு சம்மதிக்கவே செய்கிறார்கள்). இதிலே யதார்த்தம் என்னவென்றால், குறைந்த அளவில்தான் என்றாலும் உண்மை கண்டறியும் முக்கியப் பணியை இந்த ஆணையங்கள் ஆற்றிவரவே செய்துள்ளன. ஆனால் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கும் சூழ்நிலையில் விசாரணை ஆணையங்களும் ஒரு வழக்கமான அம்சமாகிவிட்டன என்பதுதான்.[110]

3. வுரையும் பரிந்துரைகளும்

[110] சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளையின் வெளியிடப்படாத ஒரு ஆய்வறிக்கை, "Presidential Commission of Inquiry from an ongoing study by the Civil and Political Programme of LST", ஆகஸ்ட் 2007.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

வுரை

விசாரணை ஆணையங்கள் என்பன புலனாய்வுப் பணி செய்வதற்கான அமைப்புகள் அல்ல. ஆகவே மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக உண்மையை தேடிக் கண்டறிந்து நீதிக் கிடைக்கச்செய்வதில் இவற்றால் உதவ முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. செயல்படுகின்ற ஒரு நீதி நிர்வாகக் கட்டமைக்கு ஒத்தாசை செய்யும் அமைப்புகளாக மட்டுமே இவற்றால் பங்காற்ற முடியும். இலங்கையைப் பொறுத்த அளவிலே, விசாரணை ஆணையங்கள் வெற்றிகரமாக செயல்பட்டதே இல்லை, அந்ந நாட்டின் உத்தியோகபூர்வ நீதி நிர்வாகக் கட்டமைப்போ பிரச்சினைகளில் மூழ்கிக் கிடக்கிறது.(சித்ரவதை, யதேச்சதிகார கைது நடவடிக்கை, தடுப்புக்காவல், உயிர் வாழ்தலுக்கான உரிமையைப் பறித்தல் உள்ளிட்ட) மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் நடந்துவரவே செய்கின்றன, அவற்றைச் செய்கின்ற குற்றவாளிகளும் தொடர்ந்தும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துவரவே செய்கின்றனர். பிரஜைகளுடைய மனித உரிமைகள் காப்பது என்பதையும், அனைவருக்கும் ஒரே விதமாக நீதி கிடைப்பதை உறுதிசெய்வது என்பதையும் விட அரசியல் ரீதியில் தங்களுக்கு பலன் அளிக்கக்கூடிய சிறு வட்டத்தினரை சந்தோஷமாக வைத்திருப்பதற்கே அதிக முக்கியத்துவம் தருகின்ற ஓர் அரசாங்கம் குற்றவாளிகளைக் காக்க முனைவதே அவர்கள் தப்பிவருவதன் காரணம். நிலைமையை சுயாதீனமாக கண்காணிப்பவர்களுக்குரிய இடம் மென்மேலும் குறைந்துவருகிறது, தேசிய மனித உரிமைகள் ஆணையம் தரம் தாழ்ந்துவருகிறது, ஐ.நா. நிறுவனங்களுக்கு பங்காற்ற தடைகள் உள்ளன, இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்கள் அச்சுறுத்தப்பட்டும் கொல்லப்பட்டும் வருகிறார்கள், ஊடகங்களின் குரல்வளை நசுக்கப்படுகிறது.

இருபது ஆண்டுகாலமாக இலங்கை ஆடிவரும் கபட நாடகத்தை இனிமேலும் நம்புவதை சர்வதேச சமூகம் நிறுத்த வேண்டும். குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துகிற மனோவலிமையோ, செயல்திறனோ இலங்கைக்கு சுயமாக இல்லை. கடந்த காலங்களில் சர்வதேச மனித உரிமை சட்டமும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களும் மீறப்பட்ட சம்பவங்களை விசாரித்து, குற்ற சந்தேக நபர்கள் மீத சர்வதேச தர அளவுகோல்களின் பிரகாரம் நியாயமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கச்செய்து எதிர்காலத்தில் அதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுக்க இலங்கை அதிகாரிகளை ஊக்குவிக்கும் நோக்கில் சர்வதேச சமூகம் தன்னுடைய கணிசமான செல்வாக்கை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இலங்கையினை வன்முறை பாதையிலிருந்து திசை திருப்பக்கூடிய குறிப்பிட்ட சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் தருகிற வலுவான நிலையில் சர்வதேச சமூகம் உள்ளது. இலங்கையில்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

குற்றவாளிகள் சட்டத்திற்கு பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லாத நிலை இருப்பதை எதிர்த்துப் போராடுவதில் அந்நாடு முன்னேற்றம் அடைகிறதா என்பதை அவதானித்து, அவர்களுக்கு அளவுகோல்களை நிர்ணயிப்பது பற்றி சர்வதேச சமூகம் பரிசீலிக்க வேண்டும்.

இலங்கையில் குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படாமல் இருந்துவருவது குறித்தும், அங்கே பலனளிக்கக்கூடிய குற்றப் புலன் விசாரணைகளும் சட்ட நடவடிக்கைகளும் இல்லாத ஒரு சூழலில், சர்வதேச மனித உரிமை சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான விதிமுறைகள் மீறப்பட்ட சம்பவங்களை விசாரிப்பதற்காக அமைக்கபட்ட விசாரணை ஆணையங்கள் ஆற்றிய பங்கு குறித்தும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. குற்றவாளிகள் தப்பிக்கின்ற நிலைமையை எதிர்த்துப் போராட செயல்திறன் மிக்க குற்றவியல் நீதி நிர்வாகக் கட்டமைப்பு மிகவும் அவசியம் என்பதை சர்வதேச பொதுமன்னிப்பு சபை வலியுறுத்துகிறது. விசாரணை ஆணையங்கள் அமைப்பது என்பது நல்ல சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்கும், சட்டத்தை மதிக்கும் சூழலுக்கும் ஈடாகாது என்பதை அது வலியுறுத்துகிறது. கட்டளையிடும் இடத்தில் உள்ள உயர் அதிகார்கள் உட்பட குற்றவாளிகள் எவராக இருந்தலும் அவர்களை தமது செயல்களுக்கு பதில் சொல்ல வைப்பதுதான், குற்றவாளிகள் தப்பிக்கின்ற நிலையைத் தொடரவிடாமல் செய்வதற்கு சிறந்த வழி.

பரிந்துரைகள்

இலங்கை அரசாங்கத்திடம் சர்வதேச பொதுமன்னிப்பு சபை பின்வருமாறு கேட்டுக்கொள்கிறது.

குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கும் நிலைமையை முடிவுக்குக் கொண்டுவருவதை தங்களால் செய்துகாட்ட முடியும் என்பதை நிரூபித்துக் காட்டும் வகையில் அவர்கள் கீழ்க்காணும் விடயங்களை நிறைவேற்ற வேண்டும்:

- மனித உரிமை மீறல்களைச் செய்த குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய செயல்முறையை திட்டமிடுவது, நடைமுறைப்படுத்துவது மற்றும் திட்டத்துக்கு உறுதுணையாக செயல்படுவது; அதன் முதல் படியாக அரசாங்கப் படையினர் செய்த தவறுகளை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு அவற்றை வன்மையாக கண்டிக்க வேண்டும். மனித உரிமை மீறல்களுக்கு எதிராக வெளிப்படையாக குரல்கொடுக்க வேண்டும். வார்த்தைகளுக்கு செயல் வடிவம் தரும் விதமாக பலனளிக்கக்கூடிய புலனாய்வுகளை நடத்தி, நியாயமான நடவடிக்கைகள் மூலம் தாமதமின்றி

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

குற்றவாளிக□□ □□□□□□□□□□ சட்டத்துக்கு பதில் சொல்ல வைக்க வேண்டும். பெரிய அரசியல் செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும், சமூக அந்தஸ்து படைத்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கும் இதே நிலைமை வர வேண்டும்.

- செய்தவர் யாராக இருந்தாலும், பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அனைத்து மனித உரிமை மீறல்களும், சர்வதேச மனிதாபிமனா சட்ட மீறல்களும், முறையாக விசாரிக்கப்பட்டு, சந்தேக நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவருடைய பதவி, அரசியல் செல்வாக்கு போன்றவற்றால் சட்ட நடவடிக்கை பாதிக்கபட இடமிருக்கக்கூடாது.

கடந்த கால தோல்விகள், தவறுகளிலிருந்து பாடம் கற்று, செயற்பாடுகளை திருத்திக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டும்:

- குற்றவியல் நீதி நிர்வாகக் கட்டமைப்பின் தோல்விகளை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, சீர்திருத்தத்துக்கு வழி தேடும் வகையில் அதன் மீளாய்வு ஒன்றுக்கு ஜனாதிபதி உத்தரவிடவேண்டும். தற்காலிக ஏற்பாடாக கொண்டுவரப்படுகிற விசாரணை ஆணையங்களால் முழுமையாக நீதி வழங்க முடியாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். நிஜமான அக்கறையுடன், முழுமையான ஆதரவுடன், சரியான நோக்கத்துடன், பக்கச்சார்பின்றி மீளாய்வு நடத்தப்பட வேண்டும். நியாயமான மற்றும் தெளிவாக நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் அது நடத்திமுடிக்கப்பட வேண்டும். நீதி நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள கோளாறுகள் யாவை அதன் உத்தேச தீர்வுகள் என்னென்ன என்பதை முந்தைய விசாரணை ஆணையங்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளன.

மீளாய்வில் குறிப்பாக செய்யவேண்டிய விடயங்கள்:

- முறையான பொலிஸ் புலனாய்வுகளுக்கும், விசாரணை ஆணையத்தின் விசாரணைகளுக்கும், குற்றவாளிகள் மீதான சட்ட நடவடிக்கைகளுக்கும் தண்டனை வழங்கலுக்கும் தடையாக இருக்கும் பிரச்சினைகளை வெளிச்சத்துக்கு கொண்டுவர வேண்டும்.

- IIGEP குழுவினர் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த அறிக்கைகள் உள்ளடங்க , இதுநாள்வரை வெளியிடப்படாது வைக்கப்பட்டிருந்த விசாரணை அறிக்கைகள் பரிசீலிக்கப்படவும் பிரசுரிக்கப்படவும் வேண்டும்.

- சட்டங்கள் மூலமாகவும், நிர்வாகம் மூலமாகவும் யதார்த்த நடவடிக்கைகள் மூலமாகவும் கோளாறுகளை நிவர்த்தி செய்வதற்கான வழிகள் அடையாளம் காணப்பட வேண்டும். சர்வதேச மனித உரிமை சட்டங்கள் மற்றும் தர அளவுகோள்களுக்கு அமைய அது மேற்கொள்ளப்பட

வேண்டும்.மீளாய்வு அறிக்கை பொதுமக்கள் பார்வைக்கும் வெளியிடப்பட வேண்டும்.

– □□□□□□□ ஆணையங்களின் தெரிவிக்கும் முடிவுகளும் அதன் பரிந்துரைகளும் பொதுமக்களுக்கு எளிதாக கிடைக்க வகைசெய்ய வேண்டும். பரிந்துரைகள் நடைமுறை ஆகும் விதம் குறித்து அதிகாரபூர்வ அறிக்கை வெளியிடப்பட வேண்டும்.

– விசாரணை ஆணையம் என்பது நீதி நிர்வாகத்துக்கான பலன் தரும் ஏற்பாடு அல்ல. குற்றப் புலனாய்வுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் அது ஈடாக முடியாது. ஆனால் அந்த ஆணையம் கண்டறியும் விடயங்கள் சிறிய அளவிலாவது செய்த காரியத்துக்கு ஒருவர் பொறுப்பேற்கும் நிலையை கொண்டுவர உதவும்தான். விசாரணை ஆணையத்தின் அறிக்கைகளும் IIGEP குழுவினரின் அறிக்கைகளும் வெளியிடப்பட வேண்டும். சமந்தப்பட்ட வழக்குகளை அரசாங்கம் மேற்கொண்டு எவ்வாறு கையாளப்போகிறது என்பதையும் அது நிறைவு பெற எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும் அது மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும். இதுமாதிரியான பெருங்குற்றங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதில் 10 அல்லது இருபது வருடங்கள் தாமதத்தை ஏற்றுகொள்ள முடியாது.

முழுமையாகவும் பலன் தரும் வகையில்ம் குற்றப் புலனாய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்தல்:

– இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்ட அனைத்து சம்பவங்கள் தொடர்பாகவும் குற்றப் புலனாய்வு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். அந்நடவடிக்கைகளில் பொலிஸாருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும். விசாரணைக்கு தடையாய் உள்ள எவர் மீதும் உடனடியாக சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– மனித உரிமை மீறல்களை புலனாய்வு செய்து விசாரிக்கும் திறன்மிக்க வழிவகைகளும், நம்பகத்தன்மை பெற்ற அமைப்புகளும் இலங்கையில் இல்லை. மீளாய்வின் ஒரு பகுதியாக அப்படியான வழிமுறைகளையும் அமைப்புகளையும் ஏற்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். (சுயாதீன சட்ட நடவடிக்கை அதிகார சபை ஒன்றை அமைப்பதென்று ஓர் யோசனை தெரிவிக்கப்படுகிறது.) மனித உரிமைகள்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

ஆணையத்தின் ஒத்துழைப்போடு சுயாதீனமாக புலனாய்வுகளையும் விசாரணைகளையும் மேற்கொள்ளும் அதிகாரம் இந்த அமைப்புக்கு வழங்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் ஆணையம் (HRC) சுயாதீனமாக செயல்படக்கூடிய வலுவானதாக இருப்பதை உறுதிசெய்தல்:

- இந்த ஒருங்கிணைந்த செயல்பாடு பலன் தர வேண்டுமென்றால் மனித உரிமைகள் ஆணையம் ஆதரவுடன் நடத்தப்படவும் வலுப்படுத்தப்படவும் வேண்டும். மேலும் அது மீண்டும் சுயாதீனமாக செயல்பட இடமளிக்கப்பட வேண்டும். குற்றச்செயலாக புலனாய்வு செய்யப்படும் அனைத்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விபரங்களை அறிந்துவைத்துள்ள நிலையில் மனித உரிமைகள் ஆணையம் இருக்க வேண்டும்.

- மனித உரிமை ஆணையத்தற்கு சுதந்திரமும் பக்கச்சார்பின்மையும் மறுபடியும் கிடைக்கச்செய்ய □□□□□□□□. □□□□□□□□ குறிப்பாக17 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் மற்றும் அதன் அட்டவணை விஷயங்களை நடைமுறைப்படுத்தப்படுவது மூலம் அது ஏற்பட வேண்டும்.

- விசாரணை ஆணையத்தின் பணிகளுக்கு முழுமையான நிதி ஆதரவு கிடைப்பது உறுதிசெய்யபட வேண்டும். அப்போதுதான் அதனால் மனித உரிமை மீறல்களை சுதந்திரமாகவும் முழுமையாகவும், பலன் தரும் வகையிலும் விசாரிக்க முடியும்.

- சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புலனாய்வுகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் உதவக்கூடிய விரிவான விபரங்கள் கிடைக்க வழி செய்யும் செயல்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். HRC □□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□□ □□□□ □□□□□□□□□□□ □□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□ □□□□□□□□□.

- மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் பொலிஸ்துறை, சட்ட மா அதிபர் அலுவலகம் மற்றும் மனித உரிமை ஆணையம் ஆகியவை ஒன்றோடு ஒன்று எவ்வாறு ஒத்துழைக்க வேண்டும் என்பதற்கான தெளிவான விதிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மனித உரிமை ஆணையத்தின் சுதந்திரம் பாதிக்காத வகையில் இந்த விதிகள் அமைக்கப்பட வேண்டும். இந்த வழிகாட்டு விதிகள் பொதுமக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும், அப்போதுதான்

புகார்கள் எவ்வாறு விசாரிக்கப்பட்டு அவற்றின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

– மனித உரிமைகள் ஆணையம் தன்னுடைய ஊழியர்கள் தொழில் நேர்த்தி உள்ளவர்களா மனித உரிமைகளுக்கு மதிப்பு தருபவர்களா என்பதை தன் அளவிலேயே ஆராய்ந்து அறியவும் கண்காணிக்கவும் வேண்டும்.

குற்றவாளிகள் சட்டத்திற்கு அப்பாற்பட்டு இருப்பதை முடிவுக்கு கொண்டுவந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதிசெய்தல்:

– குற்றசந்தேக நபர் யாராக இருந்தாலும் சரி, மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் அனைத்தும், உடனடியாகவும், சுதந்திரமாகவும், பக்கச்சார்பின்றியும், முழுமையாகவும் விசாரிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

– பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவு (SIU) வலுப்படுத்தப்படவும் விரிவுபடுத்தப்படவும் வேண்டும். மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான புகார்களை நிரந்தரமாக விசாரிக்கும் அதிகாரம் கொண்ட அமைப்பாக அது மாற வேண்டும். மனித உரிமை மீறல்களை விசாரிப்பதன்றி வேறு பணிகள் அப்பிரிவினருக்கு வழங்கப்படக்கூடாது. அப்பிரிவுக்கான நிதியும் வசதிகளும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

– SIU பிரிவினரின் பணியை சட்ட மா அதிபர் அலுவலகத்தில் அதற்கென விசேடமாக பணி ஒதுக்கப்பட்ட அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும், அவர்களுக்கு பிற பணிகள் இருக்கக்கூடாது என்ற பரிந்துரைகளை பரிசீலிக்க வேண்டும்.

– மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஆயுதப் படையினருக்கு எதிராக அரசு நிறுவனங்கள், சட்டப் பிரகாரம் விசாரணைகளை மேற்கொள்ளவும், சட்ட நடவடிக்கை எடுக்கவும், தண்டனை வழங்கவும் வேண்டும். அந்த நடவடிக்கைகள் சர்வதேச தர அளவுகோள்களுக்கு ஏற்ப நியாயமாக இருக்க வேண்டும். இவ்வகையான நடவடிக்கைகளில் தேசிய பொலிஸ் ஆணையம் (NPC) உதவ வேண்டும். அரசியல் சட்டத் திருத்தம் 17 பிரிவு எண் 15 G(2)வுக்கு இணங்க, பொலிஸ் அதிகாரிகள் செய்த முறைகேடுகள் மற்றும் துஷ்பிரயோகங்களைக் கண்காணிப்பது என்பதும், புகார்கள் மீதான நடவடிக்கைகள் பலன் அளிக்கும் வகையில் இருக்கிறதா என்பதை உறுதிசெய்வது என்பதும் இந்த

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

NPCக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

- பொலிஸ் அதிகாரிகள் ஒழுங்காக நடந்துகொள்வதை உறுதி செய்யும் கட்டுப்பாடு அதிகாரம் பொலிஸ் மா அதிபரிடம் வழங்கப்படக் கூடாது. எவ்விதமான முறைகேடுகள் மற்றும் துஷ்பிரயோகங்களை தாங்கள் விசாரிக்கப்போகிறோம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் எவ்விதமான தண்டனைகள் வழங்கப்படும் என்பதை NPC தெளிவாக தெரிவிக்க வேண்டும்.

- இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டியுள்ள ஒரு விஷயம் இது .மனித உரிமைகள் ஆணையம், தேசிய பொலிஸ் ஆணையம் ஆகியவற்றின் தமது வட்டார அலுவலகங்களுக்கும் ஊழியர்களுக்கும் ஆதரவு வழங்கிட வேண்டும் .அவர்களது பணிகளை தீவிரமாக கண்காணிக்க வேண்டும் .இந்த அமைப்புகளின் வட்டார அலுவலகங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படாததுதான் இந்த அமைப்புகள் பலனளிக்காமல் போவதன் காரணம் .அதுவே ,இந்த அமைப்புகள் துடிப்புடன் செயல்பட்டால் அது பொதுமக்களிடம் இருந்து வரும் புகார்கள் முறையாக பதிவுசெய்யப்பட்டு ,விசாரிக்கப்படுவது என்பதை பெரிய அளவில் முன்னேற்றும்.

- சாட்சிகள் பராமரிப்பு செயல்திட்டமும் கட்டமைப்பும் இல்லாதது, மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் எதிர்காலத்தில் அப்படியான சம்பவங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்கும் முக்கியமான தடையாக உள்ளது. போதிய நிதி, ஆட்பலம் போன்றவற்றுடன், கவனமாக கட்டமைக்கப்பட்டு, தொழில்நுட்ப அனுசரணைகளுடன் சாட்சிகள் பராமரிப்பு கட்டமைப்பு செயல்பட்டு வரவேண்டும்.

- இலங்கை நீதிமன்றங்களில் வீடியோ வாக்குமூலங்களை பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட முன்னுதாரணங்கள் இருப்பதாக சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு அறியக்கிடைக்கிறது. அந்த முன்முயற்சியை அது வரவேற்கிறது. சாட்சிகள் வீடியோ தொடர்பாடல் மூலம் வாக்குமூலம் வழங்குவதை அனுமதற்கும், அந்த சாட்சிகள் எங்கிருந்து பேசுகிறார்கள் என்பதோ அல்லது பிற பிரச்சினையான கேள்விகளோ சாட்சிகளிடம் கேட்கப்படாது இருப்பதற்கும், சாட்சிகளுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் புதிய அடையாள விபரங்கள் சட்டப்படியும் இரகசியமான முறையிலும்

வழங்கப்படுவதற்கும் வகை செய்யும் சட்டத் திருத்தங்கள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டும்.

- மனித உரிமை மீறல் சம்பவங்களிலும், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல் சம்பவங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவது உறுதிசெய்யப்பட வேண்டும். இழந்த உரிமைமையை மீட்டுக் கொடுத்தல், நஷ்ட ஈடு வழங்குதல், புனர்வாழ்வுக்கு வகைசெய்தல், கோரிக்கையை நிறைவேற்றுதல், மீண்டும் நடக்காமல் இருப்பதற்கு உத்திரவாதம் வழங்குதல் போன்ற நிவாரண நடவடிக்கைகள் சர்வதேச தர அளவுகோள்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும்.

சட்டங்களில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல்:

- உயிர் வாழ்தலுக்கான உரிமையை அரசியல் சட்டம் உத்திரவாதம் வழங்கும் ஓர் உரிமையாக மாற்ற வேண்டும், பலவந்தத்தின் பேரில் ஆட்கள் காணாமல்போதல் என்பதை குற்றவியல் சட்டத்தில் உள்ள ஒரு குற்றமாக சேர்க்க வேண்டும், கட்டளையின் கீழ் நடக்கும் குற்றங்களுக்கு கட்டளைக்குரியவரும் பொறுப்புதாரி ஆவார் என்ற சர்வதேச சட்ட கொள்கை இலங்கையின் குற்றவியல் நடைமுறை சட்டத்தில் சேர்க்க வேண்டும்.

- சர்வதேச சட்டங்களையும் மற்றும் தர அளவுகோள்களையும் மீறும் வகையிலான அவசரச் சட்டங்கள், அதிலும் குறிப்பாக சர்வதேச சட்டங்கள் அடிப்படையில் குற்றச்செயல்களாக அமைந்துள்ள காரியங்களைச் செய்தவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படாமல் விடப்படுவதை ஊக்குவிக்கும் சட்டங்கள் மீளாய்வு செய்து திருத்தப்பட வேண்டும் அல்லது ரத்துசெய்யப்பட வேண்டும்.

சர்வதேச ஒப்பந்தங்களை இலங்கை ஏற்று ஒப்பமிட வேண்டும்.

- பலவந்தத்தின் பேரில் ஆட்கள் காணாமல்போவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒப்பந்தத்தை ஏற்று ஒப்பமிட வேண்டும்.

- சித்ரவதை மற்றும் பிற வகையில் கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான தண்டனை அல்லது கையாள்கைக்கு ஒப்பந்தத்தின் தேர்வு அடிப்படையிலான கூடுதல் ஒழுங்கு விதிகளை ஏற்று ஒப்பமிட வேண்டும்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

– சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் சட்டத்தை ஏற்று ஒப்பமிட வேண்டும்.

– ஐ.நா.மன்ற மனித உரிமைகள் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு ஏற்ற வழிவகைகளைப் பரிசீலிப்பதற்கான சட்ட நடைமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கையில் குறிப்பிட்ட சில மோசமான சம்பவங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருப்பவர்களை அவ்வாறு பதில் சொல்ல வைப்பதற்குத் தேவையான தலைமைத்துவம், ஆதாரங்கள் மற்றும் அரசியல் மனோதிடத்தை இலங்கை பெறுவதற்கு வேண்டிய உதவிகளை சர்வதேச சமூகம் வழங்க வேண்டும் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை கோருகிறது:

இலங்கை கடந்த பத்து ஆண்டுகளில் தனது நீதி நிர்வாகக் கட்டமைப்பை மென்மேலும் சேதமடையவே வைத்துள்ளது. பின்வரும் விஷயங்களை செய்யச்சொல்லி இலங்கை அதிகாரிகளை ஊக்குவிக்கும் நோக்கில் சர்வதேச சமூகம் தன்னுடைய கணிசமான செல்வாக்கை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்:

– கடந்த காலங்களில் சர்வதேச மனித உரிமை சட்டமும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களும் மீறப்பட்ட சம்பவங்களை விசாரித்து ,குற்ற சந்தேக நபர்கள் மீத சர்வதேச தர அளவுகோல்களின் பிரகாரம் நியாயமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு ,பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கச்செய்து எதிர்காலத்தில் அதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுக்காமல் தடுக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

– இலங்கை செல்லும் இந்த மோசமான பாதையை மாற்றியமைப்பதற்குத் தேவையான சீர்திருத்தங்களுக்கு ஊக்கம் வழங்கப்பட வேண்டும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதில் இலங்கை முன்னேற்றம் காணுவதைக் கண்காணிப்பதற்கான மேற்கண்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் செயற்திறன் இலக்குகளை நிர்ணயிப்பது பற்றி பரிசீலிக்க வேண்டும்.

– தேவையான சீர்திருத்தங்கள் மற்றும் முன்னேற்றங்களை நிறைவேற்றும் பொருட்டு, கள நிலைமையை அவதானிக்கும் சுயாதீன அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். விசாரணைகளை நடத்துவதற்கும், மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக தேசிய நிறுவனங்கள் நீதி கிடைக்கச் செய்வதில் உதவுவதற்கும் இவர்களுக்கு வலுவான

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். யுத்தத்துக்கு பிந்தைய காலகட்டத்து விடயங்கள் தொடர்பிலும், செய்த காரியத்துக்கு பதில் சொல்லும் நிலையை ஏற்படுத்துவதிலும் உதவுகின்ற நோக்கில், மனித உரிமைகள் கண்காணிப்பு கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான தேவை இருப்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

– அப்படியான அமைப்பின் சுயாதீன நிலை உறுதிசெய்யப்பட வேண்டுமாயின் , அது சர்வதேச உத்தரவின் பேரில் அமைக்கப்பட வேண்டுமே ஒழிய ஜனாதிபதி உத்தரவின் பேரில் அமையக்கூடாது .அனைத்து தரப்பினர் செய்யும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கவும், சிவிலியன்களைப் பாதுகாக்கவும், தேசிய நிறுவனங்களது வல்லமையை மேம்படுத்துவதில் உதவவும் வேண்டும் என்ற நோக்கில் களநிலை மனித உரிமை கண்காணிப்பு செயல்திட்டம் ஒன்றை இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரது அலுவலகத்திடம் (OHCHR) கோர வேண்டும்.

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

இணைப்பு

மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களை விசாரிப்பதற்காக அமைக்கப்படும் ஆணையங்களுக்கான வழிகாட்டு கொள்கைகள்

1. நிறுவப்படும் ஆணையம்: செயற்திறன் மிக்கதாகவும் சுயாதீனமாகவும் பக்கச்சார்பின்றியும் செயல்படக்கூடியதாக இருத்தல்[111]

- பக்கச்சார்பின்றியும், செயற்திறனுடனும் செயல்படக்கூடிய நபர்களை விசாரணை ஆணையத்தின் உறுப்பினர்களாக தேர்வுசெய்ய வேண்டும், விசாரணைக்குள்ளாகும் விஷயத்துடன் எவ்வகையிலாவது சம்பந்தப்பட்டுள்ள நபர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளையும் சார்ந்தில்லாதவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும்;
- மனித உரிமையைப் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும், அறிவும் அனுபவமும் உள்ளவர்கள் ஆணையத்தில் இடம்பெற வேண்டும். சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களில் நிபுணத்துவம் பெற்றவர்களும் இதில் உள்ளடங்க வேண்டும்;
- ஆணையாளர்கள் தேர்வு மற்றும் நியமன நடவடிக்கைகளில் சிவில் சமூக அமைப்புகள், அதிலும் குறிப்பாக மனித உரிமை ஆர்வலர்களுடைய அரசு சாரா அமைப்புகள், குற்றச்செயலால் பாதிக்கப்பட்டோருக்காக குரல்கொடுக்கும் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் மற்றும் இதர சிறுபான்மையினர் ஆதரவு அமைப்புகள், முழுமையாக பங்காற்ற இடமிருக்க வேண்டும்;
- ஆணையத்துக்கான நிர்வாக ஊழியர்களை நியமிக்கும்போதும் ஆணைத்துடைய செயல்திறன், பக்கச்சார்பின்மை மற்றும் சுதந்திரத்தைப் பாதிக்காதவர்கள் நியமிக்கப்பட வேண்டும்;
- ஆணையத்தின் பக்கச்சார்பின்மையையும் சுதந்திரத்தையும் உறுதிசெய்யும் முகமாக, ஆணையம் நிதிரீதியிலும் யாரையும் சார்ந்தில்லாத நிலைக்கு உத்திரவாதம் வழங்க வேண்டும்.

2. ஆணையத்துக்கு வழங்கப்படும் அதிகாரங்கள்

[111] எமது பரிந்துரைகள் பற்றி மேலும் விரிவாக தெரிந்துகொள்ளSri Lanka: Establishing a commission of inquiry into serious violations of human rights law and international humanitarian law in Sri Lanka: Amnesty International's recommendations என்ற ஆவணத்தைப் பார்க்கவும், AI Index: ASA 37/031/2006, 14 செப்டம்பர் 2006, www.amnesty.org/en/library/info/ASA37/031/2006

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

a. *எவ்விதமான உரிமை மீறல்களை விசாரிப்பதென்ற அதிகாரம்.*

- மோசமான மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள், மற்றும் சம்பந்தப்பட்ட துஷ்பிரயோகங்கள் (உதாரணத்துக்கு, ஆட்கள் கடத்தப்பட்ட சம்பவத்தை விசாரிக்கும்போதும், அவர்கள் சித்ரவதைக்குள்ளானதையும் சேர்த்து விசாரிக்கும் அதிகாரம் இருக்க வேண்டும்,) ஆகியவற்றை முழுமையாக விசாரிக்கும் அதிகாரம் ஆணையத்துக்கு வழங்கப்பட வேண்டும்;
- ஒரு சம்பவம் தொடர்பில் தாங்கள் சேகரித்த விபரங்களை சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட தேசியச் சட்டங்களைக் கொண்டு மதிப்பிட வேண்டும்;
- அரச படைகள் மற்றும் வேறு ஆயுதக் குழுக்கள் செய்திருந்தாலுமேகூட மோசமான உரிமை மீறல்களை விசாரிக்கும் அதிகாரம் ஆணையத்துக்கு வழங்கப்பட வேண்டும். தளபதிகள், இராணுவம் மற்றும் சிவில் உயரதிகாரிகள் ஆகியோர் குற்றச் செயலைத் திட்டமிடுதல், அதற்கு உத்தரவிடுதல், அது நடக்க உடந்தையாக இருத்தல் என்று எவ்வகையிலாவது சம்பந்தப்பட்டுள்ளார்களா என்பதையும் ஆணையம் விசாரிக்க வேண்டும்;
- எதிர்காலத்தில் நடத்தப்பட வேண்டிய விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளைப் பரிந்துரை செய்யும் அதிகாரமும் ஆணையத்துக்கு வழங்கப்பட வேண்டும்;
- சர்வதேச மனித உரிமைகல் சட்டமும் சர்வதேச மனிதாபிமான சட்டமும் மீறப்பட்டதன் காரணியாக அமைந்துள்ள அனைத்து விஷயங்கள் தொடர்பிலும் ஆணையம் வழங்கும் விமர்சனக் கண்ணோட்டம் அதன் விசாரணை அறிக்கையிலே இடம்பெற வேண்டும். சட்டங்கள், நிறுவன கட்டமைப்புகள், கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் பிற காரணிகள் எதுவானாலும் அது பற்றி அலச வேண்டும்.

b. *விசாரணக்கான காலக்கெடு தொடர்பான அதிகாரம்*

- ஒரு சம்பவம் தொடர்பில் ஆணையம் விசாரிக்க அதிகாரம் வழங்கும்போது எவ்வளவு காலத்தில் விசாரணை முடிவடையும், எப்போது அறிக்கை வெளிவரும் என்ற விபரமும் தெரிவிக்கப்பட வேண்டும். முழுமையாக விசாரிப்பதற்கும் அதேநேரம் இழுத்தடிப்புகள் இல்லாதிருப்பதற்கும் ஏற்ற நியாயமான காலக்கெடு வழங்கப்பட வேண்டும்;
- விசாரணையில் ஏற்படும் முன்னேற்றங்கள் அல்லது தடங்கல்களை விபரித்து குறிப்பிட்ட காலகட்டத்துக்கு ஒரு முறை, தாமதம் இன்றி இடைக்கால அறிக்கைகளை ஆணையம் வெளியிட்டு வரவேண்டும்.

பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு, பரிந்துரைக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் போன்றவை குறித்த விபரங்கள் இடைக்கால அறிக்கையில் இடம்பெற வேண்டும்.

3. ஆணையத்தின் ஏனைய அதிகாரங்கள்

a. பரந்துபட்ட விசாரணை அதிகாரங்கள்

- விசாரணைக்குத் தேவையான அனைத்து விபரங்களையும் பெறும் அதிகாரம் ஆணையத்துக்கு இருக்க வேண்டும். அரசு அதிகாரிகள் உள்ளிட்ட சாட்சிகளை சமூகமளிச்சச் சொல்லி வற்புறுத்தும் அதிகாரம், சாட்சிகளிடம் இருந்து ஒத்துழைப்பு பெறும் அதிகாரம் இதில் அடங்கும். கீழே விபரிக்கப்படுவதுபோல [பிரிவு 4(b)] சாட்சிகளுடைய உரிமைகளை பாதிக்காத வகையில் ஆணையம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். அரசாங்க மற்றும் இதர பதிவேடுகள் உள்ளிட்டு சகலவிதமான ஆவணங்களையும் சமர்ப்பிக்கச் சொல்லி கேட்கும் அதிகாரம் ஆணையத்துக்கு வேண்டும். தனது உத்தரவுக்கு அமைய நடக்காதவர்கள் மீது அபராதம் விதிக்கும் அதிகாரம் ஆணையத்துக்கு இருக்க வேண்டும்;
- பத்திரப்படுத்தப்பட்ட பழைய ஆவணங்கள், இதர பதிவுகள், அரசு ஊழியர்கள் மற்றும் ஆயுதக் குழுக்களின் வாக்குமூலங்கள் உள்ளிட்டு, சம்பந்தப்பட்ட ஆவணமாக ஆணையம் கருதும் அனைத்து விபரங்களும் ஆணையத்துக்கு வழங்கப்படுவதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.

b. செய்த காரியத்துக்கு பொறுப்பேற்கும் நிலைமையை ஆணையம் உறுதிசெய்ய வேண்டும். குற்றவாளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுவதை சர்வதேச சட்டத்தின் கீழ் தடுக்க வேண்டும்.

- குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளில் இருந்து தப்பித்துவருவதை எதிர்க்கும் பொறுப்பு சர்வதேச சட்டத்தின் கீழ் அரசாங்கத்துக்கு உள்ளது என்பதை ஆணையம் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றமாக அமைந்துள்ள சம்பவங்களை விசாரித்து, போதிய ஆதாரம் இருக்கும் பட்சத்தில் குற்ற சந்தேக நபர்கள் மீது சர்வதேச தர அளவுகோள்களின்படி நியமாக வழக்கு நடத்தி, அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். மரண தண்டனை, பிற கொடூரமான அல்லது மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான தண்டனைகள் வழங்கப்படக்கூடாது.
- சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் குற்றமாக அமைந்துள்ள காரியங்களைச் செய்தவர்களுக்கு பொதுமன்னிப்பையோ, அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கும் பிற ஏற்பாட்டையோ ஆணையம்

பரிந்துரைசெய்யக்கூடாது. அது ஆணையங்களுக்கு சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் உள்ள ஒரு நிபந்தனை ஆகும்.

4. செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள்

a. வெளிப்படையாகவும் பொதுமக்கள் முன்னிலையிலும் விசாரணை நடக்க வேண்டும்.

- விசாரணை ஆணையத்தின் பணி தொடர்பான அனைத்து அம்சங்களும் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும். முடிந்த அளவுக்கு ஊடகங்களுக்கும் பொதுமக்களுக்கும் ஆணையத்தின் நடவடிக்கைகள் குறித்தும், எந்த ஆதாரத்தின் அடிப்படையில் ஆணையம் ஒரு முடிவை எடுக்கிறது என்பது தொடர்பிலும் விபரம் வழங்கப்பட வேண்டும்;
- பாதிக்கப்பட்டோர் அல்லது சாட்சிகள் கோரும் பட்சத்தில் விசாரணையை முழுமையாகவோ பகுதியளவிலோ ஊடகங்கள் மற்றும் பொதுமக்களின் பார்வையிலிருந்து விலக்கி நடத்தலாம். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் யார் என்ற அடையாளத்தை வெளியிடாமல் வைத்திருக்கலாம், அவர்கள் பற்றிய சில விபரங்களை தமது அறிக்கையில் சேர்க்காமல் விடலாம். இவை அனைத்தும் அவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்டோர், சாட்சிகள் அல்லது குற்ற சந்தேகநபர்களின் பாதுகாப்பு மற்றும் பிற உரிமைகளை கருத்தில் கொண்டு, விசாரணையை வெளிப்படையாக நடத்துவதாக அல்லது மற்றவர்கள் பார்வையிலிருந்து விலக்கி நடத்துவதா என்பதை ஆணையம் முடிவுசெய்ய வேண்டும்.

b. பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்கச் செய்யும் அணுகுமுறை வேண்டும்.

- பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் மனிதாபிமானத்தோடு நடத்தபட வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பும் உதவிகளும் கிடைக்கும் ஏற்பாடுகள் ஒழுங்காக செயல்படுகின்றனவா என்பது உறுதிசெய்ய வேண்டும்;
- புகார்கொடுத்தவர்கள், சாட்சிகள், விசாரணை நடத்துபவர்கள் மற்றும் வேறு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் வன்முறை மற்றும் வன்முறை வரும் என்ற மிரட்டல்கள் மற்றும் பிற வகையிலான அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும்;
- பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் பராமரிப்புத் திட்டத்தை வகுக்கவும் நடைமுறை செய்யவும் தேவையான ஆட்பலமு மற்றும் வசதிகளும் ஆணையத்துக்கு வழங்கப்பட வேண்டும். அனைத்து சாட்சிகள், பாதிக்கப்போர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர், விசாரணையோடு

தொடர்புடைய ஊழியர்கள் மற்றும் பிறர் என்று தேவைப்படுவோர் அனைவருக்கும் இந்த செயல்திட்டம் பாதுகாப்பு வழங்க வேண்டும்;

- எவ்விதமான பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கும்போது எவ்விதமான ஏற்பாடுகள் தேவை என்பதை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளிடம் இருந்து ஆணையம் கேட்டுத் தெரிந்துகொண்டு முடிவெடுக்க வேண்டும். ஆபத்தின் அளவுக்கு ஏற்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் வேண்டும்;
- வழங்கும் பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பில் பாதிக்கப்பட்டவர் ஒருவருக்கு திருப்தி எல்லை என்றால் அவர் ஆணையத்திடம் விண்ணப்பிப்பதற்கும், ஆணையாளர்கள் அவ்விஷயத்தைப் பரிசீலிப்பதற்கும் இடமிருக்க வேண்டும்;
- அதிகாரிகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் உத்தவுகளை பிறப்பிக்கும் அதிகரம் ஆணையத்துக்கு இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டோர் அல்லது அவர்தம் குடும்பத்துக்கு அச்சுறுத்தலாக உள்ள எவரையும் வேலையிலிருந்து இடைநிறுத்தவும் அல்லது மாற்றலில் அனுப்பவும் அதிகாரம் வேண்டும். தவிர பாதிக்கப்பட்டவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுவதற்கு உத்தரவிட அதிகாரம் வேண்டும். பாதிக்கப்பட்டோர், சாட்சிகள் அவர்கள் குடும்பத்தினர் எங்கிருக்கிறார்கள் என்ற விபரம் வெளிவராமல் தடுப்பது, அவர்களுக்கு மருத்துவ மற்றும் உளரீதியான சிகிச்சையும் ஆதவும் கிடைக்கச்செய்வது ஆகிய அதிகாரங்கள் வேண்டும்.

c. நியாயமான நடைமுறைகளைக் கையாளுதல்

அனைத்து சாட்சிகள், குற்ற சந்தேக நபர்கள், சம்பந்தப்பட்ட பிற நபர்கள் ஆகியோரது ஏனைய உரிமைகளோடு பின்வரும் உரிமைகளும், விசாரணையின் அனைத்து கட்டங்களிலும், பாதுகாக்கபடுவதை ஆணையம் உறுதிசெய்ய வேண்டும்:

- பாரபட்சம் காட்டப்படாது இருப்பதற்கான உரிமை;
- தகுதியுடைய, சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பு ஒன்றின் மூலம் நியாயமான முறையில் வெளிப்படையாக விசாரிக்கப்படுகின்ற உரிமை;
- தமக்கு எதிராகவே வாக்குமூலம் வழங்கச் சொல்லியோ குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லியோ வற்புறுத்தப்படுவதற்கு எதிரான உரிமை;
- சித்ரவதைக்கு உள்ளாக்கப்படுதல் அல்லது பிற கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான வகையில் நடத்தப்படுதல் அல்லது தண்டனை வழங்கப்படுதல் ஆகியவற்றுக்கு எதிரான உரிமை. அச்சுறுத்தப்படுதல், நிர்பந்திக்கபடுதல் ஆகியவற்றுக்கு எதிரான உரிமை;
- ஆணையத்தில் புழங்குகின்ற மொழி புரியவில்லை அல்லது பேசத்

தெரியவில்லை என்றால் மொழிபெயர்ப்பாளர் உதவி கிடைக்கும் உரிமை;

- தங்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தாமதமின்றியும் விரிவாகவும் விபரங்கள் பெறும் உரிமை;
- தங்கள் தரப்பு வாதங்களை தாங்களே முன்வைக்கும் உரிமை, பொருத்தமான தருணங்களில் சட்ட உதவி பெறும் உரிமை;
- சட்ட அடிப்படையில் குற்றவாளி என்று நிரூபிக்கப்படாதவரையில் நிரபராதிகள் என்றே கருதப்படுகின்ற உரிமை;
- ஆணையத்தின் முடிவு நியாயமற்ற வகையில் தம்மை பாதிக்கிறது என்றால், அம்முடிவை நீதிமன்றம் மீளாய்வு செய்ய விண்ணப்பிக்கும் உரிமை வேண்டும்;
- 18 வயதுக்கு உட்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் அவர்களுடைய வயதை ஆணையத்தின் நடைமுறைகள் கருதில்கொள்ள வேண்டும். அவர்களைத் திருத்துவதற்கு இடமிருந்தால அதற்கு முன்னுரிமை தரவேண்டும்.

d. தடயங்களைச் சேகரித்தல் மற்றும் வாக்குமூலம் பதிவுசெய்தல்

- உத்தியோகபூர்வ தகவல், உத்தியோகபூர்வமற்ற தகவல், உள்ளூர் மட்ட தகவல், தேசிய மட்ட தகவல், சர்வதேச மட்ட தகவல், பதிவு செய்யப்பட்ட தகவல், எழுத்துமூல தகவல், வாய்வழித் தகவல் என்று எவ்வழியாக தகவல் கிடைத்தாலும் ஆணையம் அவற்றை கவனமாக ஆராய வேண்டும். சமூகத்தின் பல்வேறு தரப்பிலிருந்தும் ஒத்துழைப்பைப் பெற்று செயல்பட வேண்டும், (உள்நாட்டிலிருந்தோ, வெளிநாட்டிலிருந்தோ) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர், தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் சம்பவம் தொடர்பாக முன்பு ஆய்வுசெய்தவர்கள் போன்றோர் வழங்கும் தகவல்களிலும் வாக்குமூலங்களிலும் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்;
- சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் வாக்குமூலங்களையும் தடயங்களையும் சமரிப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்;
- வெளிநாடு சென்றுவிட்டதன் காரணமாகவும் நாட்டுக்கு திரும்பினால் உயிராபத்து ஏற்படும் என்ற அச்சம் காரணமாகவும் அல்லது பிற நியாயமான காரணங்களுக்காகவும் நேரில் வர இயலாத சாட்சியங்கள் வழங்கும் எழுத்துமூல சமர்ப்பணங்களை ஆணையம் பரிசீலிரிக்க வேண்டும், அவர்களை விசாரிக்க விசேட வழகளில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அப்படியான சாட்சிகளிடம் கேள்விகேட்கும்போது, சம்பவத்தின் சூழலுக்கும் அந்த சாட்சியின் சூழலுக்கும் ஏற்ப வளைந்துகொடுத்து, அந்த அளவிலேயே தடயங்கள் பெறப்பட வேண்டும்;

- தனக்கு கிடைக்கும் விபரங்அளை அனைத்தையுமே ஆணையம் எச்சரிக்கையோடு பரிசீலிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக ஆணையத்தை தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்ற ஒரு கருவியாக பயன்படுத்த நினைக்கும் குழுக்கள் மற்றும் நபர்களிடம் இருந்து தகவல் பெறும்போது அதனை மிகவும் கவனமாக பரிசீலிக்க வேண்டும்.

e. பொதுமக்கள் விபரம் அறியவும் பாடம் கற்கவும் வேண்டும் என்ற நோக்கில் பிரச்சாரம் மேற்கொள்ளல்

- அரசு சாரா அமைப்புகள், அரசாங்கத்துடையது அல்லாத இதர நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளோடு ஆணையம் தொடர்புகளை ஏற்படுத்தி, தனது பணி தொடர்பான தகவல்களையும் சம்பந்தப்பட்ட பிற தகவல்களையும் மக்கள் மத்தியில் பரவச் செய்ய வேண்டும்;
- ஆணையம் நிறுவப்பட்டது மற்றும் அது விசாரிக்கப்போகின்ற விஷயங்கள் பற்றி பொருத்தமான ஊடகங்கள் அனைத்தன் வழியாகவும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்;
- விசாரணை ஆணையத்தின் நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்புவது பற்றியும் பரிசீலிக்க வேண்டும். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் குற்ற சந்தேக நபர்களது பாதுகாப்பு பற்றி மதிப்பீடுகளைச் செய்து அதற்கேற்ப நேரடி ஒளிபரப்பு குறித்து பரிசீலிக்க வேண்டும்.

5. அறிக்கை வெளியிடுதல், நிவாரணம் வழங்குதல் மற்றும் குற்ற சந்தேக நபர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்

a. இறுதி அறிக்கை, பரிந்துரைகள் மற்றும் விபரம் பரவச் செய்தல்

- விசாரணை ஆணையத்தின் இறுதி அறிக்கையில் புலனாய்வுகள், விசாரணைகள், கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்கள், சட்ட நடவடிக்கைக்கான பரிந்துரைகள் என அதன் பணியின் அனைத்து அம்சங்கள் குறித்தும் விபரம் வழங்கப்பட வேண்டும். பின்வரும் விஷயங்கள் இறுதி அறிக்கையில் தெரிவிக்கபட வேண்டும்.
  - o விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டபோது அதனிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் நிபந்தனைகள்;
  - o ஆதாரங்களை சீர்தூக்கிப்பார்ப்பதற்கான நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள், எந்தெந்த சட்டத்தின் அடிப்படையில் ஆணையம்

செயல்பட்டது என்ற விபரம்;

- சமூக, அரசியல், பொருளாதார சூழலை விளக்கும் பின்புல விபரங்கள், அரசாங்கத்திடம் இருந்தும் பிற அரசு நிறுவனங்களிடம் இருந்தும் தேவையான அளவுக்கு ஆணையம் ஒத்துழைப்பை பெற்றத என்ற விபரம் உள்ளிட்ட விபரங்கள் அறிக்கையில் இடம்பெற வேண்டும்;
- ஆணையம் கண்டறிந்த விடயங்கள் மற்றும் அவர்கள் அந்த முடிவுக்கு வர அடிப்படை வகுத்த ஆவணங்கள் மற்றும் பிற தடயங்களிம் பட்டியல் அதில் இடம்பெற வேண்டும்;
- பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் கண்டறிந்த உண்மைகள் அடிப்படையில் ஆணையம் என்ன முடிவுக்கு வருகிறது என்பது இடம்பெற வேண்டும், சட்டங்கள், நிறுவன கட்டமைப்புகள், கொள்கைகள் நடைமுறைகள் மற்றும் உரிமை மீறல்கள் நடப்பதை அனுமதித்த பிற காரணைகள் விமர்சனக் கண்ணோட்டத்துடன் அலசப்பட வேண்டும்;
- பாதிக்கப்பட்டோர் பட்டியல் (பாதுகாப்பு கருதி அடையாள விபரங்கள் மறைக்கப்பட்டவர்களது விபரங்கள் இடம்பெறக் கூடாது;
- ஆணையத்தின் பரிந்துரைகள்.

- விசாரணை அறிக்கை வெளியிடப்பட வேண்டும், வேண்டுவோருக்கு எளிதில் கிடைக்கச்செய்ய வேண்டும், பொதுமக்களுக்கு கிடைக்கசெய்ய வேண்டும்;
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்யும் அதிகாரம் ஆணையத்துக்கு இருக்க வேண்டும்:
  - பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்குதல்;
  - குற்ற சந்தேகநபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்;
  - கடந்த காலங்களில் நடந்தது போன்ற உரிமை மீறல்கள் மீண்டும் நடப்பதை தடுக்கும் நோக்கத்திலான குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் ஏனைய சீர்திருத்தங்கள்;
  - மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பொலிசாருக்கும் பாதுகாப்பு படையினருக்கும் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தல், குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளையும் புலனாய்வுகளையும் தொடருதல் உள்ளிட்டு தாம் கண்டறிந்த விஷயங்கள் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய தேவையான பிற நடவடிக்கைகள்.

b. பாதிக்கப்பட்டோருக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் முழுமையான நிவாரணம் வழங்குதல்

- பாதிக்கப்பட்டவர்கள் தங்களது வாழ்க்கையை மீளக்

கட்டியமைத்துக்கொள்ள அவர்களுக்கு எவ்விதமான நிவாரணம் தேவைப்படுகிறது என்பது பற்றி, விசாரணை நெடுகிலுமே, ஆணையம் அவர்களிடம் இருந்து கருத்துச் சேகரித்து வரவேண்டும்;

- சர்வதேச தர அளவுகோள்களுக்கு ஏற்ப முழு அளவிலான நிவாரணங்கள் வழங்கப்படுவதற்கு ஆணையம் பரிந்துரைக்க வேண்டும். இழந்ததை மீளப்பெற உதவுதல், நஷ்ட ஈடு வழங்குதல், புனர்வாழ்வுக்கு உதவுதல், திருப்தி ஏற்படுத்துதல் மற்றும் மீண்டும் நடக்காது என்று உத்திரவாதம் வழங்குதல் உள்ளிட்ட நிவாரணங்களை வழங்க வேண்டும்;
- உரிமை மீறல்கள் மற்றும் அனுபவித்த துன்பத்தின் அளவுக்கு ஏற்ப நிவாரணம் வழங்கப்பட வேண்டும். குற்றம் செய்தவர் யாரென்பது நிரூபணமாகவில்லை என்றாலும்கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்;
- பாதிக்கப்பட்டோரின் சூழ்நிலைக்கு ஏற்ப பிற வகையான விசேட நிவாரணங்கள் வழங்கப்படுவதற்கும் ஆணையம் பரிந்துரைக்க வேண்டும்;
- நிவாரணம் வழங்குவது என்பதை குற்றத்துக்கு பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமைக்கு ஈடாக ஒருபோதும் காட்டப்படக்கூடாது. மேலும் ஆணையம் நிவாரணம் வழங்குவதால், பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் மூலம் நஷ்ட ஈடு கோருவதற்கு இடமில்லை என்று தெரிவிக்கக்கூடாது.

c. எதிர்கால சட்டநடவடிக்கைகளுக்காக தடயங்களை பாதுகாத்து வைத்தல்

- சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றமாக அமைந்துள்ள காரியங்களைச் செய்த, உத்தரவிட்டு, ஊக்குவித்த அல்லது அனுமதியளித்த நபருடைய அடையாளத்தை கோடிகாட்டும் விபரங்கள் ஆணையத்துக்கு கிடைத்தால் அவற்றை நீதித்துறை மற்றும் சட்ட அமலாக்கத்துறை அதிகாரிகளிடம் தாமதிமின்றி ஒப்படைக்க வேண்டும். புலனாய்வுகளை மேற்கொண்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் நோக்கில் இது மேற்கொள்ளப்பட வேண்டும்;
- அனைத்து தரப்பிலிருந்தும் குற்ற சந்தேக நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதற்குரிய வழிவகைகளை ஆணையம் பரிந்துரைக்க வேண்டும்;
- விசாரணை ஆணையம் நடத்திய விசாரணைகளில் உரிமை மீறல் செய்தவர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மீது புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.

d. விபரங்களை சேமித்துவைத்தல்

இருபது ஆண்டுகால கண்துடைப்பு

- தன்னுடைய ஆவணங்கள் அடுத்தவர்களின் பார்வைக்கு வரும்போது கையாளப்பட வேந்திய நிபந்தனைகளை விசாரணை ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும். ஆணையத்துடைய ஆவணங்களை பொதுமக்கள் பார்க்க இடமிருக்கும் அதேநேரத்தில் இரகசியம் பேணப்பட விபரங்களை அவர்கள் கண்களில் படாதவாறு வைப்பதற்கான நிபந்தனைகளையும் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும்.



நான் உதவ விரும்புகிறேன்

அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ள ஒரு பெரிய மோதல் ஆனாலும் சரி, உலகம் மறந்துவிட்ட ஒரு மூலையில் நடக்கும் ஒரு இருட்டடிக்கப்பட்ட பிரச்சினை என்றாலும் சரி, நீதியும் நியாயமும் சுதந்திரமும் மரியாதையும் அனைத்துத் தரப்பினருக்கும் வேண்டும் என்று கோரிப் போராடுகிறது **சர்வதேச பொது மன்னிப்பு சபை.** ஒரு மேம்பட்ட உலகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மக்கள் ஆதரவை ஒன்றுதிரட்ட அது எத்தனிக்கிறது

நீங்கள் செய்யக்கூடியது என்ன?

மனித உரிமைகளைக் குலைக்கும் பயங்கர சக்திகளை எதிர்த்துப் போராடி கட்டுப்படுத்துவது சாத்தியமே என்று பல இடங்களில் ஆர்வலர்கள் நமக்குக் காட்டியுள்ளனர். ஆகவே இந்த இயக்கத்தின் ஒரு அங்கமாக இருங்கள். அச்சுறுத்தலையும் வெறுப்பையும் கட்டவிழ்த்துவிடுவோரை எதிர்த்துப் போராடுங்கள்.

- சர்வதேச போது மன்னிப்பு சபையில் உறுப்பினராவதன் மூலம் மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு உலகளாவிய இயக்கத்தில் பங்காற்றுங்கள். மாற்றத்தைக் கொண்டுவருவதில் எமக்கு உதவுங்கள்.
- சர்வதேச பொது மன்னிப்பு சபை செயல்படுவதற்கு உங்களால் முடிந்த தொகையைக் கொடுத்து உதவுங்கள்.

ஒன்றாக குரலெழுப்புவதன் மூலம் நம்முடைய கோரிக்கைகளை ஓங்கி ஒலிக்கச் செய்யமுடியும்.

☐ சர்வதேச பொது மன்னிப்பு சபையின் உறுப்பினராவதற்கான மேலதிக விபரங்களைப் பெற நான் ஆர்வமாக இருக்கிறேன்

பெயர்

முகவரி

நாடு

மின்-உஞ்சல்

☐ சர்வதேச பொது மன்னிப்பு சபைக்கு நிதியுதவி செய்ய நான் விரும்புகிறேன். (ஐக்கிய இராஜ்ஜிய பவுண்டுகளாகவும் £, அமெரிக்க டொலர்களாகவும் $, ஐரோப்பிய யூரோக்களாகவும் € பணத்தை ஏற்றுக்கொள்வோம்)

தொகை:

எனது வங்கி அட்டையிலிருந்து பணம் எடுத்துக்கொள்ளவும் விசா ☐ மாஸ்டர்கார்ட் ☐

அட்டை எண்

காலாவதியகும் தேதி

கையொப்பம்

தயவுசெய்து இந்தப் படிவத்தை உமது நாட்டிலுள்ள சர்வதேச பொது மன்னிப்பு சபை அலுவலகத்துக்கு திருப்பியனுப்பவும். உலக நாடுகளில் சர்வதேச பொதுமன்னிப்பு சபையின் அலுவலக முகரவிகளை அறிய: www.amnesty.org/en/worldwide-sites என்ற இணைய தளத்தைக் காண்க

உங்கள் நாட்டில் சர்வதேச பொது மன்னிப்பு சபை அலுவலகம் இல்லை என்றால், திருப்பியனுப்ப வேண்டிய முகவரி:
Amnesty International, International Secretariat, Peter Benenson House, 1 Easton Street, London WC1X 0DW, United Kingdom

www.amnesty.org

இருபது ஆண்டுகால ஏமாற்று வேலை

இலங்கையின் விசாரணை ஆணையங்கள்

கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக, இலங்கையில் நடந்த மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் பலவற்றை விசாரிப்பதற்காக அரசாங்கம் பல முறை விசாரணை ஆணையங்களை அமைத்திருக்கிறது. உள்நாட்டு அளவிலும் சர்வதேச அளவிலும் எழுந்த அழுத்தங்களை சமாளிப்பதற்காக இந்த நடவடிக்கை அங்கு மேற்கொள்ளப்பட்டு வந்தது. குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க இடம்தராமல் இருக்க இலங்கை நடவடிக்கை எடுக்கிறது என்ற தோற்றம் இதனால் நமக்கு ஏற்படும். ஆனால் நீதி கிடைக்கச் செய்வதில் இந்த விசாரணை ஆணையங்கள் பெரும்பாலும் தவறவே செய்துள்ளன.

ஆட்கடத்தல்கள், ஆட்கொலைகள், சித்ரவதை உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் நாட்டில் பரவலாக நடைபெறுவதைத் தடுப்பதிலும் இலங்கையின் நீதித்துறை தவறியுள்ளது. பெரும்பான்மையான மனித உரிமை மீறல் சம்பவங்கள் விசாரிக்கப்படாமலே போகும் அளவுக்கு வளமும் திறனும் குறைந்த அமைப்பாக இலங்கை நீதி நிர்வாகத்துறை அமைந்துள்ளது. ஆதலால் அப்படியான சம்பவங்கள் பல நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவதற்கு இடமே இல்லை. அரசியல் அழுத்தங்களைச் சமாளிப்பதற்காகவே விசாரணை ஆணையங்கள் அமைக்கப்படுகின்றன. சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பலன் தரும் கட்டமைப்பு அதில் இல்லை. லஞ்சம், அச்சுறுத்தல், வன்முறை மூலமாக அரச நிறுவனங்கள் சாட்சிகளை வாக்குமூலம் வழங்க முன்வராமல் செய்துவிடுகின்றனர். பொலிஸாரின் புலன் விசாரணைகளை அவர்கள் குலைத்தும் பொதுமக்களுக்கு தவறான விஷயங்களைக் கூறியும் வருகிறார்கள். அதிகாரிகளும் பிற செல்வாக்கு மிக்க பிரமுகர்களும் சட்ட நடவடிக்கைகளுக்கு தடையாக இருந்துவருகிறார்கள்.

அட்டூழியங்களுக்கு முடிவு கட்டுவதாகவும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதாகவும் ஆட்சிக்கு வரும் அடுத்த அடுத்த அரசாங்கங்கள் வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும் அவர்கள் தங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றியிருக்கவில்லை. இலங்கைக்குள்ளும் சர்வதேச சமூகத்திலும் இது தொடர்பான விவாதம் முன்னோக்கி நகர வேண்டும். மிக அண்மையில் நடந்த மனித உரிமை மீறல் சம்பவத்திலும், தற்போது செயல்பாட்டிலுள்ள விசாரணை ஆணையம் மீதும் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு, தொடர்ந்து நடக்கும் மனித உரிமை மீறல்களிலும், கடந்த கால சம்பவங்களில் குற்றவாளிகள் நிஜமாகவே செய்த காரியத்துக்கு பொறுப்பேறகச் செய்வதிலும் கவனம் திரும்ப வேண்டும். இலங்கையில் முறைப்படியும் திட்டமிட்டும் மனித உரிமை நிலவரம் சர்வதேச அளவில் கண்காணிக்கப்பட வேண்டும்; தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படவும் வேண்டும். இலங்கையினால் அதனைத் தனியாக செய்ய முடியாது.

Amnesty International
International Secretariat
Peter Benenson House
1 Easton Street
London WC1X 0DW
United Kingdom

www.amnesty.org

சர்வதேச பொது மன்னிப்பு சபை ஆவண வரிசை எண்: ASA 37/005/2009
June 2009

AMNESTY
INTERNATIONAL